# கோமுகி



9647

## மணிபல்லவ கலா மன்றம்

நயினாதீவு — 1972

# கோமுகி

## பத்தாவது ஆண்டு நிறைவு
## விழா மலர்

மணிபல்லவ கலா மன்றம்

நயினாதீவு

# நயினாதீவு - NAINATIVU




Scale of 8 Chains To an Inch

## நின்னடிக்கே....

புலமையிற் பொலிந்த தாயே,
பொருளிலாப் புதல்வர் மாட்டும்
கலைகளும் கல்விப் பேறும்
கணக்கிலா தளித்த நங்காய்!
அலைகடல் ஆழியுந்தன்
அடிமலர் பணிந்து வாழ்த்த,
நலமெலாம் உனதாய்க் கொண்ட
நயினைபம்பதியே வாழி!

அன்னையே, அந்நாள், உன்பால்
அவள் பெறு கலத்தினிங்கு
மன்னுயிர்ப் பசி தீர்த்திட்டாய்
மாதவம் யாரும் செய்து,
உன்னுடைப் புதல்வராளேம்
ஒரு தமிழ்க்காவியத்தில்,
மின்னிடும் மணியே, உன்னை
மிகப்பணிந்தேத்துகின்றோம்!

நந்தமிழ் போற்றிக் காக்கும்
நற்பணி எமதேயாக
உந்தனிச் சிறுவர் கூட்டம்
உழைப்பதுன் வரமேயாக்கித்
தந்தனை ஆற்றல், தங்கள்
தமிழ்ப்பணிச் சின்னமாக
மைந்தருன் அடியில் வைக்கும்
மலரிதாக் கொள்க தாயே!

★


மணிபல்லவ கலாமன்றம்
நயினாதீவு

நயினாதீவு

மணிபல்லவ

கலாமன்றத்தின்

10-வது ஆண்டு

நிறைவு

விழாவையொட்டிய

சிறப்பு மலர்

# "கோமுகி"



கோமுகி

மலர்க் குழுவினர்

வ. ந. பரராஜசிங்கம் (ஆசிரியர்)

ப. க. நவரத்தினராஜா

வி. இராமச்சந்திரன்

சி. இரத்தினசபாபதி

வி. வேதநாதன்

# KOMUKHI

a special Souvenir
to mark the
Tenth Anniversary
of the

# Manipallava Kala Mantram – Nainativu

*Published by*
Manipallava Kala Mantram
Nainativu

*and printed at*

**Rainbow Printers,**
*231, Wolfendhal Street,*
*Colombo-13.*



சி. க. தம்பையா, J. P.
தவிசாளன்

# நம் கிராம பிதாவின் நல்லாசிகள்

நிலை பேறுடைய தமிழ்ப்பணி, ஆக்கம்தரும் நல்ல கலைப்பணி ஆற்றவேண்டும் என்ற ஆர்வத்தினுல் பிறந்த மணிபல்லவ கலாமன்றம்: சங்கமெனும் தங்கத் தொட்டிலில் தமிழ்ப் பெண் தவழ்ந்திருந்த காலத்தே புலவர் பெருமக்கள் அவளுக்கு அணிவித்த இயல். இசை, நாடகம் என்னும் அணிகளை ஆண்டுதோறும் புது மெருகிட்டு அணிந்து அழகுபார்க்கும் போது அதில் கலந்து மகிழும் நயினை மக்களில் நானும் ஒருவன் தங்கள் மன்றத்தினர். 10-ஆவது அண்டு நிறைவை யொட்டி தாங்கள் ஒரு மலரை அறிமுகம் செய்ய விருப்பது நெஞ்சினிக்கும் செய்தியாகும். தங்கள் சேவை தீவுப்பகுதியிலேயே ஓர் முன்மாதி யானதாகும். அரிய நும் சேவையில்.

தமிழ் நெஞ்சம் கண்டேன்!
தமிழ் கொஞ்சக் கண்டேன்!
தமிழ் விஞ்சக் கண்டேன்!

தங்களின் பெருஞ்சேவை மென்மேலும் வளரவும், வாழவும் நயினை மக்களின் சார்பிலும் நயினை ஊராட்சி மன்றத்தின் சார்பிலும் வாழ்த்தி, மென்மேலும் புகழ் பெற்று ஓங்க அன்னை கலைவாணியை வழுத்தி விடை பெறுகின்றேன்.

வணக்கம்

அன்பன்

சி. க. தம்பையா, ச, நி.
தவிசாளன்,
ஊராட்சிமன்றம் நயினுதீவு.

# கலையரசின் ஆசிச் செய்தி

நாகபூஷணி அம்மையார் எழுந்தருளியிருக்கும் மணிபல்லவமாகிய புண்ணிய தலத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மணிபல்லவ கலாமன்றத்தின் பத்தாவது ஆண்டு விழா நடைபெறுவதைப் பற்றி அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இவர்களது 5-வது ஆண்டு விழாவில் நடைபெற்ற மகாத்தான வைபத்தில் நானும் பங்கு பற்றிய சந்தோஷம் இன்னும் என் உள்ளத்தில் இருக்கிறது கலை, கலை வளர்த்து முன்னேறச் செய்வதற்கு நயினையில் நல்ல ஏதுக்கள் இருப்பதை அறிவேன், தமிழிலும் சமஸ்கிருதத்திலும், சங்கீதம், நடனம், நாடகம் போன்ற நுண்கலைகளிலும் சிறந்த அறிவும் அனுபவமும் உடைய பெரியார்கள் பலருடன் சென்ற சில வருடங்களாகப் பழகி வந்திருக்கின்றேன். அந்தத் தீவகத்தில் உள்ளவர்கள் மூலமாக எமது கலைகள் வளர்ந்து வரக்கூடியவை என்பதையும் அறிந்திருக்கிறேன். அத்துடன் அந்த ஊரவர்களிடத்தில் நான் கண்ட சிறப்பு அவர்களுடைய கலாச்சாரம், பண்பாடும். மணிபல்லவ மன்றத்தார் இவைகளை எல்லாம் உபயோகித்து மணிபல்லவத்தில் மாத்திரமன்றி யாழ்ப்பாணத்திலும் நமது மற்றும் நாடுகளிலும் தமிழனின் கலை கலாச்சாரம் ஆகியவை அழிந்து போகாமல் பாதுகாப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். நாகபூஷணி அம்மையாரின் அருளால் இவர்களது பணி பயன் தருமாக.

க. சொர்ணலிங்கம்.

*மாணிப்பாய்.*
*1-4-72.*

# செந்தமிழ் செல்வர் வாழ்த்துகிறார்...

கலைமகள்,
சென்னை-4.

உ

முருகன் துணை

இலங்கை மணித் திவகத்தின் வடபால் ஓங்கும்
எழிலார்ந்த நாகபூஷணித்தாய் கோயில்
இலங்கு நயினாதீவென்றின்று யாரும்
இசைக்கின்ற உயர்ந்த மணிபல்லவத்தின்
துலங்கு புகழ் சாத்தனார் யாத்தநூலாம்
சுவைசேரும் மேகலையிற் காணலாகும்
நலங்குலவுமவ்விடத்தில் கலாமன்றந்தான்
நற்றெண்டு செய்து வளர் தருதல் கேட்டேன்

முத்தமிழை வளர்க்கின்ற இந்தமன்றம்
மூண்ட கலையின்பத்தையாரும் தேற
நத்துபல நிகழ்ச்சிகளை நடத்தல் கேட்டேன்,
நன்குவளர்ந் தையிரண்டாண்டுகள் நிறைந்து
வித்தகமார் தரவிளங்கும் இயல்பை ஓர்ந்தேன்;
மேதகைய கட்டுரைகள் கவிதை பூண்ட
சித்திரமார் கோமுகியாம் பேரில் தோன்றித்
திகழ இருக்கும் கவினுர் மலர்ச் சீர்வாழி.

அன்பன்,
கி. வா. ஜகந்நாதன்.



## க. இராமச்சந்திரா

நயினுதீவு மணிபல்லவ கலாமன்றத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவின் தொடர்பில் வெளிவரும் இந்த மலருக்கு ஓர் ஆசியுரை வழங்குமாறு கட்டளை கிடைத்தபோது உண்மையில் யான் தயக்கமுற்றேன்.

தொன்று தொட்டு இன்று வரையில் புலவர்கட்கும், வித்துவான்கட்கும், பண்டிதர்கட்கும், நவீன முறையில் பட்டதாரிகட்கும், பிறப்பிடமான நயினுதீவில் மிளிரும் பக்தி, ஞானம், செல்வம் முதலிய ஐஸ்வரியங்கட்கு மூல வித்தாய் அமைந்துள்ளது, அங்கு கோயில்கொண்டு எழுந்தருளும் அம்பாளின் அளப்பரும் கருணையேயாகும். இதற்கு மிஞ்சி, எம் போன்ற சாதாரண மனிதரின் ஆசி எந்த விதச் சிறப்பைத்தான் கூட்ட முடியும்?

இன்றைக்குச் சில வருடங்களுக்குமுன் யாழ்ப்பாணக் கல்லூரி ஒன்றில், இலங்கையில் படித்த தமிழ் வாலிபர்களது எதிர் காலத்தைப் பற்றிய சம்பாஷணை ஒன்று நடந்தது. அப்போது, கல்வித் துறையில் நெடுங்காலம் அரும்பணி புரிந்த பெரியார் ஒருவர் என்னைநோக்கி ''உங்கள் ஊராகிய நயினுதீவுக்கு இந்தப் பிரச்சினையில்லை. அங்கே தேவியின் பக்தர்களான மக்கள் அவளின் செல்லக் குழந்தைகளாகச் சிறப்புற்று வாழ்கிறார்கள். வீட்டுக்கு வீடு ஒரு ஆசிரியரோ அரசாங்க உத்தியோகத்தரோ உண்டு. இலங்கை சுதந்திரம் பெற்ற பின் நாட்டில் தோன்றிய அபிவிருத்திகளை ஆராய்ந்து பார்ப்போமாகின், யாழ்ப்பாணத்தில் வேறு எந்தக் கிராமத்திலாவது காண முடியாத கல்வி முன்னேற்றத்தை உங்கள் சிறு தீவில் காணலாம். அரசாங்கத்தின் தயவையோ அல்லாது அரசியல்வாதிகளின் ஆதரவையோ தேடி அலைய வேண்டிய தேவை அவர்கட்கில்லை. அம்பாளின் கருணை அவ்வளவுக்கு அவர்கட்கு அமைந்துள்ளது'' என்று மகிழ்ச்சியுடன் கூறினார். அத்தோடு அவர் நிற்கவில்லை, ''உங்கள் சமரச ஞானப் பணிக்கும், சமாதான சேவைக்கும் உலகெங்கும் கிடைத்துள்ள மதிப்பும் ஆதரவும் அப்பெருமாட்டி அருளால் வந்தவை அல்லவோ?'' என்ற கேள்வியும் போட்டார். அப்பெரியார் கூற்று முற்றிலும் உண்மையாகும்.

ஒரு நாட்டில் கல்வி வளர்ச்சி, கலைத் தொண்டு சமுதாய சேவை சமயப் பணி ஒற்றுமையுடன் சிறப்புற்று ஓங்கி வளர

வேண்டுமெனில் அவை அதிகார அரசியல் (Power Politics) ஆதிக்கத்தில் சிக்கிக் கொள்ளாமல், கட்சி அரசியலாரின் (PartyPolitics) சூழ்ச்சிகளிலிருந்து விலகி நடைபெறுதல் வேண்டும். உலகின் பல பாகங்களில் யாம் இன்று காணக் கிடக்கும் உண்மை இது. மணிபல்லவ கலாமன்றத்தின் அற்புத வளர்ச்சியும் செல்வாக்கும் இதற்கு ஓர் இணையற்ற எடுத்துக்காட்டாகும். வாலிபர்களான இன்றைய செயற்குழுவினரை யான் மனமார வாழ்த்துகிறேன். பதவி வேட்கையாளர் புகுந்து சங்கத்திற்கு பங்கம் விளைக்காமல் இருக்க வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை.

இந்த மலர் அழகோடு மணமும் பொருந்தியுள்ளது. நயினுதீவின் பழைய வரலாற்று மகிமையுடன் ஆரம்பித்து ''எமது எதிர்காலம்'' என்னும் முக்கிய விஷயம் குறித்த ஆராய்ச்சியுடன் முடிவடைகிறது இடையே ''எம் பிராட்டி திருவடி மேல்'' ''சர்வ மத சந்நிதி'' என்ற இரு திவ்விய கட்டுரைகள் வாசகர்களை ஆன்மீகத்துறைக்கு அழைத்துச் சென்று இன்பூட்டுகின்றன. சுருங்கக்கூறின் மலரில் அடங்கிய கட்டுரைகள் பெரும்பாலும் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பெரியார் சொல்லிய வசனங்கட்கு விரிவுரை போல் அமைந்துள்ளன வெனலாம். நயினுதீவில் உலகின் முக்கிய மதங்களான சைவம், பௌத்தம், கிருஸ்தவம் இஸ்லாம் ஆகிய நான்கின் வழிபாட்டு நிலையங்கள் அமைந்திருப்பது பிற ஊரார் பலர் அறியாத விஷயம். சர்வமத சமரசத்திற்கு இலங்கை முழுவதற்குமே இது ஓர் உதாரணம்.

தன்னல நோக்குடன் சீவிப்பது மனித வாழ்க்கையின் முதல்படி, தன்னலம் நீத்துப் பிறர் பொன்னலம் பேணி வாழ்வது இரண்டாம்படி; எல்லா பற்றுகளையுந் துறந்து தேவியின் திருப் பாதங்களிற் சரண் புகுந்து, அவளுக்காகவே வாழ்வது மூன்றுவது படி; இதுவே உயர்வற உயர்ந்த ஞானப்படி. தேவிக்காகவே வாழ்வது என்பதில் அவளது குழந்தைகளான சீவராசிகள் அனைத்தையும் அன்பணைப்பில் பிணைத்து வாழுதல் என்ற கருத்து அடங்கியுள்ளது. அப்படியில்லாமல் நமது சொந்த நலன் கருதி வரங்கோரி அவளை வழிபடுவதானது நம்மைப் பழைய படி வாழ்வில் முதல் படிக்கே இறங்கத் தூண்டும்.

இந்த உன்னத இலட்சியத்தை முன் வைத்து கலாமன்ற அங்கத்தவர்கள் தங்கள் தினசரி வாழ்க்கையில் அனுஷ்டிக்கும் சாதனைகள் மூலம் நமது இளஞ் சிறுர்களுக்கு நல்ல வழி காட்ட வேண்டுமென்பது எனது பேரவா. புரட்சிகரமான கொள்கைகளை ஆமோதிக்கும் இன்றைய மாணவர் உலகு போதனையிலும் பார்க்கச் சாதனைக்கே கூடிய மதிப்புக் கொடுக்கிறது. அவர்கள் உள்ளத்தில் நாற்பது வயசுக்கு மேற்பட்டவர்களிடம் அன்பும், மதிப்பும் குறைந்து வருகிறது. அதனுல் தான் இளைஞர்கள் பெற்றேரிலும் ஆசிரியர்களிலும் விசுவாசம் வைக்கத் தயங்குகிருர்கள். அதிர்ஷ்ட வசமாக இருபதுக்கும் முப்பத்தைந்துக்குமிடையே உள்ள வயசினராகிய வாலிபர்களிடம் அவர்களுக்கு இன்னும் நம்பிக்கையுண்டு. யான் இங்கு கூறுவது ஜெர்மனி, பெல்ஜியம், டென்மார்க்கு, இங்கிலாந்து, ஜப்பான், முதலாய நாடுகளில் நான் பங்குகொண்ட மாணவர் மகா நாடுகளில் யான் நேரில் பெற்ற அனுபவ உண்மையாகும். சங்கங்களை நிறுவி ஆண்டு விழாக்கள் கொண்டாடினுல் மாத்திரம் போதாது. அங்கத்தவர்களிடம் சங்கத்தின் குறிக்கோளும் இலட்சியமும் பிரதிபலிக்க வேண்டும். எனவே சாதனையை மறுபடியும் வற்புறுத்துகிறேன்.

தேவியின் திருவருள் வழி காட்டுக.

உ

திருச்சிற்றம்பலம்

## முதலியார் குல. சபாநாதன் அவர்களின்

# ஆசியுரை

ஏழ் குறும்பொழில்களுக்கும் நடுநாயகமாக விளங்குவது நயினாதீவு. அகிலாண்ட கோடி யீன்ற அன்னை பராசக்தி அனைத்துலக மக்களுக்கும் அருள் புரியும் புனித தலம், சக்திபீடம் நயினையம்பதி. போதி விருட்ச நிழலிலே நிருவாண தசையடைந்த புத்தர் பெருமானின் திருவடி தீண்டப்பெற்ற புனித தலம் நயினாதீவு. ஈங்கு குளிப்பதற்காக முஸ்லிம் மக்கள் தற்காலிகமாகத் தங்கி நபிகள் நாயகத்தை வழிபடும் புனித தலம் நயினை மாநகர். ஆகவே, எல்லாச் சமயங்களும் மதபேதம் எனும் குறுகிய நோக்குடன் சமயப் போரில் ஈடுபட்டு "என் தெய்வம், உன் தெய்வம்" என்று பெரு வழக்கிடும் தன்மைக்கு அப்பாற்பட்ட தலம் நயினாதீவு அல்லது மணிபல்லவம் ஆகும்.

என்னைப்பெற்ற அருமைத்தாயாரும் தந்தையாரும் அடியேனைச் சிறுவயது தொடக்கமே நயினை நாகேஸ்வரி மீது தணியாத பக்தியை ஊட்டிவைத்துச் சென்றுவிட்டார்கள். அங்குள்ள பிரமுகர்களுடைய அறிமுகமும் ஆசியும் பெரும்பாலும் அடியேனுக்கு உண்டு. என் இளம் வயதில் என் பெற்றோர் எனக்கு முடியிறக்கவும் அள்ளு காசும் தென்னம்பிள்ளையும் தானம் செய்யவும் ஏழாற்றுப்பிரிவைத் தாண்டிச் சென்றதை நினைக்கும்போது, இந்த நினைவு என் பிஞ்சு உள்ளத்தில் பசுமரத்தாணிபோற் பதிந்துவிட்டது. எனது பூதவுடலிலிருந்து ஆவி பிரியும் வரையும் நாகேஸ்வரி அன்னை என் மனத்தகத்தே குடிகொண்டிருக்கிறாள் என்பதை யான் நன்கு உணர்ந்தவன். எனக்குத் துன்பம் குறுக்கிடும்போதெல்லாம் என் பூசை அறையில் இருக்கும் அன்னையிடம் தான் சொல்லித் தேம்பித் தேம்பி அழுவேன். அந்த ஆதிபராசக்திதான் என் வாழ்க்கைத் தோணி. ஏழாற்றுப்பிரிவில் கவிழ்ந்துவிடாமல் இன்றும் என்றும் காப்பாற்றி வருகின்றாள். நயினாதீவு பெற்றெடுத்த இராமச்சந்திரா அனைத்துலகச் சமயமாநாட்டிலே பெருந்தொண்டனாக விளங்குகின்றார். அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றும் அறிவிலி யான் என்பது யாவர்க்கும் தெரியும். நயினாதீவிலே பிறந்தவர்கள் உண்மையிலேயே பாக்கியவான்கள். நயினாதீவுச் சுவாமியாரையும் தரிசிக்கும் பாக்கியம் இந்தப் பாவிக்குக் கிடைத்ததையிட்டு நான் பெருமிதம் கொள்வதுண்டு. தலைசிறந்த நாகமணிப் புலவர் அவதரித்த ஊரும் நயினாதீவே.

பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலாலன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய வனைத்தும்
உதவலால் அன்னை எக்கலையுஞ்
சொற்றதாலன்னை உலகொடு வானுந்
தொழுதலாலன்னை என்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலால்
அன்னை பராபரை நாகபூடணியாள்

என்று நயினை மான்மியம் கூறுகின்றது.

மணிபல்லவ கலாமன்றம் முதற்கண் செய்யவேண்டிய பெருந்தொண்டு "நயினை மான்மியம்" என்ற தங்கச் சுரங்கத்தை வெளிக்கொணர்வதே என்பது அடியேனது தாழ்மையான வேண்டுகோள். இன்னும் அநேக நூல்கள் வெளிவராமல் கிடக்கின்றன என்பதை யான் நன்கறிவேன்.

ஆகவே, கோமுகி என்னும் பழம்பெரும் பொய்கை மீண்டும் சுத்தஞ் செய்யப்பட்டு, நயினாதீவில் மறைந்துகிடக்கும் தங்கக்கட்டிகளையும், கவிச்சுரங்கங்களையும் வெளிக்கொணர முயலும் என்ற நம்பிக்கையுடையவன் யான். நயினை நாகமணிப்புலவரின் குடும்பமும், அந்தப் புலவரின் மகனும் வறுமையால் வாடி, நோய்வாய்ப்பட்டு இவ்வுலக வாழ்வை நீத்ததை யான் நன்கறிவேன். புலவரின் குடும்பத்தோடு நெருங்கிய தொடர்பு எனக்கு நெடுங்காலம் இருந்துவந்தது. என் அருமை நண்பன் திரு. தியாகராசா. திரு. ஆறுமுகம், சுவாமிநாதக் குருக்கள், கைலாயநாதக் குருக்கள், பரமேஸ்வரக் குருக்கள், சுந்தரம்பிள்ளை முதலிய பல பேர்கள் என் அகக்கண்முன் காட்சியளிக்கின்றனர் இக்கட்டுரையினை எழுதும் பொழுது.

மணிபல்லவ கலாமன்றம் சீரும் சிறப்பும் பெற்று, நயினாதீவுக் கடற்கரை மணல்போல எண்ணற்ற காலம் சமயத் தொண்டும், சமூகத் தொண்டும், கல்வித் தொண்டும் ஆற்றிவர அன்னை பராசக்தி- நயினையம்பதி நாகேஸ்வரி - திருவருள் பாலிக்கவேண்டுமென்று திரிகரணசுத்தியுடன், அவள் திருவடிதனை இறுகப் பற்றி என்தலையால் வணங்குகிறேன்.

"கோமுகி" மலருக்கு எனது மனப்பூர்வமான இதயங்கனிந்த ஆசியைக் கூற ஆசைப்படுகின்றேன்.

இங்ஙனம்

குல. சபாநாதன்.

"முருகன் அருள்"

3/2 இராமகிருஷ்ண ரெறெஸ்,

வெள்ளவத்தை.

5-4-1972

---

# Extract from "Hinduism In A Nutshell"

**By: K. Ramachandra**

"It is significant to mention here that one of the most ancient and famous shrines for worship of God as Mother is in North Ceylon, in the island known as Nagadweepam. It is one of the holy places vistied by Lord Buddha. The goddess is addressed as Sri Nagabooshani Amman. Tradition associates it with Manipallavam mentioned in the Sangam Classics in Tamil, and the Buddhist nun, Manimekalai, is said to have worshiped the goddess here. This is a sea-side Devi Shrine like Kannyakumari ( Cape Comorin ) in the southern point of India, and the goddess Artemis temple at Ephesus, the south-western point of present Turkey, which St. Paul visited for the Second time between 25 and 58 A. D."

# மன்றக் கீதம்

கலையொடு தமிழ் மொழி வளர்த்திடும் நயினை
மணிபல்லவ கலா மன்றம்

இயல் இசை நாடகம் இன் தமிழ்க் கலைகள்
திசை தொறும் பரந்து செலவே

சித்திரம் சிற்பம் மெத்தவும் ஓங்கி
புத்தம் புதியன பரவ

கலையொடு தமிழ் மொழி வளர்க
கவினுறு கற்பனை மலர்க
கற்றவர் நயினையில் பெருக

கலைவளர் செல்வர் தமிழ்வளர் சான்றோர்
கனியென நயினையில் வளர்க
வளர்க, வளர்க வளர்க,
வழி வழி புகழ் பெறவே.........

தன தன தன தன தானென தனனே
தானென தானென தானா.

என்ற மெட்டு.



# தலைவர் கூறுகிறார்

பத்தாண்டுகளுக்குள் எமது மன்றம் பருவமெய்திவிட்ட தென்றால் பார்ப்போருக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும். வாளிப்பான உடல்வளம் பெறுவதால் வனப்பு மிகு வடிவம் பெறலாம் என்ற இயற்கையின் தத்துவத்தை யார்தான் மறுக்க முடியும். எதிர்ப்புக்கள் சில; எம்மை ஊக்குவித்த பாராட்டுக்கள் பல; இவைகளுக்சுடையில் நெஞ்சில் உரமும் நேர் கொண்ட பார்வையும் படைத்த இளைஞர்களது இடைவிடாத உழைப்பு மன்றத்தின் மன வளர்ச்சியையும் உடல் வளர்ச்சியையும் உறுதி பெறச் செய்தது.

'வால்பொடியள்' ஊரை வளம்படுத்தும் வாலிபர்களாக மாறினர். மன்றத்தின் மாண்புமிகு கலைத்தொண்டு ஊரெங்கும் பரவிற்று. உலகெங்கும் பரவவேண்டுமென்பதே எமது அவா. கலைப் பணியின்போது பனியில் நனைந்து, வெயிலில்வாடி, மழையில் குளித்த நாட்கள் பல. ஒருவர் இருவரல்ல, ஊக்கமிகு உறுப்பினர்கள் அனைவரும் அரும்பாடுபட்டு, தமது உழைப்பை மன்றத்து வளர்ச்சிக்கு உரமாக்கினர். ஊர் வளம்பெற, மக்கள் மனம் மகிழ கலை அவசியம் என்பதை அத்தனைபேரும் உணர்ந்தமையாற்றான் இத்தகையதொரு எழிலான வளர்ச்சியை எம்மால் காண முடிந்தது. வளர்ச்சிக்கு வழிவகுத்த வாலிபத் தோழர்கட்கு வணக்கம் கூற நாம் கடைமைப்பட்டுள்ளோம்.

வெட்ட வெளியில் சாதாரண விளக்கொளியின் துணையுடன் ஆரம்பிக்கப்பட்ட ஒருநாள் விழாவில் அரங்கேறிய தமிழன்னை, ஒருநாளிலிருந்து இருநாளாக வளர்ந்து, இரவைப் பகலாக்கும் மின் விளக்குகளால் ஒளி ஊட்டப்பெற்ற, நிரந்தர மேடையில் ஏறி ஆடலானாள். அம்மேடை மண்டபமாக மாறினால், தமிழ்தாய் இன்னும் மகிழ்வுறுவாள்.

படிப்படியாகப் பெற்ற பருவ வளர்ச்சியைப் பாராட்டப் பெருவிழாவொன் றெடுப்பதோடு மலர்சூடி மகிழ்வுறவும் மனம் கொண்டோம். மலர் மனோரம்மியமானதாக, இதழ்கள் கூடியதாக எங்கும் மணக்கும் தன்மையானதாக இருக்க வேண்டுமென்று ஏங்கினோம். பெயரில் புனிதத்தன்மையை நாடினோம். கலைத் தன்மையும், கருத்தாழமும் கொண்டதொரு பெயரை மலருக்குச் சூட்டி மகிழ்ந்தோம்.

இவ்வருடம் ஏற்பட்ட வெப்பக்கொடுமையாலோ என்னவோ மலர் இதழ் பல பரப்பி மணம் வீச முடியாமற் போய்விட்டது. எனினும் மலர்ந்த இதழ்கள் அத்தனையும் மணங் கொண்டவையாக இருப்பதால் வாசம் வானை முட்டும் என்பதில் சந்தேகமில்லை. மலர் மணம்பற்றிக் கேள்வியுற்றதால் நீங்களும் அதைக்காணத் துடிப்பீர்கள்தானே. எனவே மலர் இதழொன்றை இலேசாக நான் எடுத்துக் கொண்டு பொய்கைக்குள் புகுந்து விளையாடி பூமணங் கண்டு தமிழ் மணங்காண வாரீர் என்று வரவழைக்கின்றேன். மலரின் இதழ் ஒன்றெடுக்க இசைவுதந்த மலர் ஆசிரியருக்கு நன்றி கூறுவதோடு மன்ற வளர்ச்சிக்கும் மலர் மணத்துக்கும் உழைத்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

வணக்கம்

ப. க. மகாதேவா.
தலைவர்

36, 36வது லேன்,
கொழும்பு-6 29-3-1972.



# எமது பணி

கலே வேறு வாழ்வு வேறு என்று கருதாமல் கலேயுடன் வாழ்வைக் கலந்நு வாழ்ந்தவன் தான் தமிழன். மேலே நாட்டவர் வியக்கக்கூடிய வகையில் ஆயகலேகளே அறுபத்திநான்காக வகுத்தவன் தமிழன். இந்த உணர்வுகளினுல் உந்தப்பட்டு 1963ம் ஆண்டில் நயினேவாழ் இளேஞர்களினுல் உருவாக்கப் பட்டது இம் மன்றம்.

தொட்டிலில் அன்னேயின் தாலாட்டில் தொடங்கி பிணக் காட்டில் ஒப்பாரி கேட்டு நீண்ட உறக்கம் உறங்கும்வரை கலேயுடன் இணேந்தது எம் வாழ்வு. இயல், இசை, நாடகமாம் முக்கலேயும் தமிழர் மூச்சு என்ருல் மிகையாகாது. இயல் கலேயிலே உயர்ந்து, இசையிலே நயந்து, நாடகத்திலே முன்னேடியாக விளங்கியவர்கள் நம் மூதாதையார். எனவேதான் கலேயில்லா ஒரு வாழ்வு சிறப்பு பெற்றவாழ்வாக அமையாது என்று உணர்ந்து எத்துறையில் ஈடுபட்டாலும் வாழ்வின் அத்துறையில் கலேமணம் பரப்பி தமிழ் மரபினேப்பேணி மொழியினேக்காத்து வாழ்வினே வளம்படுத்துவது எமது பணியாகும்.

எம் ஊர் கடலால் சூழப்பட்டு இருந்தபோதிலும் மற்றப் பிரதேச மக்களுக்களுக்கு ஏற்படுகின்ற கலேத்திருப்தி எமது தீவு மக்களுக்கும் ஏற்படவேண்டும் என்ற பேரவாவினுல், எமக்கு இதன் பொருட்டு ஏற்படுகின்ற பல இன்னல்களேயும் பொருட்படுத்தாது இதனே நிறைவேற்றி முடிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிருேம்.

எமது மகிழ்ச்சிகலெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமைவது இப் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளியிடும் ''கோமுகி'' சிறப்பு மலராகும். இது எமதூர் கலே, இலக்கிய சரித்திர, சமயப் புவியல் ஆய்வுகளே அடிப்படையாகக் கொண்டதாக அமைவதோடு எம் ஊருக்காக சிறப்பான புலமையும் இதில் மிளிர் கிறது. எனவே, ஒவ்வொருவரும் இதனே வாங்கிப்படித்து மகிழ வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு இம் மலரை சிறப்புற அமைத்து வெளியிட்டு வைக்கும் மலர் ஆசிரியர் திரு வ. ந. பரராசசிங்கம் அவர்களுக்கும், அவர் குழுவுக்கும் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

''திறமையினேப் போற்றுவதிலும் திறமை காண்போம்
தீந்தமிழைக் காப்பதில் திருப்தி கொள்வோம்''

க. க. சந்திரன்
கௌரவ செயலாளர்

# 1971 - 1972 நிர்வாகக் குழுவினர்

தலைவர் : க. மகாதேவா

துணைத்தலைவர் : இ. சிவநாதன்

செயலாளர் : க. க. சந்திரன்

துணைச்செயலாளர் : ந. திருநாவுக்கரசு

இணைப் பொருளாளர்கள் :

பொ. இராசலிங்கம்

வீ. வை. யோகலிங்கம்

செயற்குழு அங்கத்தவர்கள் :

மு. பரமேஸ்வரன்

சி. குலசிங்கம்

சி. தனபாலசிங்கம்

இ. தியாகராசா

ச. பாலகிருஷ்ணபாரதி

கணக்காய்வாளர் :

பொ. நாகமணி

## "கோமுகி" உருவாக உழைத்தவர்கள்



நிற்பவர்கள்:- க. க. சந்திரன் (செயலாளர்) வி. இராமச்சந்திரன் (ம. கு. உ.) வி. வேதநாதன் (ம. கு. உ.)
ப. க. நவரத்தினராஜா (ம. கு. உ.) சி. குலசிங்கம் (செயற்குழு உறுப்பினர்)

இருப்பவர்கள்:- ப. க. மகாதேவா (தலைவர்) க. ப. ச. இலங்கை நாயகம் (மன்ற ஆலோசகர்)
வ. ந. பரராஜசிங்கம் (மலராசிரியர்)



## இதழாசிரியர் கூறுகிறார்.

முன்னாளில் தமிழ் முடிமன்னர் மடியில் வளர்ந்தது. குடிமக்கள் கோலோச்சும் காலமிது. ஆதலினால் தமிழ் வளர்ச்சிக்காவன புரிதல் இன்று தமிழ் மக்கள் பணியாகச் சித்தித்தது. எந்நாட்டுத் தமிழர் தம் தமிழ்ப் பணிக்கும் குறையாத அளவில் இந்நாட்டுத் தமிழரும் தமிழ்வளர்ச்சிக்குத் தொண்டு இயற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணத் தமிழ் மண்ணின் அங்கமாக அமைந்த எங்கள் தீவிலே புதியநோக்கு-புதிய சிந்தனைகள் என்ற வீறார்ந்த நிலைக்களனில், தமிழ்த்தொண்டையே இலக்காகக் கொண்டு, செயலாற்றும் தமிழிளைஞர் தானையாக விளங்கும் மணிபல்லவ கலாமன்றம் இவ்வாண்டு தனது பத்தாண்டு நிறைவை எய்திப் பூரித்து நிற்கின்றது. புதுமை வீறுடன், புரட்சித் தடத்திலே, பொங்கிப்பாயும் இலட்சியத் துடிப்புடன், நாட்டிற்கும் நல்ல பொது வாழ்க்கைக்கும் பங்களிப்புச் செய்யச் சூளுரைக்கும் இளைஞர் சமுதாயத்தின் முன்னணித் தானை வீரர்களாக எமதிளைஞர் உந்நதம் பெற இம் மன்றம் ஒரு பயிற்சிக் கூடமாக இத் தீவகத்தில் மிளிருகிறது.

வளர்ச்சியை வாழ்த்துதல் மங்கலம்; மரபு. இந்தப் பசலையில் விளைவது ஆர்வமும் உற்சாகமும்! சத்திய வழி நின்று எமது வளர்ச்சிபற்றிய விமர்சனங்களையும் சுயவிமர்சனங்களையுந் திரட்டுதலே இம்மலரின் பணி.

உலகு தழுவிய புதிய இலக்கிய உணர்வு நயினாதீவிலும் பரம்ப இம்மன்றம் ஆற்றிய பணி அளப்பரியது. இன்று தீவுப்பகுதியில் மாத்திரமன்றி யாழ்ப்பாணத்தின் பிறபகுதிகளிலும் நயினையின் புதிய எழுச்சி, வியப்பினை ஏற்படுத்தியுள்ளது. உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல!

சரித்திர கால மணிபல்லவத்தின் பெருமையாக விளங்கிய கோமுகியெனும் மலர்ப்பொய்கையின் நாமம் தாங்கி வரும் இவ்விதழ், தன்னகத்தே பல அமுத சுரபிகளையடக்கியுள்ளது.

இம் மலர் வெளியீடு எம் மன்றத்தின் கன்னி முயற்சி. மலரைப்பற்றிய விமர்சனங்கள் எமது வளர்ச்சியை மேலும் ஆரோக்கியமான வழிக்கு இட்டுச் செல்லும் எனக்கூறி, இக்கோமுகிப் பொய்கையில் தமிழ் நீராடிக் களிக்குமாறு வேண்டுகிறேன்,

வணக்கம்,

வ. ந. பரராஜசிங்கம்,
இதழாசிரியன்

# மணிபல்லவ கலா மன்றம், நயினாதீவு

## 10-வது ஆண்டறிக்கை

கலா ரசிகப் பெருமக்களே!

வணக்கம்.

கடந்த ஒன்பது ஆண்டுகட்கு முன் னம் இளைஞர்கள், பலரின் இதயங்களில் உதயமான ஒன்றித்த கலை உணர்வு நயினை மணிபல்லவ கலா மன்றத்தை உருவாக்கியது. 1963-ம் ஆண்டில் ஆரம்பித்த முதலாவது விழாவில் இருந்து எம்மன்றம் வருடா வருடம் சிறந்த கலைவிழாக்களை எடுப்பதுடன் நாட்டில் பலதரப்பட்ட சேவைகளையும் செய்து வந்திருக்கிறது. மன்றங்கள் தோன்றுவதும் பின்னர் மடிவதும், கழகங்கள் பல தோன்றி கடைசிவரை இயங்காமல் விடுவதும், சங்கங்கள் சில தோன்றி இடையிலே சங்கமமாகி விடுவதும் நமது நாடுகளில் காணக் கூடிய ஒன்று. ஆனல் சிறுவர்களாக இருந்த நாங்கள் பாடசாலைக் காலத்தில் ஆரம்பித்த இம் மன்றத்தினை பத்து வருடங்களுக்குச் சிறந்த முறையில் ஓட்டிச் சென்றிருக்கிறோம் என்றால் எமது அங்கத்தவர்களது ஒற்றுமையையும் அவர்களது சிறந்த கலைத் தொண்டினையும் தான் எண்ணிப் பெருமைப்பட வேண்டும்.

கடந்த ஒன்பது வருடங்களில் எமது மன்றம் ஆடம்பரமின்றி ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளது என்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

இயல்:- இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து பல அறிஞர்களை இங்கு வரவழைத்து அவர்கள் வாயிலாக சொற்பொழிவுகளை நிகழ்த்திக் காட்டியுள்ளோம். எம் தீவின் சொற்பொழிவாளர்களை ஒவ்வொரு ஆண்டு விழாக்களிலும் சொற்பெருக்காற்ற வைத்து அவர்கள் வாயிலாகவும் பல கருத்துக்களை நம் மக்கட்கு எடுத்துரைத்துள்ளோம். இவற்றை விட பாடசாலை மாணவர்களையும் மற்றோரையும் ஊக்குவிக்கும் பொருட்டு பல ஆண்டுகளில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டியென நடாத்தி அவற்றிற்கு பரிசில்களும் வழங்கி ஊக்குவித்துள்ளோம். எதிர்வரும் காலங்களில் இன்னும் விரிந்த அடிப்படையில் இயற்றமிழை வளர்க்க எண்ணியுள்ளோம்.

கவிதை:- கவிஞர்களை கௌரவிக்கு முகமாக, மறைந்த எமது கவிஞர் திரு. நாகமணிப் புலவர் அவர்கள் அரங்கில் சில விழாக்களை நடாத்தியுள்ளோம். அடுத்து எமது கவிஞர் திரு. ஆ. இராமுப்பிள்ளை அவர்களின் கவிதைத் திறனைப் பாராட்டி அவர்களுக்கு பொன்னாடை போர்த்தியும், பொற் கிழி வழங்கியும் கௌரவித்துள்ளோம். மற்றும் தீவின் வளர்ந்து வரும் கவிஞர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி "நவரசம்" என்ற தலைப்பில் சிறந்த ஒரு கவிதை அரங்கை நடத்திக் காட்டினோம். இதைவிட 1971-ல் ஒரு கவிதைப் போட்டியினையும் நடாத்தி கவிஞர்களை ஊக்குவித்துள்ளோம். எமது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவிலே கவிஞர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை அவர்களை பொன்

ளுடை போர்த்திக் கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். இவ்வாறாக கவிஞர் களை எம் மன்றம் ஆண்டு தோறும் கௌரவித்துக் கொண்டிருக்கிறது.

இசை:- இசைத்துறையில் எமது மன்றம் சரியான முறையில் தொண்டாற்ற இயலாது போயிற்று. ஆயினும் வருடா வருடம் நடைபெறும் கலைவிழாக்களில் கர்நாடக இசை வல்லுனர்களை இங்கு வரவழைத்து அவர்களின் இசைவெள்ளத் தில் உங்களை எல்லாம் கடந்த ஒன்பது வருடங்கள் மூழ்க வைத்துள்ளோம். இத் தோடு பல தடவைகளில் டப்பா சங்கீத கலைஞர்களையும் அழைத்து அவர்களின் இசையினையும் கேட்கக் கொடுத்துள்ளோம் எமது மன்றத்துக்குத் தேவைப்பட்ட போதெல்லாம் ஆலோசனைகளைத் தந்து தவி யும், எம்மோடு சேர்ந்து விழாக்களைச் சிறப்புறச் செய்ய உழைத்தவருமான எமது அரசினர் மகா வித்தியாலய இசை ஆசிரியர் திரு. தா. பாலசுந்தரம் அவர்களுக்கு இப் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதில் பெருமையடையகிறோம்.

நாடகம்:- நாடகக் கலை நம் நாட்டில் பெரிதும் வளர்ந்த கலைகளில் ஒன்று. எம் தீவக மக்கள் பேசுவதும், நடப்பதும், செயற்படுவதும் எல்லாமே, கலை அம்சம் பொருந்தியதாகவே இருக்கும். ஏன் இதற் குச் சான்றாக எம்மூர் முதியோர்கள் நடித் துக் காட்டிய ''கும்பிட்டேன் குடியாதே'' ''அரிச்சந்திரா'' போன்ற நாடகங்களும் நயினை மாதர்கள் அளித்த ''பக்த மீரா'' என்ற நாடகமும், நயினை ஆசிரியர்கள் அளித்த ''கண்ணு மணியின் கண் மணிகள்'' ''அசட்டு மாப்பிள்ளை'' ''தியாகி'' போன்ற நாடகங்களும், எம்மூர் அரசாங்க ஊழியர்கள் அளித்த ''வீரபாண்டிய கட்டப் பொம்மன்'' ''விதியின் முடிவு'' ''தம்பி எப்ப வந்த நீ'' ''ஊரென்ன சொல்லும்'' போன்ற நாடகங்களும், நயினை முத்தமிழ் கலாமன்றத்தினர் அளித்த, ''சத்தியத்தின் வெற்றி'' ''பாதுகா பட்டாபிஷேகம்'' ''அரிச்சந் திரா மயான காண்டம்'' போன்ற நாடகங் களும், இம் மன்றத்தினர் அளித்த ''மனக் கோவில் உனக்காக'' ''எங்கிருந்தோ வந் தாள்'' ''கல்லுக்குள் ஈரம்'' ''மனம் சாய்ந்து போனால்'' ''மணற் கோட்டை'' ''பணம் தந்த பரிசு'' போன்ற சமூக நாடகங்களும் ''சகுன சம்பந்தம்'' ''சுடு குது மடியப்பிடி'' ''இறங்குப் பெட்டி'' ''என்னத்தப் பறயிறது'' ''இது நடக் குமா'' இது போன்ற சிரிப்பு நாடகங்களும், மாணவர்கள் அளித்த ''சூ மந்திரக்காளி'' ''குருநாகல் குமாரசுவாமி'' என்பனவும் இக் கலைக்கு பெரிதும் எடுத்துக் காட்டாக எமது மேடைகளில் நீங்கள் கண்டு களித் திருக்கிறீர்கள். எமது நாடகங்களுக்கு மெரு கூட்டியும். நாடக வளர்ச்சியில் ஈடுபட்டு பாடுபட்டவருமான கலைஞர் திரு. க. காமாட்சிசுந்தரம் அவர்களுக்கும் இப் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதில் பெருமையடைகிறோம்.

பொது:- இலங்கைத் தீவின் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இடங்களில் நயினாதீவும் ஒன்று. எனவே, இங்கு வரும் அறிஞர்கள், பெரியார்கள், பிரமுகர்கள் இவர்களைக் கௌரவித்து அனுப்பவேண்டிய பொறுப்பு எமக்குண்டு. இதற்கு ஒரு சிறந்த திறந்த வெளியரங்கு அவசியம் என்பதை உணர்ந்து ஒரு அரங்கை நிறுவ முயன்று ஓரளவு அதன் அடித்தளத்தை நிறுவி முடித்துள்ளோம். இதனைப் பூரத்தி செய்வதற்கு இடையில் எமக்கு ஏற்பட்ட நிலப் பிரச்சினை காரண மாக அது தடைப்பட்டுள்ளது. விரைவில் அதனைப் பூர்த்தி செய்ய ஆக வேண்டிய முயற்சிகளை எடுக்கவுள்ளோம். நயினாதீவின் கிராமாதிகாரியாக இருந்து, ஆசிரிய சேவைக்கு மாறிச் சென்ற திரு. கா. க

சிவசிதம்பரம் அவர்களை, அவர்களின் திறமையான சேவையினைப் பாராட்டி அவருக்கு நடைபெற்ற பாராட்டு விழாவிலே பாராட்டுப் பத்திரம் வழங்கினோம். அடுத்து எமது 8-வது ஆண்டு கலைவிழாவில் நாதஸ்வர வித்துவான் திரு. என். ஆர். கோவிந்தசாமி அவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்துள்ளோம். இது போன்ற பலதரப்பட்ட சேவைகளையும் மன்றத்தின் வருடாந்த நிர்வாகக் குழுவினர் செய்து வந்துள்ளனர் என்பதையும் தெரியப்படுத்துகிறோம்.

**வாழ்த்துகிறோம்:-** ஆசிரிய சேவைக் காலத்தில் இருந்து எம் மன்றத்துக்கு பலதரப்பட்ட சேவைகளை அவ்வப்போது செய்து வந்து தற்போது இளைப்பாறியுள்ள திரு. க. சபா ஆனந்தர், திரு. செ. தில்லையம்பலம், திரு. வே. கந்தையா, திரு. கா. க. சிவசிதம்பரம், திரு. செ. ஐயாத்துரை, திரு. க. சோமசுந்தரம் அவர்களுக்கும் எம் மன்றத்தினர் சார்பில் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவிப்பதோடு அவர்கள் வாழ்வும் வளமும் பெற வாழ்த்துகிறோம்.

**பெருமையடைகிறோம்:-** எம் மன்ற அங்கத்தவர்கள் அரசாங்கத்திலும் மற்றும் தொழில் நிலையங்களிலும் பதவிகள் பெற்றுப் போவதையும், பலர் இல்லற வாழ்க்கையில் புகுந்து வாழ்க்கையை ஆரம்பித்ததையும் கண்டு பெருமையடைகிறோம்.

**வருந்துகின்றோம்:-** எம் மன்ற ஆண்டு விழாக்களுக்கு நிகழ்ச்சிகளைத் தயாரித்துத் தந்துதவியும், நிகழ்ச்சிகளில் பங்குபற்றியும் சிறப்பித்து வந்து தற்போது எம்மை யெல்லாம் விட்டுப் பிரிந்த திரு. பொ. தருமலிங்கம், திருமதி நீலாம்பிகை மகாலிங்கம், திரு க. கனகராசா அவர்களின் பிரிவு குறித்துப் பெரிதும் மனம் வருந்துவதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நன்றி நவிலல்:-** எமது மன்றம் இவ்வளவு சிறப்பாக வளர்ந்து வருவதற்கு எமக்கு பொருளுதவி புரிந்து வரும் ரசிகப் பெருமக்கள் அனைவர்க்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எமக்கு பாடசாலை வாயிலாக நிகழ்ச்சிகளைத் தயாரித்துத் தந்துதவிவரும் மூன்று பாடசாலை அதிபர்களுக்கும், சக ஆசிரியர்களுக்கும், மற்றும் நயினை மன்றங்கள், சங்கங்கள், அனைவற்றுக்கும் எமது நன்றியைக் கூறிக் கொள்கின்றோம்.

**வணக்கம்.**

மணிபல்லவ - கலாமன்றம்

நயினாதீவு

With best Compliments

from

VIJAYA TRADERS

GENERAL RICE MERCHANTS AND COMMISSION AGENTS

No, 84. Old Moor Street,

COLOMBO-12

*Telephone:* **36119**

**GREETINGS**

FROM

# ASOKAN MILLS

*HEAD OFFICE:-*

**S. S. Nellaiappapillai & Co.**
141, Maliban Street
Colombo 11.

RICE - MILLERS
Horawapothana Road
Vavuniya

*Tele Phone:- 29561. Grams - Valampuri*

**Wishing All Success.**

# V. M. RASALINGAM & Co

**OIL; CATTLE FOOD & CURRY STUFFS MERCHANTS**

23, 5th CROSS STREET
COLOMBO 11.

*Tele phone: 24158*

With the Best Compliments

From

# M. S. H. ABDULALLY & SONS

**EXPORTERS, IMPORTERS AND AGENTS**

*P. O. BOX 1159,*

*311, GRANDPASS ROAD,*

*COLOMBO - 14.*

*Telephone:* **23991**

*Telegrams:* **Goolshan — Colombo.**

# கோமுகிக்கு

எம் இதய பூர்வமான

வாழ்த்துக்கள்

★

" அம்பிகை வாசம் "
நயினாதீவு-6.

V. K. T. தம்பிமுத்து
நயினாதீவு.



With Best Wishes

Seeduwa Stores

210, Seeduwa Junction ,

Seeduwa.

# நயினாதீவு வரலாற்றுப் பின்னணி

ஐ. சரவணபவன்

ஒரு கிராமத்தின் வரலாற்றை ஆராயு முன் அக் கிராமம் அமைந்துள்ள தேசத்தையும், பெரும் பிரிவையும் ஆராய்வது சாலச் சிறந்ததாகும்.

## இலங்கை

''எங்கள் இலங்கையடி பாப்பா'' இத்தொடரை முதலாகவுடைய பாடலைப் பலமுறை சொல்லித் தந்தார் எனது பாலர் வகுப்பாசிரியர். அன்று காதுக்கினிக்கும் ஒரு பாடலாகவே எனக்குத் தோன்றியது. ஆனால், வருடந்தோறும் வகுப்புக்களேறின. இலங்கையின் கலைச் செல்வங்களையும், இயற்கைக் காட்சிகளையும், சரித்திரச் சார்புடைய சின்னங்களையும், நெடுந் தீவிலிருந்து தேவேந்திரமுனை வரையும், கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரையும் காணும் பாக்கியம் எனது ஆசிரிய வாழ்க்கையிலே அநுபவத்தில் நேர்ந்தது. இப்பரந்த உலகில் இலங்கையின் உன்னத ஸ்தானம் எவ்வளவு சிறப்புற்றோங்கி வளர்ந்திருக்கிற தென்பதை இன்று நாம் அறியக் கூடியதாக இருக்கிறது.

இலங்கையை இராவணன் ஆண்டானென வரலாற்று நூல்கள் கூறும். விரசிவசு என்பவனுக்கும், கேகசி என்பவளுக்கும் புத்திரனாகப் பிறந்த இராவணன் இலங்கையை அரசாண்ட மன்னனெனக் கலைக்களஞ்சியம் 2-ம் தொகுதி 77-ம் பக்கத்திற் கூறப்படுகிறது. அதே கலைக்களஞ்சியத்தில் இராமன் திரேதாயுகத்தில் இருந்த அரசனெனவும், அக்காலத்திற்றான் வான்மீகி என்ற புலவரும் வாழ்ந்தரென வும் சிலரின் அபிப்பிராயம் என்று கூறுகிறது. அதே இராமரே இலங்கைக்கு வந்து இராவணனைப் போரில் வென்று சீதையைச் சிறைமீட்டதாக இலக்கியங்கள் கூறுகின்றன. கம்ப இராமாயணம் மிக விரிவாக எடுத்தியம்புகின்றது. ஆகவே, இலங்கை என்ற பெயர் புராதனமான தென்பதற்கையமில்லை. அப்பெயராற் குறிக்கப்படும் இலங்கை தற்போதைய இலங்கைதான் என்பதற்காய காரணங்களையும், வரலாற்றுச் சான்றுகளையும் ஆராய்ந்தால் சீதா பிராட்டியாரின் பெயருடன் இணைப்புடையதாக சீத்தலவா (சீதைவெளி) சீதால (சீதையருவி) என்ற பெயர்கள் தற்போதும் காணப்படுகின்றன. இந்தியாவையும் இலங்கையையும் இணைத்த பாலத்தை இராமரணை என்று கூறுவதினால், இராம இராவண யுத்தம் நடைபெற்றவிடம் இலங்கையெனக் கூறுவதினால், இராமாயணம் கூறும் இலங்கை எமது தாய் நாடே எனத் துணியலாம். அதுவுமன்றி கி. பி. 2-ம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்ட மணிமேகலை என்ற

நூலிலும் இலங்கை என்ற சொல்லே எடுத்தாளப்படுகிறது.

மகாவம்சத்திற் கூறப்படும் கால அட்டவணையின்படி கி. பி. 2 ம் நூற்றுண்டில் 1-ம் கயபாகு வேந்தன் இலங்கையை ஆண்டான். அவன் "கடல் சூழிலங்கை கயபாகு வேந்தன்" எனச் சிலப்பதிகாரத்தில் அழைக்கப்படுகிறுன். ஆகவே, கி. பி. 2-ம் நூற்றுண்டுக்கு முன்பு இலங்கையென்ற பெயரிலேயே இத்தீவு இருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும், இத்தீவு இரத்தினத் தீபம், ஈழம், மும்முடிச் சோழமண்டலம், சிங்களத்துவீபம், தாபிரபன, பாலாசிமுண்டு, சாலிக, சலாப தீபம், செறண்டிப், இயக்க தீவு, நாகதீவு எனவும் சிலரால் அழைக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணம்

எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்" என்ற முதுமொழிக்கிணங்க இலங்கை இத்துணைச் சிறப்புப் பெற்றிலங்கக் காரணம் எழில் கொண்ட யாழ்ப்பாணம் இலங்கையின் வடபால் அமைந்திருப்பது தாஞ என்பது சரித்திர ஆராய்ச்சியாளர்களின் சிந்தனைக்குரிய விருந்தெனவே நான் கருதுகின்றேன். "யாழ்ப்பாணம் ஒரு பாணனுக்குப் பரிசிலாக வழங்கப்பட்ட ஒரு மணற்றிடர்" எனச் சரித்திராசிரியர்களிற் சிலர் கூறுகின்றனர். "அவன் பரிசிலாகப் பெற்றவிடம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதுமல்ல. தற்போதைய யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும் கரையூர், பாசையூர், பறங்கித்தெரு, பண்ணை முதலிய கடற்கரைப் பிரதேசங்களே என ஒரு சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். இலங்கையின் வடபகுதியை முற்காலத்திலேயிருந்து நாகவரசர்கள் ஆண்டார்களெனவும், கந்தரோடை பல நாகவரசர்களது இராசதானியாகவும், நாகதீவு (நயினதீவு) பல நாகவரசர்களதும், சிற்றரசர்களினதும் இராசதானியாகவும் இருந்தனவென நாம் அறியக் கூடியதாக இருக்கிறது.

கி. மு. 563-ம் ஆண்டு தொடக்கம் கி. மு. 483-ம் ஆண்டுவரை வாழ்ந்த புத்த பெருமான் குலோதரன், மகோதரன் என்னும் நாகவிளவரசர்களுக்கிடையில் ஒரு மணிபதித்த அரச பீடத்தைப் பற்றியேற்பட்ட பிணக்கிற் சமாதானஞ் செய்துள்ளார். ஆகவே, கி. மு. 483-ன் முன் யாழ்ப்பாணக் குடா நாட்டில் குடி மக்கள் வாழ்ந்தனர். அரசர்களுமிருந்தனர். எல்லாள மன்னன் (கி. மு. 2-ம் நூற்றுண்டு) காலத்தில் அல்லது குலசேகர சிங்கையாரியச் சக்கரவர்த்தி (கி. பி. 13-ம் நூற்றுண்டு) காலத்தில் யாழ்ப்பாடி எனக் கூறப்படும் அந்தகக் கவிவீரராக முதலியார் யாழ்ப்பாணத்தைப் பரிசிலாகப் பெற்று, இந்தியாவில் இருந்து சனங்களைக் கொண்டு வந்தாரென்பதும், அவர் மணற்றிடர் என்ற யாழ்ப்பாணக் குடா நாட்டைக் காடு திருத்தி நாடாக்கிஞரென்பதும் பொருத்தமுடையதன்று. யாழ்ப்பாடி இந்தியாவில் இருந்து வந்து கி. பி. 13-ம் நூற்றுண்டில் யாழ்ப்பாணக் கரையோரமாகவிருந்த பிரதேசத்தை அரசனிடம் பெற்று, தமது இனத்தவரைக் கொண்டுவந்து குடியேற்றியிருக்கலாம். அக்குடியேற்றம் அவரது பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம். அல்லது "யாழ்ப்பாணன்" என்று அழைக்கப்பட்டிருக்கலாம். போர்த்துக்கேயர் காலத்தில் அப்பகுதிகளிற் கோட்டைகள் கட்டப்பட்டன. அவர்கள் யாழ்ப்பாணம் எனத் தங்கள் கோட்டைப் பிரதேசத்தைக் குறிப்பிட்ட சொல்லால் குடா நாடு முழுவதும் யாழ்ப்பாணம் என்ற பெயரில் அழைக்கப்பட்டது. எனவே, யாழ்ப்பாடி வரலாறு சரித்திர ஆசிரியர்களிற் சிலரால் மிகப்படுத்திக் கூறப்பட்டதேயெனக் கருத இடமுண்டு. வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, கொம்பனித் தெரு என்ற

தனிப்பகுதிகள் தற்போது கொழும்பென அழைக்கப்படுவதைக் காண்க.

## சப்த தீவுகள்

சிரத்தை அழகு படுத்துவதற்குச் சிறப்புற்ற நவமணிகளைக் கொண்டு கிரீடங்களை யாக்கி அணிவர். கிரீடமின்றேற் சிறப்பில்லையல்லவா? இலங்கையின் கிரீடமெனப் போற்றப்படுபவைகள் சப்ததீவுகளே.

## நயினாதீவு

சப்த தீவுகளிலும் தனிப்பெரும் சரித்திரப் புகழ் பெற்ற நயினாதீவு யாழ்ப்பாணத்திலிருந்து தென்மேற்கே ஏறக்குறையப் பதினெண் மைல் தூரத்தில் அமைந்திருக்கின்றது. இத்தீவின் மறு பெயர்களாவன நாகதீவு, நாகத்தீவு, நாகதிவயின, நாக நயினார்தீவு, நயினார் தீவு, நாகதீபம், நாகதீப, நாவலந்தீவு, பூந்தோட்டம், சம்புத்தீவு, மணிபல்லவம், மணிபல்லவத்தீவு, மணிநாகதீவு, மணித்தீவு, பிராமணத்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம் என்பனவாம். ஒல்லாந்தர் காலத்தில் ஹார்லெம் என அழைத்தனர்.

## நாகதீவு, நாகத்தீவு, நாகதிவயின

நாகதீவு என்ற பெயர் நாகர்களின் குடியிருப்பாலும் நாகவழிபாட்டாலும் நாகங்கள் அதிகமாக வாழ்ந்தமையாலும் ஏற்பட்டதே. சிங்கள மன்னர் இலங்கையை அர்சாண்ட காலத்தில் நாகதிவயின என அழைக்கப்பட்டதாக இருக்கலாம். திவயின என்ற சிங்களச் சொல் தீவு என்னும் பொருளுடையது.

## நயினார்தீவு

இத்தீவுக்கு வழங்கப்படும் பல பெயர்களுள்ளும் நயினார்தீவு என்னும் பெயர் ஆராய்ச்சிக்குரியது. மதுரையில் மாநாய்கன் என்னுமொரு வைசியர் இருந்தாரெனவும், அவரே நயினாதீவு வடகீழ் திசையில் நாகபூஷணிக்கொருசிறந்தஆலயம்கட்டுவித்தாரெனவும் மதுரை வைசியர்களிடமிருந்து பெற்ற ஏடுகள் கூறுகின்றன. மாநாய்கன் என்னும் வைசியரே நயினார்பட்டரென்ற அந்தணரையும், கண்ணப்பன் என்ற வேளாளரையும் நயினாதீவுக்குக் கொண்டு வந்தார். அக்காலத்தில் நாகதீவெனவே வழங்கப்பட்டது. நயினார்பட்டர் அறிவிற் சிறந்தவராகவும், அரசினர் தொடர்புடையவராகவும் வாழ்ந்தபடியால் தனது ஞாபகத்தைப் பிற்காலத்தவரும் நினைக்க விரும்பி நாக நயினார்தீவு என மாற்றினர். காலப்போக்கில் நயினார்பட்டரின் செல்வாக்கும், அவர் சந்ததியாரின் செல்வாக்கும் விருத்தியடைய 'நாக' என்ற சொல் விடப்பட்டு நயினார்தீவு என அழைக்கப்படலாயிற்று. இது பற்றியே கொக்குவில் வாக்கிய பஞ்சாங்கத்தில் இன்றும் நயினார்தீவு வீரகத்தி விநாயகர், நயினார்தீவு நாக பூஷணியம்மை எனக் குறிக்கப்படுகின்றன. நயினார்பட்டரின் 20-ம் தலைமுறையினரான இளையதம்பி உடையார் காலத்தில் பட்டர் மரபினர் நாக பூஷணிக்குப் பூசை செய்வதை விடுத்து அரசாங்க சேவையிற் சேர்ந்தனர். பிற்காலத்தில் பட்டர் மரபினர் செல்வாக்கொழிய நயினார்தீவு என்ற சொல்லில் 'ர்' விடப்பட்டு நயினாதீவு ஆகியது. இது ஆச்சரியமானதல்ல. இன்றைய இலங்கையில் வீதிப் பெயர்களும் இடப் பெயர்களும் மாறிவருவதைக் காண்க.

## பூந்தோட்டம்

பூந் தோட்டமென்பது புராதன பெயராகும். இந்தியாவிற் சிதம்பரத்தைத் தில்லையெனவும் அழைப்பர். அங்கேயுள்ள ஆலயங்களுக்குத் தேவையான பூக்களைப் பெறுவதற்காக நயினாதீவுத் தில்லை வெளியில் ஒரு பெரிய பூந்தோட்டமமைக்கப்பட்டுப் பூக்

கள் சிதம்பரத்துக்குக் கொண்டு செல்லப் பட்டன. தில்லைக் கோயிலுக்குத் தேவை யான பூந்தோட்டமாகையாற் தில்லைப் பூந்தோட்டமென அழைக்கப்பட்டது. காலப்போக்கில் இந்தியாவிலே தேவை யான பூக்கள் கிடைத்தமையால் இத் தோட்டம் கைவிடப்பட்டு பூமரங்கள் அழிந்து, பரந்த சமவெளியாகியபடியால் தில்லை வெளியென அழைக்கப்படுகிறது. இப் பகுதி தற்போது பிடாரி கோயில் இருக் கின்ற பகுதியாகும். தில்லை வெளி என்னும் காணி தோம்பேட்டில் 200 பரப்புடைய தாகக் காணப்படுகிறது. சிதம்பரக் கோயி லின் முற்கால ஏடுகளில் இவ்விபரங்கள் காணப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. தற்போது நுவரெலியாவில் உற்பத்தியா கின்ற பூக்கள் யாழ்ப்பாணம் வரையும் வருவதுபோல, முற்காலத்தில் இங்கிருந்து பூக்கள் இந்தியாவுக்குக் கொண்டு செல்லப் பட்டிருக்கலாம்.

## நாகதீபம்

இச் சொல் யாழ்ப்பாணக் குடா நாட் டைக் குறிப்பதாகக் கூறுவர் சிலர். தீபம் என்ற சொல் தீவு என்ற பொருளையுமுடை யது. யாழ்ப்பாணக் குடா நாடு ஒரு தீவு அல்ல. அது நான்கு பக்கமும் கடலாற் சூழப்படவில்லை. ஆகவே, நாகதீவே நாக தீபமாகும். நாகதீப — இச் சொல் சிங்களச் சொல்லாக இருக்கலாம். யாழ்ப்பாணம் ''யாப்பனய'' என்பது போல நாகதீபம் 'நாகதீப' என அழைக்கப்பட்டுள்ளது.

## நாவலந்தீவு, சம்புத்தீவு, நரித்தீவு

சம்பு என்ற சொல், சிவன், நாவல், நாவ லந்தீவு, நரி என்பவற்றைக் குறிக்கும். நாவ லந்தீவு என்ற சொல்லுக்கு (Tamil Lexicon) தமிழ் லெக்ஸிகன் அகராதியில் 2229-ம் பக்கத்தில் ஏழு தீவுகளில் உப்புக் கடல் சூழ்ந்த தீவு எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. சம்பு என்ற சொல் நரியையும் குறிப்பதி னால் சிலர் நரித்தீவு எனச் சம்புத்தீவு என்ற பெயருக்கு மாறான கருத்துக் கொண்டிருக் கலாம்.

## மணிபல்லவம்

கலைக் களஞ்சியம் தொகுதி 8-ல் ''ஒரு சிறு தீவு காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து தெற்கே முப்பது யோசனைத் தொலை யில் உள்ளது. அங்கே தன்னைத் தரிசித்தவர் களுக்குப் பழம்பிறப்பின் செய்தியைத் தெரி விக்கும் புத்தபீடிகையொன்றும், கோமுகி என்னும் பொய்கையும் இருந்தன. மணி மேகலை தன் பழம் பிறப்பை இப்புத்த பீடிகையால் உணர்ந்தாள். அமுதசுரபி என் னும் பாத்திரத்தை தீவதிலகையின் உதவி யால் இக்கோமுகியிலே பெற்றாள்'' என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே, கி பி. 2-ம் நூற் றாண்டளவில் உள்ள பெயராகும் இது.

## மணித்தீவு, மணிநாகதீவு

இப் பெயர்களில் மணி என்ற சொல் நாகரத்தினத்தையே குறிக்கின்றது. நாகரத் தினத்தை வாங்க வந்த வைசியர்களினால் இப் பெயர்கள் அழைக்கப்பட்டதாக மதுரை வைசியர்களது பழைய ஏடுகள் கூறுகின்றன.

## பிராமணத்தீவு

கி.பி. 1658-ம் ஆண்டளவில் எடுக்கப் பட்ட நயினாதீவு குடிசன மதிப்பு பின்வரு மாறு:-

| | | |
|---|---|---|
| பார்ப்பார் - புரோகித வேலை செய்வோர் | குடி | 2 |
| பார்ப்பார் - புரோகிதர் அல்லாதவர் | குடி | 65 |
| வேளாளர் | குடி | 40 |
| பரதவர் | குடி | 15 |
| கொல்லர் + தச்சர் | குடி | 3 |
| அம்பட்டர் | குடி | 3 |
| வண்ணார் | குடி | 2 |
| தோப்பேறிய நளவர் | குடி | 13 |
| பறையர் | குடி | 7 |
| | | 150 |

ஆகவே, பிராமணக்குடிகள் 67. குடிமக்களில் பெரும் பான்மையோரின் பெயராற் பிராமணத்தீவு என அழைக்கப்பட்டது.

## நாகேஸ்வரம்

முற்காலத்தில் நயினாதீவில் இறைவன் சந்நிதியும், இறைவி சந்நிதியும் ஒரே ஆலயத்தில் வெவ்வேருக இருந்தன. அப்பனும் அம்மையும் கோயில் கொண்டருளி இருந்த ஆலயமே நாகேஸ்வர மென அழைக்கப்பட்டது. அவ்வாலயப்பேரே ஊர்ப் பெயராக வழங்கி வந்திருக்கிறது.

## நயினாதீவும், பிறநாட்டார் தொடர்பும்

நயினாதீவிற் சிறந்த துறைமுகங்களும், யாத்திரைத் தலங்களும் இருந்தமையால் பல வெளிநாட்டு வணிகர்களும், பல வெளி நாட்டு யாத்திரிகர்களும் காலத்துக்குக் காலம் இத்தீவைத் தரிசித்தனர்.

புத்தர் பெருமான் கி. மு. 523ற்கும் கி. மு. 483ற்குமிடையில் தமது யாத்திரை காரணமாக நாகதீவைத் தரிசித்து நாக வழிபாடியற்றியிருக்க வேண்டும். அவர் வந்தபோது ஏற்பட்ட அரச சபைப் பிணக்கையும் தீர்த்து வைத்துள்ளார். சாவக நாட்டு மன்னன் புத்தரது பாதபீடிகையைத் தரிசிக்க மரக்கல மேறி வந்தனென மணி மேகலை கூறும். பர்மாவில் இருந்து தர்மசோக மகாராசா புத்திரசோகத்தால் வருந்தி நாகவழிபாடியற்றிப் புத்திரப் பேறடைய நாகதீவு வந்தாரென அறியக் கிடக்கின்றது.

பாண்டவர்களில் ஒருவஞன அருச்சுனன் நாகவழிபாடியற்ற மணிபுரத்துக்கு வந்து நாககன்னிகையை மணஞ் செய்து பப்பிரவாகன் என்னும் புத்திரனைப் பெற்றானெனவும், பப்பிரவாகனது பெயரே பப்பிரவாகன்சல்லியென ஸ்ரீ நாகபூஷணி ஆலயம் அமைந்த விடமென அறியக் கிடக்கின்றது. ஆபுத்திரன் வந்து அட்சயபாத்திர மெனும் அமுத சுரபியைக் கோமுகிப் பொய்கையிலிட்டுச் சென்றான்.

நெடுமுடிக்கிள்ளி என்னும் சோழ வரசன் யாத்திரை காரணமாக மணிபல்லவத்துக்கு வந்து பீலிவளை என்பாளை மணந்து அதன் பேருகத் தொண்டைமான் இளந்திரயனைப் பெற்றானென யாழ்ப்பாணச் சரித்திர நூல் கூறும்.

நயினாதீவில் கிரேக்க, உரோம, இந்திய, சீனப் பழைய நாணயங்கள் காலத்துக்குக் காலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சீனாவிற் கி. பி. 12-ம் நூற்றாண்டிற் செய்யப்பட்ட சாடிகள் நயினாதீவு கிணறு ஒன்றிற் கண்டு

பிடிக்கப்பட்டன. மகாபராக்கிரபாகுவின் சிலசாசனப்படி அநேக வெளிநாட்டுப் பிரயாணக் கப்பல்களும், வணிகக் கப்பல் களும் நயினாதீவுத் துறைமுகங்களுக்கு வந்துள்ளன.

## போர்த்துக்கேயர் காலம்

போர்த்துக்கேயர் வருகை நயினாதீவுக்குப் பெரும் நட்டத்தையே விளைவித்திருக்கிறது. நாகபூஷணியம்மன் கோயில் முற்றாக அழிக்கப்பட்டது. பொருள்கள் சூறையாடப்பட்டன. தேர்கள் அழித்துக் கடலில் வீசப்பட்டன. இக்காலம் கி. பி. 1620 ற்கும் கி. பி. 1624ற்கும் இடைப்பட்ட காலமாக இருக்கலாம். கி. பி. 1623-ல் பறங்கியரால் காணித் தோம்பேடுகள் எழுதப் பட்டதாகக் கருத இடமுண்டு. ஆனால் கி. பி. 1645-ல் தொம் பிலிப்மஸ்கறிஞ்ஞா அவர்களால் திருத்தமான தோம் பேடுகள் எழுதப்பட்டன. அக்காலத்தில் நயினாதீவில் நிரந்தரக் குடிபதிகளாக விருந்தவர்களுக்குத் தான் நயினாதீவுத் தோம்பேடுகளில் காணிகள் காணப்படுகின்றன. போர்த்துக் கேயரது சமயம் இங்கே பரவவில்லை. ஆனால், இவர்கள் தங்கள் பெயர்களிற் சிலவற்றைப் பட்டமாகச் சிலருக்குக் கொடுத்துள்ளனர். கந்த உடையார் மகன் கதிர்காம உடையார் உலுவீசு கதிர்காம உடையார் என அழைக்கப்பட்டுள்ளார். நயினாதீவு 32 கோயிற் பற்றில் ஒன்றுக்கப்பட்டது.

## ஒல்லாந்தர் காலம்

ஒல்லாந்தர் காலத்தில் நயினாதீவுக் கடலில் சங்கு குளித்தற் தொழில் மிக விசேடம் பெற்றுள்ளது. அவர்கள் காலத்தில் நயினாதீவு கோவிற் பற்று நொத்தாராகவும், கிராம வரி அறவிடுபவராகவும் இராமச்சந்திரர் கதிரித்தம்பி நியமிக்கப்பட்டார். போர்த்துக்கேயர் அழித்த கோயில் திரும்பச் சிறிதாகக் கட்டப்பட்டிருந்தது. அதையே ஒல்லாந்தர் அழிக்கமுற்பட்டனர். -கட்டியகாலம் கி. பி. 1788. கட்டுவித்தவர்: இராமலிங்கர் இராமச்சந்திரர். இவர்காலத்தில் கி. பி. 1792-ல் ஒல்லாந்தர் நாகபூஷணியம்மன் தேவாலயத்தை அழித்துச் சூறையாட வந்தனரெனவும், அவர்தான் ஒல்லாந்த இறப்பிறமாது சமயத்துக்கு உதவி செய்வதாகவும் கூறி கிராமவரியையும் அறவிட்டுக் கொடுத்தார். ஒல்லாந்தர் தமது பட்டத்தை இவருக்கு வழங்கிப் பிருன்சீக் கதிரித்தம்பி என அழைத்தனர். இவரது கையொப்பங்கள் எல்லாம் யாழ்ப்பாணக் காணிக் கச்தோரில் பிறன்சீக் கதிரித்தம்பி எனவே அமைந்துள்ளன. இறப்பிறமாது சமயமே புரட்டாஸ்தாந்து மதமாகும். ஒல்லாந்தர் காலத்திற்தான் நயினாதீவில் புரட்டாஸ்தாந்து மதத்துக்குரிய ஒரு நிலையத்தை அமைக்க விரும்பினார்களோ யான் அறியேன். ஆனால், தற்போது ஒரு இடம் நயினாதீவு 5-ம் வட்டாரத்தில் இருக்கிறது. ஆயினும், தற்போது அச்சமயத்தைப் பின்பற்றுபவரெவருமில்லை. இவர்கள் காலத்திற் தான் தூத்துக்குடி முஸ்லிங்கள் நயினாதீவில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். தென்னந் தோட்டங்கள் அமைத்தனர். பள்ளிவாசல் ஒன்றையுமமைத்தனர் எனத் துணிந்து கூறலாம்.

## ஆங்கிலேயர் காலம்

2-3-1815-இல் தான் இலங்கை முழுவதும் ஆங்கிலேயரின் ஆளுகையின் கீழ் வந்தது. நயினாதீவு வடமாகாணத்தில் யாழ்ப்பாணப் பெரும்பிரிவில் தீவுப்பகுதி மணியகாரனின் நிர்வாகத்தின் கீழ் ஒரு பகுதியாக அமைந்தது. பரிபாலனத்துக்காக உடையாரும் விதானையாரும் நியமிக்கப்பட்டனர். பிற்காலத்தில் மணியகாரன் முறை மாற்றமடைந்து தீவுப்பகுதிக் காரியாதிகாரியின் கீழ் நிர்வாகம் மாறியது. விதானை யென்ற ஒரு தலைமையின் கீழ் பொதுமக்களது விவகாரங்களும் அரசினரின் விவகாரங்களும் அமைந்தன. கிராமச்

சங்க முறை உருவாகியது. மக்களாற் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கிராமச் சீர் திருத்தங்களில் ஈடுபட்டனர்.

## சுதந்திர காலம்

4-2-1948-இல் இலங்கை சுதந்திர மடைந்தவுடன் நயினுதீவு தீவிரமாக முன் னேற்ற மடைந்தது. ஸ்ரீநாக பூஷணி அம் மன் தேவாலயமும், ஸ்ரீநாகவிகாரையும் மிகவும் சிறப்பான முறையில் அமைக்கப் பட்டன, தற்போதைய காலத்தில் நிகழ்ந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சிகள் ஸ்ரீநாக பூஷணியம்மனின் திருத்தேர் அமைப்பும், நயினுதீவு யாத்திரிகர் அன்ன தான சபையாரின் அமுதசுரபி மண்டபமு மாம்.

இன்றுவரை நயினுதீவு தனது கடந்த காலச் சரித்திரத்தை நினைவூட்டித் தனது எதிர்காலச் சரித்திரத்தை மிகச் செழிப் புடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

## நயினுர்பட்டர்

இவர்காலம் கி. பி. 3-ம் நூற்ருண் டெனக் கொள்ளலாம். நாகபூஷணி அம் பாளின் பூசை செய்வதற்காக மாநாய்கன் என்னும் வணிகராற் காவிரிப்பூம்பட்டி னத்திலிருந்து வரவழைக்கப்பட்டார். பட் டர் மரபிற் பல வருணங்கள் உண்டு. அவையாவன: சம்பந்தப்பட்டர், வையக் கரைப்பட்டர், பிள்ளையார்பட்டர், அத்திய யனப்பட்டர், பாம்புக்குட்டிப்பட்டர் என ஐம்பெரும் பிரிவாம். நயினுர்பட்டர் பாம் புக்குட்டிப் பட்டரின் மரபினராகும். பட் டர் என்ருல் அம்பட்டரென நினைத்து நயினு தீவில் அம்பட்டர்களும் வாழ்ந்தார்களெனக் கூறுவது பிழையானதாகும். நயினுர்பட்டரின் 20-ம் சந்ததியினரான இளையதம்பி உடை யாரே பட்டர் மரபிலுள்ள ஸ்ரீநாகபூஷணி பூசை செய்த கடைசி அருச்சகராவார். நயினுர் பட்டர் குடியிருந்த காணியே தற் போது 7-ம் வட்டாரத்தில் பட்டர்வளவு என அழைக்கப்படுகிறது. தற்காலம் அக் காணியில் திரு, வி. எஸ், நாகலிங்கம் அவர் கள் இருக்கிருர்கள். நயினுபட்டரின் மர பினரான மதுரை விநாயகபட்டரின் சந்ததி யாரே தற்கால நயினுதீவு ஸ்ரீவீரகத்தி விநாயகராலயம் பிரதம குரு சாம்பசிவக் குருக்களின் வம்சாவழியினராகும்.

## வெடியரசன் — மீகாமன்

கி. பி. 2-ம் நூற்ருண்டில் வெடியர சன் என்னுமரசன் தீவுப்பகுதிகளை அர சாண்டான். அவனது மனைவி நீலகேசி. அக் காலத்திற் கண்ணகியின் காற்சிலம்புக்குத் தேவையான நாகரத்தினம் வாங்க மீகா மன் என்னும் வணிகனெருவன் சோழவர சனின் உத்தரவு பெற்று இன்னும் பல வணிகர்களுடனும் வேலையாட்களுடனும் நயினுதீவை நோக்கி வந்தான்.

வெடியரசனின் இராசதானி நெடுந்தீவு. வெடியரசனின் இராசப்பிரதிநிதிகளில் ஒரு வன் நயினுதீவில் இருந்தான். அவன் மீகா மனை நயினுதீவில் இறங்க விடாமற் தடுத்து அவனது வரவை வெடியரசனுக்கு அறிவித் தான். மீகாமன் வெடியரசன் சமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டான். மீகாமன் நாகரத் தினம் வாங்கவந்ததாகக் கூறியும் வெடியர சன் கோபத்துடன் மீகாமனுடன் சண்டை செய்தான். போர் நடப்பதாக எண்ணிய நீலகேசி தனது மைத்துனருள் ஒருவரான வீரநாராயண தேவனுக்கு விடயத்தைத் தெரிவிக்க அவன் வந்து ஆராய்ந்து விட யத்தை அறியாமல் மீகாமனுடன் சண்டை செய்தான். அச்சண்டையில் வீர நாராயணன் மடிகின்ருன்.

வெடியரசனின் ஏனைய சகோதரர் களான விளங்கு தேவன், போர்வீரகண்டன், ஏரிலங் குருவன் ஆகிய மூவரும் தத்தம் சேனையுடன் வந்து மீகாமனுடன் சண்டை செய்கின்றனர். மீகாமன் சரணடைகின் ருன். மீகாமனை வெடியரசனின் முன்

கொண்டு செல்ல அவன் தான் வந்த நோக்கம் நாகரத்தினம் பெறவே யென்றும், நாட்டைப்பிடிக்கவல்ல வென்றும் கூறுகிறுன். வேண்டிய பெறுமதியைப்பெற்றுக்கொண்டு மீகாமனுக்கு நாகரத்தினத்தைக் கொடுங்கள் என வெடியரசன் கூறத் தம்பிமார் அப்படியே செய்கின்றனர். மீகாமன் சோழ நாடு சென்றடைகின்ருன். இச்சம்பவம் மிகைப்படுத்திக் கூறப்பட்டதாகக் கருத இடமுண்டெனினும் முற்காலத்திற் பண்டமாற்று முறையில் வியாபாரக் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றதென்பதை வணிக நூல்கள் வற்புறுத்திக் கூறியுள்ளன. இக் காலத்திற் கூட இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வியாபார நோக்கமாகப் பலர் வருவதையும், இங்கிருந்து போவதையும் தடுக்க இலங்கை அரசினர் முயலுவதைப் போல வெடியரசனும் தனது நாட்டில் அந்நியர் அத்துமீறிப் பிரவேசிப்பதைத் தடுத்திருக்கலாம்.

## பாம்பு சுற்றியகல் — கருடன்கல்

முன்ஞெரு காலத்தில் நயினுதீவிலுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்து வந்ததாம். ஒரு நாள் அந்நாகம் அர்ச்சனை செய்தற்பொருட்டுப் பூவொன்றை வாயில் வைத்துக்கொண்டு புளியந்தீவிலிருந்து நயினுதீவு நோக்கிக் கடலில் வரும்வழியில், ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக்கொண்டது. கருடன் அந்நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல்லொன்றின் மீதிருந்தது. அவ்வேளையில் அக் கடல் வழியாக மரக்கலத்திற் சென்ற மாநாய்கன் என்ற வைசியன், அந்நாகத்தின் பயத்தை யறிந்ததுமன்றி, அதன் வாயில் ஒரு பூவைத்திருப்பதையு முணர்ந்து, கருடனைப் பார்த்து ''தேவிபூசைக்குச் செல்லும் நாகத்தை மறியாதே'' எனக் கூறினுன். உடனே கருடன் ''உனது செல்வத்தைக் கொண்டுவந்து நாகம்மாளுக்குக் கொடுப்பாயாயின் நான் விலகுவேன்'' எனக்கூறியது. வணிகன் உடன்படக் கருடன் விலகியது. நாகம் தனது நன்றியுணர்ச்சியைத் தெரிவித்து நயினுதீவையடைந்தது.

வணிகன் தனது நாட்டுக்குச் சென்று மனைவிக்கு நடந்தவற்றைக் கூறினுன். அன்றிரவு இருவரும் நித்திரை கொள்ளும்போது ஒரு பேரொளி தோன்றி அவர்களது கண்களைக் கூச வைத்தது, அவர்கள் எழும்பிப் பார்த்தபோது நாகரத்தினங்களைக் கண்டு வியப்புற்று நயினுதீவுக்கு வந்து தீவின் வடகீழ்திசையில் ஏழுவீதிகளும், இராசகோபுரமும் அமைந்த ஒரு பெரிய ஆலயமும் கட்டுவித்தனர். பாம்பு சுற்றியகல் பாம்புசுற்றிக் கல்லெனவும், கருடன் இருந்தகல் கருடன் கல்லெனவும் அழைக்கப்படுகின்றன.

## வீராசாமிச் செட்டியார்

இவர் நாகபூஷணி தேவாலயத்தை அமைப்பித்த மாநாய்கரது நான்காம் சந்ததியாரென நாகதுவீப மகத்துவம் என்னும் நூல் கூறும்.

இவர் வியாபார நோக்கமாகப் பிரயாணஞ் செய்யும் காலங்களில் நாகபூஷணியம்பாளையும் தரிசிப்பது வழக்கம். இவருக்கு அம்பாள் ஐந்து தலை நாகபடத்தின் கீழ் நாகேந்திரனுகக் காட்சியளித்தாள். அப்போது பின்வரும் பாடலை அவர் பாடியுள்ளார்.

பாடல்

அண்டகோடிக ளெல்லா மொரு தலையில்
நீ சுமந்தருளிதலினு லல்லவோ

அம்புயப் பிரமன் படைக்கத்
தொடங்கினுன்
அகிலமும் சிதைவிலாமல்

புண்ட ரீகலோசன் பாதுகாக்கின்ருன்
புராந்தகன் சங்கசித்துப்

புகழ் மருவுகின்ருன் இணங்கி நீதயைசெய்து
அருள் புரியாதிருந்தனே யெனில்

எண்டிசைகளும் புவியுங்கிரிகளும்
எப்படி நிலைத்திருக்கும்

எவ்விதத்தினில் அந்த மூவர் தொழிலீ
டேறு மீசனரவிந்த பாதத்

தொண்டர் கணிறைந்திடு மிலங்கை
நயினுர்தீவு துதிசெய்யும் படியமர்ந்தோய்

சுரலோக லோகேந்திர நரலோக
புவனேந்திரர்

தொழவேறு நாகேந்திரனே.

அக்காட்சியைக் கண்ட வீராசாமிச் செட்டியாரும் தனது பணத்தைக் கொண்டு கோயிற் திருப்பணிகளைச் செய்வித்துள்ளார்.



ஐ. சரவணபவன்
தலைவர், வர்த்தகபீடம்
கொக்குவில் இந்துக் கல்லூரி

## நயினுதீவுக் குடி

நாகர்வாழ்ந்த காலத்திலிருந்தே நயினுதீவில் மக்கள் வாழ்ந்திருக்கிருர்கள். ஏறக்குறையப் பதினுலாயிரம் வருடங்களுக்கு முன்பே நயினுதீவில் குடியேற்றமிருந்திருக்க வேண்டும். அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட நாகபூஷணியம்மன் மூலஸ்தானத்திலுள்ள நாகம் பதினுலாயிரம் வருடங்களுக்கு மேற்பட்டதெனக் கட்டிடக்கலை, சிற்பக்கலைப் பொறியியல் நிபுணரான திரு. எம். நரசிம்மன் அவர்கள் கருதுகிருர். ஆகவே, நாகர் குடியேற்றம் பதினுலாயிரம் வருடங்களுக்கு முன்னெனக் கருதலாம். மக்களில்லாமல் வழிபாடு இருந்திருக்க முடியாது.

கி. மு. 563ற் பிறந்து கி. மு. 483ம் ஆண்டிற் கிடையில் வாழ்ந்த புத்தபெருமான் குலோதரன் மகோதரன் என்பவர்களது அரசபீடச்சண்டையில் சமாதானஞ் செய்திருக்கிருர். புத்தர் பெருமான் தனது 35-ம் வயதில் இருந்து 80-ம் வயது வரை, யாத்திரைகளிலும், தர்ம உபதேசங்களிலும், பஞ்சசீலக் கொள்கைகளைப் பரப்புவதிலும் தனது காலத்தைச் செலவிட்டுள்ளார்.

அவர் சரித்திர காலந்தொட்டேற்பட்ட நாகவழிபாட்டை ஆராய்வதற்காகவும், அதைத்தாமும் வழிபடுவதற்காகவுமே நாகதீவுக்கு வந்திருக்கிருர். அப்போது தான் குலோதரன், மகோதரன் என்ற அரசர்களுக்கிடையே ஏற்பட்ட அரசபீடத்தகராறிற் சமாதானஞ் செய்துள்ளார், அப்போது அரசர்கள் வாழ்ந்தார்களென்ருற் குடிமக்கள் இருந்தேயாக வேண்டும்.

மணிமேகலை, மணிமேகலா தெய்வத்தால், மணிபல்லவத்துக்குக் கொண்டுவரப்பட்டாளென மணிமேகலை யென்ற நூல் கூறும். மணிமேகலையின் காலம் கி. பி. 2-ம் நூற்ருண்டு. சீத்தலைச்சாத்தனுர் என்னும் பெரும் புலவரே மணிமேகலை யென்ற நூலின் ஆசிரியராவார். அவர் கடைச்சங்க

காலப் புலவர். சேரன் செங்குட்டுவன் என்ற பேரரசனின் சிறந்த நண்பர். மலே வளங் காணச் சென்ற சேரன் செங்குட்டுவனுக்கு கண்ணகியால் மதுரையடைந்த கேவல நிலையை விளக்கினுர். சேரன் செங்குட்டுவன் காலம் கி. பி. 2-ம் நூற்ருண்டெனக் கலைக்களஞ்சியம் 5-ம் தொகுதி எடுத்தியம்புகின்றது. ஆகவே மணிமேகலை மணிபல்லவத்துக்கு வந்தகாலம் கி பி. 2-ம் நூற்ருண்டெனவே கூறலாம்.

ஒரு விவாகமாகாத கன்னிகையைத் தற் பாதுகாப்பின் பொருட்டும், கடவுள் வழிபாட்டின் பொருட்டும் கொண்டுவந்து விடுவதாயின் சான்ருேர் குடியிருக்கும் தொல்பதிகளேயே தெய்வங்களும் விரும்பும். ஆகவே, மணிமேகலை காலத்தில் கி.பி. 2-ம் நூற்ருண்டிற் சான்ருேர் குடியிருக்கும் தொல்பதியாக மணிபல்லவமிருந்திருக்கிறது.

கி. பி. 3-ம் நூற்ருண்டளவில் நயினுர் பட்டருடன் அவரின் இனசனங்களும் மனைவி மக்களும் வந்திருக்கவேண்டும். ஒரு பிராமணக் குடும்பம் குடியேறினுல் அவரோடு இன்னும் பலர் வருவது இயற்கையே. அதன் காரணமாகவே பிற்காலத்தில் பிராமணக் குடும்பம் 67 இருந்திருக்கிறது. பிராமணத்தீவு என்றும் அழைக்கப்பட்டது. நயினுர் பட்டருடன் கண்ணப்பன் என்ற வேளாளன் பிரபுவும் வந்துள்ளார். அவருடன் அவர் மனைவி, பிள்ளைகள், இன சனங்களும் வந்திருக்க வேண்டும். அவர்களும் நயினுதீவில் குடியேறி இருக்கிருர்கள். கண்ணப்பனுல் கட்டுவிக்கப்பட்ட கோவிலே நயினுதீவு சிறுசல்லி என்னும் காணியின் வட கரையோரதிதில் இருக்கும் ஐயனுர் கோயிலாம். அது ஓலையால் வேயப்பட்டுக் காலகிரமத்தில் திருத்தப்பட்டது.

## மரக்கலமோட்டிய மங்கை தையலியாசி

நயினுதீவு குடியேற்றப் பிரிவிலும், பரிபாலனப் பிரிவிலும், வர்த்தகப் பிரிவிலும் அதிக அக்கறை கொண்டவர் சிற்றரசி தையலியாசியாவர். இவரது காலம் கி. பி 16-ம் நூற்ருண்டெனலாம். இவர் முடிநாகர் மரபிற் பிறந்தவரென அறியக் கிடக்கின்றது. இவரது கணவன் இராமகிருட்டின முதலியார் அல்லைப்பிட்டியைச் சேர்ந்தவர், இவர்கள் குடியிருந்த காணி ஆசியான் பத்தி என அழைக்கப்படுகிறது. நயினுதீவு 4-ம் வட்டாரத்தில் இக்காணி இருக்கிறது. இதில் இப்போது வீடில்லை.

தையலியாசி மூத்துக் குளிப்பித்தலிலும், உள்நாட்டு — வெளிநாட்டு வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளார். இவரது மரக்கலங்கள் கட்டிய துறைகளே தற்காலம் உவான்துறை, துடரித்துறை, வாகையடித் துறை, படகுதுறை என அழைக்கப்படுகின்றன.

இவரது மரக்கலங்கள் இந்தியாவின் அக்காலப் பிரபல துறைமுகங்களான காவிரிப்பூம் பட்டினம், பாசிப்பட்டினம், புதுப்பட்டினம், நாகபட்டினம், அம்மாபட்டினம் முதலிய இடங்களுக்குச் சென்று ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்திற் பெரும் பொருளீட்டின.

இவரது மரக்கலமொன்று புதுப்பட்டனத்தில் இருந்து ஒரு மணத் தம்பதிகளேயும், அவரது இனபந்துக்களேயும் ஏற்றிக் கொண்டு நாகபட்டினத்துக்குச் சென்றது. நாகபட்டினத்தின் துறைமுகத்தில் மந்தாசு பரிசீலனை செய்பவனுகிய நயினுன் துலுக்கன் என்பவன் மந்தாசின்றி மணமக்களை ஏற்றிவந்தது தவறெனக்கூறி மாலுமியிடம் குற்றப்பணம் கேட்டான். மாலுமி பணங் கொடுக்க மறுக்க, நயினுன் துலுக்கன் மரக்கலத்தைப் பறிமுத

லாக்கினான். இச்சம்பவம் மாலுமி மூலம் தையலியாசிக்கு அறிவிக்கப்பட்டது. தையலியாசி உடனே இந்தியா சென்று அப்போதிருந்த அரசனிடம் பின்வரும் பாடலைப் பாடிக் கொடுத்தாள்.

### செய்யுள்

பொட்டுப் பொடுக்கெனப் புதுத்தாலி
கட்டிப் புதுப்பட்டணத்தான்
வட்டம் பிடித்து வருந்தோணி தன்னை
வழிமறித்துக்
கட்டி நங்கூரமதிட்டு மந்தாகினைக்
காட்டுமென்று
தட்டிப் பணம் பறிப்பான் நயினான்
துலுக்கன் சதிகொடிதே.

உடனே அரசன் தையலியாசியின் மரக்கலத்தைக் கொடுக்குமாறு நயினான் துலுக்கனுக்குக் கட்டளையிட்டான். அரசன் பெண்களது உற்சாகத்தைக் கண்டு மேலும் அவர்களைக் கடல் கடந்து வியாபாரஞ் செய்ய ஊக்குவித்தான் போலும்.

தையலியாசியின் முதலாம் மகன் தியாகுடையராகவும், இரண்டாம் மகன் சுந்தரமுதலி நயினாதீவு முதல் முதலியாராகவும் நியமிக்கப்பட்டனர். இது கி. பி. 1675-ம் ஆண்டு வரையிலாகும். முதலியாரின் கடமைகள் பின்வருமாறு:— தத்தம் பிரிவுகளில் நடக்கும் சங்கதிகளை விசாரித்துக் காலத்துக்குக் காலம் அறிக்கைப் பத்திரம் அனுப்புவதும், அந்தப் பிரிவுகளில் எவ்வேலைகள் நடாத்த வேண்டுமோ அவற்றை நடாத்துவித்தலுமேயாம்.

கி. பி. 1658ல் தையலியாசி காலத்தில் நயினாதீவு குடிசனக் கணக்குப் பின்வருமாறு. இதைத் தையலியாசி பாட்டாகப் பாடிவைத்திருக்கிறார்.

பார்ப்பாரிற் புரோகிதரிற் குடியிரண்டு
அதிற் பதிந்த குடிபார்ப்பாராய்
அறுபத்தைந்து
காப்பானவேளாளர் குடி ஐ யெட்
கடற் பிழைக்கும் பரதவர்
குடிமூலைந்து
கோப்பான கொல்லர் தச்சர்
குடியோர் மூன்று
ஈங்கொல்வி குடி மூன்று
ஏனாதி குடியிரண்டு
தோப்பேறிகுடி பதின்மூன்று
அந்நியர்குடி யேழு
தொகை நயினை நகர்க்குடி
நூற்றைம்பதாமே.

இக்குடிகளில் பிராமணக் குடிகள் 67 இருந்ததைக் காண்க. ஆகவே, ஆதியில் இருந்து வேதியர்கள் பரம்பரையாக, குடிமக்களில் அதிகமானவர்களாக இருந்தனர் களென்பதும், இத்தையலியாசி, முடிநாகரும் நயினார் பட்டர் சந்ததியும் கலந்த பெற்றோருடைய மகளெனவும் அறியக் கிடக்கின்றது. ''அதிற் பதிந்த குடிபார்ப்பாராய் அறுபத்தைந்து'' என்ற சொற்றொடர் நாக — பட்டர் இனக்கலப்பால் ஏற்பட்டதெனச் சோதிட கலாநிதி சு. ஐயாத்துரை அவர்களின் கருத்தாகும்.

தையலியாசி தனது மகன் சுந்தர முதலியின், முதலிப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றுகையில் நயினாதீவு குடிமக்களை இவ்வாறு பரிபாலனஞ் செய் எனச் செய்யுள் மூலம் விளக்குகின்றாள்.

### செய்யுட்கள்

1. பார்ப்பார்க்குப் பச்சரிசி நெய்
கொடுத்துப்
பணிசெய்வி பறையர்க்கு
நீர்ப்பானைச் சோறு உரத்த சத்த
மொடு
காலடியும் நினைவுக்குச் செய்
சேர்ப்பாகு நளம்பட்கு கையடி
செய்தொரு
சோறு செலுத்து தோணிக்

காப்பாளரை மதித்து உரிமை
சொலத்
தினமுன் கடமை செய்யக்
கடனுவரே.

2. வண்ணுனைப் பணிகுறையில்
வருத்ததன்றிக்
கண்ணென நீ மதி அம்பட்டக்
கண்ணுனை முதல் மகனுய்க் கருது
நலம் கூறுதே கம்மாளர்க் கோர்
பண்ணுன பரிவு கொடை
முகமலர்ச்சி செய்
பணிக்குப் பழுதுண்டாயின்
எண்ணுது அவருறவிற் கூறு செய
வழிதேடு
இணங்கு வாரே.

3. வடசிறையை வருத்தாது தொழில்
செய்வி
மங்கையரை மானபங்கம்
தொட நினைவு செய்யாதே
படையாச்சி மக்களை
நீ துணையாக் கொள்ளு
அடைவுள நம்பரதேசிக் கவதிசெய
நினையாதே
அங்காமாலைப் புடைவியுளார்
அனுதினமும் நமது பணி
குறையாது பொருளே சேர்ப்பர்.

4. வடசிறை கோவியமே பரதேசி
மடப்பள்ளி யோர்
இடமுளங்காமாலை வேளாளர் இந்
நெடுந்தீவு மென்பார்
படவுதுறைய ரோரங்காடி
பாம்பனிடையரொடு
திடமுள கண்ணப்பன் மேவிந்த
ஊர்வகை தேர்ந்தறியே.

5. மடப்பளியாற் சிதமுரைநீ மட்டுவாள்
தனிலிருந்து வந்தபேர்க்கு
நடப்போதும் செய்யாதேயுனை
மதியார்
பாம்பன் நகர் வாசிகட்கோர்
இடுக்கணும் செய்யாதே இவர்
கொலைக்கஞ்சா
எயினர், இந்நெடுந்தீவு
அடுத்தவரை ஆதரவு செய்து முதல்
வேளாளர்க் கமைச்சு மீய்வாய்.

6. அமைச்சியலும் வேளாளன்
அங்காடி குலம்
புன்கை சேர்ந்து பண்ணைக்
கமச் செயலாற்றிருந்திடினும்
எம்மூரில்
அவன் குலமே கலப்பை பூட்ட
எமக்குமது உவப்பாகுமென்மகனே
சுந்தர நீ
இராச வாட்கை
நமக்குள தென்றெண்ணுதே யூர்
நாகாயீஸ்வரிக்கென்று நம்புவாயே.

இப்பாடல்கள் செய்யுட்களுக்குரிய இலக்கணம் அமையாத போதிலும் தையவியாசியின் கல்வி மேம்பாட்டையும் நேர்மை, நீதி, அரசியற் கொள்கை என்பவற்றையும் எடுத்துக்காட்டுகின்றன.

தையலியாசியின் பாடலிற் காணப்படும் தோப்பேறிகுடி 13 எனக்குறிப்பிட்டது நளவரேயாவர். இவர்களின் சந்ததியார் தற்போது நயினுதீவில் வசிக்கவில்லை. ஊர்காவற்றுறையிலும், ஆனைக்கோட்டையிலும் வசிக்கிருர்கள்.

## நயினுதீவுப் பிராமணர்

தற்காலத்திலுள்ள நயினுதீவுப் பிராமண மரபினர் கி. பி. 1808ல் இராமச்சந்திரர் கதிரித்தம்பி நொத்தாரினல் நயினுதீவு நாகபூஷணி தேவஸ்தான நித்திய பூசைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

## வேளாளர்

காலத்துக்குக் காலம் விவாகங்காரணமாகப் புங்குடுதீவு, நெடுந்தீவு, அனலைதீவு எழுதுமட்டுவாள், முகமாலை முதலிய இடங்களில் இருந்தும் பலர் வந்திருக்கின்றனர். இவர்களும், தையலியாசிகாலத்தில் இருந்த 40 குடும்பங்களும், பார்ப்பாராய் இருந்த 67 குடும்பங்களும் ஒன்றோடொன்று விவாகக் கலப்பினால் இணைந்து இன்று வாழ்கின்றனர்.

## பரதவர்

இங்கேயுள்ள பரதவ குடும்பங்களில் 15 குடும்பத்தினர் தையலியாசி காலத்தவராயினும் பிற்காலம் உலுவீசு கதிர்காம உடையார் காலத்தில் கி. பி. 1680 வரையில் உடையாரால் செங்கூக நகரியிலிருந்து கூட்டி வந்த குடும்பத்தினரும் இருக்கின்றனர்.

## ஆசாரிமார்

தற்போதைய ஆசாரிமார்களில் மூன்று குடும்பத்தினர் தையலியாசி காலத்தவர். பிற்காலத்தில் இராமலிங்கர் இராமச்சந்திரராலும் உலுவீசு கதிர்காமவுடையாராலும் கொண்டுவரப்பட்டவர்களும் இருக்கிறார்கள்.

## படையாச்சி மக்கள்

இவர்களில் நயினாதீவு வடக்கில் இருப்பவர்களிலனேகர் கி. பி. 1670 வரையில் படகுதுறையில் வந்திறங்கிக் குடியேறிய மக்களாவர். தெற்கில் இருப்பவர்கள் வேட்டமங்கலத்தில் இருந்து உலுவீசு கதிர்காம உடையாரால் கொண்டுவரப்பட்டவர்களே. இவர்களிற் சிலர் இஸ்லாம் மதத்தையும் தழுவியுள்ளார்கள்.

## சலவைத் தொழிலாளிகள், சிகையலங்காரத் தொழிலாளிகள்

இவர்கள் தையலியாசி காலத்தவரே. மணவினையின் காரணமாகப் பலவூர்த் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள்.

## பறையர்

தையலியாசி காலத்தில் ஏழு குடும்பங்களே இருந்தனர். ஆனால், பிற்காலத்தில் இளையாச்சி இராமசந்திர உடையார், கதிரித்தம்பி நொத்தார், மணியகாரன் விஸ்வநாதன், கதிர்காம உடையார் மகன் வேலாயுத உடையார், இராமலிங்கன் காசிநாதன், தையல் பாகன் சின்னத்தம்பி விதானை என்பவர்களால் மந்துவில், சாவகச்சேரி, கச்சாய், அனலைதீவு முதலிய இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டவர்களாவர்.

ஒரு வரலாற்றுப் பின்னணியில் சமய கோட்பாடுகளையும் குறிக்காமல் இருக்க முடியாது. தற்கால நயினாதீவில் இந்து, பௌத்த, இஸ்லாம், கிறீஸ்த சமயங்கள் எல்லாவற்றுக்கும் கோயில்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் விசேட காலங்களிலும், பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் தினந்தோறும் வந்து சகல கோயில்களிலும் அஞ்சலி செய்கின்றனர். ஆகவே இலங்கையில் சகலமதத்தவர்களுக்கும் சாந்தியளிக்குமிடமாக நயினாதீவு அமைந்திருக்கிறது.

நயினாதீவு வரலாற்றில் இடம்பெற வேண்டிய ஆயிரக்கணக்கான விஷயங்கள் இருந்தபோதிலும் விரிவஞ்சி விடுக்கின்றேன். எதிர்காலத்திலும் இவ்வகையான மலர்களில் தொடர்ந்து எழுதுவோமாக. ★

## வரலாற்றுப் பின்னணியை எழுத உதவிய நூல்கள்


1. கலைக்களஞ்சியம்,
   (சென்னைத் தமிழ்வளர்ச்சிக் கழகம்)
2. TAMIL LEXICON
   (Madras University)
3. இலங்கைச் சரித்திரம்
   எச். டபிள்யு. கொடிறின்றன்
4. யாழ்ப்பாணச் சரித்திரம்
   முதலியார் செ. இராசநாயகம்
5. மணிமேகலை
6. மகாவம்சம்
7. இந்தியா
   (எச். சி. உரோலின்சன் சீ. ஐ. இ.)
8. நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்
   தேர்த்திருப்பணிச் சபை மலர்
   (முதலியார் குலசபாநாதன்)
9. நாகதுவீப மகத்துவம்
   (சோதிட கலாநிதி சு. ஐயாத்துரை)
10. நயினை ஸ்தல வரலாறு
    (சோதிட கலாநிதி சு. ஐயாத்துரை)
11. நயினாதீவு பரம்பரை
    (சோதிட கலாநிதி சு. ஐயாத்துரை)
12. சோதிட கலா நிதி 1947 ல்
    மதுரையிற் சேர்த்த ஓலை ஏடுகள்
13. நயினாதீவு காணித் தோம்பேடுகள்

With best Compliments

from

E. SITTAMPALAM

No, 223 Fifth Cross Street,
COLOMBO-11

*T' Phone* **26587**

**T'Grams: MATHULAI**



## நயினை நாட்டுப் பாடல்கள்

ஆசிரியர்:

நா. கணபதிப்பிள்ளை



## எமது கல்வி வளர்ச்சி

ஆசிரியர்:

பண்டிதர் வித்துவான் சி. குமாரசாமி

உருப்பெறுக ஒரு குலமாம் ஒருமைப்பாடு

கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை B. Sc.

# நயினை நாட்டுப் பாடல்கள்

நயினை நாட்டுப் பாடல்கள் என்று கூறும் பொழுது ''நயினை நாட்டிலுள்ள பாடல்கள்'' என்றும், ''நயினையிலுள்ள நாட்டுப்பாடல்கள்'' என்றும் 'நயினைக்குரிய நாட்டுப்பாடல்கள்' என்றும் பொருள் பலவகையிற் கொள்ள இடமுண்டு. எனினும், மேலே உள்ள தலையங்கம் நயினைக்கே உரிய நாட்டுப்பாடல் என்ற கருத்தையே கொள்கின்றது எனக் கருதவும்.

சில இடங்களில் வழங்கும் நாட்டுப்பாடல்களின் உற்பத்தி வேறு இடமாகவும் இருக்கலாம். அது உற்பத்தியான இடத்தில் வேருன்றுது நாடுவிட்டு நாடு ஓடி வேறோர் நாட்டில் நிலைபெற்றிருக்கவும் கூடும். இப்படியான பாடல்கள் நாடோடிப்பாடல்கள் எனப் படலாம். அது பிற்காலத்தில் நிலைபெற்ற நாட்டுக்கே சொந்தமாகி விடுகின்றது.

கீழே தரப்படுகின்ற நாட்டுப்பாடல்கள் யாவும் நயினைக் கிராமத்திலுள்ள சாதாரண குடிமக்கள் கூறியவையாகும், இவை ஏட்டில் இல்லாது மக்கள் தம் வாக்கிலிருந்து பெறப்பட்டவை.

★

## ஈழ நாட்டின் சிறப்புப்பற்றி ஒருவர் உள்ளத்தில் கிளர்த்தெழுந்த கவிதைகள் சில

தேவரெல்லாம் கொலுவிருக்கும் ஈழம் எங்கள் தேசம்
செப்பிடுவேன் அதன் பெருமை சற்றிருந்து கேளும்
மூவரன்று பாடுதிருக் கோணமலை நாட்டில்
முத்தொதுக்கி கத்து கடல் சூழும் எங்கள் தேசம்.

மாவலி கங் கைப்புனலாம் தாவணியை வீசி
மாதிரமெல் லாம் மணக்கும் வாசனையைப் பூசி
காவலரின் கண்மருட்டும் கவின்கொள் திருநாடு
காசினியில் இவளைப்போலும் கன்னியில்லை இல்லை.

மட்டுமிஞ்சி மதுவையுண்ட மயக்கத்திலோர் குறவன்
மனைக்குறத்தி முடிக்கணிய மலர் பறிப்பே னென்றே
பட்டஒரு பன்னிறப்பூம் பறவைகள் வாழ் மரத்தில்
பறிக்க ஏறிப் பறக்கக் கண்டு குறத்தி நின்று சிரிக்கும்.

தவமுனி ராமெனவே தாடிமீசை யோடு
தாரமொன்று கொண்டு மந்தி காலில் விளையாடும்
நவநவமாம் முத்துநவ ரத்தினங்கள் மின்னும்
நாடிதனுக் கீடுஇல்லை நானிலத்தில் கண்டீர்.

வியர்வை சிந்த வேலை செய்வோர் அயர்வு ஆற்றப் பாடுகின்ற அம்பாப் பாட்டுக்கள் வரிசையில் —

## நீர் இறைக்கும் வேளாண்மை செய்வோர் பாடும்

### ஏற்றப்பாட்டு

கண்டான் செடியோரம்
காட்டோரம் போன பெண்ணை
கடையிலேயோ கண்ணடி — அவள்
நடையிலேயோ ஒய்யாரம்
கூடவருவேனடி — நான்
குடிச்சு வாழக் கஞ்சி தாடி
கஞ்சியினால் வாடவில்லை — உன்
கவலையினால் வாடுறனே
வாடாப்பூவே மருக்கொழுந்தே
வாசமுள்ள ரோசாப் பூவே
ஓலைக்க ருகைமணி — உனக்கு
உட்கழுத்தோ நற்பவழம்
கொண்டைக்க ழகுடியோ
குடல் நெரியாத் தாழம்பூவாம்
நல்லெண்ணெய் மோர் தயிரு — உனக்கு
நாலுகொத்துச் சாராயம்
தங்கப்பிடி அருவாள் — உன் அம்மாவுக்கு
தவசிதந்த சித்தருவாள்

கோடிப்பு டைவை அதில்
கொக்கு ரத்தம் பட்டதென்ன
பெண்ணே யென்றான் புறியத்திலே
கண்ணே யென்றாள் காதலிலே
கள்ளன் வீட்டே கள்ளன் போனு
கட்டலாமோ அடிக்கலாமோ
தலையிலே பூவிருக்க
தலைநோகு தென்கணவா
முலையிலே பால் சுரக்க ஒரு
மூத்த மகன் வேண்டா மோ
ஏழை நட்ட வாழைமரம்
ஏறிவெட்டப் பிள்ளையில்லை
பிள்ளைய முகுழந்தை
புரியனுமோ கைக்குழந்தை
கையெடுத்து நேர்ந்தாயே — பெண்ணே
கைக்குழந்தை வேணுமெண்ணு
கண்டிடைச்சி அம்மையாரே
கலயம் கொண்டா பால்கறக்க
பாலும் அடுப்பிலேயோ
பாலகனும் தொட்டிலிலே
கட்டைச்சி தும்மினதும்
காகம் கரைவினதும்
தேங்காய்க் கெறிந்த கல்லு — என்
திருமுடியிற் பட்டதென்ன
மாங்காய்க் கெறிந்த கல்லு — என்
மணிமுடியிற் பட்டதென்ன
பெண்ணேயென்றான் புறியத்திலே
போடா என்றாள் கோவத்திலே
அண்டைக்கே சொன்னேனே — இவள்
அடங்காத வேசையெண்டு
வேசை என்னை வெறுத்துவிட்டாள்
வெந்தணலில் வேகவிட்டாள்
வேசைக்க டையாளம்
விரிச்சதலை மொட்டாக்கு
மொட்டாக்கை யிட்டாளே
முகத் தொளிநான் பார்க்கையில்லை.

சொல்லிழந்தேன் பதியிழந்தேன்
சுற்றம் சுகம் இழந்தேன்
கட்டைப் பறச் சிறுக்கி
கழுத்திலேயோ கள்ளத்தாலி
அந்தாப் போறுள் அந்திர வள்ளி
அழியப் போறுள் கட்டையிலே
கட்டை வெட்டிச் சுட்டாலும்
கள்ளி நெஞ்சு வேகாதம்மா
வெட்டி வெட்டிச் சுட்டாலும்
வேசை நெஞ்சு வேகாதம்மா

அலைகடலில் தொலைதூரம் கப்பல் ஓட்டும் மாலுமிகளின் கப்பற் பாட்டு

செட்டியொரு கப்பல் வைத்தான்
சேர்ந்ததெல்லாம் மாம்பலகை
வாராயோ காத்தே நீ
வளர் பேராச் சோழகமே
சோழகமும் வீசாதோ
சொன்னகச்சான் பேராதோ
பேராத்து வெள்ளமடா
பேர்த்தணைக்கக் கூடுதில்லை.
நித்தங்கண்ட வாளைமீன்கள்
நிலவைக்கண்டு பாயுதடா
பாய்ச் சலடா பண்ணைக்காரா
பறித்துக்கட்டு பலசரக்கை.
கப்பலெல்லாம் கண்ணுடியாம்
கரையை வந்தா பொன்னெடியோ
கப்பல் காரன் பணமெடியோ
வாங்கித் திண்டாச் செலவடியோ
வேப்பங்காய் வெண்காயம்
விற்கும் கடைத் தெருவே
கப்பல் கூனி மாவிடிக்க
கவிண்ட கூனி தெள்ளிப்போட
பாத்திம்மா கொண்டையிலே
பாம்பேறக் கண்டேனடா

சாராயப் பூபதி அக்கே
சாராயம் என்னவிலே
மின்னலெடா நம் குதிரை
மேகமெடா அச்சுமட்டம்
ஓடுதடா நம் குதிரை
ஒதுங்குதடா பாய்ச்சலிலே

★

காரைதீவுச் சுப்பர் காத்தி ஆறுமுகமிடம்
கடனைக் கொடுத்துவிட்டு
காலனும் தூதனும் இயமனும் போலவே
காலையில் ஓடிவருவார்
நேரமில் லாமலே விடியப்பு றந்தன்னில்
நித்திரைப் பாய் தன்னிலும்
நீயெழும் பேனென்று தலைமாடு தன்னிலே
நிலையாக வந்து நிற்பார்
பார் இளவு இதுவென்று கடனாளி மனையாள்
பதைத்துத் துடித் தெழும்ப
பயணமெல்லோ காசு தாவேன் இலாவிடில்
பயறுதா வேனெழும்பேன்
கூரையில் பூசினிக் காயொன்று வாழையில்
குலைகிடக் கிறதுதாவேன்
கூடாது அண்ணே என்றாலும் ஒரு தேங்காய்
கொடேனென்பார் இவர்கள் குணமே.

தச்சுவேலை செய்யும் சிலர், வேலை செய்யும் தலத்தில் நேரத்தைக் கடத்தும் பான்மையைக் காட்டுகின்ற

பகிடிப் பாடல்

தச்சருக்குத் தரித்திரங்கள் தான்போகாது
தப்பாது சொன்ன மொழி தவறாதப்பா
உச்சி நடு நேரமதில் வருவார் வந்தால்
உட்கார்ந்து வெற்றிலை பாக் குண்பார் கண்டீர்

வைத்த உளி வாச்சிக்கு மணலைப் போட்டு
வகை வகையாய்த் தீட்டிடுவோர் வந்தவேலை
கைச்சல்தெளி வெண்ணெயொடு
கலந்திட்டாலும்
கம்மாளரோடுறவு கலக்கொணுதே.
(தெளிவெண்ணெய்— வேப்பெண்ணெய்.)

எவ்விடத்தும் எல்லாம் புசிக்க வரங் கொடுத்த இறைவன் இங்கு எனக்கு இவற்றை மாத்திரம் தந்தானே என்று ஏங்கிப்பாடும் ஒரு ஏழையின் ஏக்கப்பாட்டு

பொங்கும் பெருஞ் செல்வம்
பாலுடன் சீனி பொரிகடலை
எங்கும் புசிக்க வரங் கொடுத்தார்
இறை எங்களுக்கு
நுங்கும் கிளங்கும் பிஞட்டும் தகனும்
நுரைகடலிற்
சங்கும் கறி நண்டும் சல்லியும்
கிளியும் தந்தனரே.

## இற்றைக்கு எழுபது வருடங்களுக்குமுன் பாடப்பட்ட வழிநடைச் சிந்துப் பாடல்

பெரியகடை முச்சந்தியில் உள்ள சத்திரம் புதிதாகக் கட்டப்பட்ட காலை, நயினைக் கிராமவாசி ஒருவன் தன் மனையாளையும் கூட்டிக்கொண்டு சத்திரத்தைப் பார்ப்பதற்காகக் காரைதீவு வழியாக நயினுதீவிலிருந்து யாழ்ப்பாணம் செல்கின்றுன். கிராமவாசி வழியில் காணும் இடங்களையும் காட்சிகளையும் மனைவிக்கு வர்ணித்துக் கொண்டு செல்கின்றுன்.

சத்திரத்தைப் பார்ப்போம் பெண்ணெ எட்டிச்
சற்றே நடவாயென் கண்ணே
புத்தமிகும் மிட்டாசுக் கடைவல்லி
புரபுண்ணியவான் பொருளதனல் வண்ணே
கத்தும் பெரிய கடையின் முற்சந்தியில்
கட்டியிருக்கும் கவின்செறியுமன்ன
சத்திரத்தைப் பார்ப்போம் பெண்ணே எட்டிச்
சற்றே நடவாய் என் கண்ணே.

தேனெழுகும் குழலாளே காரை
    தீவிது பாரொயிலாளே இப்போ
வேணிலதிகம தாலே யிதை
    விட்டு நடவாயப் பாலே
மானேயிதோபார் அரிசிக் கடைகளும்
    வந்தர் கோரங்கி நெற்கிட்டங்கிச் சாலையும்
பானை சட்டி விற்கும் பண்டகசாலை
    பல சரக்குக்கடை பாராயடியிதோ (சத்)

வேல்விழியே யன்ன மிதுவே முன்
    விளம்பும் மடமிது பொதுவே மிகக்
காலை தொட்டே என்கபோலம் கால்
    கடுக்குது தாடி தாம்பூலம்
சிலமிகு மன்னப் பேடை நடையுள்ள தேனே
    கிறிஸ்தவர் செய்து வைத்தே சிறு
பாலர் படிக்கின்ற வீளங் குயர் பாம்
    வட்டுக்கோட்டைப் பகுதியைப் பாரடி (சத்)

மின்னே நீ பாராயிக்கூடம் பாலர்
    மேன்மாட மீதிலே பாடம் மிக
நந்நயத் தோடுமே கூறிப் பின்பு
    நாடோறுமேகியே தேறி
சன்னல் விளங்கிடும் கோடதிலே சிலர்
    சக்கிடுத்தாரும் நொத்தாரும் கிளாக்குமாய்த்
துன்னிடுவார் சிலர் கூழுமில்லாமற்
    துணியுமில்லாமலே சோம்பித் திரிகுவார் (சத்)

போக்கிரியந்திராசி கோளால் முன்னம்
    பூதனுயிர் தன்னை வாளால் வெட்டும்
துக்குமரக்காடு பாராய் அதோ
    தோன்று தோட்டுமடம் வாராய்
பாக்கியமேயிதோ சோனகர் கூட்டம்
    பலவுமிருக்குந் தெருவீதிலே சிலர்
காக்கும் வேளாண்மைத் தொழின்மிகச் செய்து
    கனவான்களா யினமோடிருக்கிறார். (சத்)

கூனற்பிறை நுதன்மாதே நாட்டுக்
    கோட்டைச் செட்டிகளின் தோதே அவ
தானத்தோடே ரெத்னவகையும் முத்துச்
    சம்பா அரிசி நெல்வகையும்

வானத்தோடேவிற்று வியாபாரமுஞ் செய்வர்
வட்டியென்றூற் பணம் சட்டென ஈகுவர்
ஏனத்தைக் கூறுதும் வா வாயில் வர்த்தக
யாழ்ப்பாண சங்க மிதையு நீ பாரடி

தங்கமே வங்காளஞ் சேலை இதிற்
சரிகையினூற் கையில் வேலை மிகு
சங்கை சேர் பட்டினம் பட்டு யதிற்
தானே யிடைக்கிடை பொட்டு
பங்கமில் கஸ்மீர கும்பகோணம் நாக
பட்டினஞ் சேலையும் பாளையங் கோட்டையிற்
தங்கிய பட்டு மிருக்குப் பிடித்ததைத்
தான்வாங்குவாயடி தையலரேயிப்போ

எள்ளோடு தேங்காயின் நெய்யும் வைத்து
வியாபார மெந்நாளுஞ் செய்யும் மிக
வள்ளலாம் வாணிகர் வீடு இந்த
மட்டிலெல்லாம் பார்த்துப் போடு
தெள்ளமுதேபார் சத்திரந் தன்னை
தென்புறமாயோர் கிணை றூன்றிருப்பதை
உள்ளமே நாடியே பாதங்கழுவிப்பின்
உப்புகலா மெந்தன் கற்பகமேவாராய்

தாமரை போன் முகமாதே இதைச்
சற்றே நீ கேளாயிப் போதே பாரில்
நாமிங்கு வந்தது தோணும் இதை
நன்றாய் நீ பார்த்திடவேணும்
காமப் பசுங்கிளியே யிம்மடத்தினிற்
கண்ணுடி பூட்டிய யன்னல்களைத்தனை
நாமிப்படிப் பார்த்தனன் உள்ளறை
யடுக்க டுக்காகத் தொடுத்திருக்கே கண்ணே

அன்புட னேயென்னையாரும் எந்தன்
ஆசைக் கண்ணாளனே கேளும் இதில்
இன்ப முடனே யெந்நாளும் திரு
ஏகாந்த மெய்தியே வாழும்
பின்பலகால நீடியே வாழ்கப் பெருமையுடன்
கட்டுவித்தவரும் வாழ்க
துன்பமில்லாமல் உலகமும் வாழ்கச்
சொற்றமிழ் கற்றிடும் நற்றவரும் வாழ்க!

★

இருவது வருடங்களுக்குமுன் நயினைக் கிராம வாசிகள், தபால் போக்கு வரவில் மிகவும் கஷ்டப்பட்டார்கள். தபால் பெறுவதானாலும் தபால் சேர்ப்பதானாலும் தபாற் கந்தோருக்கே செல்ல வேண்டும். தபாற் கந்தோர்த் தலைவர் வந்த தபால்களின் விலாசங்களை வாசிக்க (சூழ்ந்து நிற்பவர்களில்) தபாலுக்குரியவர் (அதைக்) கை நீட்டி வாங்கவேண்டும். சிலவேளை தபால்கள் வாரக்கணக்காகக் கந்தோரில் கிடந்துவிடுவதும் உண்டு. முத்திரை பெறுவதானாலும் தபாற்கந்தோருக்கே செல்லவேண்டும். தபாற் சேவகர்கள் இல்லாத காலம். அக்காலத் தபாற்கந்தோர் நிலையையிட்டும் இக்கால நிலையையிட்டும் பாடிய பாடல்.

## தபாற் பாடல்

கடிதம் பார்க்கக் கந்தோர் அலைவது அந்தக்காலம்
பியோன் கையில் விசிலுடன் கடவையில் நிற்பான் இந்தகாலம்
கந்தோர்ப் பெட்டியில் கடிதம் போடுவதந்தக்காலம்
வீட்டுச்சந்திப் பெட்டியில் கடிதம் போடலாமிந்தக்காலம்

கந்தோர் முத்திரை அந்தக்காலம்
கடையில் முத்திரை இந்தக்காலம்
வாசிக்க வாங்குவதந்தக்காலம்
வந்து கொடுப்பது இந்தக்காலம்

பணமுடையோரும் பவனிபோய் வாங்குவதந்தக்காலம்
எந்தப் பஞ்சை வீடும் போய்ப் பங்கிட்டுக் கொடுப்பார்
இந்தக்காலம்
வந்த தபால்கள் வாரமாய்க்கிடப்பது அந்தக்காலம் உடனே
சொந்தக்காரர் கையில் சுடச் சுடக்கிடைப்பது இந்தக்காலம்
*(பஞ்சை—ஏழை)*

# சர்வ மத சந்நிதி

**வே. கந்தையா**

இலங்கையின் வடபால் அமைந்த அணி நகர் யாழ்ப்பாணம். அதனைச் சூழ்ந்து விளங்குவன ஏழு தீவகங்கள். இவற்றின் நடுநாயககாய் அமைந்தது ஒரு சிறிய தீவு. நகரிலிருந்து ஏறக்குறைய இருபது கல் தொலைவில் தென்மேற்கே அலைகடல் நடுவே அருள் ஒளி பரப்பி நிற்பது. இதுதான் நயினாதீவு. உருவால் சிறிதாயினும் அருளின் பொலிவால் சிறந்து விளங்கும் இத்தீவு பழையகாலம் தொட்டே பல்வேறு நாமங்களால் அழைக்கப்பட்டது. நாகதீவு (நாகதீபம்), நாக நயினாதீவு (வையா பாடல்), மணித்தீவு (சௌந்தரயலகரி), மணிபல்லவத்தீவு (மணிமேகலை), சம்புத்தீவு (யாழ்ப்பாணச் சரித்திரம் — யோண் ஆசிரியர்), பிராமணத்தீவு (ஒல்லாந்தர் காலம்) என்பன அவற்றுள் சில.

புகழ் பூத்த இச்சிறிய தீவின் பெருமைக்கு அணியாய் இன்றும் சிறப்புற்று விளங்கும் ஆலயங்கள் பல. ஆதிமனிதன் தன் சிந்தனைக்கும் செயலுக்கும் மேலாக மூலமாய் நின்று வழிநடத்திச் செல்லும் சக்தி ஒன்று உண்டென்று ஒரு கால் உணர்ந்தான். மனம் வாக்கைக் கடந்து உள்நின்ற அப்பொருளைக் கடவுள் என்று அழைத்து வழிபடத்தொடங்கினான். அக்காலத்தில் இருந்தே இச்சிறிய தீவில் தொன்மையான வழிபாட்டு நெறி இருந்து வந்துள்ளது என்பது வெளிநாட்டு நல்லறிஞர் பலருக்கும் ஒப்ப முடிந்த ஒரு கருத்தாகும்.

இத்தீவு வாசிகளில் பெரும்பான்மையினர் சைவ சமயத்தவர். இவர்களின் பழைமையான வழிபாட்டு நெறியின் சான்றாய் இத்தீவின் பெருமைக்கு முக்கிய காரணமாய் விளங்குவது இன்று நாகபூஷணி என அழைக்கப்படும் அம்பிகையின் ஆலயமாகும். சைவசமயத்தவர்களின் இவ்வூரில் அமைந்துள்ள வேறு வழிபாட்டுத் தெய்வங்கள் ஐயனார், ஸ்ரீவீரபத்திரர், வயிரவர், முருகன், வேள்விநாயன், காளி, காட்டுக் கந்தசுவாமி, விநாயகர், பிடாரி, மீனாட்சி அம்மன், மலையில் ஐயனார் இவர்களுக்கு அமைந்த கோயில்களாம். இவையன்றியும், பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய வழிபாட்டுக்கான ஆலயங்களும் இங்கு அமைந்துள்ளன.

இலங்கையின் வடபாகத்தில் நாகர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் நாகத்தை வழிபட்டனர் என்று இதிகாச நூல்களால் நாம் அறியலாம். அம்மன் கோவிலின் மூலத்தானத்தே சுயம்புவாய் அமைந்துள்ள ஐந்துதலை சர்ப்பச்சிலை இதற்குத்தக்க சான்றாகும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இந்திய புராதன சிற்ப சாஸ்திர ஆராய்ச்சியாளர் திரு. எம். நரசிம்மன் அவர்கள் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களுடன் 11-3-1951ல் வருகை தந்தார்கள். அப்பொழுது அம்பாள் 'பாலஸ்தாபனம்' செய்யப்பட்டிருந்த காலம். மூலமூர்த்தியின் அயலே எல்லோரும் சென்று

தரிசிக்கும் வாய்ப்பு இருந்தது. இந்த ஆய்வாளர் மூலஸ்தானத்தில் அம்பாள் சிலையின் பின்புறத்தே அழகுற விளங்கும் ஐந்து தலை நாகச்சிலையில் தாம் கொண்டுவந்த ஒரு நுண்கருவியை அழுத்தி வெளியே கொண்டு வந்து பார்த்தார். இந்த நாகச் சிலை பதினோன்காயிரம் வருடப் பழமை உடையது. இங்கு அமைந்திருந்த பழைய வழிபாட்டுப் பொருள் இதுவே. சரித்திரத்தில் கூறப்படும் சர்ப்ப வழிபாட்டுக்கு இலங்கை இந்தியாவில் வேறு எங்கும் பார்க்கமுடியாத வகையில் பிரத்தியட்ச சான்றாக இது அமைந்திருக்கிறது. இதில் நம்பிக்கை குறைந்த காலத்தில் முன்னால் அம்மனைப் பிரதிட்டை பண்ணி இருக்கிறார்கள். இதுவே உண்மையென்று தம்முடன் வந்தோருக்கும் கூறிச் சிலையைத் தரிசிக்கச் செய்தார். பிரசித்தி பெற்ற ஆராய்ச்சியாளரான இவரின் கருத்து இக்கோவிலில் புராதன வழிபாடு நடைபெற்று வந்தமைக்கு தக்க சான்றாகும்.

பண்டிட் சேதுராமன் (அதிர்ஷ்ட விஞ்ஞானம் என்னும் சோதிட நூலின் ஆசிரியர்) 1951ஆம் ஆண்டில் இங்கு வந்தார். பூரணை நாளான அன்று அம்மனைச் சிரத்தையோடு வழிபட்டார். 'பாம்பு — பாம்பு என்று கூறுகிறார்களே. மகா குண்டலினியடா. வழிபடுவோருக்கு நினைத்த வரம் கொடுப்பாள்!' என்றார். மூல மூர்த்தியாக சர்ப்ப உருவில் விளங்குவது மகா குண்டலினி சக்தி என்பது இவர் கருத்து.

ஆதிசங்கராசாரியாரால் பாடப்பட்ட லிங்காஷ்டகத்தில் 'பணிபதி வேஷ்டித கோபிதலிங்கம்' என்றது பாம்பின் படத்தினால் இயற்கையாகச் சுற்றப்பட்டது அல்லது மூடப்பட்டது. இந்த நயினாதீவைத் தவிர வேறு ஊரில் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

இவர்களை அன்றி, வேறு பல இந்திய பேரறிஞர்களும், ஞானிகளும் இங்கு வந்து அம்பாளைத் தரிசித்து அவள் நல்லருள் பெற்று, இந்த வழிபாட்டு இடத்தின் பழைமைக்கு தக்க சான்று பகர்ந்து போய் இருக்கிறார்கள். அவர்களில் முதன்மையாக எண்ணத் தக்கவர்கள்:



வே. கந்தையா

சிவானந்த சரஸ்வதி
வித்துவான் கி. வா. ஜகந்நாதன்
சென்னை பேராசிரியர் ஞானசம்பந்தன்
பார்த்தசாரதி
தவத்திரு குன்றக்குடி அடிகள்
யோகி சுத்தானந்த பாரதியார்
கிருபானந்தவாரியார் (2-9-1955)
காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீஞானப் பிரகாச தேசிக பராமாசாரிய சுவாமிகள்

சென்னை பிரபல நாடக சபையினர் சண்முகம், பகவதி 22-2-1955ல் அம்மனைத் தரிசிக்க இங்கு வந்தனர். அம்பாளின் அருள் ஒளி எங்கெல்லாம் பரவி உள்ளது என்பதை வெளிப்படுத்தினர். அப்பொழுது பகவதி, ''எனது எட்டாம் வயதிலே தீவ

திலகையாக நடித்த நான் இன்று அந்த மணிபல்லவத் தீவிலே இருப்பதையும் அம்மனைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தமையையும் எண்ணிப் பார்க்கும் பொழுது பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்றார்.

சர்வதேச வெளியீடான இலங்கைத் தீவு என்னும் நூலில் (J. விஜயதுங்கா,) ''யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள நாகத் தீவில் நாகேஸ்வரி அல்லது நாகம்மாவின் கோவிலில் வருடாந்தர திருவிழா நடைபெறும்........... அநேக இந்துக்கள் அந்தத் திருவிழாவில் கலந்து கொள்வர்'', என்று குறிக்கப்பட்டுள்ளது.

சர்வமத சமரச வழிபாட்டுக்கும் நிலைக்களமாக விளங்கும் நயினாதீவு ஆலயங்களில் பழமையானது ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் ஆலயமே. நாகேஸ்வரி, நாகராஜேஸ்வரி, ராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி, பராசக்தி, மனோன்மணி, பரமேஸ்வரி என்று அறியப்பட்டவளும், அறுபத்துநான்கு சக்தி பீடங்களுள் மணித் தீவில் புவனேஸ்வரி பீடம் (சௌந்தரியலகரி) என கூறப்பட்டதும் இதுவே என்பது ஆன்றோர் துணிபு. அனலைதீவில் இப்போது விளங்கும் நாகதம்பிரான், ஒல்லாந்தர் இக் கோயிலை அழிப்பதற்கு முன், அம்மன் இக் கோயிலிலே இருந்தது என்று நம்பப்படுவதால் இது நாகேஸ்வரம் எனவும் அழைக்கப் பட்டதென்பர்.

புராதன வழிபாட்டு இடமாய் அமைந்த இக்கோவிலின் ஆரம்ப நிலைபற்றி நாம் இதுபொழுது அறிதற்கு தக்க சான்றுகள் கிடைத்தில. சிலப்பதிகாரகால செட்டிமார் வியாபார நிமித்தம் இங்கு வந்து போயினர். அம்மனைப் பூசிக்க பூவுடன் கடல்வழியே வந்த நாகத்தை தாக்க முயன்ற கருடனை அவ்வழிவந்த செட்டி விலக்கி கப்பலில் இருந்த திரவியத்தைக் கரைசேர்த்து கோயிலைச் செப்பனிட்டு நயினாபட்டர் என்னும் பிராமணரைப் பூசைக்கு நியமித்தார். அவர் பெயரால் இத்தீவு நயினாதீவு என அழைக்கப் படலாயிற்று என அறிகிறோம். இதன் அறிகுறியாக பாம்பு சுற்றிய கல், கருடன் கல் நாம் கோவிலுக்கு வடக்கே உள்ள கடலில் இப்பொழுதும் பார்க்கிறோம்.

நாகத்தால் பூசிக்கப்பட்ட அம்மை நாகபூஷணி எனும் பெயர் பெற்றாள்.

ஒல்லாந்தர்காலத்தில் அம்மன் கோவில் இடித்து அழிக்கப்பட்டு சூறையாடப் பட்டது. அம்பாளின் திருஉரு வடமேற்கே நின்ற ஒரு ஆலமரப் பொந்துள் மறைத்து வைக்கப்படடது. இது செவ்வால மரமாகும். ஏறக்குறைய 45 வருடங்களுக்கு முன் இதுபட்டு அழிந்தது. இடிக்கப்பட்ட பொழுது கோவில் ஏழுவீதிஉடையதாய் இருந்ததென்பர். செப்புத்தேர், பவளத் தேர்கள் இருந்தன. இவை மக்களால் கடலில் தள்ளி விடப்பட்டன. ஏறக்குறைய 35 வருடங்களுக்கு முன்னே மேற்குக்கடலில் கடல் தொழிலாளரால் எடுத்துக் கொண்டு வரப்பட்டு இப்பொழுது நூதனசாலையில் இருக்கும் கற்சில் இந்தத் தேர்களினுடையதாக இருக்கலாம் என்பது சிலர் கருத்து. இக் கோயிலை அழித்தவர்கள் டச்சுக்காரரே என்பது கர்ணபரம்பரை மூலம் நாம் பலமாக அறிந்த தொன்று. நாக பூஷணி அம்மன் தேர்த் திருப்பணி மலரில் போர்த்துக்கீசர் கோயிலை அழித்தனர் என்று எழுதப்பட்டது பொருந்தாக் கூற்றாகும்.

இதன்பின்னர் இக் கோயில் வழிபாடுகாரர் உதவியோடு புதிதாக அமைக்கப் பட்டு காலத்துக்காலம் பெருப்பிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது.

அம்மனைத் தரிசிக்க யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை மார்க்கமாக கடல்வழியாக கஷ்டப்பட்டு ஏழாற்றுப் பிரிவுக்கட

லைத்தாண்டி வந்தவர்களின் பிரயாணக் கஷ்டம் 1933ம் ஆம் ஆண்டில் தீவுப்பகுதி ஐக்கிய சங்க மோட்டார் வள்ளச் சேவை ஏற்பட்டபின் ஓர் அளவு நிவர்த்தியாயிற்று. பழைய நீண்டகடல் மார்க்கப் பாதை விடப் பட்டு புங்குடுதீவு மார்க்கமாக குறுகிய கடல் பரப்பைத் தாண்டி நயினாதீவுக்கு வருவது இப்பொழுது இலகுவாகி விட்டது. இருந்தும் கடல் பிரயாணத்துக்கு அஞ்சி வராமல் இருப்பவர் பலர். வருடாந்தத் திருவிழாவில் நாற்பதாயிரத்துக்குக் குறை யாத யாத்திரீகர்கள் இந்தத்தீவில் வந்து கூடும் ஒன்றே இங்கு யாத்திரீகர் வருகை யின் பழைமைக்கு தக்க சான்றாகும்.

தொன்மையான வழிபாட்டு நெறிக்கு நிலைக்களனாக விளங்கும் இந்த ஆலயம் நயினாதீவின் வடகீழ்பால் துறை முகத்தின் அயலே விளங்குவதும் ஒரு சிறப்பாகும். அம் பிகையின் அடியார்கள் நயினாதீவுத் துறை முகப்பாலத்தில் கால் வைத்ததுமே தாமத மின்றி அவர்களுக்கு அருட்கரம் நீட்டி எம் பால் வருக என அருள் சுரந்து அழைக் கும் பான்மையே அவர்களுக்கு முதல் காட்சியாக இருப்பதும் மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

## சக்தி வழிபாடு

பிரபஞ்ச வடிவமாக விளங்குபவளும் சகல சீவன்களையும் வாழச் செய்பவளும் பராசக்தியே. பரம் பொருளைத் தாயாக வழிபடும் வழக்கம் பழைமையானது, இந்து சமுதாயத்தோடு நெருக்கமான தொடர் புடையது. உயிர்கள் அன்னையின் உதவி யோடு வாழ்வைத் தொடங்குகின்றன. அங்ஙனமே அன்னைபராசக்தியின் உதவி யின்றி இறைவனைச் சென்றடையும் மோட்சமாகிய நித்திய இன்ப வாழ்வைப் பெற முடியாது. பிரபஞ்சத்தைக் காப்ப வளாகவும் தர்மத்தை ஸ்தாபிப்பவளாகவும் தீயவர்களை அழித்து நல்லவர்களை வாழச் செய்பவளாகவும் சக்தி விளங்குகிறாள். பல பிறவிகளில் வழிபாடாற்றிப் பெற்ற புண் ணிய வசத்தால் அடியார்கள் தேவியை வழி படும் பேறுபெற்றார்கள். அதனால் பரமுத்தி சித்திக்க இலகுவாக வழிப்படுத்தப் பட்டார்கள்.

'நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின்
அருட்புனலால் துடைத்தனை'
'நின்புது மலர்த்தாள் அல்லும் பகலும்
தொழுபவர்க்கே அழியா அரசும்
'செல்லும் தவநெறியும் சிவலோகமும்
சித்திக்குமே'
'உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்'
'இவளே கடவுளர் யாவர்க்கும் மேலே இறைவி'
'அன்பர் மனத்துறும் அன்னமே'
'ஊரிலே உயர்ந்த நாகதீவிலே உறைந்த
தாயே'
'மெய்ஞ் ஞானுபவரிதய பதுமத்திருக்கும்
உமையே'

என்று இவ்வாறெல்லாம் அம்பாளை அடி யார்கள் துதி செய்து மனம் உருகி நிற்பர்.

கருணை உருவாகிய சக்தியே பஞ்ச கிருத்திய பேதத்தினாலே ஐவகைப்படும் சக்தியே — ஆண்வடிவுற்றபோது விஷ்ணு வாகவும், கோபமெய்திய போது காளியா கவும் யுத்த காலத்தில் துர்க்கையாகவும் விளங்குகிறாள். வாலகில்லியரால் சபிக்கப் பட்ட இலட்சுமி தேவியே சுப விமோச னம் வேண்டி அம்மனை வழிபட்டு பேறு பெற்றனள் என்றால், எம்மனோர் நிலை எத்தகையது!

நாகபூஷணி அம்மனை வழிபட்டு வரும் அடியார்கள் தம் பிறவியாகிய கடலைக் கடத்தற்காகவே கட்புலனாகும் சிறிய கடலைக் கடந்து வருகிறார்கள். வழிபடும் இவர்கள் சகல பாக்கியமும் பெற்று தீராத நோய்கள் தீரப்பெற்று வாழ்கிறார்

கள். சர்ப்ப தோஷத்தால் புத்திர பாக்கியம் அற்ருேர், இழந்தோர் அதற்கான தம் பிரார்த்தனையைச் செய்து தங்குறை தீர்த்துப் பெருவாழ்வு வாழ்வதற்கான வழிபாடு இங்கு முக்கியமானது. வேறு மதத்தவர்கூட இந்த வகையில் தாம் பேறுபெற்றமையை மகிழ்ச்சியோடு சந்நிதியில் கூறி நிற்பதை நாம் காணலாம்.

நாகபூஷணி அம்மன் கோவில் அடியார்களின் உதவியோடு காலத்துக்குக் காலம் சிறப்பாக அமைக்கப்பட்டு வந்தது. இக்கோவில் நிர்வாகம் தனிப்பட்ட சிலரிடம் இருந்து வந்தது. 1949ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் 9 பேர் கொண்ட தர்மகர்த்தா சபை இக்கோவிலை திறம்பட நிர்வகித்து திருப்பணிகளைச் செய்து வருகிறது. ஏறக்குறைய ஒன்றேகால் இலட்சம் ரூபா செலவில் புதியதாய் அமைக்கப்பட்ட அழகிய சிற்ப சித்திரத் தேர் 1957ஆம் ஆண்டில் வெள்ளோட்டத்துக்கு விடப்பட்டது.

இக்கோவிலில் ஆனி மாதத்தில் பத்து நாள் திருவிழா நடைபெற்று வந்தது. 1960ஆம் ஆண்டு தொடக்கம் பதினைந்து நாள் திருவிழாவாக அதிகரிக்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## ஐயனார் கோவில்

அம்மன் கோவிலின் அயலில் கிராமத்தின் வடக்கே காவல் தெய்வமாக வைக்கப்படும் (சாத்தனார்) ஐயனார் கோவில் முறையாக அமைந்துள்ளது. இக்கோவில் சிலப்பதிகார செட்டிமார் காலத்தது என்று எண்ணப்படுகிறது. வழிபடுவோருக்கு இன்னருள் பாலிக்கும் ஐயனார் கோவிலில் சித்திராபூரணைத் தினத்தில் புராணபடனம் கஞ்சி வார்த்தல், நீண்டகாலமாக நடைபெற்றுவரும் வழிபாடாகும். அம்மன் கோவிலை டச்சுக்காரர் அழிப்பதற்கு முன் இக்கோவில் அம்மன் கோவில் பரிவார மூர்த்திகளில் ஒன்ருய் இருந்த தென்றும் சிலர் கூறுவர். இக்கோவிலின் இப்பொழுதுள்ள கட்டிடம் 250 வருடப் பழைமை உடையது.

## வீரபத்திரர் கோவில்

நயினாதீவின் தம் பகைப்பதியில் அமையப்பட்டிருக்கும் ஆலயத்தில் எழுந்தருளி இருப்பவர் ஸ்ரீ வீரபத்திரப் பெருமான். ஆலஞ்சோலை மத்தியிலே இக்கோவில் ஏறக்குறைய 350 ஆண்டுகளுக்கு முன்னே சிறு கோவிலாக இருந்தது என்பர். கமக்காரர் தம் விளைவு முற்றிய காலத்திலே நெல் சிறுதானிய அரிசி கொண்டு பொங்கல் பூசை செய்து வழிபாடாற்றி வந்தனர். இக்கோவில் முன்னர் இளைய பண்டாரம் கோவில் என்றும் வீரவாகு கோவில் என்றும் அழைக்கப்பட்டு வந்தது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த புராண பயன்காரர்களில் சிறந்தவருள் ஒருவராக மதிக்கப்பட்ட திரு. தி. இராமச்சந்திரன் அவர்கள் தாம் பாடிய பதிகத்தில் உமை அம்மையார் சேடியருள் ஒருவரான ...''மணிக்க வல்லிபால் வந்திடும் சிவகுமரனே ... வீரவாகு தேவக் கடவுளே'' என்று பாடியுள்ளமை இதனைப் புலப்படுத்தும் மடாலயமாக இருந்து வந்த இக்கோவில் திருத்தப்பட்டு 1931ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டபின் ஸ்ரீ வீரபத்திரர் கோவில் என அழைக்கப்படுகிறது.

ஆசாரம் இல்லாதவர், ஒரு சிறிய தவறு செய்தவர் இதன் அயலே வர அஞ்சுவர். அத்தகையோர் தண்டனை பெற்றதாக கதைகள் உள. அன்பர்களுடன் பேசும் தெய்வமாக இவர் இருக்கிறுர். இவரை வழிபட்டு வீரர்களாய் வாழ்ந்தார் பலர்.

யாழ்ப்பாணம் கோவில்களிலும் வீடுகளிலும் கந்தபுராணப்படனம் நடந்து வந்தது. அந்தமுறை இப்போதும் தவருது இங்கு நடைபெற்று வருகிறது. பங்குனி உத்தரதினத்திலே கந்த புராணபடனம் காப்புக்கட்டி வைகாசி விசாகத்திலே புராணபடனம் முடித்து வேல்பூசை என்னும் பெரும் பூசைவிழா எடுத்து செய்யப்படும். மகேஸ்வரபூசையில் (அன்னதானம்) அயல்கிராம மக்களும் பங்கு பற்றுவர். இந்ததானத்துக்கு உபயோகிக்க கொழும்பு நயினுதீவுப்பழைய மாணவர் சங்கம் 1929 ஆம் ஆண்டிலே இரண்டு கிடாரச் சட்டிகள் வாங்கி உபகரித்தது. பதினைந்து பேர் கொண்ட சபையால் கோவில் பரிபாலிக்கப்பட்டு திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்கோவிலின் அயலே அங்காமலையில் ஒரு சிவன் கோவில் இருந்த தென்றும் அதன்பரிவார மூர்த்தியாக வீரபத்திரரும் இதற்கு சமீபத்தில் இருக்கும் வயிரவரும் இருந்ததாகவும் சிலர் கூறுகின்றனர். அவ்வாருயின் அங்காமலைச் சிவன்கோயிலும் டச்சுக்காரரால் அழிக்கப் பட்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு.

## முருகமூர்த்தி கோவில்

முருகமூர்த்தி கோவில் நயினுதீவு இரட்டங்காலியில் அமைந்துள்ளது. 300 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையானது. காஞ்சிபுரத்தில் போன்று பழைமையான ஒரு மாமரம் சமீபகாலம்வரை நின்றது. கந்தபுராணபடனம் இக்கோவில் முன்னர் நடைபெற்றுவந்தது. வெளிநாட்டவர்களும் இங்கு தங்கி இருந்து இதில் பங்கு பற்றினர். அடியார்களுக்கு மெய் அருள் பாலிக்கும் தெய்வமாக இவர்விளங்குகிருர். சமீப காலத்தில் இக்கோவில் புதிய வகையில் அமைக்கப்பட்டு பூசைகள் விழாக்கள் சிறப்புற நடந்துவருகின்றன.

## வேள்வி நாயன் கோவில்

கமக்காரரின் காவல் தெய்வம் வெளியில் நாயன் என்றும் அழைப்பதுண்டு. இந்திரன் கோவில். இந்திரனிடமுள்ள குலிசப்படையே கோவில் வழிபாட்டிடத்தில் அமைந்துள்ளது. கமக்காரர் பொங்கல் பூசை செய்து வழிபாடாற்றுவர். ஆடிமாசத்தில் இப்பொழுது பொங்கல் பூசை விசேடமாக நடைபெறுகிறது. இப்பொழுது ஏறக்குறைய 50 வருடங்களுக்கு முன்னே கோவில் புதுக்குவிக்கப்பட்டுள்ளது.

## விநாயகர் கோவில்

செம்மணத்தம் புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் என அழைக்கப்படுகிருர். சில நூற்ருண்டுகளுக்குமுன் விநாயகரிடம் பேரன்பு பூண்ட ஒருபெண் வேதாரணியத்தில் இருந்து ஒரு விநாயகலிங்கத்தை இங்கு கொண்டுவந்தார். அச்சிலை நம்பிபுலம், நடுவகாடு, மூத்தனூர் கோயில், பிள்ளையார் புலம் என்னும் இடங்களில் வைத்து வழிபாடாற்றப்பட்டு வந்தது. பின்னர் ஏறக்குறைய 250 வருடங்களுக்கு முன் செம்மணத்தம் புலத்தில் நிலையான ஒருகோவில் அமைத்து வழிபாடாற்றப்பட்டுவருகிறது. கந்தபுராண படனம் நடந்து பூசை நடைபெற்று வந்தது. முதல் சிலை ஊன முற்றபடியால் 1918 ஆம் ஆண்டிலே சென்னையிலிருந்து தருவிக்கப்பட்ட சிலை தாபிக்கப்பட்டது. 1931 ஆண்டில் இருந்து அலங்காரத் திரு விழா நடைபெற்று வந்தது. 1942 ஆம் ஆண்டு தொடக்கம் கொடியேற்றித் திருவிழா நடைபெற்றுவருகிறது. இந்த ஆலயத்தில் தேர்த்திருப்பணிச்சபை அடியார்களின் பெருமுயற்சியாலும் அவர் திருஅருளாலும் அழகிய சிற்ப சித்திரத்தேர் பல ஆயிரம் ரூபா செலவில் முற்றுப் பெற்றுள்ளமை பெருமகிழ்ச்சிக்குரிய ஒரு விஷயமாகும்.

## பிடாரி அம்மன் கோவில்

நயினாதீவு தென் மேற்கே தில்லை வெளியில் பிடாரி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. அக்கோவில் முன்னர் அம்மன் கோவிலின் அயலில் தெற்குப் புறமாக கேணிக்குளியில் இருந்து வழிபாடாற்றப் பட்டு வந்தது. அச்சிலை பின்னர் தில்லை வெளியில் கோவிலில் தாபிக்கப்பட்ட தென்பர். கடல்வழியாக எதிர்பாராது வந்த சிலையும் இக்கோவிலில் தாபிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது எழுந்தருளி மூர்த்தியும் இருக்கிறது. வைகாசி மாசத்தில் பெரிய அளவில் பொங்கல் பூசை வேள்வி நடைபெற்று வருகிறது. அக்கோவில் 250 வருடப் பழைமை உடையது. பிடாரியைத் தரிசித்த ஞானியார் ஒருவர் தில்லையில் உள்ள நீ இங்கு எப்படி வந்தாய் என்று கேட்டாராம். அடியார்களுக்கு மெய்அருள் பாலிப்பவராக இவர் விளங்குகிறார்.

## காட்டுக்கந்தசாமியார்

நடுவகாடு என்னும் காணியில் ஏறக்குறைய 50 வருடங்களுக்குமுன் இக்கோவில் அமைக்கப்பட்டுள்ளது. காட்டில் இரு அன்பர்கள் இவ்வழிபாட்டை ஆரம்பித்தனர். ஒருவர் மறைந்துவிட்டார். மற்றையவர் தம்பூர்வசன்ம புண்ணிய வதத்தால் இந்த ஆலயத்தை கஷ்டப்பட்டு உழைத்து அமைத்தார். தமக்கு பெருமான் கனவில் கூறியபடியே காட்டுக்கந்தசாமியார் என்று பெயரும் இட்டார். அன்பரது ஊக்கத்தால் கோவில் வளர்ச்சி அடைந்தது. நித்திய, நைமித்தியங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

## சமாதிக் கோவில்

காட்டுக்கந்தசுவாமியார் கோவிலின் மேற்குவீதியில் அமைந்துள்ளது. சமீபத்தில் அருள்ஒளி பரப்பும் ஆத்ம ஞானியாக விளங்கிய நயினாதீவுச் சுவாமி என அழைக்கப்பட்ட ஸ்ரீமுத்துக்குமார சுவாமி யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் 26-1-1949ல் பரிபூரணநிலை எய்தினார். இவர் இக்கோவிலில் சமாதிவைக்கப்பட்டுள்ளார். இங்கு பூசைகள் ஒழுங்காக நடைபெற்றுவருகின்றன. அயலிலே அவர் அருள் அடியார்களால் ஒருமடம் அமைக்கப் பட்டுள்ளன. அயலில் தீர்த்தக்கரையில் சிவாலயமும் திருக்குளமும் அமைக்கப் பட்டுள்ளன. கடற்கரையில் தொடுமணற் கேணியில் முன் தீர்த்தம் எடுக்கப்பட்டு வந்தது. ஆனிப்பூரணையில் அம்பாளும், சிவராத்திரி மாசி மகத்தில் விநாயகரும் இங்கே தீர்த்தம் ஆடிட வருவது வழக்கம்.

## காளி அம்மன் கோவில்

பிரண்டைக்காடு என்னும் காணியில் எழுந்தருளி இருக்கிறார். வழிபடும் அடியார்கள் வேண்டிய வரம் பெறுகின்றனர். இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட கோவில். விஸ்வகுல மக்களின் பிரதான வழிபடு தெய்வமாக இருக்கிறது. நித்திய நைமித்தியங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இப்பொழுது எழுந்தருளி அம்மனும் இக்கோவிலில் அருள் உலா புரிந்து இருக்கிறார்.

## மீனாட்சி அம்மன்

பெருங்குளம் வயல்வெளி கமக்காரரின் காவல் ஆராதனைத் தெய்வம். பொங்கல் பூசை நடைபெற்றது.

இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன் புதிய கோவில் கட்டப்பட்டது.

## மலையில் ஐயனார்

மலையில்புலத்தில், கமக்காரரின் காவல் தெய்வம். இற்றைக்கு 10 வருடங்களுக்கு

முன் இப்பொழுதுள்ள கோவில் அமைக்கப் பட்டது. பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

## நாகதீபம் எது ?

நாகதீபம் யாழ்ப்பாணக் குடாநாடு என்றனர் முதலியார் இராசநாயகம். டாக்டர் பரணவிதான முதலியோர், 'இல்லை நாகதீபம் என்பது நயினாதீவே என்று அறுதி இட்டுக்கூறி இருக்கின்றனர். யாழ்ப்பாண சரித்திர ஆசிரியர் யோன் அவர்கள் மகன் டானியல் யொன் அவர்கள் 1938ஆம் ஆண்டிலே நாகதீபம் என்று ஈழநாட்டுப் பத்திரிகை மூலம் நடந்த விவாதத்தில் பம்பாயில் இருந்து தலையிட்டார். பல நூலாதாரம் காட்டி நாகதீப வழக்கு தீர்ப்பு என்ற தலையங்கத்தில் நயினாதீவே என நிலைநாட்டினர். இங்கு வந்து இரண்டு நாள் நாகபூஷணி வித்தியாசாலையில் விளக்கிப் பேசினார்.

1928ஆம் ஆண்டிலே ஒற்றுமை பத்திரிகை ஜூன், ஜூலை இதழில் சென்னை அறிஞர் வீ. பீ. என்பவர் நாகதீபம் நயினாதீவே என்றும் மலேயாக்குடாநாட்டில் எவ்விடத்தில் வசிப்பவரும் அங்கு சிறந்து விளங்கும் சிங்கப்பூரைக் கூறுவது போல ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்தில் சிறந்து விளங்கிய நயினாதீவின் பெயரால் (நாகதீபம்) குடாநாட்டின் மறு இடங்களையும் கூறிக் கொண்டனர் என்று எழுதி உள்ளார்.

நாகதீபம் எனும் நயினாதீவில் புத்தமத வழிபாடும் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்தமை மணிமேகலை புத்தபீடிகையைத் தரிசித்த வரலாற்றால் தெரிகிறது.

மணி ஆசனத்தை யிட்டு சூலோதர மகோதர என்னும் நாகமன்னர்கள் சண்டை இட்டனர். அதை விலக்க புத்தபகவான் மணி நாகதீபத்துக்கு வந்தார். அவர்களால் அளிக்கப்பட்ட மணி ஆசனத்தில் இருந்து தர்ம உபதேசம் செய்தார். அதன் பின்னர் தான் நாகதீபம் என அழைக்கப்பட்டது. இங்கிருந்த புத்த விகாரையும் டச்சுக்காரர் இத்தீவை தாக்கியபோது அழிக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ண இடம் உண்டு. இங்கு கோயில் அழிந்து விட்டபோதிலும் பௌத்த மதத்தினர் விசேட தினங்களில் இங்கு வந்து முன்கோயில் இருந்ததாக நம்பப் பட்ட சந்தனை என்னும் காணியில் தமது வணக்கத்தைச் செலுத்தி வந்தனர். இந்த இடத்தில் இப்பொழுது 1950ல் புத்தமடம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு முன்னரே இந்த ஊரில் கோவிலை அமைக்க விரும்பிய வணக்கத்துக்குரிய றன் தோபே சோமசிறிதிஸ்ஸ அவர்கள் நெடுஞ் சாலை ஓரத்தில் ஒரு காணியை வாங்கி தற் போதுள்ள சமாதிக் கோவிலைப் பெரிதும் முயன்று 1939 - 40இல் அமைத்தார்கள். இவர்கள் இதற்கு முன்னர் ஏறக்குறைய 8 வருட காலம் இந்துக்களான புத்த அபிமானிகள் சிலரின் ஆதரவில் இங்கு தங்கியிருந்து இந்தத் தர்மப் பணியைத் தொடங்கினார்கள். பின்னர் 1946-ஆம் ஆண்டளவில் வணக்கத்துக்குரிய பிராக்மண வத்தே பண்டித தர்மகீர்த்தி திஸ்ஸ நாயக்கதேரோ அவர்கள் இக்கோவிலுக்கு வந்தார்கள். 1947-ஆம் ஆண்டில் விகாரை கட்டப் பட்டது. இக்கோவிலில் பிரதிட்டைபண்ணுவதற்கான புத்த விக்கிரகம் 1954ல் பர்மாவில் இருந்து கொண்டு வரப்பட்டது. 1958ஆம் ஆண்டில் அரசாங்கம் இக் கோயிலை புனருத்தாரனம் செய்தது.

இக்கோவிலில் புத்தபகவானுக்கு சூலோதர மகோதர மன்னர்கள் வணக்கம் செலுத்தும் வகையில் அமைந்த உருவமும் விஷ்ணு, பிள்ளையார். சுப்பிரமணியர் உருவங்களும் வணக்கத்துக்கு உரியனவாக அமைக்கப்பட்டுள்ளன. பௌத்தர்கள் இந்துக் கோவிலை

யும் இந்துக்கள் பௌத்த கோயிலையும் சமரசமாக தரிசித்து செல்லுகிறார்கள்.

புத்தமத பிரதான குரு மல்வத்தை மகா நாயக தேரோ (22) இராசகுரு அமுணுகம ஸ்ரீவிபஸ்ஸி 21-9.1966ல் நயினாதீவுக்கு வருகை தந்தார்கள். இந்து மதஸ்தாபனங்களும் சமரச நோக்குடன் இவரை வரவேற்று உபசரித்தன.

புத்த மதத்தினரின் விசேட தினங்களில் விசேடமாக புத்தமத யாத்திரீகர்கள் ஆயிரக்கணக்கில் வந்து தரிசித்து போகின்றனர்.

## இஸ்லாமிய பள்ளிவாயில்

இந்தியாவில் கீழைக்கரை பெரிய பட்டினம் முதலிய இடங்களிலிருந்து 1915ஆம் ஆண்டு தொடக்கம் முஸ்லிம்கள் இங்கே பிரதானமாக ஆனிமாசம் தொடக்கம் ஐப்பசி மாதம் வரை தங்கி இருந்தனர். இவர்கள் ஒரு சிறிய பள்ளிவாசலை அமைத்து வணங்கிவந்தனர். இப்போது இருக்கும் பள்ளிவாசல் 1919ல் கட்டப்பட்டது. பக்கத்தில் கடற்கரையில் அம்மா பள்ளி வாசல் (சமாதி 1923) இருக்கிறது. பெரிய நோய்களைத் தீர்க்கும் நினைத்ததைக் கொடுக்க வல்ல சித்து உள்ளது. 1924-ஆம் ஆண்டில் இவர்கள் 1500 பேர்வரை வந்திருந்தனர். ஏற்பட்ட கலகத்தின் பின் இவர்கள் வரவை அரசாங்கம் பொலிஸ் ஸ்ரேசன் ஏற்படுத்திக் கட்டுப்படுத்தியது. இதன் பின்னர் இந்திய முஸ்லிம்கள் இங்கு வருவதை நிறுத்திக்கொண்டனர். இப்பொழுது அவர்களின் சந்ததியார் சிலர் இங்கு வெள்ளிக்கிழமை, வேறு விசேட தினங்களில் தொழுதுவருகிறார்கள்.

## கிறிஸ்தவ கோயில்

நயினாதீவில் மானிகரை என்னும் காணியில் கிறிஸ்தவ குருமார் தங்கி இருப்பதற்கு 1890-ஆம் ஆண்டளவில் ஒரு வீடு அமைக்கப்பட்டது. பின்னர் பள்ளிக்கூடமும் அமைக்கப்பட்டது. மதவழிபாட்டுக்குரிய மடமும் அமைக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபாடு செய்கிறார்கள். நத்தார் போன்ற விசேட தினங்களில் வெளியில் இருந்து கூட்டமாக வந்து இங்கு விசேட வழிபாடு செய்கிறார்கள். இவர்கள் அமெரிக்க திருச்சபையைச் சேர்ந்த புரட்டஸ்தாந்து மதத்தினராவர்.

சிலப்பதிகார காலத்திலே மதுரை ஒரு சர்வமத சந்நிதியாக அமைந்திருந்ததை நாம் இப்பொழுதும் அந்நூலாகிய கண்ணாடியில் காண்கிறோம். சிவன் கோவிலும் புத்தர் கோவிலும் முருகன் கோவிலும் அயல் அயலே அமைந்திருந்தமை அந்த அந்த மதச் சார்புடைய மக்கள் எவ்வித மனக்காழ்ப்பும் இன்றி சமரசமாக வழிபட்டமை நாம் அதன் மூலம் காணும் முக்கிய காட்சிகள். அதே நிலைமையை இன்றும் புலப்படுத்தி நிற்பது நயினாதீவு அம்மன் கோவிலும் புத்தர் கோவிலும் கிறிஸ்தவ கோவிலும் இஸ்லாமிய பள்ளியும் இங்கே அயல் அயலே அமைந்துள்ளன. அந்த அந்த மதச்சார்புடைய மக்கள் தங்களுக்கென்றே தனி விருப்போடு இங்கு வந்து சமரசமாக வழிபாடாற்றி அருட்பயன் பெற்று செல்கின்றனர். இதனால் நயினாதீவு ஒரு சர்வமத சந்நிதியாம் பேறு பெற்றுள்ளது என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. இந்த சர்வமத சந்நிதி ஒருகால் முற்றும் வழிபாட்டுக்கே உரிய இடம் ஆகலாமன்றோ.

மணிபல்லவ கலா மன்றத்திற்கு

எமது

இதய பூர்வமான

# வாழ்த்துக்கள்

எம். திருவடிச் செட்டியார்
122, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு 11.

உரிமையாளர்:- இ. சண்முகநாதன்.
நயினதீவு.

Best Wishes From

KANDIAH'S GROCERY STORES

(Importers and General Merchants)

" THE GROCERY PEOPLE "

47 NORRIS ROAD

COLOMBO - 11.

*Dial:* 27748

*Wire:* *"Kangrocery"*



WISHES

S. SUBRAMANIA PILLAI & CO

*Importers and General Merchants*

**No: 121, 5th Cross Street**

**Colombo-11.**

*Store:*

*248, Sea Sreet,*

*Colombo - 11.*

*Telephone: 25567*

*Telegrams: Mangalam*

BEST

WISHES

# V. SELVARATNAM

## AND COMPANY

**Importers, Manufacturers Representatives**

**AND**

**General Merchants**

264. Pickrings Road

Colombo 13.

Telephone 33935.

மக்கள் மனதில் கோமுகி வாழ வாழ்த்துகிறோம்

# பரமா ஸ்டோர்ஸ்

பொது வர்த்தகமும், கமிஷன் ஏஜண்டுகளும்

41, சென் ஜோன்ஸ் வீதி,

கொழும்பு-11.

உரிமையாளர்: க. பரமேஸ்வரன், நயினாதீவு.

With Best Wishes

# V. S. Sadasivam

**General Merchants**

T'Phone 3. **Nanattan.**



அருள் மழை பொழியும் அம்பாள் முன் கவிமழை
பொழியும் "கஸ்தூரி"



போதி மாதவன் வருகையை ஓதி நிற்கும்
தாது கோபுரம்



தேவதூதன் சேதி பரப்ப மேவி நிற்கும்
தேவன் ஆலயம்



சாந்தி மதத்தினர் தேங்கும் வாசல்
ஓங்கி நிற்கும் பள்ளி வாசல்

# இன்றைய ஈழத்தில் பாரதியார் இருந்தால்!

— நா. சிவராசசிங்கம் —

பாரதியார் இன்றிருந்தால் விழாக்களில்லை !
பாராட்டிப் பேசுபவர் பல பேரெல்லாம்
''யாரதிவன் தமிழ்க்கவிஞன்?'' என்று தானும்
நாடிவந்து கேட்கார்கள், மாலை சூடிப்
பாரறிய மேடையிலே முழக்கம் செய்து
பாசாங்கு செய்திட்டுச் சொந்த வாழ்வில்
நேரெதிராய் செயல் புரியும் எத்தர் கூட்டம்,
நேரிலவர் வந்திட்டால் ஓடிச் செல்லும் ! 1

ஈழத்துத் தமிழகத்தே கவிஞருள்ளார் !
இலக்கிய விற்பன்னர்களும், இந்தியர்க்கும்
ஆளொத்துத் தமிழ் சொரியும் சீர்மை மிக்கான்,
அளவெட்டி நாவலன் போல் அறிஞருள்ளார் !
தேனொத்துத் தமிழ் தருவார் இங்கிருந்தும்,
செந்தமிழே அறியாத கறுவாக்காட்டு
மாடத்து வாசிகளா, தமிழாராய்ச்சி
மாநாடு செல்வதென முழங்குவானே ! 2

ஈரமிலா ஆக்கிரமிப்பாளர் தம்மை
எதிர்த்து நின்ற பெல்ஜியத்தை வாழ்த்திச் சென்ற
பாரதியார் இன்றிருந்தால் வியட்நாம் மக்கள்
படைநடத்தித் தாயகத்தைக் காக்கச் செய்யும்
வீரமிகு போர் கண்டு நெஞ்சம் விம்மி
வெறியர்களைச் செந்தமிழால் சுட்டெரிப்பார்,
தீரமிகு வியட்னாமை வாழ்த்தல் செய்வார்,
செம்படையின் வெற்றிக்கும் பரணி சொல்வார் ! 3

''சிங்களத்தால் தமிழினத்துக் காணாத் துன்பம்
செந்தமிழ்க்குப் பங்க'' மென்றே கவிதை பாடி
எங்களுக்குச் சொன்னவர்கள், தங்கள் மக்கள்,
இனத்தவருக்கம் மொழியை உணர்த்திவைத்துத்
தங்களுக்கும் பதவிகளைப் பெற்றுக்கொண்டு,
''தமிழர்களைப் படியாதீர் என்று நாங்கள்
எங்கு சொன்னோம்? என்று சொன்னோம்?''
என்கின்றாரே!
இன்றிருந்தால் பாரதியார், தெரியும் சேதி ! 4

சின வேங்கைப் புலி முறத்தால் சாடி வென்ற
திருக்குலத்துத் தமிழ்மகளை, வேல்கைக் கொண்டே,
இனமோங்கக் களம் சென்று பொருத சீரின்
இளவீரர் தமை நீங்கி இலங்கை வந்தெம்
தனமோங்க உழைத்திட்டான், உழைப்பே வாழ்வாய்
தரித்திரமே பிழைப்பாக வாழ்ந்திட்டானை
மனமேங்கக் கப்பலிலே ஏற்றல் கண்டால்
மழையாகும் கண்ணீர், கண் குளமேயாகும்! 5

நெருப்பாவான், பாரதி இன்றிருந்து கண்டால்!
நீறுவார் கொடியரெலாம், ஐயமென்ன ?
பொருப்பாவான், ''ஏற்றுமதி'' வியாபாரத்தைப்
போய்மறிப்பான், பெரும்பதவி பெற்றுக்கொள்ளும்,
விருப்பாலே தமிழினத்தை விடுத்தொதுங்கி
வேதாந்தம் பேசுபவர் தம்மைக் கண்டால்
செருப்பாவான் அவர் முகத்திலறைவான், தீயர்
சீராவார் ஒன்றில், அன்றிச் சிதைந்தே போவார்! 6

ஆர்ப்பாட்டம் பல செய்தார், வேதம் சொன்னார்,
அடைத்திட்டார் திருக்கோயிற் கதவமெல்லாம்!
பார்ப்பாரச் சீமான்கள் செய்த கூத்தைப்
பகருங்கால் வயிற்றெரிச்சல், சாதி போகப்
போர்ப்பாட்டுக் கட்டியவன் இருந்திருந்தால் –
புலியாகப் பாய்ந்திருப்பான், வைதீகங்கள்
கூப்பாடும் ஓய்ந்திருக்கும், வீதியெல்லாம்
குலபேதம் ஒழிகென்ற கூச்சல் கேட்கும்! 7

உருக் குலைப்பான், செருக்கழிப்பான், உயிரைக்காக்க
ஒளிக்க வைப்பான், உலகமெலாம் அவரைத்தூற்றிச்
சிரிக்கவைப்பான், பேதையரைச் செருவில்வெல்வான்!
சீறி மிக எழுந்து வரும் உழைக்கும் வர்க்கம்
பிரிக்க வைப்பான் வேண்டி இங்கு பித்தர் கூடிப்
பேசுகின்ற பிரிவினை வாதங்கள் கேட்டால்,
''தருக்கொழிக்கும் சமயமிதே, எழுக வீரர்!
தளபதியே, முழங்கட்டும் முரசம்!'' என்பான். 8

(ஏற்றுமதி இறக்குமதிக்கட்டுப்பாட்டுத் திணைக்கள இலக்கிய மன்றம், 1968ல் நடத்திய போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கவிதை)

---

செரு + ப் + பா + ஆல் = செருப்பாவான் = போர்முழக்கக் கவிதைகளால்.

# எமது கல்வி வளர்ச்சி

பண்டித வித்துவான்
சி. குமாரசுவாமி B. A.
விரிவுரையாளர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
கோப்பாய்

கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த சான்ரேரை உடைமையினுலேயே இவ்வுலகம் நிலைத்து நிற்கின்றது என்று கூறுகின்ருர் பழந் தமிழ்ப் புலவர் ஒருவர். எமது மணித் தீவின் பெருமைக்கு அம்பிகையின் அருட் செல்வமே முக்கிய காரணமெனினும் இங்கு வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற அறிஞர்களும் பெருமளவு காரணராவர். நயினுத் தீவின் கல்வி வளர்ச்சியை ஆராயப் புகின் பண்பாட்டடிப்படையிலமைந்த ஆழ்ந்த கல்விமுறை இங்கு நிலவி வந்தமையைக் காணலாம்.

குருகுல அடிப்படையிலேயே எமது தீவில் கல்வி வளர்ந்து வந்தது. திண்ணைப் பள்ளிக்கூடங்கள் சில அமைந்திருந்தன. அங்கு சென்று மாணவர்கள் இலக்கியம், இலக்கணம், புராணபடனம் ஆதியன கற்று வந்தனர். நாகமணிப் புலவரின் பேரனுர் வேலாயுதர் ஒரு பாடசாலை நடாத்தி வந்தார் எனத் தெரிகிறது. திண்ணைப் பள்ளிக்கூடங்களுள் காலத்தாற் பிற்பட்டது கந்தபண்டாரம் வேலுப்பிள்ளை அவர்கள் நடாத்தி வந்த பாடசாலையாகும். இன்றுள்ள நுனிப்புல் மேயும் கல்வி முறைக்கு மாருக அன்று கல்விபயின்ரேர் ஆழ்ந்த அறிவு படைத்து விளங்கினர். அவர்கள் வளர்த்த பரம்பரையினரை இன்றும் நாம் காண முடிகின்றது. அக்காலத்தில் நயினுத் தீவிலிருந்து ஏனைய தீவகங்களுக்கும், இலங்கையின் பிற பாகங்களுக்கும் சென்று ஆசிரியர்களாகவும் உரையாசிரியர்களாகவும் பலர் தொண்டாற்றினர் எனத் தெரிகிறது. அவர்களது சேவைபற்றி யாம் விரிவாக அறிந்து கொள்ள முடியாதிருப்பது வருத்தத்திற்குரியதே. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் கல்வி வள்ர்ச்சிக்காகப் பாடசாலை நிறுவப்பட்ட பின்னருள்ள வரலாறே யாம் ஓரளவு தெளிவாக அறியக்கூடியதாகவுள்ளது.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் பாடசாலைகள் நிறுவப்பட்டன. அதைத்தொடர்ந்து ஆங்கிலேயர் காலத்திலும் பாடசாலைகள் நிறுவப்பட்டன. அவை யாவும் மத போதனையை நோக்காகக் கொண்டு நிறுவப் பட்டனவே. கோல்புறூக் விசாரணைச் சபை அறிக்கையின்படி முழு இலங்கையிலும் நாலு அரசினர் தமிழ்ப் பாடசாலைகள் மாத்திரமே அமைந்திருந்ததாகத் தெரியவருகின்றது. யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதத்தினர் பல பாடசாலைகளையும் கல்லூரிகளையும் நிறுவினர். இவ்வாறு மிஷனரிமார் நிறுவிய பாடசாலைகளிற் சைவ மாணவர் சென்று கல்வி கற்பதனுல் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சிந்தித்தே ஆறுமுக நாவலர் (1872—1879) யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைவப்பாடசாலைகள் கட்டப்பட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். 1872-ம் ஆம் ஆண்டு வண்ணுர் பண்ணையில் நாவலர் ஆங்கிலப் பாடசாலை உருவாகியது. அவருடைய பிரசாரத்தினுல் சமய அபிமான

முள்ளவர்கள் பலர் சைவப் பாடசாலைகளை இடங்கள் தோறும் நிறுவ முயன்றனர். தீவுப் பகுதிகளிலும் இவ் வுணர்ச்சி தலை தூக்கியது. அதன் பயனாய் நயினா தீவிலும் ஒரு சைவப் பாடசாலை பத்தொன்பதாம் நூற்றாண்டினிறுதியில் நிறுவப்பட்டது.

நயினாதீவில் முதன் முதலாக நிறுவப்பட்ட சைவப் பாடசாலையின் தாபகர் திரு. வே. சின்னட்டியார் ஆவர். இவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவருடைய இரண்டாவது மனைவி வயிற்றுதித்த மைந்தரே எமதூரில் வாழ்ந்து சமீபத்திற் காலஞ் சென்ற திரு. வே. சி. நாகலிங்கம் அவர்கள். திரு. சின்னட்டியார் இளம் வயதிலேயே தம்மை விட்டுப் பிரிந்த தமது அருமைக் குமாரன் தில்லையம்பலத்தின் ஞாபகர்த்தமாகத் தாமமைத்த பாடசாலைக்குத் தில்லையம்பல வித்தியாசாலை என நாமஞ் சூட்டினர். தில்லையம்பல வித்தியாசாலை திரு. மு. செல்லப்பா அவர்கள் நன்கொடையாக அளித்த காணியிலேயே கட்டப்பட்டது. தில்லையம்பல வித்தியாசாலையின் முதலாவது தலைமையாசிரியராகக் கடமையாற்றியவர் புங்குடுதீவு சோமசுந்தரக் குருக்கள் ஆவர். அவர்களிடமே திரு. முத்துக்குமாரு பரமலிங்கம் (அப்பாப் பிள்ளையர்) ஆதியோர் புராண படனப் பயிற்சி பெற்றனர்.

தனியார் முகாமையில் இயங்கி வந்த இவ் வித்தியாசாலையின் பரிபாலனத்துக்காக வல்லிக்காட்டுத் தென்னந் தோட்ட வருமானம் ஒதுக்கப்பட்டிருந்தது. சின்னட்டியாருக்குப் பின் யாழ்ப்பாணத்திலுள்ள அவரது மூத்த மனைவியின் புதல்வர் பொன்னம்பலம் பாடசாலையை நிருவகித்தார். அவர் காலத்தில் பத்தை மேனிப் பொன்னுத்துரையென்பவருக்கு ஈடு வைத்த வல்லிக்காட்டுக் காணி பின்னர் மீளவில்லை!

தனியார் முகாமையில் இயங்கி வந்த இப்பாடசாலையிற் கடமையாற்றிய ஆசிரியர்களுடைய பெயர்கள் இன்றும் நயினை வாழ் முதியோர் நினைவிற் பசுமையாக உள்ளன. அவர்களுள் ஒருவரான மசுக்குட்டி வாத்தியாரை நினைக்கும்போது பாடசாலைக்குச் செல்லாது காடுகளில் ஒளித்துத் திரிந்தோருக்கு அவர் வழங்கிய தண்டனைகளே நினைவுக்கு வருகின்றன. மேலே வளையிற் பிடித்துத் தொங்குமாறு விட்டுக் கீழே காவோலை போட்டுக் கொளுத்துவது போன்ற தண்டனைகளை அவரிடம் கல்வி பயின்றோர் விபரிக்கும் அழகே தனி.

வேலணைத் தம்பு வாத்தியார் நியம நிஷ்டைகளில் வழுவாத சைவ ஆசிரியர். அவர் இப்பாடசாலையிற் கடமையாற்றிய காலத்தில் எட்டாம் வகுப்பு வரை கல்வி போதிக்கப்பட்டது. தம்பு வாத்தியாரிடம் புராணபடனப் பயிற்சிப் பெற்றோர் பலர். இன்றும் புராணங்களுக்கு உரை சொல்லுந் திறன் படைத்தோராக விளங்குகின்றனர்.

வித்துவ சிரோமணி கணேசையர் அவர்கள் தலைமையாசிரியராக அமர்ந்து கல்வி போதிக்கும் பேறும் அக் காலத்தில் நயினை மக்களுக்குக் கிட்டியது. அவர்கள் இங்கு கடமையாற்றியபோது இரகுவமிசத்துக்கும் உரைக் குறிப்புக்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எழுதிய உரைக் குறிப்புக்கள் சுதேச நாட்டியம் என்னும் பத்திரிகையில் வெளி வந்து கொண்டிருந்தன.

புலோலி விசாகர் வாத்தியாரே தனியார் பாடசாலையிற் கடமையாற்றிய கடைசித் தலைமை ஆசிரியர் ஆவர். 1926 ஆம் ஆண்டு முகாமையாளராக இருந்த திரு. பொன்னம்பலம் தில்லையம்பல வித்தியாசாலையைச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் கையளித்தார். இதன் பின்னர் நயினா தீவு திரு. மு. நாக

லிங்க வாத்தியார் தலைமையாசிரியராகக் கடமையாற்றினர். 1928 ஆம் ஆண்டு திரு. ச. நா. கந்தையா அவர்கள் தலைமையாசிரியரானர். அவ்வாண்டிலேயே தில்லையம்பல வித்தியாசாலைக்குச் ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலை என பெயர் சூட்டப்பட்டது.

நயினு தீவுக் கல்வி வளர்ச்சியில் உள்ளூரில் தொன்றுதொட்டு நிலவி வந்த பழக்க வழக்க மரபும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. பாரதம், இராமாயணம் போன்ற காவியங்களையும், நளவெண்பா, அரிச்சந்திரபுராணம் போன்ற பிற இலக்கியங்களையும், கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற்புராரணம், சிவராத்திரி புராணம் போன்ற புராணங்களையும், திருக்குறள், மூதுரை, நல்வழி போன்ற நீதி நூல்களையும் மக்கள் வீடுகளில் இரவு நேரங்களிற் படித்து வந்தனர். ஒருவர் உரத்து வாசிக்க மற்றையோர் கேட்டுக்கொண்டிருந்தனர். புராணபடனங்களும் பல கோவில்களிலும் தொடர்ந்து நடைபெற்றன. காப்புக் கட்டி, விரதமிருந்து பலர் புராணம் கேட்டனர். ஆண்டு தோறும் கேட்டு வந்ததினல் நிரம்பிய இலக்கிய அறிவுப் படைத்தோராகப் பலர் விளங்கினர். உரை கூறுவோர் தவருக உரை கூறிய போது கேட்டுக்கொண்டிருந்த கிழவிகள் சிலர் திருத்திய சந்தர்ப்பங்களுமுண்டு. நயினு தீவுக் கோவில்களிற் சமயப் பிரசங்கங்கள் பல நிகழ்ந்து வந்தன. சின்ன மேளம் போன்ற கேளிக்கைகள் கோவில்களில் இடம் பெருமையே இதற்குக் காரணமாகும். சமயப் பிரசங்கங்களும் மக்களின் கேள்வி அறிவைப் பெருக்கின. இன்றும் நயினு தீவிலுள்ள முதியோர் சிலர் பாரதம் முழுவதையும் வாய்ப்பாடமாக ஒப்புவிக்க வல்லவராய்க் காணப்படுகின்றனர். சிலர் நிகண்டு முதலியனவற்றையும் நன்கு மனனஞ் செய்துள்ளனர். திருவாளர்கள் அண்டியார், மார்க்கண்டர் பொன்னர் போன்ருேர் சுயமாகவே கவிதைகள் இயற்றினர். நாகமணிப் புலவர் கல்வி நிறைந்த சூழலிற் பிறந்து வளர்ந்தவர். அவரது பேரன்வேலாயுதர் நயினைதீவு பழைய உரையாசிரியர்களுள் காலத்தால் மிக முற்பட்டவர் எனலாம். புலவரவர்கள் இயற்றிய நயினை மான்மியம், நயினை நிரோட்டயமக அந்தாதி என்பன அவரது புலமைக்குச் சான்று பகர்கின்றன. இன்றுள்ள கவிஞர்களுள் திரு. ஆ. இராமுப்பிள்ளை (கஸ்தூரி) அவர்களும் வே. கந்தவனம் அவர்களும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கோராவர். எழுத வாசிக்கத் தெரியாத நயினை முதியோர் பலர் நூற்றுக்கணக்கான பாரத, இராமயண, கந்த புராணச் செய்யுட்களைப் பிழையின்றி மனனஞ் செய்துள்ளமை நயினு தீவுக் கல்வி வளர்ச்சியில் கேள்வி பெற்றிருந்த முக்கியத்துவத்தை நன்கு புலப்படுத்தும்.

தில்லையம்பல வித்தியாசாலையில் திருவாளர்கள் க. வேலுப்பிள்ளை, நா. கனகரத்தினம், ச. வைத்தியலிங்கம், க. ப. சுந்தரம்பிள்ளை, த. கார்த்திகேசு, வை. சடையப்பசாமி, க. ஆறுமுகம் ஆதியோர் தற்காலிக உதவியாசிரியர்களாகக் கடமையாற்றினர். திருமதி பூம்பாவை இராமச்சந்திரன், திருமதி சிவக்கொழுந்து சுந்தரம்பிள்ளை, திருமதி இராசம்மா வைத்தியலிங்கம் என்போர் பெண்ணுசிரியர்களாகக் கடமையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. பதிவு செய்யப்பட்ட முதலாவது பெண்ணுசிரியராகக் கடமையாற்றியவர் திருமதி நாகம்மா வேலுப்பிள்ளை ஆவர். பின்னர் திருமதி சீதேவிப் பிள்ளை சுப்பிரமணியமும் ஆசிரிய சேவையிற் புகுந்தார்.

திரு. ச. நா. கந்தையா அவர்கள் தலைமையாசிரியராக விளங்கிய காலம் ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலையின் பொற்காலம் எனலாம். நயினு தீவு ஆசிரிய பரம்பரையொன்றை உருவாக்கி விட்ட பெருமை அவர்களுக்கேயுரியது. அவர்களை யாவரும் 'பெரிய வாத்தியார்'

என்றே அழைத்தமை அவருடைய சேவையின் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

கொழும்பு நயினைப் பழைய மாணவர் சங்கம் அக்காலத்தில் நயினாத் தீவின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டியது. விளையாட்டுப்போட்டிகள், பேச்சுப் போட்டிகள், இசை போட்டிகள் என்பன ஆண்டுதோறும் பாடசாலையில் அதி விமரிசையாக நடத்தப்பட்டன. அப்பொழுது கொழும்பு வர்த்தகர்களும் பிறரும் உதவிய பரிசில்களை இன்று நினைத்துப்பார்த்தாலும் வியப்பே உண்டாகிறது. பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளை நயினாதீவு வடக்கில் நாகபூஷணி வித்தியாசாலைக்குப் புதியதோர் கட்டிடத்தை அமைக்கவும் முன் வந்தது. 1929 ஆம் ஆண்டுதான் இன்றுள்ள நாகபூஷணி வித்தியாசாலைக் கட்டிடத்துக்கு அத்திவாரமிடப்பட்டது.

நயினா தீவில் ஒரு கிறிஸ்தவ பாடசாலையை நிறுவ மிஷனரிமார் எடுத்த முயற்சியும் இக் காலத்திற் கைகூடியது. ஆயினும் அங்கு கல்வி கற்க ஒரு சில மாணவர்களே சென்றனர். அதனால் அது பொது மக்களிடையே அதிக செல்வாக்குப் பெற முடியவில்லை. சில ஆண்டுகள் மாத்திரமே இப் பாடசாலை இயங்கியது. பின்னர் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று மாத்திரமே அந்த வளவுக்குள் எஞ்சி நின்றது. இக் கிறிஸ்தவ பாடசாலையிற் கடமையாற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அருளம்பலச் சட்டம்பியாரும், முருகப்பா வாத்தியாருமாவர். நயினா தீவில் ஆங்கிலம் போதித்த முதலாவது ஆசிரியர் என நாம் முருகப்பா வாத்தியாரைக் குறிப்பிடலாம்.

நயினாதீவு தெற்கிலும் ஒரு பாடசாலை நிறுவ அப் பகுதி மக்கள் மிக ஆர்வத்துடன் முயன்றனர். அவர்களது அருமுயற்சியால் 1929 ஆம் ஆண்டு ஸ்ரீ கணேச வித்தியாசாலை உருவாகியது. இப் பாடசாலைக்குரிய கட்டிடம் நிறுவ நிலம் உதவிய பெருமை நாகமணிப் புலவர் அவர்களுக்கும், அவர்களது சகோதரர்களுக்கும் உரியதாகும். இப்பாடசாலையும் சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமையின் கீழ் இயங்கியது. சிரேஷ்ட பாடசாலை விடுகைத் தராதரப் பத்திர வகுப்பு முதன் முதல் வைத்த பெருமை ஸ்ரீ கணேச வித்தியாசாலைக்கேயுரியது. அப்பொழுது தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. வி. செல்லையா அவர்கள் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டிடம் அமைக்க எடுத்துக் கொண்ட பெரு முயற்சியே இதற்குக் காரணம் எனலாம். அதுவரை காலமும் சி. பா. த. வகுப்பிற் பயில விரும்புவோர் யாழ்ப்பாணம் சென்றே கல்வி கற்று வந்தனர். 1941 ஆம் ஆண்டு, முதன் முதலாக நயினா தீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலையிற் பயின்ற ஒன்பது மாணவர் சி. பா. த. தேர்வுக்குத் தோற்றினர். அவர்களுள் எண்மர் சித்தியடைந்தமை பாராட்டுக்குரியதே. அடுத்த ஆண்டில் ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலையிலும் சி. பா. த. வகுப்புக்கள் வைக்கப்பட்டன.

கௌரவ கல்விமந்திரி W. W. கன்னங்கரா அவர்களது முயற்சியால் 1943 ஆம் ஆண்டு இலங்கையில் இலவசக் கல்வித் திட்டம் உருவாகியது. இதனால் பண வசதியற்றோரும் ஆங்கில பாடசாலைகளிலே சேர்ந்து கல்வி கற்க முடிந்தது. ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலும் (Junior school) கனிஷ்ட ஆங்கில பாடசாலைகள் நிறுவப்பட்டன. அப்பொழுது அரசாங்க சபையின் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியாகவும், சபாநாயகராகவும் விளங்கிய சேர். வை. துரைச்சாமி அவர்கள் தீவுகள் கடலாற் பிரிக்கப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டி வாதாடி ஒவ்வோர் தீவுகளிலும் கனிஷ்ட வித்தியாலயம் நிறுவ அனுமதி பெற்றார். அவரது அருமுயற்சியால் நயினா தீவிலும் ஒரு கனிஷ்ட ஆங்கில பாடசாலை 1946 ஆம் ஆண்டு தை மாதம் ஆரம்பமாகியது.

கல்வி மந்திரி டபள்யூ. டபள்யூ. கன்னங்கரா அவர்களே அதனைத் திறந்து வைத்தார்.

கனிஷ்ட வித்தியாலயம் தோன்றும் வரை நயினு தீவில் ஆங்கிலக் கல்வி வளர்ச்சியடையவில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும். பண வசதி படைத்த ஒரு சிலர் மாத்திரம் தமது பிள்ளைகளை ஆங்கிலங் கற்க யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தனர். அந் நிலை மாறி யாவரும் ஆங்கிலம் கற்க கனிஷ்ட வித்தியாலயம் சந்தர்ப்பம் அளித்தது. கனிஷ்ட வித்தியாலயம் அமைக்கத் தமது தேவாலய வளவின் முன் பாகத்தை யுதவிய அமெரிக்கமிஷன் கிறிஸ்தவ சபையினரையும் அவர்களது பரந்த பொது நல நோக்கையும் எவ்வளவு பாராட்டினுலும் தகும்.

மேலே குறிப்பிட்ட மூன்று பாடசாலைக் கட்டிடங்களையும் நிறுவுவதற்குப் பொது மக்கள் புரிந்த உதவிகளையும் நாம் இங்கு குறிப்பிடாதிருக்க முடியாது. பனைகள், கற்கள், மரங்கள், கிடுகுகள் என்பன உதவியும், பணவுதவி புரிந்தும் உடலுழைப்பு நல்கியும் தற்காலிக கட்டிடங்களை அமைத்தும் நயினை மக்கள் ஆற்றிய சேவை போற்றுதற்குரியதே.

கனிஷ்ட பாடசாலை பின்னர் சிரேஷ்ட பாடசாலை (Senior School) ஆகவும் அதன் பின்னர் மகாவித்தியாலயமாகவும் தரத்தில் உயர்ந்தது. க. பொ. த. உயர் தர வகுப்புகள் நடாத்தவும் அனுமதிக்கப்பட்டது. இங்கிருந்து பல்கலைக் கழகத்தின் கலைப் பிரிவுக்கு மாணவர்கள் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இங்கு கல்வி பயின்ற மாணவர்களில் ஐந்நூற்றுக்கு அதிகமானோர் இன்று பல்வேறு துறைகளிலும் உத்தியோகம் வகிக்கின்றனர். நயினை மகா வித்தியாலயத்தின் ஆரம்பக்கால வளர்ச்சிக்கு அக் காலத்தில் அதிபராக விளங்கிய திரு. C. கந்தப்பு அவர்களாற்றிய சேவையே காரணமெனலாம். திரு. க. கனகரத்தினம் B. Sc. அவர்கள் அதிபராக விளங்கிய காலத்தில் விஞ்ஞானப் பிரிவை வளர்க்கப் பெரிதும் உழைத்து வந்தார். இன்று விஞ்ஞான கூட வசதிகள் யாவும் பெற்று நயினை மகாவித்தியாலயம் விளங்குகின்றது. கலை, விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய மூன்று பிரிவுகளும் அங்கு வளர்ந்து வருகின்றன. நயினு தீவு தெற்கிலமைந்துள்ள கணேச வித்தியாசாலையின் தரத்தை உயர்த்த வேண்டுமென அங்கு கடமையாற்றிய ஆசிரியர்கள் சிலரும், அப்பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறைக் கொண்ட பெற்ருேர் பலரும் பெரு முயற்சி செய்து வந்தனர். அவர்கள் வேணவா 1972 ஆம் ஆண்டு நிறைவேறியது. கணேச வித்தியாசாலை கனிஷ்ட உயர்தர பாடசாலையாகத் (Junior Secondary School) தரத்தில் உயர்ந்தது விளங்குகின்றது.

ஆயினும், இன்றுங் கூட க.பொ.த. உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானம் கற்கும் மாணவர்கள் யாழ்ப்பாணத்துக்குச் செல்ல வேண்டிய அவலநிலையே நீடிக்கின்றது. இதனுல் உரிய விசேட சித்திகள் பெற்ற பல மாணவர்கள் தொடர்ந்து உயர் கல்வி பெற முடியாது இடையில் விட்டு விட நேரிடுகிறது. இந் நிலை மாறிப் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு வரை கலை, விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பிரிவுகளிற் கல்வி கற்கக் கூடிய நிலை உருவாக வேண்டும். பாடசாலைக் கல்வியுடன் அமையாது ஊர் மக்கள் பலரும் கற்றுப் பயனடையத்தக்கதாக இன்றுள்ள நூல் நிலையங்கள் பல துறை நூல்களாலும் நிறைக்கப்பட வேண்டும். வீடுகளில் உள்ளோரின் அறிவைப் பெருக்க ஒரு நடமாடும் நூல் நிலையத்தினையும் நிறுவப் பொதுநல ஆர்வமுள்ளோர் முன்வர வேண்டும்.

இன்று தீவுப்பகுதிக் கல்வி அதிகாரியாக எமதூர்ப் பேரறிஞர் திரு. அ. சி நல்லையா அவர்கள் விளங்குகின்ருர்கள். மூன்று பாடசாலைகளிலும் தலைமைப் பதவி பெற்று விளங்குபவர்களும் எமதூர் ஆசிரியர்களே. மூன்று பாடசாலைகளும் இணைந்து ஒத்துழைத்து வருவதும் நாம் செய்த பேறே. இச் சூழ்நிலையிற் கல்விப் பயிர் தழைத்தோங்கும் என்பதற்கையமில்லை.

ஓங்குக கல்வி!

With the Best Compliments

From

# CEYLON NATURAL RUBBER EXPORTERS

**DEALERS AND SHIPPERS IN ALL GRADES OF RUBBER**

*P. O. BOX 74*

*COLOMBO - 2*

**OFFICE And STORES**

*Vauxhall Lane*
*Colomdo, 2*
*CEYLON*

**CODES: RUBEXPO**

*Phone 55172*

**Best**

**Compliments**

# AHAMED STORES

## DEALERS IN TEXTILES

**213.** Second Cross Street,

Colombo - 11.

---

**மாண்புசேர் மன்றத்திற்கு மனமார்ந்த**

**வாழ்த்துக்கள்**

# சித்ரா கபே

169, செட்டியார் தெரு

கொழும்பு 11.

*உரிமையாளர்:-* வே. த. பழனிவேல், நயினாதீவு.

நாகேஸ்வரி துணை

எம் நாட்டில் மணிபல்லவ கலாமன்றத்தின் சேவைக்கு

எமது வாழ்த்துக்கள்

# நாதன் கபே

58, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு—11.

தில்லைநாயகி மோட்டார் வள்ளச் சேவை

நயினாதீவு

உரிமையாளர்— மா. தில்லைநாதன், நயினாதீவு.

**Wishes**

**From**

# MARIAPPA & CO

44/46, Fourth Cross Street

COLOMBO 11.

Compliments

From

# A. S. SANGARAPPILLAI & BROTHERS

**4, 6**, ADAMALLY BUILDING

Kaymans Gate

Colombo

*Phone 32221. Grams : SANGAR BROS.*



கலா மன்றத்தினரால் நடாத்தப்பட்ட
நிதியுதவிக்காட்சியை கொழும்பு
பிரபல வர்த்தகர் திரு. இ. சண்மும் J. P.
தம்பதியினர் திறந்து வைத்தனர்.



முத்தமிழ்ச்சங்கம் கலாமன்ற
மேடையில் அரங்கேற்றிய
நாடகத்தின் ஒருகாட்சி.



பாம்பு சுற்றிக் கல்



கருடன் கல்

# தமிழ் விழாக் கண்ட தனி நகர்

— கு. குகனானந்தன் —

சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தார்கள் மூவேந்தர்கள். தமிழ் மொழி வாழ வேண்டும், சிறப்புற வேண்டும், தமிழ்ப் புலவர்கள் வாழ்விக்கப்பட வேண்டும் என்பதே அவர்கள் நோக்காக இருந்தது. குறுநிலமன்னன் அதிகமான் நெடுமானஞ்சி தான் பெற்ற அருநெல்லிக்கனியை உண்டு தனது ஆயுளை அதிகரித்துக் கொள்ளாது அதனைத் தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு அளித்ததன் மூலம் தமிழுலகில் அழியாப் பெயர் பெற்றான். முரசுக் கட்டிலின் மீது படுத்துறங்கிய தமிழ்ப் புலவரை வாள் கொண்டு துண்டித்திடாது தனது கையினாலே சாமரை வீசினான் தமிழ் வேந்தன் ஒருவன். போரினால் கைப்பற்ற முடியாத பறம்பு நாட்டை தமிழ் பாடிச் சென்றால், பகைவரென்றும் பாராமல் தந்துவிடக் கூடியவன் பாரி மன்னன் (வள்ளல்) என்கின்றார் கபிலர். இவைகள் பண்டைய மன்னர்களின் தமிழ்ப் பற்றுக்கு எடுத்துக்காட்டாம். தமிழரின் அன்றைய நிலை, பெருமை, சிறப்பு, அது வளர்க்கப்பட்டு வந்த முறை இவற்றிற்கு மேலும் சான்றுகள் வேண்டியதில்லை.

தமிழ் மொழியின் பின்னர் தோன்றிய பல மொழிகள் இன்று அறிய முடியாதனவாய் சிதைவுற்றுப் போயுள்ளன என்றால், தமிழ் மொழி தொடர்ந்து வளர்க்கப்பட்டு வந்தது; போற்றப்பட்டு வந்தது என்பதே பொருளாகும். "அன்றிருந்த நிலைக்கு அழிவில்லாமல்" என்று கூறுவார்களே, அதேபோன்று தமிழ் மொழியும் இருந்து வருகின்றதென்றால் தமிழ்ப் பாவலர்கள், தமிழ்க் காவலர்கள் தலைமுறை தலைமுறையாக என்றும் இருந்து வருவதேயாகும். அந்தத் தலைமுறையில் வந்த தமிழ்க் காவலர்களின் தமிழ் விழாக்கண்டு பெருமை தேடிக் கொள்கின்றது அன்றைய மணிபல்லவத் தீவகமான இன்றைய நயினாதீவு.

சங்க காலத்துத் தமிழுலகம் தமிழ் மன்னர்கள் நிகழ்த்திய தமிழ் விழாக்களைக் கண்டு பெருமையடைந்தது. அந்த விழாக்களுக்குச் சற்றும் குறைந்திடாது தமிழும், கலையும் வளர்த்துப் பெருமையுறும் மணிபல்லவம் இவை வளர்க்கக் கலாமன்றம், முத்தமிழ் மன்றம் என்பனவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நாற்புறமும் கடலலைகள் தழுவிச் செல்வதால் தனிமெருகு பெற்றுத் திகழும் நயினாதீவு கோமுகிப் பொய்கை, அட்சய பாத்திரம், மணிமேகலா தெய்வம் முதலியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளதாகக் காப்பியங்கள் கூறுவதனால் மணிபல்லவம் என முன்னர் வழங்கி வந்தது.

சரித்திரப் புகழ் பெற்ற நாகமணியும் பரமர் பாகமுறு மேகு சிவ நாகபூஸ்வரி அம்மை யை புளியந்தீவிலிருந்து புஷ்பம் கொண்டுவந்து அர்ச்சித்துச் செல்லும் நாகத்தினை கவ்விச் செல்லும் பொருட்டு வந்த கருடனிடமிருந்து காப்பாற்றுவதற்காகத் தன்னிட மிருந்த பொருள் முழுவதினையும் அம்மையின் ஆலயத் திருப்பணிக்காகச் செலவிட்டுச் சென்றான், அவ்வழியே வந்த மா நாயக்கன் என்று சரித்திரம் கூறுகின்றது. ஆகவே, நாகதீபம் என்னும் மற்று மொரு காரணப் பெயருக்கு நாகம் வழிபட்ட வரலாறு காரணமாகியது. கோவிலுடன் தொடர்பு கொண்ட வரலாறுகளையும், இலக்கியம் கூறுகின்ற நிகழ்ச்சிகளையும் தத்ரூபமாக எமக்கு எடுத்துக் காட்டக் கூடிய முறையில் அமைந்த சித்திரங்களைக் கொண்ட அம்பிகை அழகு பவனி வரும் அற்புதத் தேர் இன்றும் இவைகளை யாவர்க்கும் எடுத்தியம்பிக் கொண்டிருக்கும்.

இத்தகைய பெருமைகளை உடைய நயினாதீவு ஆரம்பத்தில் ஏழரைச் சதுர மைல்கள் பரப்பளவு கொண்டதாக இருந்தது. இன்று கடலன்னையின் அன்புப் பிடிக்குற் சிக்கித் தன்னை மிகவும் சுருக்கிக் கொண்டது. அத்துடன் எத்தனையோ கவிஞர்களும், கலைஞர்களும். முத்தமிழ்க் காவலர்களும் சிக்குண்டு, கடலன்னையின் அன்புத் தொல்லையை விட்டு வெளிவர மனமின்றி அந்தச் சிறு தீவகத்திலே எத்தனையோ தமிழ்விழாக்களை நிகழ்த்தி, இயல், இசை, நாடகங்களை உருவாக்கி, ஏட்டில் பொறித்து தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்து வருகின்றார்கள்.

பல கோடி மைல்களுக்கப்பால் எட்டாத தொலைவிலிருந்து உலகெங்கும் ஒளியை உமிழ்ந்து கொண்டு தன்னிகரற்றுப் பிரகாசிக்கும் சூரியன் போன்று, பரந்த கடலால் சூழப்பட்டுள்ள மணிபல்லவம் ஆண்டு தோறும் தமிழ் மணம் கமழச் செய்வதன் மூலம் தமிழுலகத்தில் தன்னிகரற்று விளங்கும் தனி நகராக இருந்து வரும் என்பதில், அம் மணித்தீவின் மக்கள் என்ற முறையில் நாமும பெருமையுறலாம்.

# கோமுகியே வாழியவே !

அன்னை பராசக்தி அற்புதத்தாய் இருப்பிடத்தை
அரவணைத்தேயிருப்பவளாம் ஆழிமகள் பெருமை தன்னை
ஆன்றோர்கள் போற்ற வருங் காவியத்தில் ஒளிர் மணியை
அத்தனையும் கொண்டிங்கு அமைத்ததொரு கோமுகியே!

அறிஞர் பலர் வாழ்ந்திருந்த திருநகரின் பெருமைகளும்
அன்போடு பல்சமயம் அணைத்திருக்கும் சீர்தனையும்
வேண்டுவார்க்கீயும் வியன் நாட்டார் பண்பாடும்
ஆண்டாண்டாய் இவ்வுலகு அறியவகை செய்திடுவாய்!

செல்வி. அ. வேதநாயகி.



# உருப்பெறுக ஒரு குலமாம் ஒருமைப்பாடு

( 1970 / 71-ல் மன்றம் நடத்திய போட்டியில்

முதற்பரிசு பெறும் கவிதை )

நீதி நெறி நிறையறிவு இல்லாமக்கள்
    நினைத்தவுடன் உணர்ச்சிகளை நிரப்பும் சிற்றூர்,
ஓதிடுதல் எள்ளளவும் ஏற்கார், அங்கு
    ஒரு பொழுதும் ஒப்புரவு எண்ணார், சற்றும்
கூசிடுதல் இல்லாது குறைகள் செய்து
    குடிமரபாற் கோலோச்சிக் கொடுமை செய்வர்.
பேசிடுதல் பெரும் கொள்கை, பிறி தொன்றில்லை(ப்)
    பிறர்பழிக்கு அஞ்சாதார் பிறந்தாரங்கே.

வீதியெல்லாம் பெருமதிலும் வீடுந்தோன்றும்.
    விருப்பற்ற வெறு நிலத்திற் குச்சுத் தோன்றும்
சாதி யெலாம் மனித குலம் ஆனால் அங்கே,
    சண்டைகளும் சச்சரவும். சாதியாலே
மோதி யெழ மூண்ட பெரும் தீயாலெந்தன்
    முகடிருக்கக் கூரையெல்லாம் மூண்ட கொட்டில்
பாதியதாய்க் காட்சி தரப் பயந்து அங்கே
    பறையன் நான் பறைச்சியொடு பதுங்கி வாழ்ந்தேன்.

எரிந்ததிலே மிஞ்சியதாய் ஒடியற் சாக்கும்,
    எப்பவோ எடுத்து வைத்த பனாட்டுத் தட்டும்,
பரிந்தது எம் பசிகண்டு. பறைச்சி சொன்னாள்,
    பாரப்பா இரவாச்சுப் பகைவர் வாரார்,
கரிந்த சிறு சூளெடுத்துக் கவரும் மீனைக்
    காச்சிடுவம் கூழ் குடித்து நாளாய்ப் போச்சு.
தெரிந்திடுவம் விடியு முனம் செய்தி என்றாள்
    சென்று வர மீன் கண்டாள் செய்தாள் கூழை.

குல நடுக்கம் குளிர் நடுக்கம் கொடியோர் செய்த
 குறைநடுக்கம் ஈ தெல்லாம் குலப்பனுகைப்
பல நடுக்கம் நடுங்கிய நான் பசிக்காய் உண்ட
 பனை கொடுத்த பனுட்டுடனே கூழும் சேரச்
சில நடுக்கம் நீங்கியது சிரித்தாள் மாதி
 சிரிப்புள்ளே பெருந்துயரின் சலிப்பே பாதி.
புலனடக்கம் பரம்பரையாய்ப் பழகிப் போச்சு
 புறப் பட்டால் மறக் கூட்டம் புகழ்பட்டாடும்.

எண்ண அலை மீதூர இரவோ எம்மை
 இருட்டடித்து மறைத்ததுவே. எந்தன் வீட்டின்
திண்ணையிலே தேவிமடி சிறிது சாய்ந்து
 சிற்றறிவின் சிறுக்கியவள் சித்தை யெல்லாம்
வண்ணமுறச் சொல்திறந்து வாயிற் கொட்டி
 வகையடிமை வாழையடி வாழையாகச்
சொன்னகதை எம்வாழ்வின் சோகம் சொல்ல(ச்)
 சொப்பனம்தான் சுகம் என்று தூங்கச் சென்றோம்.

இடையிடையே கடலலையின் இரைச்சலோசை
 எலி நுளம்பு தெள்ளிவற்றின் எரிச்சல் வேறு
தடை யெதுவும் இன்றி யொரு பூனை பாய்ந்து
 சட்டியதிற் கூழ் நக்கும் சத்தம் வேறு
படை யொடு வந்தெம் மவரைத் தாக்கப் போகும்
 பயம் வேறு பறையர் குலப் பற்றே வேறு
கடையவராய்க் கடவுளெமைக் கையே விட்ட
 கதிவேறு கண்ணயரக் கதியேயில்லை.

சூலாசையால் அவளும் சூன்ழ உண்டு
 துயில் கின்றுள் காண்கின்றேன துயரம் விஞ்ச
மேலாசைக் கொருகுழந்தை மீளப் போகும்
 மிகு மாசக் கெர்ப்பமவள் வயிற்றிற் றங்கப்
பாலாசைக் காய் வளர்த்த பசுவும் கன்றும்
 பறையற்கேன் என்ற வற்றைப் பறித்துச் சென்ற
பேராசைப் பெருங் குடியிற் பிறந்தோர் செய்கை
 பீய்த் தெடுத்து உள்ளத்தைப் பிடுங்கிற்றன்றே.

இன்றைக்கோ நாளைக்கோ இப்பதானோ
 என்றவளும் நாரியினை இறுக்கப் பற்றி
என்றைக்கும் இப்படித்தான் எங்கள் வாழ்வு
 ஏன் குழந்தை பிறந்தாலும் பறையன் தானே
கன்றிற்காய்த் தேரோட்டி மகவைக் கொன்று
 காத்தபெரு மனுநீதி காலம் போச்சே
கொன்றிட்டார் கொள்ளி வைத்தார் குலத்தின் பேரால்
 கொதித்திட்டாள் குத்துவலி கூடு தென்றுள்.

கூரையினிற் கொக்கரித்துக் கோழிச் சேவல்
கூவிற்றுக் குலத்தாழ்ச்சி குன்ற வென்று
பேரையது கூப்பிட்டுக் காக்கா என்று
பிறப்பித்த துத்தரவு கா கா என்று
ஊரையெவர் திருத்தியு மென் உணரார் அன்றோ?
ஓம் என்று ஓதியது சடலின் ஓசை
பாரையிருள் மறைந்த கலப் பனிமப் பொன்று
பார்த்திருந்து மூடியது பகைமை காட்ட

எப்பக்கம் கேட்டாலும் ஏதோ ஓசை
இடியோசை தடியோசை இரைச்சலோசை
அப்பக்கம் அப்பப்பா அகப் பட்டாச்சே
ஆண்டியவன் வீடல்லோ அழுகை ஓசை
''டக்''டக்'' கென்றுரிதுவோ கதவின் பக்கம்
யாரப்பா கேளுங்கள் யாராம் என்றுள்
''டப்''டப்'' பென்றடிக்குதடி எந்தன் நெஞ்சு
யாரென்று பொறுத்திடடி கேட்போம் சற்று.

மூன்று தரம் தட்டட்டும் பார்ப்போம் இன்று
முளி வளத்திற் கார் முன்னே நிற்கின்றரோ
தோன்றிய தோர் கனவாலே சொல்வேன் செய்தி
துயரம் தான் இன்று வரக் காண்போம் அம்மா
''மாண்ட நமதுறவினராம் மாமனும்
மகிழ்ந்த தொரு மேளமுடன் மருவக் கண்டேன்''
ஆண்டவனே அபலைகளுக் கபயம் தாரும்
ஆடுகிறீர் சுடலையினுக் கன்பர் நாமே.

''மேளத்திற் கால்வைத்து மிதித்து மெல்ல
மேவி எனைக் காதலிக்க வந்த போது
தாளத்திற் துள்ளியது சரிந்து வீழத்
தாயாரும் விழித் தெழுந்து தடவிப் பார்க்க
ஜாலத்திற் பூனை யென'' நானும் சொன்ன
ஜாமத்தை மறக்காமல் ஜாமம் தோன்றும்
காலத்தில் கனவு எலாம் மேளம் உம்மைக்
கலக்குவதைக் கதை கதையாய்க் கட்டலாமே.

போகட்டும் புகிரிறதா யார் தட்டென்று
பொழுதிருக் கே இவ்வேளை யார் வந்தாரோ?
பேய் தட்டும் ஒரு தட்டுப் பேரன் சொன்னார்
பிறதட்டும் கேட்க வில்லை பேயின் தட்டோ?

வாய்விட்டும் கேட்கவில்லை ஊமைப் பேயோ?
வைரவரோ பைரவியோ கூழிப்பேயோ?
போய் எட்டும் வேப்பிலையைப் போட்டுப் பாரும்!
போகட்டும் பேயென்றூற் பொழுதாய்ப் போச்சு''

''வேப்பிலையும் வேண்டாம் போ வீணாய் நீயும்
விசனங்கள் கொள்ளாதே வயிறும் நோக
மாப்பிளை நான் சொல்லுகிறேன் மச்சான் தாண்டி
மாமியொடு பரிகசிக்க வந்தான் போலும்''
கூப்பிடுவேன் கோபிப்பான் குறும்புக் காரன்
கொண்டுவா திறப்பதனைத் திறந்து பார்ப்போம்
''சாப்பிடு முன் தலைமாட்டில் வைத்தேன் பாரும்''
தம்பிதான் வருவனெனச் சொன்னான் நேற்று.

கைக்கட்டி வாய்கட்டிக் காலும் கட்டிக்
கறுத்தானின் உடல் முழுதும் கண்டிப்போக
மெய்பட்ட அடியெல்லாம் தழும்பாய்க் காண
மெது மெது வாய் உருண்டங்கு வந்த கோலம்
பிய்பட்ட பிணம் போலத் தோன்றிற் றென்முன்
பேதலித்தேன் கதவதனை திறந்தபோது
''ஐயப்போ'' தம்பியென அலறிப் போனாள்
ஆற்றா தாள் அழும் கண்ணீர் குளமாய்ப்போச்சு.

வீட்டுள்ளே சேர்த்தவனை வினவும் முன்னம்
விறுவிறுத்து ஏதேதோ சொல்லப் பார்த்தான்,
மூட்டுள்ளே வலித்தவனும் முதுகும் நோக
முறு வலித்தான் முணு முணுத்தாள் முத்து உன்னைக்
காட்டுள்ளே தேடியவர் வாறார் மச்சான்
கட்டாயம் உனைக் கொள்ளப் போறார் அப்பா
பூட்டுள்ளே கதவிழுத்துப் போடுதானே
புறப்படுவம் கட்டு மரம் கடலிற்தானே.

கேட்டிது என் செவி படு முன் ஏதோ சத்தம்
கிளு கிளுப்பும் கீச் சென்ற குரலும் கேட்க
பாட்டிலவள் சரிந் தொரு காற் புரண்டாள் மாதி,
பாலகனைப் பாரிலவன் பிறந்தான் நந்தன்.
பூட்டியகை விலங்கொழுங்காய்ப் பொல்லாச் சாதிப்
புளிப்பிடித்தோர் போகின்ற பொலிவைக் கண்டேன்
பாட்டியும் தன் பேரனையும் மகளைப் பேணப்
பறந்தடித்தாள் பறையர் இனிப் பறையார் என்றாள்.

நாட்டிலுறை அரசியலார் நன்றாய்ச் சட்டம்
நாட்டிமிகு குலத்தாழ்வு நசிக்கப் போறார்
பூட்டிலுறை கோயிலெலாம் திறக்கப் போறார்
பொதுஎன்று விதி யொன்று புகுத்தப் போறார்
காட்டியது புதின மிதைக் காலைச் செய்தி
களிப்புற்றேன் கறுத்தானைக் கட்டிக் கொண்டு
போட்டியிலே உள்ளிருந்து ஒலித்த ஓசை
புகழ்ந்தது தன் மகன் பிறந்த புதுமை என்று.

பிறந்திடுக புது வாழ்வு பிளவே நீங்க,(ப்)
பிரிந்த சிறு சாதி குலம் பெருமை யோடு
மறந்திடுக, மனித குலம் மாட்சி எய்தி
மகிழ்வுறுக, அனுதினமும் மகிமை சேர்க,
அறம் புரிக, அன் பொழுக, அருளை ஓம்பி,
அனைத்துயிரும் அரும் பொருளை அகத்தால் வாழ்த்தி.
உரம் பெறுக. உயர் வெய்த, உழைப்பே ஓங்க,
உருப்பெறுக, ஒரு குலமாம் ஒருமைப் பாடு.

O

## போட்டித் தலைப்பு

ஒரு நாள், விடியற்காலை, ஒரு வீட்டின் கதவு தட்டப்படுகின்றது. கதவு திறக்கப்படமுன் தட்டுபவர் யாராயிருக்கலாம் என்பது பற்றி வீட்டினுள் கணவனும் மனைவியும் சிந்திப்பதையும் உரையாடுவதையும் கவிதையில் காட்டித் தட்டியவர் யாரென்பதையும் காட்டுக.

**WITH BEST WISHES**

# M-M-MEHLAR

CLEARING AGENTS

*3rd Floor*
50, 1/3 HENDRICK BUILDING

**RECLAMATION ROAD,
COLOMBO-11.**

WISHES AND COMPLIMENTS

# S. A. Chelliah and Co

General Merchants

**14 Fourth Cross Street,**
**Colombo - 11.**

*T' Phone:-* 22128.    *T' grams:-* NAGAPUSANY



**Wishing all Success**

# RANI JEWELLERS

224, K. K. S. Road

JAFFNA.

WITH BEST COMPLIMENTS

From

ARUMUGAM & CO.

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
FOR LOCAL PRODUCT.

107, 4th Cross Street,
Colombo-11.

T'Phone: 25201
T'Grams: TRANSACTER

வாழ்க கோமுகி!

V

**கா. தியாகராசா**

சுருவில்,

ஊர்காவற்றுறை.

ஓங்குக தமிழோசை!

V

**N. சின்னையா**

செயலாளர்,

சேர். பொன். இராமனுதன் கழகம்

கொழும்பு.

வாலிபரின் வளமான சேவைக்கு

**ஏம் வாழ்த்துக்கள்**

# தேவா ஸ்டோர்ஸ்

(முந்திரிகை, பேரீந்து பழவியாபாரிகள்)

193, ஓல்கொட் மாவத்த, (நொறிஸ் வீதி)

கொழும்பு-11.

உரிமையாளர்: மு. க. கனகரத்தினம்

நயினாதீவு.

# எம்பிராட்டி திருவடிமேல்

பண்டிதை பா. புனிதவதி

> "ஒன்ருய் அரும்பிப் பலவாய் விரிந்து
> இவ்வுலகமெல்லாம் நின்ருள்"

என்று ஆதி பராசக்தியின் அளப்பரிய ஆற்றலைப் போற்றுகின்றது ஓர் அருந்தமிழ் பாடல். அருள் மயமான பராசக்தியே ஆதியானது. அவளிடமிருந்தே அண்ட சரா சரங்கள் தோன்றின. தேவரும் மூவரும் அகிலாண்டகோடி ஈன்ற அன்னையின் திருக்கு ழந்தைகளே என்று தேவி உபநிடதங்களும் தேவி பாகவத புராணங்களும், மந்திர தந் திர சாஸ்திரங்களும், சாக்த சமய நூல்களும் கூறுகின்றன.

தேவி மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள். ஆனபடியால் திரிபுரா என்றும், மகாதிரி புர சுந்தரி என்றும் வணங்கப்படுகின்ருள். "மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்" என்று வாழ்த்திஞர் பாரதி யார். எங்கும் நிறைந்த பராசக்தி தூயோ ரைக்காத்து, தீயோரைத் திருத்த பல்வேறு வடிவுகொண்டாள் விசேடமாக பல்வேறு இடங்களிலும் உறைகின்ருள்.

சக்தியின் அருட்பொலிவுள்ள இடங் களே சக்தி பீடங்கள். இவ்வுலகிலே சக்தி பீடங்கள் அறுபத்திநான்கு என ஆன்ருேர் புகல்வர். இன்னுஞ் சிலர் சக்தி பீடங்கள் ஐம்பத்தியொன்றெனவும் அவற்றுள் பதி னெட்டு மிக மிக விசேடம் பெற்றதென வும் விளம்புவர்.

மதுரையில் மீனுட்சியாகவும், காஞ்சி யில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட் சியாகவும், நாகபட்டினத்தில் நீலாயதாட் சியாகவும் உறையும் மாபெருஞ் சக்தியே நயினையில் நாகாம்பிகையாக உறைகிருள்.

சிவ சக்தி மேவிடுவதற்கு புண்ணிய தலங்களே வாய்ப்பாக அமைகின்றன. அன்று கிருஷ்ண பரமாத்மா விதுரனின் சிறு குடிலுக்கு எழுந்தருளுகின்ருன். அப் போது விதுரன்,

> "கருதி நீ எய்தற்கு என்ன மாதவஞ்
> செய்தது இச் சிறு குடில்"

என்று ஆனந்தம் மேலிட்டுக் கூறுகின் ருன். அதேபோல் இந்த மாபெருஞ் சக்தி விரும்பி உறைய இச்சிறு மணித்தீவு என்ன மாதவம் புரிந்ததோ! இதனல் எத்தனையோ மகான்களின் பாத தூளிபடும் பாக்கியத்தை யும் இம் மணித்தீவு பெற்றுள்ளது. இச் சின்னஞ் சிறுதீவில் பென்னம் பெரிய பொ ருள் ஈசான மூலையில் இடம் பெற்றுள்ளது. இயற்கை எழில் மிகும் இடங்களே இறை யுறையுமிடங்கள். நதிக்கரை, கடற்கரை, சோலை முதலான இடங்களே எழில் மிகுந்த இடங்கள். நாகாம்பிகை ஆலயமும் நீலத் திரைக்கடலோரத்திலே நலனுற அமைந் துள்ளது. ஒரு தலத்தில் வளரும் மரங்களைப் பொருத்தே அத்தலம் எத்தேவதைக்குரிய தெனத் தீர்மானிப்பார்கள். இங்கே வேப்ப

மரங்கள் எழிலுற வளர்ந்து இஃது இறை வியின் இருப்பிடமென இயம்புகின்றன. தேவியின் திருக்கண்ணேக்குத் திரைகடலில் பரவுகிறது. அது திக்கெல்லாம் வளேந்து இச் சிறு தீவிற்கு அருள் அரண் அமைக்கி றது. அதனுல் இந்த அருட் சக்தியை வேறு மருட்சக்திகளால் அழிக்கமுடியவில்லே. ஒரு முறை அந்நியரால் அழிபட்டும் அழியாமற் தலேதூக்கி நிற்கிறது.

கண்கவர் ஓவியங்கள் கவின்தரு சிலேகள் காண்டற்கரிய கேளிக்கைகள் அரும் பெரும் பொருட்கள் என்பவை மக்கள் கூட்டத் தை வரவழைக்கும் சாதனங்கள். அவை யேதும் அங்கில்லே. அனுதினமும், ஆண்டு தோறும் வருபவர் தொகையை அளவிட முடியாது அருளின் ஈர்ப்பொன்றே அவரை வரையும் ஈர்க்கிறது.

> ''ஆட்பால் அவர்க்கருளும் வண்ணமும்
> ஆதி மாண்பும் கேட்பாலளவில்லே
> கிளக்க வேண்டா''

என்பது சம்பந்தர் திருவாக்கு. இத்தனே பக்த கோடிகளே இறைவி எங்ஙனமீர்க்கின் ருள் என்ற கேள்விக்கு விடைகூற எம்மால் இயலுமா? இவ்வாலயக் கருவறையில் கல்லி ஞலான ஐந்துதலே நாகவுருவமும் அதன் கீழ் ஒரு இலிங்கமுமுள்ளது. ஆராச்சியாளர் நோக்கிற்கு இந்நாகம் மிக மிகத் தொன்மை யானது. இதனே ஆராய்ந்த எம். நரசிம்மன் அவர்கள் இதன் தொன்மையை வியந்து கூறியுள்ளார். நாக வழிபாடு தொன்மை யானது. நாகதம்பிராஞகை, நாகபூஷணி யாக வேறுபல இடங்களிலும் இவ்வழிபாடு நடைபெறுகின்றது. 'சர்ப்பம் சக்தியின் சின்னம்'' என்பர். சக்தி நாகவடிவில் அன் பர்க்கு அருள்புரிந்ததாகக் கர்ணபரம்பரைக் கதைகள் பல உள. அருட்சக்தியின் கூறு குண்டலினிசக்தி. அச்சக்தியே எமது உடம் பின் மூலாதாரத்தில் உறங்கிக் கிடக்கிறது. அதனுயிர்ப்பே நமது மூச்சு. இடகலே, பிங் கலே நாடிவழியாகச் சுவாசம் நடைபெறு கிறது. யோகிகள் தமது யோகசக்தியினல் உறங்கிக்கிடக்கும் குண்டலினி சக்தியினே தட்டியெழுப்புகின்றனர். அதுமுள்ளந்தண்டு (சுழுமுனே நாடி அல்லது வீணுதண்டம்) வழியாக மேல் நோக்கிச் செல்லும் போது மூலாதாரம், சுவாதிஷ்டானம் மணிபூகரம், அஞகதம், விசுக்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களேயும் கடந்து செல்கின்றது. ஈற்றில் சிரசு ஸ்தானத்திலுள்ள சஹஸ்ரார கமலத்தை (ஆயிரம் இதழ் தாமரை வடி வம்) அடையும். இதனேயே சகஷரதள புட் பமிசை வீற்றிருக்கும் நாரணி என்று துதித் தனர். குண்டலினிசக்தி சஹஎளரார கமலத் தைத் தீண்டியதும் அதிலிருந்து ஒழுகும் அமுததாரையை நரம்புகளிற் பரவச் செய்து நித்திய பேரானந்தத்தை அநுபவிப்பர். அப்போது ஆன்மா உலக ஆசைகள் ஒழிந்து சும்மாவிருந்து சுகானுபவம் பெற்று நிட் டை கூடும் என்று யோகிகள் கூறுவர். இது வே சீவன் முத்த நிலே.

இங்ஙனம் அகத்தே தொழில் புரியும் குண்டலினியே புறத்தே நாகவழிபாடாக வழிபடப்படுகிறது. கருவறைசிரசு ஸ்தானம் சஹஸ்ரதள புட்பமிசைவீற்றிருக்கும் நாயகி குண்டலினிசக்தி. குண்டலினி பாம்பு வடி வம் அதனேப் புறத்தே வழிபட, வழிபட அருள் மேலிட்டுப் பேரின்பம் பெறுவோம். குண்டலினி வழிபாட்டின் பூரணத்துவம் பேரின்பம் பெறுதல். இங்ஙனம் தங்கள் அகப்புற வழிபாட்டால் குண்டலினியை விழிப்புறச் செய்தவர்களே மேன்மக்கள், அவர்களே அரும் பெருங் காரியங்களேச் சாதித்தவர்கள்; பெரும் புகழ்பெற்றவர்கள். இராமபிரன் இலங்கைக்குப்போகுமுன் துர்க் கையைப் பூசித்ததாகக் கூறப்படுகிறது. கண்ணபிரான் கார்த்தியாயினியை வழி பட்டதாகக் கூறப்படுகிறது. ஆதிசங்கராச் சாரியர் சாரதையாய்ப் பூசித்து அருளின் பம் பெற்ருர். இராம கிருஷ்ணபரம கம்சர் காளியாகப் பூசித்துப் பெறலரும் பேறு பெற்ருர். காளிதாஸன் காளியைப்போற்றி

மகாகவியானுன். அபிராமி பட்டனும்சக்தி வழிபாட்டால் முத்தி பெற்றுர்.

இங்ஙனமாக அவதார புருஷர்களாலும், ஏனையோராலும் மேலானதாகக் கருதப்பட்ட சக்திவழிபாடு எமக்கு இன்றியமையாதது. இந்தச்சக்தியை மூன்று விதமாக வழிபடலாம்.

1. மந்திர ஜெபம்
2. ஸ்ரீ சக்கரம்
3. குண்டலினி யோக சாதனை.

இறைவிக்குரிய மந்திரங்கள் இறைவியின் ஒலிவடிவம். இதனுல் இறைவி நாதரூபி, நாதாந்த சக்தி என அழைக்கப்படுகின்றுள். இந்த மந்திர ஜெபம் நயினைநாகபூஷணி ஆலயத்தில் நாடோறும் நடைபெறுகிறது. நவராத்திரி தினங்களில் வேறு எத்ததலத்திலும் இல்லாத விசேட முறையில் தேவி மந்திரங்களால் துதிக்கப்படுகின்ருள். இங்குசக்தி நாதாம்பிகையாக விளங்குகிறுள்.

அடுத்ததாக ஸ்ரீ சக்கரம் தேவியின் வரிவடிவம், பிந்து, முக்கோணம், எண் கோணம், பத்துக் கோணம், இரண்டு பதினுன்கு கோணம், எட்டுத் தளம், பதினுறுதளம், மூன்று வட்டம், முக்கோட்டுப் பூபுரம் ஆகியவற்றுலானது ஸ்ரீ சக்கரம். ஒவ்வொரு பூரணைக்கும் இந்த வரிவடிவம் வரையப்பட்ட தகடு வைக்கப்பட்டு வில்வம் முதலியன சாத்தி விரிவாகப் பூசை நடைபெறுகிறது. எனவே இத்தலத்தில் ஒலிவடிவு, வணக்கத்துடன், வரிவடிவு வணக்கமும் நடை பெறுகிறது.

குண்டலினி சக்தி புறத்தே நாகவழிபாடாகவழிபடப்படுகிறது. தேவிவணக்கத்திற்குரிய மூன்று முறைகளும் இங்கே நடைபெறுவது போற்றத் தக்கது. அருமையறிந்தவர்களால் ஏற்கத்தக்கது.

''சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'' பஞ்ச கிருத்திய நடனம் புரியும் போது எம்பிராட்டியின் பொன்னஞ்சிலம்பணிந்த பாதத்தை மேல் தூக்கித் தனது வலது பாதத்தை ஊன்றி ஆடுகின்றுன். மேற்தூக்கிய திருவடியே ஆன்மாக்களுக்குத் துணையென இடக்கரத்தாற் சுட்டியும் காட்டுகிறுன். எம்பிராட்டி திருவடியே மேலாம் முத்திப்பேறு அதாவது அருள் அளிக்கவல்லது. ''முத்தி நான்ற மலர்ப் பதத்தே நாடு'' என்பதும் நோக்கத்தக்கது. நினைந்துருகும் அடியார் சென்னிமேல் எம்



பிராட்டி திருவடிவைத்துக் காப்பாள், இதனை அபிராமி பட்டர்...

ஆசைக்கடலி லகப்பட் டருளற்ற வந்த
கன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனை
நின் பாதமென்னும்
வாசக் கமலத் தலைமேல் வலியவைத்
தாண்டு கொண்ட
நேசத்தை யென் சொல்லு வேனீசர்
பாகத்துநேரிழையே.

என்று எம்பிராட்டி திருவடி தம்மேல் வைத்துத் தம்மை இறவாமற் பிறவாமற் காத்த தன்மையை ஏத்துகிறுர்.

ஆகவே யாமும் எம்பிராட்டி திருவடிமேல் பற்று வைத்து ''பாடகமிலங்கு சிறு பங்கயமிறைஞ்சுவாம்.''

# நயினைப் புலவர்கள்

ஆயிர மாயிரம் முத்துக்கள் ஆழ்கடலின் அடித்தளத்திலே பிறக்கின்றன. அவற்றிற் சிலவே, மனிதன்கையில் அகப்பட்டு மாதர் அணிக்கு அணியாகின்றன. மாமன்னர் களின் முடியை அலங்கரிக்கின்றன. பயங்கரக் கானகத்தின் மத்தியிலே, அருமையான வாச மலர்கள் மலருகின்றன. அவை வனக் காற்றில் தம் மணத்தைப் பரப்பிவிட்டு. வாடிவதங்கிச் சருகாய் உதிர்ந்து விடுகின். றன. அவற்றை அனுபவிப்பவர் எவருமிலர் அவை பூத்துக்குலுங்கி மணம்பரப்பிய கதை, காட்டின் எல்லையோடு முடிவு பெற்றுவிடுகிறது. இவை பற்றிச் சிந்தனை யில் ஈடு பட்டிருந்த எனக்கு, நம்மூர் மக்க ளிடம் குவிந்துள்ள அறிவும் ஆற்றலும் தான் நினைவுக்குவந்தன. நாம் எந்நாடவர் களுக்கும் குறைந்தவர்கள் அல்ல. எம்மிடம் கூரிய மதி உள்ளது எனினும் எல்லாம் குடத்து விளக்காய் உள்ளன. நம்மூர்ப் புலவர்களின் கவித்துவம் பிரபலம் பெற் றுள்ள மற்றவர்களிலும்பார்க்க, குறைந்த தல்ல. நம்மூர் ஓவியனின் கைவண்ணம் யாரையும் வசீகரிக்கக்கூடியது. கணித மேதைகள், தத்துவஞானிகள், மேடைப் பேச்சாளர்கள், புதுமை படைக்கும் எழுத் தாளர்கள் என்று இன்னோரன்ன ஆற்றல் படைத்த அறிஞர்கள் நம்மிடையே உள்ள னர். ஓரிரண்டு பேரைத்தவிர மற்றவர்கள் சாதாரணமாகி விட்டார்கள். காரணம் ஒன்று நமது பொருளாதாரக் குறைபாடு. மற்றது நமக்கே இயல்பாக அமைந்து விட்ட புகழை விரும்பாத தன்மை. நமக்குத்தான் புகழ்வேண்டாம். நாட்டுக்காவது தேடிக் கொடுக்க வேண்டாமா? நம்மிலும்பார்க்க அறிவில், ஆற்றலில் குறைந்தவர்கள் ஒவ் வொரு துறையிலும் முன்னுக்கு வரும்போது நாம் ஏன் பதுங்கிக்கிடக்கவேண்டும். நம் மிடையேயுள்ள சிறு சிறு பிணக்குகளிலெல் லாம் நாம் நமது ஆற்றலிற் பெரும்பகுதி யைச் செலவிட்டுவிடுகின்றோம். அதில் பெறும் சிறு வெற்றியுடன் திருப்தியடைந் தும் விடுகின்றோம். ஊருக்கு வெளியே இருந்தபோது பிரகாசித்தபலர் ஊர்நோக்கி வந்தவுடன் மங்கத் தொடங்குவதன் காரணம் இதுதான்.

நயினையில் பிறந்த புலவர்களிற் சிலரை நினைவுக்குக் கொண்டுவர முயல்கிறது இக் கட்டுரை. ஐயோ இவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்குமானால்......... என்று வாசிப்பவர்களை எண்ணவைப்பது எனது நோக்கமல்ல, போனவர்கள் போகட் டும். இருப்பவர்களாவது தத்தமது ஆற்றல் களை வெளிக் கொணர்ந்து, அவற்றுக்கோர் உருவங்கொடுத்து, அவற்றையெல்லாம் உலகுக்கு வழங்கி, தமக்கும் நாட்டுக்கும் புகழை ஈட்டிக் கொடுக்க வேண்டு மென்பதே எனது அவா.

நயினைமக்கள் யாவரும் புலவர்களே. பலர் பாடாத புலவர்கள். சிலர் பாடிய புலவர்கள். அவ்வளவுதான் வேறுபாடு. நயினையிற்பிறந்தவன் ஒருவன் பாட நினைத் தால் என்னை எடு, என்னை எடு என்று சொற் கள் வந்து வந்து முன்னுக்கு நிற்கும், அது நமது அம்பிகையின் கருணை. எமக்கு கொடுத்தபின்தான் மற்றவர்களுக்கு.

நம் நாட்டுப் புலவர்களில் முதலிடத்தை வகிப்பவர் நயினை நாகமணிப்புலவராவர்.

புலவரின் தந்தையார் கதிரேசபிள்ளை ஒரு பெரு வேளாளர். காணி பூமி மாடு மனை என்று அக்காலத்தவரால் மதிக்கப்பட்ட அத்தனையும் அவரிடமிருந்தன. அவ்வரிசையில் பெரிய செம்மறி மந்தையும் ஒன்று. ஊரிலுள்ள அத்தனை செம்மறி மந்தைகளும் மாரிகாலத்தில் மேய்வது தில்லை வெளியிலே. தில்லை வெளி அக்காலத்தில் பெரிய புல்லு வெளியாக இருந்தது. வடக்கே வல்லிக் காட்டிலிருந்தும் செம்மறி மந்தைகள் மேய்ச்சலுக்காக அங்கே கொண்டு செல்லப்படும். காலையில் சிறுவர்கள் செம்மறி மந்தைகளை ஓட்டிக் கொண்டு தில்லை வெளிக்கு வந்து சேருவார்கள். வடக்



பண்டிதர்
நா. கந்தசாமி

கிலிருந்து வந்த செம்மறிகளும் தெற்கிலிருந்து வந்த செம்மறிகளும் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியுடன் புல்லுமேயும். வடக்குத்தெற்கு என்னும் வேறுபாடு அந்தக் காலச் ''செம்மலி''களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. அவைகளை ஓட்டி வந்த சிறுவர்களும் ஒருவரோடோருவர் சேர்ந்து ஒன்ருகவிளையாடுவார்கள். கிட்டிபுள்ளு அடிப்பது அக்காலத்தைய பிரபல விளையாட்டு அது ஒருமகிழ்ச்சிகரமான ஆட்டம். இக்கலக் ''கிறிக்கற்'' விளையாட்டை விட ஆடுபவர்களுக்கும் ஒடுபவர்களுக்கும் அது மகிழ்ச்சியை ஊட்டும். இடையிடையே வரும் ''அளப்பல்களும்'' சண்டைகளும் உற்சாகத்தைக்குறையவிடாது பாதுகாக்கும். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஆட்டஞ்சிங்கம் என்று அளப்பதில் தான் எவ்வளவு இன்பம். கிராமப்புறத்து விளையாட்டான இது அழிந்து விடுமோ என்ற கவலை பழையவர்களான எம் போன் ஞோர்க்குண்டு.

செம்மறியாடுகளின் உருவ அமைப்பில் ஒரு விசித்திரம். அவற்றை இலகுவில் இனங் கண்டு கொள்ள முடியாமை, ஒன்று போலவே மற்ருென்றும் தோன்றும். இது இன்னுருடையது என்று துணிந்து சொல்ல முடியாது. அப்படியானுல் மந்தைகளைப் பிரித்து ஓட்டிச் செல்வது?... மேய்ப்பானின் குரலைக்கேட்டு ஒன்று சேருங்குணம் செம்மறியாட்டிடம் உண்டு. பொழுது சாய்ந்து கடலில் விழச் சிறிது நேரம் இருக்கும் போது ஆட்டுமந்தைச் சிறுவர்கள் தூரத்துக்கொருவராய் நின்று ''சோ சோ'' எனக்குரல் கொடுப்பார்கள். அவரவர் மந்தைகள் அவரவரைச் சூழ்ந்து கொள்ளும், தத் தம் வீடுகளுக்கு ஓட்டிக்கொண்டு போவார்கள். வடக்கேயுள்ள சிறுவர்கள் கொஞ்சம் நேரத்தோடு புறப்பட்டு விடுவார்கள். அதற்கப்புறம் மத்தியிலுள்ளவர்கள் செல்வார்கள். இப்படியே தூரத்துக்கு ஏற்றவாறு முன்ஞகவும் பின்ஞகவும் பிரிந்து செல்வார்கள்.

கதிரேசரின் மந்தைகளை மேய்ப்பது அவர்மகன் நாகமணியின் பொறுப்பு. அப்போது அவனுக்கு வயது பதினைந்து. ஒவ்வொரு ஆட்டுக்கும் ஒவ்வொரு பெயரை இட்டிருந்தான். கருவாய்ச்சி, இலப்பி கன்னமறைச்சி என்று பல பெயர்கள். கருவாய்ச்சிக்கு ஒரு புத்திரன். அதற்குப் பெயர் தில்லையன்.

அம்மாவோடு துள்ளு நடை போட்டு ஓடிவரும். கழுத்தை ஒரு புறமாக வளைத்து பின்னங் கால்களைத் தூக்கி இரண்டு முறை துள்ளிவிட்டுப் பாய்ந்து ஓடிவரும். அது தில்லையம்பலத்து ஈசனின் திரு நடனத்தை நாகமணிக்கு நினைவூட்டியிருக்கவேண்டும். தில்லையன் என்ற பெயரை அவர் ''சும்மா''வைக்கவில்லை.

ஏதோ ஒரு நோய்காரணமாக கருவாய்ச்சி பரலோகம் சென்றுவிட்டாள். இப்பொழுது தில்லையனுக்கு அம்மா நாகமணி. அந்தத் ''தாயைத்தின்னிக்கு'' தன் அன்பையெல்லாம் சொரிந்தான். தாயற்ற குறையை நீக்கப் படாத பாடுபட்டான். தில்லையனுக்கும் நாகமணிமேல் ஒருவாஞ்சை. தனது சின்னத்தலையால் இடைக்கிடை நாகமணியின் காலில் முட்டுவான். அவனைத் தடவிக் கொடுப்பதில் நாகமணிக்கும் பேரானந்தம்.

ஒரு நாள் மந்தையை ஓட்டிக் கொண்டு தில்லைவெளிக்கு வந்தான். எப்பொழுதும் மந்தைக்குமுன்னால் துள்ளிக்கொண்டு ஓடும் தில்லையன் அன்று குருவிக்கொண்டு பின்னால் வந்து கொண்டிருந்தது. பழைய துள்ளலும் துடுக்கும் காணப்பட வில்லை. மந்தையைத் தில்லை வெளியில் மேயவிட்ட நாகமணி கிட்டியடியில் மூழ்கிவிட்டான், தில்லையனைப் பற்றிய நினைவே அவனுள்ளத்தில் எழவில்லை. வழமை போல் மாலையில் மந்தையை ஓட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டான். அவற்றைப் பட்டிகளில் அடைத்தும் ஆயிற்று. அப்பொழுதுதான் நாகமணிக்குத் தில்லையனின் ஞாபகம் வந்தது. தேடிப்பார்த்தான். தில்லையனைக் காணவில்லை. நேரம் இரவாகி இருந்தது. தில்லை வெளியோ வெகு தொலைவில் இருந்தது. உடனே சென்று தேடிப்பார்க்க முடியவில்லை. அடுத்தநாட்காலை வழமைபோல் மந்தையை ஓட்டி வந்த நாகமணி தில்லைவெளி முற்றும் தில்லையனைத்தேடியலைந்தான். ஐயோ நாகமணி உயிருக்குயிராய் நேசித்த ''அந்தத் தாயைத்தின்னி'' ஒரு கல்லுக்குப்பக்கத்தில் இறந்து கிடந்தது. ''ஆறுகக்கண்ணீர் வடித்து நின்ற நாகமணியின் நினைவில் தில்லையனை வளர்க்கத்தான் பட்டபாடெல்லாம் தோன்றித் தோன்றி மறைந்தன. தில்லையன் தன் மேற்காட்டிய பரிவையும் பாசத்தையும் எண்ணி நைந்தான், இது நாகமணியைப் பொறுத்தவரை ஒருபேரிழப்பு, தான் அன்பு செலுத்திய எவற்றையும் நாகமணி இதற்குமுன் இழந்திருக்கவில்லை. இவ்விழப்பே நாகமணியின் கவிதா விலாசத்தை முதன் முதலாகத் தூண்டி வெளிக் கொணர்ந்தது. தில்லையன் இறந்தும் இறவாத அமரனாகிவிட்டான். வழிவழியாக வரும் நயினைமக்கள் எவரும் தில்லையனை மறக்கமாட்டார்கள். துக்கம் நெஞ்சையடைக்க நாகமணியின் வாய் எதையோ முணுமுணுத்தது. அருமையான கவிதை ஒன்று அவனின் பதினைந்து வயது நிரம்பிய வாயினின்றும் வெளி வந்தது.

நன்மைபெறு ஜெயவருட மதனிலே
தைமாத
நற்றேதி பதினைந்திலே
நல்ல வெள்ளிக்கிழமை யோடுத்த
ராடமிசை
நற்பூர்வபக்க நாளில்
கன்னன் நாழிகை பத்தினளவிலே
உச்சமுறு
கருதரிய பகல் நிலாவில்
காலை மணிஎட்டினிற் சிலமாங்
காட்டினிற்
கல்லருகு தன்னிலே தான்
செம்மையாம் புல்லையே தின்றுயிர்
தரித்திடும்
செம்மறிக் குலந்தன்னிலே

சென்ற கருவாய்ச்சி தன் புத்திரன்
தில்லையன்
செகவாழ்வு தனைவெறுத்தே
பொன்மலர்ச் சோலையுறு பரலோகம்
நண்ணியே
போவதற்கே நினைந்து
புனையரவும் மதியுமணி கயிலாய
நாதனின்
பொன்னடியில் மருவினானே.

இப் பாடல்தான் நிரோட்டயமகமும், நயினை மான்மியமும், இன்னும் ஆயிரக் கணக்கான அமரத்துவம் வாய்ந்த அழியாக் கவிதைகளையும் ஆக்கிப் புகழ்படைத்த நயினை நாகமணிப் புலவர் அவர்களின் கன்னிக் கவிதையாகும்.

## அண்டியார்

நாவன்மைக்கும் பாவன்மைக்கும் நயினாதீவைக் கேட்டுத்தான் என்று மற்றவர்கள் கூறுவதில் உண்மை இருக்கவே செய்கிறது. வலம்புரியைச் சூழ்ந்துள்ள சங்குகளைப் போல நாகமணிப் புலவருக்கு முன்பும் பின்பும் புலவர்கள் பலர் தோன்றியும் தோன்றிக்கொண்டும் இருக்கிறார்கள். நாம் இப்பொழுது அறியக் கூடியவர்களாயுள்ள புலவர்களிலே காலத்தால் மூத்தவர் அண்டிப்புலவர். இவரது இயற் பெயர் கதிரேசன். மக்களோடு மக்களாய் வாழ்ந்து அக்கால வாழ்வோடு ஒன்றிப் பிணைந்து, கூழையும் குத்தூசியையும் பாடிய அவர் தன்னை விட்டுச்சென்ற தன் மனைவி பொன்னியின் பெயரில் ''பொன்னி புராண'' மெனப் புராணம் ஒன்றையே படைத்தார். ஆனால் அந்நூலில் ஒரு பாவைக்கூட நம்மால் பாதுகாத்துவைக்க முடியாமற் போய்விட்டது. இது நமது துர் அதிர்ஷ்டமே. கூழ்ப் பிரியரான இவர், வேலைக்காக எங்கு சென்றபோதும் இரு பெரிய பனை உமிழ்களையும் தம்முடன் கூட எடுத்துச் செல்வாராம். ஒரு உமிழால் கூழைஅள்ளி மறு உமிழில் ஊற்றிக் குடித்துப் பார்த்தவர்களுக்கு அதன் அருமை தெரியவரும். இவர் ஒரு கூழ்ப்பிரிய ரென்பது இவர்பாடிய;

ஆராத அன்புடைப் பொன்னிகையால்
நன் களைந்து செய்த
ஓராமீன் கூழினை உண்டுவிட்டால் அந்த
உம்பர் பண்மேல்
வாராதிருக்க வகையுமுண்டோ துளி
வாயிற் பட்டால்
நாரா யணனுங்கை நீட்டுவன் கொஞ்சம்
நமக்கெனவே.

என்ற பாட்டால் அறியக்கிடக்கிறது.

தான் அன்பு செலுத்திய தன் மனைவி பொன்னி தன்னை விடுத்துச் சுப்பர் என்றவரை நாடி ஓடியபோது மனம் நொந்த புலவர், அச்சுப்பரையே முன்னிலைப் படுத்தி,

முன்னைப் பழியான் செய்யவில்லை.
முனிவால் உன்னை ஏசவில்லை.
என்னைப் புணர்ந்த நாயகியை
நான்விட் டிழக்க மனதாக்கி,
கன்னற் குதலைக் கதிரேசன்
கை தொட்டளைந்த...களைப்
பின்னைத் தழுவிச் சுகம் பெறு நீ
பிறநாடேகிச் செல்லுவன் யான்,

என்று பாடுகின்றார். இவருடைய பாடலில் இனிமையும் எளிமையும் அக்கால வாழ்வோடு உறவாடிப் பின்னிப்பிணைந்து பிரகாசிப்பதைக் காண்கிறோம்.

## மார்க்கண்டர் பொன்னர்

இவர்காலத்துக்குப்பின் கவிதைவானில் ஒளிவிட்டுப் பிரகாசித்தவர் மார்க்கண்டர் பொன்னர். திருவாளர் பொ. முத்தையா அவர்களின் தந்தையார். வழக்காடுவதில் வல்லவர். பொய்யையும் மெய்யாக்கும் வாய்ச்சாலகர். யாழ்ப்பாணத்து நியாய வாதிகளும் நியாய துரந்தரர்களுமே இவரது நண்பர்கள். அவர்கள்கூட இவரது ஆவேச

லைகளைச் சில வேலைகளில் பெறுவதுண்டாம். நம்மூரில் பொதுவுடமைத் தத்துவம் முதன் முதலில் முளைவிட்டது இவரது நெஞ்சிற்றான் என்பது இவரது பாடல் ஒன்றிலிருந்து தெரிகிறது. ''பட்டணத்துப்'' பெரிய மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தையும் நம்மூர் மக்களின் சிறுமையையும் ஒப்பிட்டுப்பார்த்து உள்ளங் கொதித்த பொன்னர்,

''பொங்கும் பெருஞ் செல்வம்
பாலொடு சீனி பொரிக்கறியும்
எங்கும் புசிக்கவரமருள்வாய் எங்கள்
ஊரவர்க்கோ
நுங்கும் கிழங்கும் பனாட்டும் தகனும்
நுரைகடலிற்
சங்கும் கரைநண்டும் சல்லியும் கிளியும்
தந்தனையே''

என்று மூவுலகையும் அதன் மேல் மக்கட் குலத்தையும் படைத்து அவர்களுக்குள் எண்ணற்ற ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கி வைத்த இறைவனையே சாடுகின்றார். இறைவனை முன்னிலைப்படுத்தி ''ஓநயவஞ்சகா, ஓரவஞ்சனையின் சிகரமே எங்களையும் அந்தப் பட்டணத்துச் சீமான்களையும் நீதானே படைத்தாய். அவர்களுக்குப் பாலொடு சீனி பொரிக்கறி எங்களுக்கோ நுங்கும், தகனும், பனாட்டும் இது அநியாயமில்லையா'' என்று குமுறிக் குமுறி நியாயங் கேட்கிறார். 'தனி ஒருவனுக்குணவில்லை யெனில் சகத்தினை அழித்திடுவோம்' என்று பாடிய பாரதியை விட உணவு மாத்திரமல்ல, உணவின் தரத்திற்கூட ஏற்றத் தாழ்வு இருத்தல் கூடாது என்று எடுத்துவிளக்கிய நமது மார்க்கண்டன் பொன்னன் குறைந்தவன் என்று கூறமுடியாதல்லவா?

## குட்டிப் பிள்ளையார்

இவர் காலத்தவரே தியாகர் இராமச்சந்திரன். இவரை இளம் வயதில் இழந்தமை நம் தீவின் துரதிர்ஷ்டமே. ''குட்டிப் பிள்ளை'' என்ற பட்டப்பெயரால் அழைக்கப்பட்டு வந்த இவரை அறியாத அறிஞர் உலகம் இலது. இலக்கிய இலக்கண அறிவில் மிக்கவராய்த் திகழ்ந்த இவர் பயன் சொல்லுவதில் அக்காலத்தில் தன்னிகரற்று விளங்கினார். கவிவன்மையும் படைத்தவர் என்பது இவர் பாடிய பாடல்களில் இருந்து தெரியவருகிறது. இவர் யாத்து உலகுக்கு வழங்கிய பாடல்களில் பல அழிந்தொழிந்து மறைந்துவிட்டன. மார்க்கண்டர் அவர்களின் ''கல்வெட்டில்'' காணப்படும் இவரது பா வொன்று இவரது கவித்திறனை விளக்குவதாயுள்ளது. அது வருமாறு;—

கல்லைப்பிளக்கும் மரத்தின வேர்கள்
நற் காரிரும்பை
வெல்லப் பிளந்திடும் வெட்டிரும்பாம்
மண்விளைந்த ரத்னக்
கல்லைப் பிளக்கும் வயிரத்தினாசி
கலாநிபுணர்
சொல்லைப் பிளக்கும் நம் மார்க்கண்டன்
ஞாயத்துணிபுகளே.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்லுவார்கள். இவ்வொரு பாடலே அவரது திறமையைப் பறைசாற்றப் போதுமானது. இறுக்கமும், அழகும் நளினமும் சேர்ந்து மிளிர்கிறது இப் பாடல். இவரது கவிதைகளையெல்லாம் தேடிப் பெற முயற்சிக்க வேண்டும். அது கை கூடினால் நமக்கு ஒரு புதையல் கிடைத்த மாதிரி இருக்கும்.

## திரு. வே. கனகசபை

புகழ்மிக்க இவர் காலத்துக்குப் பின் தோன்றியவர்களில் கணக்குப்பிள்ளையாக இருந்து காலஞ்சென்ற திரு. வே. கனகசபை அவர்கள் நம் கவனத்தைக் கவருகின்றார். அவரால் பாடப்பட்ட சரம கவிகள் அவரின் கவித்துவத்துக்கு சான்று பகர்கின்றன. அவரது கவிதா விலாசத்தை

அறிந்து கொள்வதற்காக அவரால் பாடப் பட்ட ''பிடாரி அம்மன்துதி'' என்னும் பாமாலையிலிருந்து ஒரு மலரை வாசகர் களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

கோங்க நறு முகை நகிலார் குளித்தபுனல்
குளநிரப்பிக் குறுங்கா லேறிப்
பாங்க ரறற்பரவை நிறீஇப் புலவகற்றிக்
கமழு மனம் பலவும் பாய்ச்சும்
தேங்கு வளர் நயினை நகர்த் தென்மேல்
சார் தில்லை வெளித் திருத் தானத்தில்
நாங்க ளுய்ய அடைந்தமறை நாயகியாள்
பிடாரி பத நளினம் போற்றி.

(நகிலார் - பெண்கள்; குறுங்கால் - சிறு வாய்க்கால்; அறல் - மணல்; பரவை - கடல் நிறீஇ - நிறுத்தி; இங்கு அடைந்து என்பது கருத்து; புலவு - புலால் மணம்; நளினம்- தாமரை பிடாரி அம்மனின் திருவுருவம் கடலில் அடைந்து வந்ததாக முதியவர்கள் கூறுகின்றனர்.

பழைய தமிழ்ப் புலவர்களை அடியொற்றிச் சென்ற இவரது பாடல்கள் கடும் பதங்களால் ஆக்கப்பட்டிருந்த போதும் சந்த இன்பமும், வர்ணனைகளும் கொண்டு படிப்போருள்ளத்தை மகிழ்விப்பன.

## நயினையின் இரட்டையர்கள்

நம் ஊரில் கவிதைச் சோலையிலே இரட்டைப் புலவர்கள் போல வாழ்ந்து மறைந்தவர்கள் திரு. சோ. இராசரத்தினம் அவர்களும் பொ. தருமலிங்கம் அவர்களும். ஆற்றலும் அழகும் பொருந்திய இனிய கவிதைகள் மூலம் தமது நண்பர்களை மகிழ்வித்தவர்கள் இவர்கள். இவர்களது பாக்கள் யாவும் உள்ளூர் அகப் பொருட்டுறை பற்றியனவாய் இருந்தன. மறைவாக, மெதுவாக நண்பர்களோடு மாத்திரம் சேர்ந்து படித்து அனுபவிக்கக் கூடியவை அவை அவற்றுக்கு அவர்கள் கூறும் விளக்கவுரைகளைக் கேட்டுவிட்டு, வீட்டிலும் போய்ச் சிரித்தவர்கள் பலர். சிரித்தமைக்குக் காரணம் கூற முடியாமல் குடும்பப் பெரியவர்கள் முன்னால் திக்கு முக்காடியவர்கள் பலர். இருவரும் மதுப்பிரியர்கள். நகைச் சுவைபட பேசவும் பாடவும் கூடியவர்கள். சில வேளைகளில் கவி புனைவதில் ஒருவர்க்கொருவர் போட்டியும் ஏற்படும். அப்பொழுது அருகிலிருக்கும் நண்பர்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சி அளவிடற்கரியது. அவர்களோடு சேர்ந்து அவர்களின் பாடல்களை அனுபவித்தவர்கள் பாக்கிய சாலிகளே. அவர்கள் இருவரும் இப்போது எங்கு இருக்கிறார்களோ தெரியாது. எனினும் அவர்களை அன்போடு நினைத்துருகும் இலக்கிய நண்பர்கள் பலர் இன்றும் இருக்கிறார்கள். இவ்விருவரில் சோ. இராசரத்தினம் அவர்களின் கவிதைகளிற் பல அக்கால ஈழகேசரி வார இதழில் வெளிவந்துள்ளன. ''மதுவே உலகை ஆளும் இறைவன்'' எனக்கருதிய சோ. இராசரத்தினமவர்கள் ''அசைவ வினா விடை'' என்னும் சிறு நூலை எழுதி நண்பர்களுக்கு வழங்கினார். அந் நூலில் எனது ஞாபகத்தில் இருக்கும் சிறு பகுதி ஒன்றை இங்கு தருகின்றேன்.

### மது மயம்

அசைவ வினா விடை

**க. பதி மதுவியல்**

வினா:- உலகுக்கு கருத்தா, யாவன்?

விடை:- மதுபகவான்

வினா:- அவர் எப்படிப்பட்டவர்?

விடை:- அவர் எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர், எல்லாம் தருபவர்.

வினா:- அவர் செய்யும் தொழில்கள் எத்தனை?

விடை:- நுரைத்தல், புளித்தல், இரைத்தல், வெறித்தல், விழுத்தல் என்னும் ஐந்துமாம்.

வினா:- அவர் தன் அடியார்களுக்கு எவ்வெத் திருமேனிகளில் நின்று அருள் செய்வார்?

விடை:- முட்டிகளிலும், பிழாக்களிலும் போத்தல்களிலும் நின்று அருள் செய்வார்.

வினா:- அவரின் திருவருட் சக்திக்குப் பெயர் யாது?

விடை:- வெறியம்மையார்.

இவ்வாறு சென்று கொண்டே இருந்தது அசைவ வினாவிடை. அவ்விருவரின் உள்ளத்தினின்றும் பீறிட்டெழுந்த கவிதை யூற்றுக்கள் திசைதிரும்பி வீணாகி இன்று வற்றியும் போய்விட்டன. ஆனால் அவற்றில் குளித்துப் புரண்ட அவர் நண்பர்கள் அவ்வின்ப அனுபவத்தில் இன்றும் புளகாங்கிதம் அடைகின்றனர்.

கவிஞர் ஆ. இராமுப் பிள்ளை

நாகமணிப் புலவரின் பின் வெளிநாடுகளிலும் தன் கீர்த்தியைப் பரப்பிக் கொண்டிருப்பவர் கவிஞர் - வைத்திய கலாநிதி- திரு. ஆ. இராமுப்பிள்ளை அவர்களேயாகும். அறிஞருலகு மெச்சும் பல்லாயிரக் கணக்கான பாடல்களை யாத்துள்ளார். இலங்கை இந்திய நாளிதழ்களிலும்வார இதழ்களிலும், பன்னூற்றுக் கணக்கான பாடல்கள் வெளிவந்துள்ளன. பொருளாளமும் இலக்கண வரம்பும் அமைந்த செறிவுற்றபாடல்கள் அவை. இம்மென்றால் எழுநூறும் அம்மென்றால் ஆயிரமும் வெளிவரும் அவர் வாயினின்று. அவர் தனது பாடல்களைப் பாடிக் காட்டும் பாணியே ஒரு தனி ரகம். கேட்க மிக இன்பமாக இருக்கும். நண்பர் வே. த. நாகேசு அவர்களுக்கு, அவரது பாடல்களை அவரைப்போலவே பாடிக்காட்டுவதில் ஒரு தனி ஆனந்தம். கவிஞரின் ''விசிறி'' அவர். சிலேடைவகை எதனுள்ளும் அடங்காத இரு கருத்துக்கள் தரும் புதுமையான கவி அவருடையது.

வைத்திய காலாநிதியான திரு. ஆ. இராமுப் பிள்ளை அவர்கள் சோதிடத்திலும் வல்லவர். உறவினர் வீடொன்றுக்குச் சென்ற நம் புலவருக்கு, சோதிடம் பார்த்துச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டது. பக்கத்திலே; அவ்வீட்டுப் பெண்கள் சிலர் மிளகாய்த்தூள் இடித்துக் கொண்டிருந்தனர். சாதகம் பார்ப்பதில் கவனத்தைச் செலுத்திய நம் புலவர் மூக்கினுள் மிளகாயின் காரம் புகுந்து - இடைவிடாத தும்மல், மூக்கிலிருந்து நீர் - மிகக் கஷ்டப்பட்டு விட்டார். சாதகத்தைப் பார்த்துப் பலன் சொல்ல இயலவில்லை. உள்ளத்தை ஒருமைப்படுத்திச் சிந்திக்க மிளகாய்த்தூள் இடங்கொடுக்கவில்லை.

ஒரு பயிற்சி புத்தகத்திற்றான் சாதகம் எழுதப்பட்டிருந்தது. வெறும் ஒற்றைகள் பல பின்னால் இருந்தன. ஒரு ஒற்றையில் ஒரு அரைப் பாட்டு. மிகுதி அரைப் பாட்டை எழுதி முடிக்க அந்த மிளகாய்த் தூள் விடவில்லை. எழுந்து சென்று விட்டார். அந்த வெற்றுச் சாதக ஒற்றையில்

பூமான் ஒருவரின் சாதகம் பார்க்கின்ற போதினிலே
கோமான் மகன் வந்து குடி கொண்டான் நாசிக் குகைதனிலே

என்று இருவரிகள் எழுதப்பட்டிருந்தன. மிளகாய்த்தூள் மூக்கில் புகுந்து விட்டது என்பதை எடுத்துச் சொல்ல, நமது கவிஞர் தனது மைத்துனர் கோமான் மகனையே எடுத்துக்கொண்ட நுட்பம் நம் நாட்டவரால் மாத்திரம் அனுபவிக்கக்கூடிய ஒன்று. அப்பாட்டை அனுபவிக்கும் வேறு மற்றவர்களுக்குக் கிடைக்க முடியாத ஒன்று. மற்றையவர்களால் அனுபவிக்க இயலாத ஒன்றுமாகும்.

புலவர் ஒரு நாள் தனது முச்சக்கர வண்டியில் ஏறிக் ''கோவிலடிக்கு'' வந்திருந்தார். முருங்கைக்காய் ''அருந்தலான'' காலம் அது. கடையொன்றில் முருங்கைக் காய் விற்பனைக்கிருப்பதைக் கண்ட புலவர்

அவற்றில் இரண்டைப் பெற்றுத் தனது வண்டியில் வைத்துக்கொண்டு வீடுநோக்கிச் சென்று கொண்டிருந்தார். புத்த கோவில் இன்னும் கழியவில்லை. திரு. நா. காராளபிள்ளை அவர்கள் தன்னைத் தாண்டிக் கொண்டு துவிச்சக்கரவண்டியில் தெற்கு நோக்கிச் செல்வதைப் புலவர் கண்டார். அவர்கையில் ஒரு முருங்கைக்காய், "பெரிய பிள்ளைகுட்டிக்காரன். ஒரு முருங்கைக்காயைக் கொண்டுபோய் என்ன செய்யப் போகிறான்?" புலவரின் சிந்தனை இவ்வாறு ஓடியது. இடையில் நாய் ஒன்று குறுக்கே வரச்சிந்தனையும் தடைப்பட்டது. அதற்கப்புறம் சம்பவத்தை மறந்தே போய்விட்டார். வீட்டுக்கு வந்த புலவர் முருங்கைக் காய்களை மருகியிடம் கொடுக்க எண்ணி வண்டியின் பின் புறத்தைப் பார்த்தார். ஒரு காயைக் காணவில்லை. விஷயம் முழுவதும் புலவருக்குப் புரிந்து போயிற்று. அவர் வரும்பொழுது காய்களில் ஒன்று வீதியில் விழுந்து விட்டது. பின்னால் வந்த திரு. காராளபிள்ளை அதை எடுத்துச் சென்று விட்டார். வழியில் "சும்மா" கிடப்பதை யார்தான் விடுவார்கள். அக் காய் கவிஞருடையதென்பது காராளபிள்ளைக்குத் தெரிய வராது. ஆசைப்பட்ட பொருளை ஆக்கித் தின்ன முடியவில்லையே என்ற கவலை புலவருக்கு. ஒரு காயை வைத்துக் கொண்டு திண்ணையிற் கிடந்த பயிற்சிப் புத்தகத்தில் ஒரு ஒற்றையைக் கிழித்தெடுத்தார். அதில்,

காார்கண்டு நாணுமீகைக் காராளப்
பிள்ளை நல்லோய்,
நீர் இன்று வடக்கே வந்து நெடுவழி
மீளும்போது
நேர் கொண்ட முருங்கைக் காயை
நிலத்திற் கண்டெடுத்துப்போனீர்.
ஆர் தம தெனினும் பொய் பொய்
அதனை யிங்கனுப்புவீரே

என எழுதி அதை அடுத்த வீட்டுப் பையன் வசம் கொடுத்து காராளபிள்ளையிடம் கொடுத்தனுப்பி வைத்தார். சிறிது நேரத்துள் மூன்று முருங்கைகாய்களுடன் பையன் திரும்பி வந்தான். புலவரால் பாடப்பெறும் பேற்றுக்கு மூன்றென்ன முப்பதினாயிரம் கொடுக்கலாமே. சிறந்த வியாபாரியான காராள பிள்ளைக்கு இதிலும் லாபந்தான் கிடைத்துள்ளது.

இவர்களைவிட கவிஞர் வரிசையில் வைத்து எண்ணப்படக்கூடிய பலர் உள்ளனர். அவர்களைப் பற்றியெல்லாம் எழுத வேண்டுமாயின் அதுவே ஒரு தனி நூலாய் அமையும். நயினாதீவு உயர்திரு முத்து குமாரசுவாமி அவர்கள், திருவாளர் ப. கு. சரவணபவன் (பாரதியடியான்) இ. ஐயாத்துரை, கா. தி. செல்லையா, வே. கந்தவனம், சோதிடர் ஐயாத்துரை, ஆசிரியர் நா. க. சண்முகநாதபிள்ளை, த.நா. சிவராசசிங்கம், க. வீரகத்தி, வை. விசுவலிங்கம் முதலியோர் கவிஞர் வரிசையில் வைத்து எண்ணப் படக்கூடியவர்கள். திரு. நா. க. சண்முநாதபிள்ளை, த. நா. சிவராசசிங்கம் ஆகிய இருவருக்கும் நல்ல எதிர்காலம் உள்ளது என்பது எனது நம்பிக்கை. கவிதை யுலகில் நயினைக்குப் புகழ் தேடிக் கொடுக்கக் கூடிய ஆயிரம் ஆயிரம் இளங்கவிகள் தோன்ற அம்பிகை தொடர்ந்து அருள் பாலிப்பாளாக.

# தையல் நகைக்கின்றாள்

சிவகுரு பரராசசிங்கம்
(பசிக்கவி)

மாலை நிகர் வண்ணங் கொளுஞ் சோலை தனில் நேரம்
மாலை விழும் அருவித்திரள் வண்ணங் கொளும் தன்னை
மாலை கொளும் என்ன ஒரு மாய இளம் நங்கை
மாலை கொள நின்றாள்; இளம் காளை உளம் வெல்வாள்.

★ ★ ★

வெள்ளம் என வாழ்வில்வரு துயரந்தனை உணராள்!
கள்வங் கப டற்றேமெனில் கயவர் இலராமோ?
பள்ளம் எது மேடென்பதும் அறியாள் இளம் பருவம்
கொள்ளை எழில் புனைய உளம் குளிர நகைக் கின்றாள்!

★ ★ ★

வஞ்சம் என ஒன்று இந்த வையந்தனில் வாழ்வைக்
கொஞ்சங் கொஞ்சமாகக் கொலை கொள்ளும் எனுங் கொள்கை
தஞ்சம்புகா நெஞ்சம் எனச் சாற்றும் எழில் வதனம்
செஞ்சந்தன மேனி எழில் பஞ்சம் இலை அம்மா!

★ ★ ★

வெருமானென ஓடிவிளையாடி வரு போதில்,
மருமானென அம்மா சொலும் மாரன் எனை மயக்க,
வருவான் தரு போதை மிக மார்பில்படர் வேளை
தருவான் ஒரு முத்தம் எனத் தையல் நகைக்கின்றாள்!

★ ★ ★

முகைகட்டவிழ் நகையேயணி மயல்கொட்டிணை விழியே
பகைசுட்டிடும் உளம்வென்றவர் பறையுற்றிடும் விந்தை
தொகை பெற்றிடு மயிலோ என நகை பெற்றிடு வதனம்
மிகை பெற்றிடு களிபோதையில் மின்னிப் பொலிகின்றாள்!

★ ★ ★

[இக் கவிதை ''கலைச்செல்வி'' பத்திரிகையினால் நடாத்தப்பட்ட அட்டைப் படக் கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றது.]

# நாடக வளர்ச்சியில் நாம்

வித்துவான் க. காமாட்சிசுந்தரம்



"தென்னவன் மந்திரி சீக்கிரமழைக்கச் சேனுதிபதி வந்து தோன்றினனே'' என்று வருகைப் பாட்டுப் பாடிய வண்ணம் அரிமர்த்தன பாண்டிய மன்னனின் சேனுதிபதி, ரசிகப் பெருமக்களுக்குக் காட்சி தருகிருர். கொட்டகைமுன் குழுமியிருந்த மக்கள் மகிழ்ச்சி பொங்கக் கரகோஷஞ் செய்து சேனுபதியை வரவேற்கின்றனர். காட்சி மாறுகிறது. பாண்டிய மன்னன் கண்ணைப் பறிக்கும் ஆடையலங்கார ரூபனுக அரியணைமீதமர்ந் திருக்கிருன். குதிரை வாங்கப்போன மணிவாசகனைப் பற்றிய விசாரணை தொடர்கிறது. ஆமாம் 'மாணிக்க விலாசம்' என்ற நாடகக் காட்சியில் இப்படியாகப் பல கட்டங்கள் இடம் பெறுகின்றன.

இற்றைக்கு ஏறக்குறைய எழுபது வருடங்களுக்கு முன், திருவாசகம் பாடிய மணிவாசகப் பெருமானது வாழ்க்கை வரலாறு 'மாணிக்க விலாசம்' என்ற பெயருடன் 'பச்சனிக்குண்டு' என்ற இடத்தில் நாடகமாக மேடையேறுகிறது. 'நானறிய 'அரியோம்நம' என்று முதன் முதலாக நயினதீவில் நடித்துக் காட்டப்பட்ட உள்ளூர் வாசிகளது நாடகம் இதுதான்'' என்று அறுதியிட்டுக் கூறுகிருர் திரு. கணபதி வேலுப்பிள்ளை. இவருக்கு இன்று வயது 77. நல்ல நடிகர்; நாடகரசிகர்.

'காத்தியார்' என அழைக்கப்பட்ட உள்ளூர்ப் பெருமகனுரொருவர் அயல் நாடொன்றில் அரங்கேறிய மாணிக்க விலாசம் என்ற விந்த நாடகத்தை நேரிற் கண்டார். கதை நன்ருக விருந்தும் நடிப்புச் சோபிக்கவில்லையே யென்று அவரது கலையுள்ளம் குறைபட்டுக் கொண்டது. தரமானவகையில் இந்த நாடகத்தை நயினைத்தீவில் நான் அரங்கேற்ற வேண்டுமென்று, அன்று கனவு கண்டார். அவர் கனவு நனவாகியது. மாணிக்க விலாசம் ஏறக்குறைய 1902ல் மேடையேற்றப்பட்டது.

நயினைத்திரு நாட்டில் நடிகர்களுக்கு அன்றுமின்றும் பஞ்சமேயில்லை. 'திருவாளர் சீனியர் வேலுப்பிள்ளை பாண்டிய மன்னன், திரு. கா. கந்தையா தென்னவன் பிரமராயன். திருவை. இராமன் என்பவர் தான் சேனுதிபதி இன்னும் உபநடிகர் பலர். எல்லோரும் வாழ்க்கையாகிய நாடகத்திலாடிக்களைத்து, அம்பலத்திலாடினைத் தேடிப்போய்விட்டார்கள். என்கிருர் திரு. க. வேலுப்பிள்ளை.

ஏறக்குறையவொரு நூற்ருண்டுக்கு முன் வாழ்ந்த நயினைப் பெருமக்கள் நாடகக்கலையை வளர்ப்பதில் எவருக்கும் சளைத்தவர்களல்ல வென்பதற்கு இது வோர் சிறந்த எடுத்துக்காட்டல்லவா?

பத்துப்பன்னிரண்டு ஆண்டுகள் பறந்தோடிவிட்டன. கலையுள்ள முறங்கவில்லை. மீண்டும் கலையுணர்வு தலைதூக்கியது.

இரவு எட்டுமணி மணிபல்லவத்தின் வடமேற்றிசையிலொரு மூலை, சந்தனையென்றழைக்கப்படுமிடமது. மடையிற் புரழும் கயல் மீன்களை நிகர்த்த கண்களையுடைய கன்னியரின் திரண்டுருண்ட தொடைகளை நிகர்த்த மினுமினுக்கும் வாழைத்தண்டுகள் வரிசையாக ஆங்காங்கே நாட்டப்பட்டிருக்கின்றன. அவ்வாழைத்தண்டுகளின் மேலே வைக்கப்பட்டிருந்த தேங்காய்ப்பாதிகளினுள்ளே தேங்காய்நெய் தோய்ந்த சேலைப்பந்தங்கள் ஜெகசோதியாயெரிந்து இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்கின்றன. பார்வையாளரின் மத்தியிலே பளிச்சிடும் ஒளிவிளக்குகளிவை.

கையில் தேங்காய்நெய்ச்சட்டியுடன் விளக்குகள் மங்காமல் கவனித்து வருகிறார் வீரர். தாமோதரம்பிள்ளை உள்ளூர்ப் பிரமுகர்களிலொருவர், சபையில் கட்டுப்பாட்டையும் அமைதியையும் நிலைநாட்டுபவரிவரே.

குழுமியிருக்கும் மக்கள் கூட்டத்தின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தபடி கனகச்சிதமாகப் பாடிக்கொண்டு கதாநாயகன் மேடையிற் காட்சிதருகிறார். அவரை அடையாளங்கண்டு கொள்ள அரிக்கன் லாம்புகள் உதவுகின்றன. ஒளியமைப்புக்கு அரிக்கன்லாம்பை விட 1913 ஆம் ஆண்டளவில் வேறுவழியேது? தீப்பந்தங்களினுதவியாலும் நாடகமேடை ஒளிபெறுகிறது. கோவலனுக்குப் பின் கண்ணகி, மாதவியென்று நடிகைகள் நளினநடையுடன். உடையலங்காரச் சிறப்பு கண்ணைக் கவர மேடையிற்றேன்றிச் சபையோரைப் பரவசப்படுத்துகின்றனர்.

''நடையலங்காரம், நளினசிங்காரம், இடையலங்காரம்–பின்னற் சடையலங்காரி'' யென்று கோவலன் மாதவியை வர்ணித்து அவள் வசமாகிறுன். கண்ணகியை மறக்கிறுன். மக்கள் காட்சியைக்கண்டு விடியும்வரை மெய்மறந்திருக்கின்றனர். விடிய விடிய நாடகமென்றுலும் அலுப்பேது? சலிப்பேது? திருவாளர்கள் முத்தர் பொன்னம்பலம் ஆ. வீரகத்தி என்போர் கோவலனது பாத்திரங்களைத் தாங்கிக் கதைக்கு உயிரூட்டுகின்றனர். எடுப்பான தோற்றமும், மிடுக்கான நடையுங் கொண்ட முருகேசு நாகனுதியென்பவர் மாமா, குறத்தி. வஞ்சிப்பத்தன் ஆகிய பாத்திரங்களையேற்றுச் சபையோரிடம் கரகோஷம் பெறுகிறுர். ஆடலரசி மாதவியை மேடையில் ஆடவைத்து, நட்டுவாங்கம் செய்பவர் இந்த மாமாதான். தாசி மாதவிக்குப் புதுப்புது மாப்பிள்ளைகளை அறிமுகம் செய்து வைப்பவரும் இந்த மாமாதான். இந்தியாவிலுள்ள இராமனுதபுரத்திலும் நாடகத்தில் பங்குபற்றிய பெருமை திரு. மு, நாகனுதியவர்களுக்குண்டு. தமது நாடக அனுபவங்களை இவரும் கதை கதையாக எனக்குச் சொன்னுர். திரு. கட்டையர் பொன்னம்பலமென்பவர் கண்ணகிதேவியாகத் தோன்றி வஞ்சிப்பத்தனைப் பழிவாங்கி, அவன் குடலைக் குதறியெறியுங் காட்சி அபாரம் என்கிறுர் இவர்.

இந்த நாடக அரங்கேற்றத்தின்பின் 22 வருடங்கள் ஓடிமறைகின்றன. இந்த இடைக்காலத்தில் சில நாடகங்கள் இடம்பெற்றிருக்கலாம். ஆயினும் அவை பிரபல்யமடையவில்லை. நடிகர்கள் ஓயவில்லை எதிர்பாருங்கள்! அரிச்சந்திர விலாசம்! என்று விளம்பரம் பறைசாற்றுகிறது. அரிச்சந்திர விலாசம் பலநாள் ஒத்திகையின் பின் மேடையேறுகிறது. மேடைக்கு ஒளியூட்டப் 'பெட்ரோமாக்ஸ்' விளக்குகள் வந்துவிட்டன. காட்சித்திரைகளை அண்ணுவியார் யாழ்ப்பாணமிருந்து கொண்டுவந்துதவுகிறுர். மேடையிற் பக்கவாத்தியங்கள் முழங்குகின்றன. 'திரிலோகமும் புகழுஞ்சுந்தர தீரசூர அரிச்சந்திர மகாராசன் நானே' என்று பாடிப்பாடி

அரிச்சந்திர மகாராசன் தோன்றுகிருர். சந்திரமதியும் பின் தொடருகிருள். 'யாரையா அந்தப் பெண்? என்கிருர் ஒருவர். அவர்தான் நம்ம சிதம்பரன் இளைய தம்பி என்கிருர் மற்றவர். கேட்டவர் வாயில் கையைவைக்கிருர். வேஷப் பொருத்தம் அப்படி' அரிச்சந்திர விலாசத்தில் பங்கு பற்றிய நடிகர் தொகை 22

'கோரிநான் பெற்ற பாலன் வேலயமாண்டிடால் காரிருள் காட்டிப் பாம்பு கடித்ததுமே யிறக்கஐயோ' என்று கண்ணீர் மல்கக் கதறுகிருர் ஒருவர். அவர்பின் அரிச்சந்திரன். நல்ல நடிகர் கணபதி வேலுப்பிள்ளையென்று நான் முன்குறிப்பிட்ட பேர்வழி இவர்தான். திரு. இ. முருகேசு, சி. வைரமுத்து என்போரும் சிறந்த பாத்திரங்களைத் தாங்கி நாடகத்தைச் சோபிக்கச் செய்கின்றனர். இந்த நாடகத்தை நெறிப்படுத்தியவர் திரு. க. க. குமாரசாமி என்பவர். இவர் ஹார்மோனியம், வயலின் ஆகிய வாத்தியங்களை வாசிப்பதிலும் வல்லவர். ஆனல் இவர் இப்போது நம்மத்தியில் இல்லையென்பது கவலைதருகின்றது. இந்தக் கோவலன் நாடகமும், அரிச்சந்திர விலாசமும் வண்டியன் கூடல் பச்சனிக்குண்டு ஆகிய இடங்களில் மேடையேறின.

அரிச்சந்திர விலாசத்துக்குப் பின் இரண்டாண்டுகள் கழித்து நொண்டி நாடகமென்ற சிறந்த நாடகம் அரங்கேறுகிறது. இதனை அரங்கேற்றியவர்கள் வள்ளுவகுல மக்கள். கலைக்குத்தான் சாதி சமய வேறுபாடுகிடையாதே எல்லோரும் இனிதென மெச்சிய அரியநாடகமிது. திரு. ஆரோக்கிய மென்பவர் இதனை நெறிப்படுத்தினர். திருவாளர்கள் அந்தோனி இளையவன் முருகன், வேலன், வைத்தி என்போர் இந்த நாடகத்தில் பங்குபற்றிச் சிறப்படையச் செய்தனர். கானத்திற்கு ஏற்ற ஆட்டமும் பாட்டும் இந்த நாடகத்தில் இடம் பெற்றமை பாராட்டுதற்குரியது. மூன்று நாட்களாக இந்த நாடகத்தை ஆடி, இறுதியில் களவேள்வியும் செய்து மகிழ்ந்தனர், இம்மக்கள், இந் நாடகம் ஏறக்குறைய 1939ல் நடைபெற்றது.

நாடகங்களில் காட்சி மாற்றத்திற்கு ஏற்படும் காலதாமதத்தை ஹாசிய நடிகர் சமாளித்துவிடுவார். இவரைக் கோமாளியென்று அழைத்தனர். சிறந்த கோமாளிகளாக விளங்கிய இருவரின் பெயர் இன்றும் நிலவுகிறது. கோமாளி வீரகத்தி கோமாளி வைத்திலிங்கம் என்று இப்பொழுதும் இவர்களைக் குறிப்பிடுவர் மக்கள். இவர்களது தோற்றமும், மீசையும், ஹாசியத்தொனியுடன் கூடிய பேச்சும் ரசிகர்களை வயிறு குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும். இவர்கள் இன்றும் சிறப்புடன் வாழ்கின்றனர். இக்கோமாளிகள் கோவலன் நாடகத்தில் நன்கு பயன்படுத்தப்பட்டனர்.

நொண்டி நாடகத்தை யடுத்து 'லவிதாங்கி' என்ற நாடகம் 'சந்தனை' யென்ற விடத்தில் இடம்பெறுகின்றது. ஆர்மோனியம் ஆர்ப்பரிக்கிறது. மத்தளத்தை மொத்து மொத்தென்று மொத்துகிருர் மிருதங்கக்காரர். 'யாரையா இந்த மிருதங்க காரர்?' இது ஒருவர் வினு 'யாரோ அயலூர்க் காரராம். உள்ளூரில் ஏதையா மிருதங்கம்! இது மற்றவர் விடை திருவாளர்கள் கார்த்திகேசு, வே. தம்பையா. விசுவலிங்கம் என்போர் தகுந்த பாத்திரங்களை யேற்றுச் சக்கைப்போடு போடுகின்றனர். மக்கள் விடிய விடியக் கூத்துப் பார்த்து அலுப்படைந்தவர்களாய் அதிகாலை ஆறுமணியளவில் வீடுநோக்கி மென்னடை போடுகின்றனர். 1940 ஆம் ஆண்டினையடுத்து நாடகவளர்ச்சி நன்கு சிறப்படைந்துள்ளதை நாம் உணருகிருேம். இவற்றைவிடக், 'காத்தவராயன்', 'இராமாயணம்' முதலிய நாடகங்களும் மேடையேற்றப்பட்டன, பொதுமக்களின் நாடக முயற்சிகளுக்குப் பின் பாடசாலைகளின் பங்கை ஆராய்வாம்.

இப்பொழுது கல்வித்துறையிற் புகழ் பெற்று மிளிரும் ஸ்ரீகணேச கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் பக்த மார்க்கண் டேயர் என்னும் நாடகம் உயர் வகுப்பு மாணவர்களால் மிகவும் சிறப்பாக நடிக் கப்பட்டமை இன்னும் ஞாபகத்திலிருந்து நீங்கவில்லை. இந்த நாடகத்திற்குப் பிர வேசக்கட்டணம் கூட அறவிடப்பட்டது. திரு. சி. வைரமுத்து என்பவர் பக்த மார்க்கண்டனாக நடித்துச் சபையோரின் பாராட்டைப் பெறுகிறார். இந்த நாடகத் தில் திருவாளர்கள் வே. பரமலிங்கம். க. கணபதிப்பிள்ளை யென்போர் யமதூதர்க ளாக வந்து சபையைக் கெடிகலக்குகின்ற னர். அவர்களின் பயங்கர வேஷம் சாட் சாத்யமதர்மராசாவுக்கே பெருங்கிலியை யுண்டாக்கியிருக்கும். இந்த நாடகம் ஏறக்குறைய 1934 ஆம் ஆண்டளவில் பாடசாலை நாடகமாக அரங்கேறியது.

தேவி நாகபூஷணியின் திருப்பெய ரைத் தாங்கி விளங்கும் நாகபூஷணி வித் தியாசாலையொரு சிரேட்ட பாடசாலையாக விளங்கிய காலத்தில் முதன் முதலாகக் 'குமணன்' என்ற நாடகத்தை அரங்கேற் றியது. இந்நாடகத்தில் திருவாளர்கள் நா. கந்தசாமி, க. கணபதிப்பிள்ளை என் போர் சிறந்த கதாபாத்திரங்களாக விளங் கிப் பாடசாலைக்கு நற்பெயரை வாங்கிக் தந்தனர்.

இந்தப் பாடசாலை மேடையேற்றிய இன்னுமொரு அரிய நாடகம் 'சகுந்தலை' யென்பது. தமிழரின் தலைநகராகிய யாழ்ப்பாணத்திலிருந்து பக்கவாத்தியங் களும் அண்ணாவியும் காட்சித் திரைகளும் இறக்குமதி செய்யப்பட்ட காலமது. உயர்வகுப்பு மாணவர்கள் சிறந்த பயிற்சி யின்பின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் சகுந்தலையின் காதல் நாடகம் சோபிதமாகமிளிர்கின்றது. எள்ளுப் போட்டால் எள்ளு விழாத அத்துணைச் சனக்கூட்டம். இது பாடசாலையின் நாடக வளர்ச்சிக்கோர் பாங்கான எடுத்துக் காட்டு, இந்த நாடகத்தில் நடித்த பல மாணவர்கள் இன்னும் சிறந்த நடிகர்க ளாக நாடக ஆசிரியர்களாக விளங்குகின் றனர். இதில் பங்குபற்றிய நடிகர்கள் பலர் அவர்களுள் காலஞ் சென்ற திரு. வீ. இராசரெத்தினம், திருவாளர்கள் க. காமாட்சி சுந்தரம், தா. பாலசிங்கம், க. குகதாசன், க. பாலசிங்கம், என்போர் குறிப்பிடத்தக்கவராவர். வண்ணார்பண் ணையைச் சார்ந்த திருவாளர் எஸ். செல் லத்துரை ஆசிரியரென்பவர் இந்நாடக இயக்குநராக இருந்தார். அவர் பாராட் டப்படுதற்குரியவர்.

இப்பாடசாலையின் பழைய கட்டிடத் தில் நடிக்கப்படவிருந்த 'இராமர் பட்டா பிஷேகம்' குழப்பத்தில் முடிந்தது. கதை யும் அப்படித்தான். இவ்வாறு நாடகத் துறையில் அருந்தொண்டாற்றிய கல்வி நிலையங்களுள் ஸ்ரீ நாகபூஷணி வித்தியா சாலையும் ஒன்று. 'சகுந்தலை' 1942 ஆம் ஆண்டளவில் இடம் பெற்றது. இதன் பின்னர் சிறு சிறு நாடகங்களை இது அரங் கேற்றி வருகின்றது.

நயினாதீவு மகா வித்தியாலயத்தின் ஆரம்ப காலத்தில் தரமான நாடகங்கள் மேடையேறின. அவற்றுள் ''வாழ்க்கைப் படகு'', ''சிறுத் தொண்டர்'' என்பன குறிப்பிடத்தக்கன. அண்மைக் காலத் தில் ''சங்கிலியன்'' ''கட்டப்பொம்மன்'' போன்ற சிறந்த நாடகங்களையும் இப் பாடசாலை மாணவர்கள் அரங்கேற்றியுள் ளனர். இவர்களுள் செல்வன் மா. வேத நாதன், மா. விஜயகுல சிங்கம் என்போர் குறிப்பிடத்தக்கவராவர். காலத்துக்குக் காலம் இக் கல்விச்சாலை தரமான நாடகங் களை உருவாக்கி மக்களுக்குக் கலை விருந்த ளித்து வருவது போற்றற்குரிய செயலா கும்.

1945 லிருந்து 1960 ஆம் ஆண்டு வரை பாடசாலைகளின் கலைப்பணி முத்த மிழுக்கும் ஒத்ததாகவே சிறந்திருந்தது.

இப்பணியை மேலும் ஊக்குவிக்கவும், நாடகத்துறைக்கு ஒளிமயமான எதிர்காலத்தையுண்டாக்கவும் எழுந்த கலாமன்றங்கள் பல அவற்றுள் முதன்மையாக முளைத்த மணிபல்லவ கலா மன்றம் மற்றனைத்துக்கும் வழிகாட்டியாக அமைந்ததெனலாம்.

1956ம் ஆண்டு அரியாலையூர் க. குகதாசன் ஆசிரியர் அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட 'கடமையின் வெற்றி' என்ற சமூக நாடகம் நம்மூர் நாடகத் துறையில் ஓர் மைல்கல் எனலாம்.

முத்தமிழுக்கும் முதலிடமளிக்க வேண்டுமென்ற முனைப்பினாலே, அலை கடல் வற்றினாலும் கலையுணர்வு வற்றாத வளங்கொண்ட வுளம்பெற்ற வாலிபர்களினாலே 1962 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது தான் மணிபல்லவ கலா மன்றம். இன்று அது தன் பத்தாவதாண்டு நிறைவு விழாவைப் பாரோர் புகழும் வண்ணம் கொண்டாடிக் குதூகலிக்கின்றது. இம் மன்றம் கடந்த பத்துவருடங்களாக நாடக வளர்ச்சிக்கு ஆற்றிய சேவை அளப்பரியது. மணிபல்லவ கலா மன்றம் அரங்கேற்றிய நாடகங்களுள் பக்த மீரா, ஸ்ரீ வள்ளி, அசட்டு மாப்பிள்ளை, கும்பிட்டன் குடியாதே, அரிச்சந்திரா, சம்பூர்ணராமாயணம் என்பன பாராட்டுதற்குரியன. இவற்றைவிடப் பல சிரிப்பு நாடகங்களையும் சமூக சரித்திர புராண நாடகங்களையும் இம் மன்றம் ரசிகப் பெரு மக்களுக்கு உவந்தளித்துள்ளது. இந் நாடகங்களில் நடித்த நடிகர்கள் நூற்றுக் கணக்கானோராவர். அவர்களுள் திருவாளர்கள் க. சபா ஆனந்தர், நா. க. சண்முகநாத பிள்ளை, நா. க. குமாரசூரியர், க. கனகராசா, க. சந்திரன், க. ஞானசுந்தரம், க. இராமநாதன், எஸ். ஆனந்தன், தா. சண்முகநாதன், திருமதி த. தாமோதரம் பிள்ளை, திரு. சி. நடேசபிள்ளை, திருவாளர்கள் பொ. அரசரத்தினம், மு. கனகலிங்கம், இ. சிவபாத சேகரம், க. காமாட்சிசுந்தரம், கி. கணபதிப் பிள்ளை என்போர் குறிப்பிடத்தக்கவராவர். இன்னும் பல உப நடிக, நடிகைகளுளர். அவர்களது சேவைகள் மேலும் சந்தர்ப்பங்கள் வரும்போது ஆராயப்படும்.

நயினை செம்மணத்தம்புலம் வாலிப மன்றம் 1967 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது. இம் மன்றமும் தனது கலைச் சேவையைக் கடந்த ஐந்து வருடங்களாக நயினை மக்களுக்காகச் செய்து வருகின்றது. சிவராத்திரி தினமாகிய புனித நாளிலே சிறந்த பக்தி நாடகங்களை இம்மன்றம் மேடையேற்றி வருகின்றது. அவற்றுள் ஸ்ரீவள்ளி, பக்தமார்க்கண்டேயர், பக்த நந்தனார், போன்றவை சிறந்தவை. வருடாவருடம் வரும் சிவராத்திரி விழாவுக்கு இம் மன்றம் தரமான புராண நாடகங்களை மேடையேற்றி நாட வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றது.

தமிழ் தாய்க்கு அணிசெய்யப் பிறந்த மூன்றாவது சங்கம் நயினை முத்தமிழ்ச் சங்கம். 1970 ஆம் ஆண்டு தைத் திங்கள் 14 ஆம் நாள் இச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. குறுகிய ஈராண்டுக் காலத்துக்குள் நாடகத் துறையில் ஒரு சாதனையை இந் நயினைத் தீவில் நிலை நாட்டி முதன்மை பெற்று நிற்பது இச் சங்கம். இதன் இரண்டாவது நிறைவு விழாவில் சிறந்த நாடகமும் நடிகர்களும் கௌரவிக்கப்பட்டனர். இது அரங்கேற்றிய நாடகங்களுள் மயான காண்டம், நல்லூர்க் காவலன், நெற்றிக் கண்ணைக் காட்டினாலும்.... என்பன தலை சிறந்த நாடகங்களாகும்.

இம் மூன்று சங்கங்களும் வருடா வருடம் முத்தமிழுக்கு விழாவெடுத்து வருகின்றன. அந்த விழாவுக்கு உள்ளூர்ப் பாடசாலைகளிலிருந்தும் தரமான நாடகங்களைக் கேட்டுப் பெற்று நாடக வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வருகின்றன. நாவலர் சன

சமூக நிலையம் கடந்த பல ஆண்டுகளாக அரிய நாடகங்களை மேடையேற்றிப் பெருமை பெற்றுள்ளது. இவ்வாறு தமிழ் காக்க எழுந்த சங்கங்கள், தமிழன்னையின் தவப்புதல்வர் மூவருளொருவராய நாடகத்தைத் தமது கண்ணே போல் போற்றி பேணிகாப்பதில்போட்டிபோட்டுக்கொண்டு முன்னின்றுழைக்கின்றன. மணிபல்லவ கலாமன்றம் தனது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில், நாடகத் துறையில் சிறந்து விளங்குவோருக்குப் பொன்னுடை போர்த்திக்கௌரவிப்பது, நாடகவளர்ச்சி குறித்து இம் மன்றம் கொண்டுள்ள தலையாய ஆர்வத்துக்கோர் சிறந்த எடுத்துக் காட்டாகும். கலைஞர்களைச் சங்கங்கள் ஆதரவு நல்கிக் கௌரவித்தாலன்றி கலைகள் வளர்ச்சியடையா வென்பது பண்டை நாள் அனுபவம். இச் செயலில் நயினை மணிபல்லவ கலா மன்றம் முன்னேடியாய் விளங்குவதை, நயினைப் பெருமக்கள்யாவருமொருதலையாய்ப் பாராட்டக் கடமைப்பட்டவராவர்.

இன்றைக்கு நூறுவருடங்களுக்கு முன்பிருந்து இற்றைவரை நாடக வளர்ச்சியில் நாம் எவ்வாறு தொழிற்பட்டோமென்பதை இக் கட்டுரை ஓரளவு தெளிவாக்கியுள்ளதென்பது எனது தாழ்மையான கருத்து. நூறு வருடங்களுக்கு அப்பாற்பட்ட காலத்தை ஆராய்வதில் நாமடையப் போவதுயாதுமில்லை. திருவளர் நயினையிற் தோன்றிய செந்தமிழ் மக்கள் இயற்கையாகவே கலையுணர்வு மிகுதியும் வாய்க்கப் பெற்றவர்கள். அயல் நாட்டவர்களுடன் ஒப்பிடும்பொழுது இது அவர்களுக்கோர் கொடை. கலையின்பம் தேவியின் அருட்பிரசாதம். வாழைத் தண்டுகளின் மேலும், பிளக்கப்பட்ட தென்னை மட்டைகளின் மீதும் ஏற்றப்பட்ட தீப் பந்தங்களின் உதவியோடு நாடகமாடியிருப்பார்களா? பல வேறு வசதி குறைபாடுகளுக்குமிடையிலே அரிய பெரிய நாடகங்களை அரங்கேற்றிமகிழ்ந்த நம் மூதாதையரின் நாடகக் கலையார்வத்தைப் புகழ நாளாயிரம் வேண்டாமோ? காலத்துக்குக் காலம் அவர்களது கலையுள்ளம் விழவெடுத்து மகிழ்ந்தது. நல்ல நாடகத்தின் மூலம் முத்தமிழின்பத்தையுமொருங்கே பெற்றூர்கள்.

1930 ஆம் ஆண்டுக்குப் பின் படியாக நாடக வளர்ச்சி விருத்தியடைந்து வந்துள்ளதைக் காண்கிருேம். கல்வி நிலையங்களும் நாடக வளர்ச்சியிற் கருத்தைச் செலுத்த ஆரம்பித்த பின்னர், ஊர் மக்கள் தாமாக நாடகமாடுவதைக் குறைத்துக்கொண்டனர். ஊர்ப் பிரமுகர்களது பணியைப் பல்வேறு நிறுவனங்களும் பகிர்ந்து கொண்டன. எனவே, வயது முதிர்ந்த நடிகர்கள் இவற்றின் நாடகப் பணியை ஆசிர்வதித்து உதவுவதோடு நின்று விட்டனர்.

'சினிமா என்றழைக்கப்படும், பேசும் படக் காட்சி வந்த பின் பழைய நாடக பாணிகள் பல மாறிவிட்டன. நவீனத்தையே எப்பொழுதும் நாடும் மனப்பாங்கு எல்லோரிடையேயும் தலை தூக்கியுள்ளது. மறைந்து போன பழமையும் இற்றை நாளிற் புதுமையாகவே தோன்றும். தலை சிறந்த தென்இந்திய நடிகர்களாகிய டி. கே. சகோதரர்கள் கூட இம் மணிபல்லவத் தீவில் தமது நாடகத்தை நடாத்த ஆசைப்பட்டார்களென்றல் இம்மண்ணின் பெருமைதானென்னே!

இறுதியாகக் கூற வேண்டியதொன்றுண்டு. முத்தமிழின் கூட்டு நாடகம், தகுந்த பக்க வாத்தியப் பயிற்சியின்றிப் பல சமயங்களில் இங்கு நாடகமாடப் படுகின்றது. 'காரணம் இத்தீவில் வாத்தியப் பயிற்சி பெற்றேரின்மையே. இக் குறைபாடு வெகு விரைவில் நீங்க வேண்டும். இந்த வொரு குறைபாடு நீங்குமாயின், தமிழ் கூறும் நல்லுலகத்துள் நாடகக் கலைக்கு நயினதீவே தலைமை தாங்குமென்பது திண்ணம்.

''எண்ணிய எண்ணியாங் செய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின்''
என்பது பொய்யாமொழி.

நாடக வளர்ச்சியில், வினைத்திண்மை படைத்த நயினை ஆசிரியப் பெருமக்களின் பங்கு என்றும் பாராட்டுதற்குரியது. நாடக வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட ஆசிரிய மணிகள் பலர். தாமும் தரமான நாடகங்களை மேடையில் நடித்துக் காட்டுவதுடன், வருங்காலக் கலைஞர் சமுதாயமாக விளங்கும்படி மாணவர்களுக்கும் நாடகங்களிற் பயிற்சியளித்து வருகின்றனர். அவர்களது கலையுணர்வு யாவர்க்குமொரு வழி காட்டியாகும்.

நாடகம் இன்று நேற்று உதயமான கலையன்று. தமிழ்க் கன்னி யென்று தோன்றினளோ, அன்றே நாடகக் கலையும் அவள் அழகுக்கு அழகு செய்து கொண்டு உடன் பிறந்து விட்டது.

அகத்தியர் பெருமான் முத்தமிழுக்கும் இலக்கணஞ் செய்தார். தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியல் நாடகத்துக்கே யுரியது. நவரசங்களை மக்களிடத்து விருத்தி செய்ய நாடகக் கலையைப் போற் சிறந்த தொன்றில்லை.

கூத்தர், விறலியர் என்பன சங்ககால சொற்கள். ''நாடகத்தாலுன்னடியார் போல் நடித்து'' என்பது திருவாசகம் ''கூத்தாட்டவைக்குழாம்'' என்பது திருக்குறள். எனவே, அன்று, மின்று மென்றுமுள்ள நாடகத்தை எமது கண்ணே போற் பேணி வளர்ப்பது தமிழ் மக்களாகிய எமது கடன். இதனுற்றறமும், தமிழர் பண்பும், பாரம்பரியமும், படிப்பினைகளும் வாழும்; வளரும்.

நெஞ்சையள்ளும் சிலம்பையும், மேகலையையும் அணிந்தவள் தமிழ்த் தாய். அந் நாடக நூலுடன் தொடர்புடைய மணிபல்லவமாகிய நயினைத் தீவு நாடகத் தீவாக ஒரு காலத்தில் விளங்க வேண்டுமென்பது எனது ஆசைக் கனவு. இக் கனவு நனவாகும் பொன்னுளென் நாளோ?

வாழ்க நாடகக் கலை. வாழ்க மணி பல்லவம்.

வணக்கம்.

---

# என்றென்றும் வாழியவே!

—தேவன்—

தீந்தமிழின் சுவைகண்டு தெவிட்டாத இசை சேர்த்து
ஏந்திழையாள் ஏறி நடமாடிடவே போந்திங்கே
மண்ணுலகை விண்ணுலகாய் மாற்றிவிழாக காணும்
கண்ணுக்கினிய கலா மன்றம் வாழியவே

கலா மன்றம் விழாக் கண்ட கன்னித் தமிழன்னை
உலாவிவருதற்கும் ஓங்கிவளர்தற்கும்—நிலவுலகில்
கோமுகி என்னு மோர் குமுதமலர்ப் பொய்கையினை
நாமகளின் துணை கொண்டு நாம் கண்டோமின்று

நாம் கண்ட கோமுகியில் நாளும் திளைத் தெழுந்து
தேன்சொட்டும் தீந்தமிழிற் செம்மை நிலை தெரிந்து—மாந்தர்
மனங்கொண்டு மாந்திமயங்கி எழுந்திடவே
தினங்கள் பலவும் தீர்ந்து விடுமன்றோ



நயினைக் கவி
ஆ. இராமுப்பிள்ளை
"கஸ்தூரி"

# முல்லைப் பெண்

கவி ஆ. இ.

முற்றத்தில் முல்லைப்பெண் கைகளை நீட்டி
    முத்தமென் றூள் இள மூதையி லாடி,
சித்தத்தில் என்னவோ செய்தது பக்கம்
    சென்றுநின் றேனவள் சின்னச் சிரிப்பில்
'எத்தனை சாகசம்! சற்றுப்பின் வாங்கி
    எட்டித் .திடீரென்று கட்டிப் பிடித்தாள்
மெத்தென் றிருந்தது! மெய்மறந் திட்டேன்
    விட்டுவிட் டாளிதோ மெல்லியல் இன்பம்?

விட்டுவிட் டேனென்று முட்டிக்கொண் டாள்போல்
    வீழ்த்திநின் றுள்முழு வெண்நகை முத்தைப்
பட்டுக்கொண் டேகதிர் போகும் சமையம்
    பச்சுடம் பன்றிப் பரிமளிப் பில்லை
மொட்டுக்கொண் டாளிர வெட்டு மணிக்குள்
    மோதிக்கொள் வாள்நாளை சாதுக்க ளென்னுள்
கட்டிக்கொண் டான்தன்னைச் சுற்றி நெரித்துக்
    காதல்செய் வாளவள் கைதேர்ந்த கள்ளி!

மணிபல்லவ கலாமன்றம் கட்டுரைப் போட்டி

கீழ்ப்பிரிவுக்கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறும் கட்டுரை.
( 14 வயதுக்குட்பட்டோர் )

# காலைப் பொழுதினிலே..

கு. மங்களகௌரி

காலைப்பொழுதினிலே பரிதியஞ் செல்வன் கடமை செய்யும் கரும வீரன்போல குணதிசை நோக்கிப் புறப்படலானான். கோழியினங்கள் ''வருதி வருதி'' எனப் பல்கதிர்ச்செல்வனை இச்சையுடன் வரவேற்பது போல தங்கள் இறக்கைகளை அடித்துக் கூவின. பார்புகள் வதியும் குடம்பைகளிலிருந்து புறப்பட்டன. முல்லை மலரும், காந்தள் மலரும் மணமின்றி உறக்கத்தில் கிடப்பதுபோல் சோர்வடைந்து வாடிக் கிடந்தன. அதன் காரணமோ கொடுமையானதுதான்! முல்லை மலருடைய நாயகனும் காந்தள் மலருடையவனும் 'மதி'யாகும், மதியை நாயகனாகக் கொண்ட இம் மலர்கள் தங்கள் நாயகன் பிரிவால் சோர்வடைந்தன. ஆனால் கமலமலர் தன் நாயகன் பகலவனை வரவேற்கிறது. சூரியகாந்தி மலரும் தன்னை அழகுபடுத்திக் கொண்டு பகலவனையே பார்த்துக் கொண்டிருக்கிறது.

இது மட்டுமா நிலமகளின் மையிருட் போர்வையை நீக்கிவிட்டான் தினகரன். தென்றலஞ் செல்வன் மணமலர்களினூடு புகுந்து விளையாடி நறுமணம் அளைத்து வந்தான். மேய்ச்சல் நிலங்களை நாடிச் செல்லும் ஆனினங்கள் ஆயர் குழலிசை வழியே சென்று கொண்டிருந்தன. அவற்றின் கழுத்தில் கட்டிய மணிகளின் தெளிந்த ஓசை கோவலரின் குழலிசையுடன் கலந்து ஒலித்தது. இறைவனூர் ஆலயத்தில் திருமணியொலிக்கிறது. மலர்க்குலத்தைக் கையிலேந்திய மக்கள் இறைவனுக்கு பரவு கடன் கழிப்பார்கள் அன்றோ. அது நீலப்பட்டாடையால் போர்க்கப்பட்ட கடற்கன்னிக்கும் விலக்கல்லவோ, அவள் தனது திரைக் கரங்களால் வெண்ணுரையைச் சுமந்து வந்து அதை நிலமகளின் திருத்தாள்களில் வைத்து வழிபாடாற்றினாள். நீராவி யந்திரப்படகுகள் இவ் இனிமையான காலைப் பொழுதில் அவள் வயிற்றைப் பிளந்து கொண்டு சென்றால் அது அவளுக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

இது மட்டுமா இயற்கையன்னை காலைப் பொழுதில் நமக்கு ஈன்று தந்தவை? ஆகா! உலகோம்பும் உத்தமர்கள் உழவர்கள். ஏர்பிடித்து கழனியிலே வேலைசெய்பவர்கள் உழவர்கள். அவர்கள் ஏர் கொண்டு முன் செல்ல கஞ்சிக் கலயம் சுமந்த காரிகையர் பின்வரச் சென்று கொண்டிருந்த காட்சி பார்ப்பதற்கு இன்பம் தருவதொன்றாகும். இயற்கையன்னை ஈன்றெடுத்த அன்புக்குழந்தைகள் இவர்கள். அவர்களே நாட்டின் உயிர்நாடி. இவர்களின்றேல் நாடில்லை எனலாம்.

மலைமுகடுகளில் மண்டிக்கிடந்த பனிப் படலம் ஆதவன் வருகையால் உருகியோடுகின்றன. தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் பெண்மணிகள் தங்கள் குழந்தைகளுக்கு வயிறு நிறையப் பால் கொடுத்து விட்டு தேயிலை பறிக்கச் செல்கின்றனர். இல்லக்கிழத்திகளிற் சிலர் வீட்டு முற்றம் பெருக்கி அதைக் கோமயத்தினால் மெழுகி ''வாழிய வையகம் வாழிய'' வென்று வண்டமிழாலே வாழ்த்திசைக்கின்றனர். வீட்டுத் தலைவர்களும் காலைக் கடன்களை முடித்து குடும்பப் பொறுப்புகளை நினைந்து, ஏற்றம் காண்போமென்ற பெருநோக்குடன் அலுவலகம் ஏகுகின்றனர். பள்ளி மாணவர்கள் உறக்கம் விட்டெழுந்து தங்கள் பாடங்

களைக் கற்கின்றனர். சேயைப்பிரிந்து கதறுகின்ற ஆவினிருந்து பாலைப் பொழிந்து சேயுடன் - தாயை ஆயர்குழலிசை வழியே விட்டு, இல்லக்கிழத்தி அட்டில் புகுந்து சமையல் செய்கின்றாள். பலர் பூங்குயிலின் தீங்குரலும், புதர்களின் சிரிப்பும் பூமணமும் வீசும் பூஞ்சோலைகளுக்கு உலாவச் சென்றனர். சிலர் சான்றோரின் தூய மனமாமென வெண்மணல் பரந்தும் விரிந்தும் கிடந்த கடற்கரைக்குச் சென்றனர். உறக்கத்தில் கிடந்த பேராழியும் தான் காலைபொழுதை இரசித்துக் கொண்டிருப்பதை மன்பதைகளுக்குக்காட்ட எண்ணங் கொண்டது போல் சத்தம் செய்தது. கடற்கன்னியின் கைகளாகிய திரைகள் தானும் வணங்கச் செய்கிறேன் என்பதை உலகினர்க்கு உணர்த்த ஓங்கி எழுந்தன. அவை விண்ணைப்பிடிக்க எண்ணங் கொண்டவை போல் தோன்றுகின்றன. இக்காட்சி படமெடுத்துவரும் பாம்பு குறவன் கைகுழலிசை கண்டு அடங்கி ஒடுங்கும் காட்சியை ஞாபகப்படுத்தின.

வானமாகிய வாவியிலே விண் மீன்கள் பகலவன் வருகையால் மறைந்ததை எள்ளி நகையாடுவது போல பூமாதேவியாகிய வாவியிலே மலர்கள் எல்லாம் மலர்ந்து அழகாகக் காட்சிதந்தன. இவ்வினிமையான காலைப்பொழுதினில் பட்டினியால் தெருவோரத்திலும், சிதைவடைந்த கட்டிடங்களிலும் உறங்கிய ஏழைப்பிச்சைக்காரரும் தம் வாழ்நாள் எப்படிக் கழியப் போகிறது என்ற மனக்கவலையுடன் பிச்சையேற்கச் செல்லுகின்றனர்.

படகோட்டம் புகும் செம்படவர்கள் வலைகளுடனும் மற்றும் பல பொருட்களுடனும் செல்கின்றனர். மீனவர் பலர் இளையரும் முதியருமாய் படகுகளில் செல்லும் காட்சி பார்ப்பதற்கு இன்பம் தருவதொன்றாகும். வெள்ளை அன்னங்கள் பல கடலில் மிதந்து செல்வதையொப்ப படகுகள பாயெடுத்துச் சென்று கொண்டிருந்தன. கடற்கரையில் மீன் விலைபகர்வோர், விலைக்குப்பெற்ற மீனைக் கொண்டு செல்வோர், என மக்கள் பேரிரைச்சலுடன் அங்கும் இங்கும் அலைந்து சென்றனர். இதைப் பின்வரும் செய்யுள் விளக்குகிறது.

''வலை நெடுந்தொடர் வடம்புடை
வலிப்பவர் ஒலியும்
விலை பகர்ந்து மீன் விலை கொடுப்பவர்
விளியொலியும்
தலை சிறந்து வெள்வலை சொரிபவர்
தளங்கொலியும்
அலை நெடுந்தொடர் அதிரொலிக்
கெதிரொலி அனைய...''

ஆ, இவ்வினிமையான காலைப்பொழுதை ஈன்றெடுத்த இயற்கையை எப்படி வாழ்த்துவது? ''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு'' என வாழ்த்துவோமாக!

மணிபல்லவ கலாமன்றம் கட்டுரைப் போட்டி

*மத்திய பிரிவு கட்டுரைப் போட்டியில் பிரசுரத் தகுதிபெற்றது. (18 வயதுக்குட்பட்டோர்)*

## கலை வளர்ச்சியில்

# கலாமன்றம்

இ. மருதையனூர்

ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயிருந்தால், அந்நாட்டில் கலை என்னும் பயிரானது செழிப்புற்று வளரவேண்டும். பண்டைத் தமிழ் மன்னர்கள் கூட தம் நாட்டை கலை வளர்த்து, வளம்படுத்தினரென்றால் அந்தக் கலையின் பெருமைதான் என்னே! ஆகவே கலைதான் ஒரு நாட்டின் உயிர் நாடியென்றால் மிகையாகாது. ஒரு நாட்டினை இன்னோர் நாட்டுடன் தொடர்புபடுத்தி வைப்பதே கலையாகும்.

அந்தக் கலையுணர்ச்சிதான் நயினைத் திருநாட்டையும் நல்வழிப்படுத்தும் என்று எண்ணி நயினைவாழ் வாலிபர்கள் இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன் ஒரு மன்றத்தை பல சிரமங்களுக்கிடையே பகல் இரவு பாராது பாடுபட்டு உருவாக்கினர். மாதவிமகள் மேகலையாள் வந்திறங்கிய மணிபல்லவம் என்னும் தீவகம் நயினைத்திரு நாடேயாம். அப்படியான பழமை வாய்ந்த நம் தீவகமாம் நயினையம் பதியின் புகழை மேலோங்கச் செய்ய நயினைவாழ் வாலிபர்கள் அம்மன்றத்திற்கு ''மணிபல்லவ கலாமன்றம்'' என நாமம் சூட்டினர்.

மணிபல்லவ கலாமன்றமானது நம் நயினைத் திரு நாட்டிற்கு நல்கி வரும் அரும் பணிகளை செப்பவும் வேண்டுமோ? குன்றில் விருந்து ஊற்றெடுத்து கோடி கோடி நிலங் கடந்து அந்நிலங்களைச் செழிப்புறச் செய்யுப் வற்றாத நதிகளைப்போல நம் கலாமன்றமானது நயினையின் புகழை நாடெங்கும் பரப்பி அந் நாட்டவரையும் ஊக்குவித்து இன்று மணித்தீவாம் நயினைக்கு மணிவிளக்காய் ஒளிர்கிறது.

நயினாதீவு நற்புகழெய்த வேண்டும் என்னும் நோக்குடன் மன்றம் கலைவிழாக்கள் பல எடுத்து மணிபல்லவத்தை அணி செய்ய ஆரம்பித்தது. அந்தக் கலைவிழாக்கள் நயினாதீவு மக்களை, ஏன் அயல் நாட்டவரையே கொள்ளை கொள்ளச் செய்ததென்றால் கலைவிழாவின் பெருமையினை சொல்லத்தான் வேண்டுமோ? கலைவிழா நடைபெற்ற அரங்கம் தேவலோகத்தை ஒத்தது போன்ற பிரமை அதைக்கண்டு களித்தவருக்கு ஏற்பட்டிருக்கும் என நான் எண்ணுகிறேன். அவ்வளவிற்கு அந்தக்கலை விழாக்களை நடாத்த மன்றத்தார் பெரு முயற்சியெடுத்திருந்தார்கள் தென்றல் வீசும் சித்திரை மாதமாகையால் கலை விழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

வருடா வருடமாக அவர்கள் நடாத்திய கலைவிழாக்கள் நயினாதீவையே ஒரு கலைக்கூடமாக மாற்றியமைத்தது என்றால் அதை மறுக்கவோ அன்றேல் மறைக்கவோ முடியாது. நயினை மக்களை கலைஞர்களாக்க அக்கலை விழாக்கள் பெரிதும் உதவின. சிறந்த நடிகர்கள், நடிகைகள் நடனமணிகள், பேச்சாளர்கள், பாடகர்கள், பாவலர்கள் முதலாயினோர் நயினையிலே பல்கிப் பெருக அக்கலைவிழாக்கள் பேருதவி புரிந்தன. நயினை மாணவர்கள் அயல் பிரதேச

மாணவர்களே வென்று வெற்றிக் கொடி நாட்டி, வீரபுருஷர்களாக திகழ மன்றத்தின் கலைவிழாக்கள் அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தது. நயினை மக்கள் நல்லவர்கள் பண்பாளர்கள் எனப்பிறர் மதிக்கவும், அவர்கள் தலைநிமிர்ந்து செல்லவும் அவ்விழாக்கள் அரும்பணிபுரிந்தன.

இப்படியாக மன்றம் நம் நயினைத்திரு நாட்டிற்காக அல்லும் பகலும் அயராதுழைத்து ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது எதற்காக? நமது கிராமம், நமது ஊர் மக்கள் என்ற எணர்ச்சியை நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் பெறவேண்டும் என்பதற்கேயாம். இவ்வாறு நயினாதீவின் கலைச் செல்வமானது "மணற்கேணியைத் தோண்டும் தோறும் ஊற்றுநீர் சுரந்து கொண்டே வருவது போல வளர்ச்சியடைய மன்றம் ஆக்கமும் ஊக்கமும் மென்மேலும் நல்க வேண்டும், அம் மன்றம் மென்மேலும் சிறப்பெய்தி திகழ வேண்டும் என்று வாயார, மனமார வாழ்த்துகிறேன்.

சீர்புகழும் திரு நயினை செவ்விதனை நோக்கி
சிறப்புமிகு இந் நகர்க்கு நிகர் இல்லையென்று
பார்புகழ வைத்தீர்! மகிமை பரப்பி வைத்தீர் - மணி
பல்லவத்தின் பெருமைதனைப் பலரும் போற்ற
கார் குழலாள் நாகம்மை கடைக்கண் நல்க
கவினோங்கு கலை விழா பல எடுத்தீர்
ஆர்சிலம்பு மேகலையும், ஆ புத்திரனும்
அரசமர நிழலிருந்த அண்ணலாரும்
வேரூன்றி நின்ற எங்கள் வீரமணித்தீவின்
விண்முட்டு புகழதனை மேலோங்கச் செய்ய
ஆர்வமொடு எழுந்த நும் கலாமன்றம்
அவனியிலே தலைசிறந்து மேலோங்க வேண்டும்.



With Compliments

From

**S. Ramasamy (EXPORTERS)**

104, 4th CROSS STREET,

COLOMBO-11.

# APPRECIATION

## For

## "KOMUKHI"

# BRILLIANT GLASS WORKS

**MANUFACTURERS OF ALL TYPES OF GLASS WARE**

123, 5th Cross Street
COLOMBO. 11

Manipay Road
Anaicoddai
( JAFFNA)

*Bankers:- BANK OF CEYLON*
*PEOPLE'S BANK.*

கலைப் பொக்கிஷமாக

மிளிரட்டும் " கோமுகி "

வாழ்த்து

லிங்கம் ஸ்ரோர்ஸ் LINGAM STORES

55, 5ம் குறுக்குத் தெரு.
கொழும்பு.

General Merchants
and
Commission Agents

*55, 5th Cross Street*
*Colombo - II.*

தொலைபேசி | 20411
*Telephone*

**SPACE Donated By**

# K. T. PATHMANATHAN

WARD No 5.

Pungudutivu.

கோமுகிக்கு

எம் இதயங்கனிந்த
வாழ்த்துக்கள்

ரஜனி ஷகிலா சந்திரசேகரம்
நயினாதீவு-4

GREETINGS

**RELIGIOUS DIGEST**





மருந்துகள் பெறவும்....
மக்களைப் பெறவும்....
அரசினர் வைத்தியசாலை

வாடிக்களைத் தோர் ஆறிமகிழ
ஓடும் கடல் முன் வாடி வீடு





புத்தம் புதிய பற்பல கலைகள்
நித்தம் தந்திடும் நிலையான கூடம்

தங்குமவர்க்குத் தனியிடம் தந்த
இங்கிதமான சங்கப் பலகை

மணிபல்லவ கலாமன்றக் கட்டுரைப் போட்டி

மேற்பிரிவில் முதலாம் இடத்தைப் பெறும் கட்டுரை

க. க. நாகேஸ்வரன்

# இளங்கோ வடித்த இலக்கியம்

> ''என்னை நன்றாக இறைவன்படைத்தனன்
> தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' —திருமூலர் திருமந்திரம்.

தமிழை முத்தமிழ் என்று சொல்லுவார்கள் அறிவு சான்றோர். தமிழ் மொழியை வளம்படுத்தக் காலத்திற்குக் காலம் பல புலவர்கள் இந் நிலவுலகின்கண் தோன்றியுள்ளனர். முற்காலத்தில் சங்கங்கள் அமைத்து அதன் மூலம் தமிழை வளர்த்தனர் என்று இன்று நூல்கள் கூறும்போது அவற்றை நாம் மறுக்க முடியாது. சங்கத் தமிழ், இனிய தமிழ், மங்காத்தமிழ் என்று பெருமையுடைத்தது நம் தேன்தமிழ் இத்தகைய சிறப்பும், எழிலும் ஒருங்கே தன்னகத்துக் கொண்டுள்ள தமிழானது இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் இயற்றமிழ் என்று சொல்லப்படும் தமிழானது பழுதறக்கற்ற மாண்புடை மக்களுக்கு உகந்தது. அதாவது இயற்றமிழின் அழகையும் அதன் வனப்புமிகு சுவையையும் நன்கு கற்றோர்தான் அறிய முடியும். ஆனால் இசைத்தமிழை இவ்வாறு கற்றோர் தான் அறிய முடியும் என்று கூறுதல் பொருந்தாது. இசைத்தமிழை, அதன் கண்ணுள்ள இனிமையான கருப்பொருளை அறிவதற்கு இசையில் ஓரளவு ஞானம் இருந்தாற் போதுமானது. ஆனால் ஈற்றுக் கலையான, முத்தமிழ் என்று பெருமை பெற்றும், அவற்றில் ஈற்றிலே பொலிவு பெற்று நிற்கும் நாடகத்தமிழைக், கற்றோராயினும் சரி கல்லாதோராயினும் சரி, அனைவருமே நுகர முடியும். அதன் இன்பத்தை அனுபவிக்க முடியும். இத்தகைய சிறப்பம்சம் பொருந்திய தமிழே சேர, சோழ, பாண்டியர் என்று சொல்லப்படும் முடியுடை மூவேந்தர்களாலும், வளர்க்கப்பட்டது. இப்படிப்பட்ட தமிழை அழகும், பொலிவும் பெறச் செய்வது அக்காலத்தில் மிக வேண்டற்பாலதாயிருந்தது. தொன்மையும் தனிச் சிறப்பும் பெற்றிருந்ததமிழ் இலக்கணவரம்புடையதாய் விளங்கியது. அத்தனை இலக்கணப்பொலிவு பெற்றிருந்த தமிழைமேலும் மேலும், சிறப்படையச் செய்தது, அதில் தோன்றிய இலக்கியமாகும். இலக்கணம் இருக்கும் போது ஏன் இலக்சியத்தை யத்தை யாத்துக் கொள்ள முடியாது? இவ்வாறு ஒன்றோடொன்று ஒன்றிப் போராடி வார்க்கப்பட்டதே தமிழ்.

மேலே கூறப்பட்டவற்றால் இலக்கியம் ஏன் உதயமானது என்பதை நாம் சிறிதளவேனும் உணரக் கூடியதாகவிருக்கின்றது. இலக்கியப் என்ற போர்வையின்கீழ் பல்வேறு வகைப்பட்ட, பல்வேறு தரத்தையுடைய இலக்கியங்கள் காலத்திற்குக் காலம் எழுந்தனவெனலாம். ஏன் இலக்கியங்கள் எழவேண்டும் என்ற கேள்வியை எழுப்புவோரமேயானால் அதற்குத் தேவையான பதிலை நாம் எளிதிலே கண்டுபிடித்து விடுவோம். ஒரு மொழி வளம் பெற வேண்டுமானால் அதற்கு இலக்கணம் மிக மிக அவசியம் இலக்கியத்தின் மூலம் ஒரு

மொழி தன்னிலேதிரியாது என்றும் இருந்த படி இருக்கும் என்பது பெரியோரின், அறிவு சான்ற ஆன்றோரின் நம்பிக்கை. ஆகவேதான் அக்காலத்தில் தமிழை வளம் படுத்த தமிழில் உள்ள பெருமைகளையும், அதன் சிறப்பையும் எடுத்துரைக்கத் தோன்றியவையே காப்பியங்கள். தமிழறிந்த ஆன்றோர்கள், கசடறக்கற்ற மூதறிஞர்கள் ஒரு மொழியை வளர்க்கவேண்டுமாயின் அதற்கு இலக்கியம் தேவை என்பதை உணர்ந்தார்கள். இதன்பேருக, அவர்கள் சிந்தித்த சிந்தனையின் விளைவாக எமக்கு எமது மொழிக்குக்கிடைத்தவைதான் இப் பஞ்சகாவியங்கள். ஐம்பெருங் காப்பியங்கள் என்று கூறப்படுபவை மணிமேகலை சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பவையாகும் இவற்றை யாத்த துறவிகள் சமணர்கள் என்றும் ஒரு ஐதீகம் உண்டு. தமிழை வளர்க்க எழுந்த காப்பியங்களுள் மிகவும் சிறப்புப் பெற்றவை இவ் ஐந்துமாம். இவற்றுள் சிலப்பதிகாரத்தை யாத்தவர் தான் இளங்கோவடிகள். திருத்தக்க தேவரின் கைவண்ணத்தால் எழுந்ததுதான் சீவகசிந்தாமணி.

இளங்கோவடிகள் ஒரு சமணத்துறவியென்றும் அவர் தமிழுக்காக அயராதுழைத்தாரென்றும், அவரின் தமிழ்ப்பற்றுத்தான் அவரைக் காவியமியற்ற வைத்துள்ளதென்றும் கூறுவரறிஞர். இயல் இசை நாடகம் என்ற மூன்று பிரிவுகளுக்கும் வெவ்வேறு வகையான நூல்கள் எழுந்தன. இளங்கோவடிகள் யாத்த சிலப்பதிகாரம் விசேடமாக நாடகத் தமிழைச் சார்ந்தேயுள்ளது. நாடகம் எனப்படுவது யாது? அது எப்படிப்பட்டது? என்பதை நாம் அறிய வேண்டுமாயின் சிலப்பதிகாரம் நமக்குப் பெரிதும் உதவி செய்யும். இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் நாடகத்தின் பெருமை மிகவும் அழகாகப் பேசப்படுகிறது நாடகத் தமிழை வளர்க்க முற்பட்ட இளங்கோவடிகளின் உள்ளக் கிடக்கை அவர் யாத்த சிலப்பதிகாரத்தின் மூலம் நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது. இத்தகைய காப்பியங்கள் எழுவதற்கு முன்னரே நம் தமிழர்கள் இந்நாடகக் கலையைதான் அடிப்படையாகக் கொண்டொழுகிஞர்கள் என்பர். நாடகம் என்பது ஒருவரின் உளக் கருத்தைச் செய்கை மூலம் மற்றவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுதலேயாம். ஆதிகாலத்தில் மனிதர்கள் செய்கை மூலமும் ஒலி மூலமுமே தமது மனக் கருத்தை இன்னொருவருக்குக் கூறினர் எனப்படுகின்றது. இத்தகைய தொன்மையும் ஆதி தொடக்கத்தில் இருந்ததுமாகிய நாடகத்தை மேலும் மாண்புபடுத்த எழுந்த காவியமே சிலப்பதிகாரம் எனலாம் சங்க காலப் பகுதியிலேயே இக் காவியம் எழுந்ததெனலாம். ஆதிப்பழங் குடிகள் தமது உள்ளக் கருத்தை சைகை மூலம் உணர்த்திய வரலாறு கண்ட உண்மையை நாம் அறிவோமேயாஞல், நாடகக் கலையின் உற்பத்திஸ்தானம் எவ்வளவு காலத்திற்கு முற்பட்டதென்பதை நாமேயறிவோம். தமிழர்கள் முத்தமிழையும் வளர்க்க பாடுபட்டனர். ஆஞல் சிலர் காவியங்களை வடித்தனர். அவ்வாறு வடித்தவை எவ்வாறு தமிழுலகின் சீரும் சிறப்பும் பெற்றுள்ளதென்பதை நாம் நமது அறிவாலே அறிய முடிகிறது. இளங்கோவடிகள் தமிழுக்குச் செய்த தொண்டில் குறிப்பாக நாடகத் தமிழுக்குச் செய்த தொண்டே அவரின் இலக்கியமாகிய சிலப்பதிகாரமெனலாம். இளங்கோவடிகள் நாடகத் தமிழுக்குச் செய்த தொண்டைப் போல பல ஞானிகள், அறிவுடையோர் பலப்பல தொண்டு செய்துள்ளனர் என்பதை ஒவ்வொரு தமிழ் கற்போனும் அறிவான். தமிழ் இலக்கியம் என்று நாம் குறிப்பிடும்போது சிறப்பாக ஒரு சில நூல்களையும், பெருமையாகக் காவியங்களையுமே கூற முடியும். இவ்வாறு தமிழின் பெருமையை, முத்தமிழின மங்காச் சிறப்பைக் கதைகள் மூலம் விளங்கப்

படுத்த எழுந்தனவயே இக்காவியங்களென லாம். கம்பர் யாத்த இராமாயணம், வில்லிபுத்தூராரின் பாரதம் போன்றவை இலக்கியம் என்ற அடிப்படையிலுள்ளவை. இவற்றுள் பாரதக் கதை மூலம் தமிழரின் அக்கால மன்னர்களின் அரசாட்சியையும், இராமாயணத்தின் மூலம் தமிழர் தம் பண்பாட்டையும் நாம் எளிதாக அறிய முடிகிறது. இத்தகைய நூல்கள் தமிழை வளர்ப்பதற்கு எழுந்த போதிலும் சுவை மிக்க, படிப்போருக்கு இன்பத்தையும், உணர்ச்சியையும், உற்சாகத்தையும் ஊட்ட வல்ல ஒரு காவியமே சிலப்பதிகாரம்.

மதுரைப் பாண்டியன் அவைக்களத் திலே கண்ணகி தனது சிலம்பினைப் பெறுதற் பொருட்டுக் கொண்ட கோபா வேசத்தை இளங்கோவடிகள் மிகவும் சிறப்பாகக் கூறியுள்ளார். அதுமட்டுமல்ல வணிகன் கோவலன் தனது மனையாளுடன் ஒன்று பட்டு அவளின் சொற்கேட்டு அவளின் விருப்பத்திற்கிணங்க வணிகம் செய்து வந்ததும், கோவலனிடம் பணமில்லாத போது தனது ஒரு காற் சிலம்பைக் கழற்றிக் கொடுத்த (தருணமறிந்து செய்த) அந்தக் காட்சியையும் பார்ப்போர் மனதில் எளி திற் பதியத்தக்க முறையில் இளங்கோ வடிகள் கூறிப் போந்துள்ளார். இத்தகைய காட்சிகளையெல்லாம் நல்ல சிறந்த முறை யிலே அமைத்த இளங்கோவடிகளார் அர சனின் கொலுமண்டபத்திலே அரசனுன வன் நானே கள்வன் நானே கள்வன் என்று விழுந்துமடியும் காட்சியையும் அவனை அரச சபையிலே விழுந்து மடியும் படி செய்த கண்ணகியின் கோபா வேசத் தையும் அடிகளார் சிறப்புறக் கூறுமல் விட வில்லை. ஆகவேதான் இக்காட்சிகளை யெல்லாம் சிறந்த முறையில் எடுத்துக் காட்டி விளங்க வைக்கின்றூர். இவ்வாறு இலக்கியங்கள் அமைந்தாற்தான் அதைப் பார்ப்போர் எளிதான முறையில் விடயத் தைப் புரிந்து கொள்வார்கள். மேலே கூறப்பட்ட தன்மைகள் பொருந்தியகாவி யம் இளங்கோவடிகளால் யாக்கப்பட்டிருக் கும் போது அதிலிருந்து இளங்கோவடி களின் அளவிறந்த பேராற்றலையும் அவ ரின் ஆன்ற பரந்த அறிவையும் நாம் பாராட்டாமலிருக்க முடியாது. இளங்கோ வடித்த இலக்கியம் என்ற தலைப்பின் கீழ் நாம் விமர்சிக்கும் போது இவரின் அறி வாற்றல் எத்தகையது, அவர் யாத்துள்ள இலக்கியத்தின் தன்மை என்ன என்பதை நாம் அறிய வேண்டும். சிலப்பதிகாரம் என்னும் காவியம் நாடகப் பாணியில், நாடகம் எவ்வாறு எழுதப்படுகிறதோ அதே முறையில் கற்றோருக்கும் கல்லா தோருக்கும் பெரியோருக்கும், சிறியோர்க் கும் எளிதில் விளங்கத்தக்க முறையில் இளங்கோவடிகள் சிலப்பதிகாரமென்னும் அரிய காப்பியத்தை இத் தமிழுலகிற்கு அதிலும் விசேடமாக நாடக உலகிற்கு ஈந்தருளியுள்ளார். நாடகம் நடிப்போரும் அதில் ஆர்வமுள்ளவர்களும் சுவைத்துச் சுவைத்துப் படிக்க வேண்டிய ஒரு நூல் தான் சிலப்பதிகாரம். இது ஓர் ஈடிணை யற்ற காவியம். தன்னகத்தே பல அரிய சொற்களையும் ஆழம் பொருந்திய கருத் துக்களையும் கொண்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் நாம் ஒரு கருப் பொருளை மாத்திரம் காணவில்லை. இளங் கோவடிகள் வாழ்ந்தகாலத்தில் எவை எவை யில்லையோ அவற்றையெல்லாம் நாம் சிலம்பில் காண முடிகின்றது. இக்காலத் தில் இருந்தவற்றையும் நாம் மிக இலகு வாக அறியக் கூடியதாயுள்ளது. அக் காலப் பகுதியில் வீரப் பெண்மணிகள் இருந்தனர் என்பதை இக்காப்பிய மூலம் காணமுடிகிறது. இக்காப்பியக் கண்ணடி யினூடாக நாம் அக்காப்பியமெழுந்த காலத்து நாகரீக, சமூக சமுதாய பொரு ளாதார நிலைகளை நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது. இக்காப்பியத்திற்கு அழகு செய்வது அதில் கையாளப்பட்டிருக்கும்

பாத்திரங்களும் அப்பாத்திரங்களின் தன்மையும் ஆகும். அது மட்டுமல்லாது நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு என்ற வர்ணனைப் பகுதிகளும் சிறந்த முறையில் சீரிய நடையில் அமைந்திருக்கின்றது. இம்முறையை நாம் பிற்காலத்தில் தோன்றிய சேக்கிழார் பெரிய புராணத்திற் காணக் கூடியதாகவுள்ளது. சிலப்பதிகாரமியற்றிய காலத்தில் பெண்கள் மிகவும் வீரம் பொருந்தியவர்களாய் விளங்கியுள்ளனர் என்பதைக் கண்ணகியின் பாத்திரம் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அதுமட்டுமல்ல, அக்காலத்தில் நீதிமுறை அரசனால் நடத்தப்பட்டுள்ளதென்......... பதும், அவ்வாறு நடைபெற்ற வந்த நீதி முறையும், அவர்கள் வழங்கிய தீர்ப்பும் பிழை என்பதைக் கண்ணகி தனது சொற்போரால் அறங்கூறவையத்து நிலை நிறுத்தியுள்ளதையும் இளங்கோவடிகள் சிறப்புறக் கூறுமல்விடவில்லை. பாண்டியன் அவையத்துக் கண்ணகி தனது கனல் போன்ற சொற்களை அள்ளி வீசி பாண்டியனையும், பாண்டியன் தேவியையும் கள்வர்களாக்கிய செய்தியைக் கேட்டோர், அல்லது கேள்விப்பட்டோர் சிலப்பதிகாரத்தை வியக்காமல்: பாராட்டாமலில்லை, இத்தகைய ஒவ்வொரு கட்டமும் சிறப்புற அமைந்திருக்கும் சிலப்பதிகாரம் தமிழுலகத்திற்கு சிறப்பாக நாடக உலகில் சிறந்த காவியமாக நாடகப் பிரியர்கள் போற்றி, அதன் தன்மையையும், சிறப்பையும் ரசித்து ரசித்து இன்புறத்தக்க நூலாக மிளிர்வதை காணமுடிகிறது.

சிலப்பதிகாரம் ஒரு காவியமாக இருப்பதையுணர்ந்த தமிழ் மக்கள் தமிழ்நாடகமறிந்த நாடகக்கலைஞர் அதைப்போற்றி அதன் பிரதிகளை அச்சிட்டுத் தமிழ்த் தொண்டாற்றி வருகின்றனர். சிலம்பின் கதையைக்கூறும் சிலப்பதிகாரம் தமிழுலகில் மங்காப் புகழுடன் விளங்கும் என்பதற்கு ஐயமில்லை. தமிழாராய்ச்சி மகாநாடுகளிலும் வேறு பல தமிழ் விழாக்களிலும் சிலப்பதிகாரத்தைப்பற்றிய கவியரங்குகளும், அதைபற்றிய, பேச்சுக்களும் பல அறிஞர்களாலும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. இப்பேச்சுகளின் மூலம் மக்கள் சிலப்பதிகாரத்தின் பெருமையை இலகுவாகவும். தெளிவாகவும் அறிவர்

இது காறும் கூறியவற்றால் இளங்கோவடிகள் யாத்த சிலப்பதிகாரம் இலக்கிய உலகில் ஓர் அழியா அம்சமாக விளங்கும் என்பது புலனாகின்றது. இலக்கியங்களின் உயர்ந்த தரத்தின் உச்சியிலே வைத்தெண்ணப்படுவது ஐம்பெரும் காப்பியங்களாகும். அவற்றுள்ளும் சிறப்பாகச் சிலப்பதிகாரம் மிகவும் உயர்ந்த நிலையில் வைத்தெண்ணப் படுகின்றது. இப்படிக் காவியங்களை நாம் படித்து நமது அறிவைப் பெருக்குவதோடு மட்டுமமையாது அவற்றில் கூறியுள்ளது போன்ற தன்மையில் நாமும் தரமான உயர்ந்த சிறந்த நாடகங்களையும் தயாரித்து தமிழுலகில் மட்டுமல்ல, கலையுலகிலும் சிறப்படைவோமாக. தமிழை முன்னிருந்தபடி இருப்பது போல் பாதுகாக்கும் வண்ணம் இறைவனை வேண்டுவோமாக.

வாழ்க தமிழ்!! வாழ்க காப்பியங்கள்!!!



# "CRASH LANDING AT NAINATIVU"

Ilavalai JESU Rutnam

Colombus the discoverer, navigator Vasgodagama and their clan, retired from the field of exploration, hundreds of years ago, perhaps, to entrust the continuity of their expeditions, to the "Dare - Devils" of Kayts St. Anthonys College. The "Xaverians" the unbeaten Champions of Sports in the late forties, in consideration of their valour in the Field and Track events, received an assignment "Excursion Zero Zero Seven" to circum - navigate the territorial waters of Kayts.

The "Blast - off" of the "Appolo" ( Joyful Rosary), was fixed for the 11th October 1947 exactly at 0700 hours from "Cape de Kayts" ( Kayts Jetty ). The "Mother Ship" ( Joyful Rosary) was under the command of Mr Gonzaga' a very handsome Graduate fro Cochin who happened to be a strict disciplinarian and House Master of our time, with Co – Pilot Mr. Mathiaroganam as the "Chaplain". It was indeed a historic event at "Cape de Kayts" to witness a large gathering present, to bid us "Bon Voyage".

The "mother Ship" was doing at 10 nautical miles with Mr. Sinnathamby ( Thandayal ) at the "Controls", while we were passing the Historic Fort, a living monument of Dutch - Imperialist dommination in Kayts.

" Now, - Look here boys, Dont play pucks; - We are now cutting away from the "Kayts

Orbit'' and straight away entering the "Space" ( High Seas ); - Be in your seats, least you all be floating soon'' orders come from "controls". The monsoon was really agressive and the boys were in utter panic. Rough seas, high waves, torrential rain and gale at 30. mph, and all forces of nature were in direct battle with the "Mother Ship". Boys were thrown from stern to stem and all sides — a real "Rock and Roll", an ordeal that continued for an hour and twenty minutes. Even "Houston" ( College authorities ) were out of contact ( - How to contact?) to plead for the recall of the Mission. Screams, yells, weeping and crying were the only audible melody of the time. Some boys even begged of the "Controls" to back fire, but the "Controls" - A Capital No.

Specific instructions were given in advance by "Houston" that all should enter the "Sea Craft" in clean and empty stomach; but nothing doing ) - a complete " Cat - Out ". Egg Coffee, Milk Coffee, Plain Coffee and all Coffees were all out right royally. But to the utter surprise the "Controls" was calm and cool and in good sprit and sprits ( not Gal - Mollases )

The St. John Ambulance Cadets among us were in quick action to restore normalcy on the unconcious, semi - concious, fatigued and the "Run - Out." By then the "Mother Ship" was gradually getting into form when the " Controls" blasted,, "There ye boys - Nainativu is now very clear." What thrill?.

Captain Neil Amstrong, first human to land on Moon was no where compared to the rejoice jubilation we boys had when "crashlanded" on the terrains of Nainativu, since we had the greatest doubt whether we will ever land anywhere. The only contrast was that there was an appreciable crowd at the "Lunar Jetty" ( Nainativu

Jetty ) but, all unknown faces that had rushed to have the glimpse of these "young explorers" who had braved all forces of nature to "crash - land" in their beautiful Island.

However, among the crowd emerged one and only known face, a "Good - Samaritan" who happened to be a Shop Assistant at a reputed mer- chantile establishment in Kayts, who played host to us until our "return Journey."

Rest and *relaxation* for about an hour and a half proceeded our exploration. Nainativu in its silent carnation, is a world of its own though cut off from the Mainland. Touch of nature in its abundance, with its geographic beauty and historic distinction it stands today as "Lime-Light" if not exaggerated, a potential "Satellite" in the Indian Ocean.

Discussions at our study circle revealed, the historical, cultural and religious background and the importance of the island Nainativu with references to the Hindu Shrine (Nagapooshni Amman Kovil ) and the Buddhist Vihare. We also learnt, that according to ancient mythology, arrival of Manimekalai in Nainativu was the reason and origin of a "Spiritual Pond" in close proximity to the Temple, which in later years came to be named "KOMUKHI" in significance of which, I believe, this Souvenir came to be named accordingly.

"1600 hours now - Get ready boys "Captain" signals giving the green light to the "Controls" to fire Rockets" for our "Return Mission". All get set ready, and "Controls" was in action to the cheers on both sides. Even a half naked tiny tod of two plus, tugged up in his pater's arms too bid "Adiue" to the "invaders" for a "Safe - Landing" back at "Houston".

I had not realised it then that I would be fortunate to meet this toddler in the capacity of "Editor" of this Souvenir, KOMUKHI.



சிரோங்கு நயினைச் சிற்றூராளும்
ஊராட்சி மன்றம்.

''புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட
போரிடும் உலகினை வேருடன் சாய்ப்போம்!''

## மன்றத்துடன் ஒன்றி வளர்ந்த நயினை வாலிபர் குழாம்.

### மணிபல்லவ கலாமன்றம் — அங்கத்தவர் பட்டியல்.

| | |
|---|---|
| ப. க. மகாதேவா, **B.A.** | தபால் அதிபர், பதிவுக்கிளை, மத்திய தபால் நிலையம் கொழும்பு. |
| வ. ந. பரராஜசிங்கம், | தபால் அதிபர், மத்திய தந்தி அலுவலகம், கொழும்பு. |
| க. க. சந்திரன், | எழுது வினைஞர், பாடவிதான அபிவிருத்தி நிலையம் கொழும்பு. |
| வீ. வை. யோகலிங்கம், | தபால் அதிபர், தபால் அலுவலகம், கம்பளை. |
| ந. திருநாவுக்கரசு, | தபால் அதிபர், தபால் அலுவலகம், அம்பாறை |
| வி. இராமச்சந்திரன், **B.Sc.(Hons)** | உதவி விரிவுரையாளர், பௌதீகப் பகுதி, இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பு. |
| சி. குலசிங்கம், | பொறியியலாளர், மாநகரசபை, கொழும்பு. |
| ப. க. நவரத்தினராஜா, | மருத்துவ பீடம், இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பு. |
| சி. இரத்தின சபாபதி, | ஆசிரியர், மகா வித்தியாலயம்-நயினாதீவு. |
| பொ. நாகமணி, | ஆசிரியர், சாகிரா கல்லூரி, புத்தளம். |
| ப. க. ஞானசுந்தரம், | ஆசிரியர், எக்கரல்ல, ஒப்பனயகா. |
| இ. சிவபாத சேகரம், | ஆசிரியர், ஏக்கரல்ல, ஒப்பனயகா. |
| சி. சிவானந்தர், | ஆசிரியர், அரியநாயகம் புலம், அ. த. க. பாடசாலை, புங்குடுதீவு. |
| ந. உருத்திரலிங்கம், | ஆசிரியர், ஸ்ரீ பராசக்தி வித்தியாசாலை, புங்குடுதீவு. |
| த. இலங்கைநாதன், | ஆசிரியர், பூண்டுலோயா வடக்கு, பூண்டுலோயா. |
| சு. தனபாலசுந்தரம், | எழுது வினைஞர், கட்டிடத்திணைக்களம், கொழும்பு. |
| பொ. கயிலாசநாதன், **B. A.** | எழுது வினைஞர், உணவுக்கட்டுப்பாட்டு அலுவலகம், கொழும்பு. |
| ப. ஜெயராசா, | எழுது வினைஞர், வருமானவரி இலாகா, கொழும்பு. |

| | |
|---|---|
| பொ. தியாகமணி, | எழுது வினைஞர், பரீட்சைத்திணைக்களம். கொழும்பு. |
| இ. தவராசா, | எழுது வினைஞர், பிரிவுக்காரியாதிகாரி அலுவலகம், வத்தளை. |
| கா. சரவணமுத்து, | எழுது வினைஞர், கல்லோயா எஸ்டேட், பேராதனை. |
| ச. இராசேந்திரன், | எழுது வினைஞர், இறைவரித் திணைக்களம் கொழும்பு. |
| மு. பரமேஸ்வரன், | எழுது வினைஞர், பட்டினசபை, மானிப்பாய், |
| பொ. இராசலிங்கம், | 'சிலோன், றெக்கிறியேஷன் கிளப்'' கொழும்பு. |
| க. துரைமணி, | உள்ளூராட்சி மன்ற உறுப்பினர், நயினாதீவு. |
| ந. விஸ்வநாதன், | கமத்தொழில் அலுவலகம், ஊர்காவற்றுறை. |
| வி. மகேஸ்வரநாதன், | சீமெந்துத் தொழிற்சாலை காங்கேசன்துறை. |
| வை. நடராசா, | இ. போ. ச. காரைநகர் |
| சோ. மகேஸ்வரன், | இ. போ. ச. முல்லைத்தீவு. |
| ந. லோகநாதன், | இ. போ. ச. யாழ்ப்பாணம். |
| ச. பரஞ்சோதி, | இலங்கைப் பொலிஸ், கொழும்பு. |
| சி. ஜெகநாதன், | சிறைக்காவலர், புத்தளம், |
| ச. பாலகிருஷ்ணபாரதி, | இலங்கைப் பொலிஸ், கந்தளாய். |
| அ. மருதையினூர் | வரைபடவல்லாளர், நில அளவைத் திணைக்களம். கொழும்பு |
| ந. கண ாதன், | வரைபடவல்லாளர், நில அளவைத் திணைக்களம், வவுனியா, |
| கு. குகனானந்தன், | மருந்தாளர், அரசினர் வைத்தியசாலை, காலி, |
| இ. ஸ்ரீகந்தவேள், | மாலா ஸ்ரோர்ஸ், கொழும்பு. |
| வி. வேதநாதன், | ஆயுள்வேதக் கல்லூரி, கொழும்பு. |
| சி. பஞ்சரத்தினலிங்கம், | ஆயுள்வேதக் கல்லூரி, கொழும்பு. |
| சோ. செல்வரத்தினம், | 'குளோப் ரெஸ்ரோரண்ட்' கம்பகா. |
| சி. சண்முகரெத்தினம், | சிவசங்கரி அரிசி ஆலை, பூவரசங்குளம். |
| வை. பாலசிங்கம், | ஸ்ரீ கணேசன் அரிசி ஆலை, காரைதீவு (கி. மா.) |
| மா. சாம்பசிவம், | தொழில்நுட்ப உதவியாளர், கிளிநொச்சி. |
| சி. இராசரத்தினம். | பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், நயினாதீவு. |
| சி. தனபாலசிங்கம், | நாகபூஷணி விசைப்படகுச்சேவை, நயினாதீவு, |
| செ. ஓங்காரநாதன், | கொழும்பு. |
| த. ஸ்ரீபதி, | கொழும்பு. |
| இ. தியாகராசா, | நயினாதீவு. |
| இ. சிவநாதன், | கலைவாணி புத்தகசாலை, யாழ்ப்பாணம். |
| ந. ஜெயபாலன், | பொற்பதி இளைஞர் பாற்பண்ணை யாழ்ப்பாணம். |

ஒன்று பட்டால் உண்டுவாழ்வு - நம்முள்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு -

# நன்றி மலர்கள்

இவ்விதழ் உருவாக எத்தனையோ இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் அவற்றையெல்லாம் நேரெதிர் கொண்டு ஏற்று; உற்சாகம் குன்றாது நாம் எடுத்துக்கொண்ட பணியை செவ்வனே முடிக்க எமக்குச் சக்தியளித்த சக்திக்கு முதலில் எனது வணக்கம்.

★ எடுக்க எடுக்கக் குறையாத அமுத சுரபியன்ன விடயங்களை குறுகிய காலத்திற்குள் எமக்கு, எழுதியுதவிய எம்மூர் அறிஞர்கள்;

★ தமது வெவ்வேறு பணிகளுக்கிடையில் எமக்காகவும், நேர மொதுக்கி ஆசிச் செய்தியனுப்பிய பெரியார்கள்;

★ அட்டைப்பட உருவகம் கொடுத்துதவிய எம்மூர் ஓவியச் செல்வர் தருமலிங்கம்

★ அட்டைப்பட ஓவியர் 'ஹாரு'

★ விளம்பரம் கொடுத்துதவிய வர்த்தகப்பெருமக்கள்:

★ விளம்பரங்கள் சேகரிக்க உறுதுணை நின்ற,
திருவாளர்கள் சு. ப. ச. இலங்கை நாயகம், இந்தியன் வெளி நாட்டு வங்கி கண. மகாலிங்கம், நா பாலசுந்தரம்.

★ இம்மலரை சில நாட்களில் இவ்வளவு சிறப்பாக உருவாக்கிய றெயின்போ அச்சக அதிபர் திரு. ரஹ்மான், அவரது தொழிலாளிகள்; சிறப்புற அமைய ஆலோசனையுடனூக்கமு முதவிய எழுத்து மன்னன் எஸ்-பொ;

★ தோழர்கள் ப. க. நவரத்தினராஜா, க க. சந்திரன், வி. இராமச்சந்திரன், நா. சிவராசசிங்கம், ஆமாம்; இந்த அன்புள்ளங்கொண்ட-கோமுகி வெளியீட்டைத்தங்களது மூச்சாக மாற்றிவிட்டுச் செயல்பட்ட-நல்ல நண்பர்கள் ;

ஆகியோர் எனது இதயபூர்வமான நன்றிக்கு உரியவர்கள்.

வணக்கம்

வ. ந. பரராஜசிங்கம்,
மலர்க்குழுதலைவர்.

**Greetings From**

★
★
★
★
★
★
★ ★ ★ ★ ★

# *V. Manickam & Bro.*

Importers, Exporters, General Merchants and Estate Suppliers

*34, Fourth Cross Street*

*Colombo - 11.*

**Bankers-**

Bank Of Ceylon, National Bank Of India Ltd, Mercantile Bank Of India Ltd.

*Telegrams:- THAVAYOGA* *Telephone:- 23408*

வாழ்த்துக்கள்

**Sivam Stores**

General Merchants & Estate Suppliers

**167, Gaswork Street,**
**Colombo - 11.**

*Telegrams: "Senthamil"* *Telephone: 22465*

Best Wishes From

**E. N. ARIYARATNE & CO**

General Merchants and Commission Agents

**165, Gaswork Street,**
**Colombo 11.**

*Telegrams: "Malarmahal"* *Telephone: 26562*

With Best Compliments

from

T. S. T. P. T. & CO.

No. 49, DAM STREET,
COLOMBO-12.

*WHOLESALE & RETAIL DEALERS IN*

**BRASS, ALUMINIUM, & GLASS - WARES**

*T'Phone:* **31035**

**With Best Compliments**

# ARASAN PRINTERS

HYDE PARK CORNER

COLOMBO 2.

**Best Wishes**

# GLOBE EXPORTS

Importers Agents - Exporters of Rubber Sole Crepe
Scrap Crepe, Pale Latex Crepe, Tea,
Spices Like Cardamoms, Cinnamon, Nutmegs, Mace, Cloves
Pepper Etc. Coir Yarn, Coir Rope, Fibre.

*Telephone: 32601*
*Cable: "GLOPORTS"*
*Colombo*

*P. O. BOX 642*
*Colombo*

# நமது எதிர்காலம்

நா. க. சண்முகநாதபிள்ளை

ஒளிமயமான எதிர்காலம் ஒன்று இருக்கின்றது என்ற நம்பிக்கையின் அடிப்படையிற்றான் இந்த உலகமே இயங்கிக் கொண்டிருக்கின்றது. எதிர்காலத்தில் வளமாக வாழ வேண்டும், என்ற துடிப்பினாலேயே உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் இனம் பெருக்கி, வாழ்ந்து, மடிந்து திரும்பவும் ஒரு வாழ்க்கை வட்டத்தில் ஈடுபட்டு, ஓயாது தொடர்ந்து கொண்டு போகின்றன.

நகர்ப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் மக்கள் வாழும் முறையில் ஏற்பட்டிருக்கின்ற, ஏற்பட்டுவருகின்ற, ஏற்படக்கூடிய, விளைவுகளால் எமது எதிர்காலம் எப்படியிருக்குமென எண்ணிப் பார்ப்போம் எமது கிராமம் போன்ற சிற்றூர்கள் எவ்வகையில் மாறிவருகின்றன என்பதும், வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு எதிர்காலத்தில் இது எவ்வகையில் உதவும் என்பதும் பற்றிச் சிந்திப்பதும் சீர்தூக்கிப் பார்ப்பதும் மிகவும் பயனளிப்பதொன்றாகும். கிராமங்கள் தான் ஒரு நாட்டின் உயிர் நாடியான அங்கங்களாகும். அங்கு வாழும் மக்களின் பண்பும், அதனால் அவர்கள் தரும் நல்ல பயனும் தான் நாட்டின் நிலையான செல்வங்கள். நகர மக்கள் புதுமை மோகத்தில் உவப்பத்தலைக் கூடி அங்காடிக் கூட்டம் போல் அலைந்து, கலைந்து போகும் நிலையில்லா வாழ்க்கையுடையவர்கள். அயலவனை நேசிக்கின்ற பற்றையும், மற்றவர்க்காக இரங்குகின்ற பழக்கத்தையும், சுற்றம் உறவு, சூழல் என்கிற அன்புப்பிணைப்பையும் அவசரமாக ஓடும் அவர்களுடைய வாழ்க்கைச் சக்கரம் அரைத்து நசித்துக் கொன்று விடும்.

ஆனால் கிராம மக்களோ, இன்ப துன்பங்களோடு இடையறுது போராடி, வாழ்விலும், தாழ்விலும், அயலானையும், உறவினையும் ஒன்று சேர்த்து, அவற்றைப் பகிர்ந்து கொள்ளும் மனப்பாங்கோடு வாழ்கின்றார்கள். இதனால் நகர மக்களிடையே காணமுடியாத மன வளமும், இரக்க உணர்வும், காணப்படுகின்றது. சிலவேளைகளில் இந்த நல்ல தன்மைகளுக்காகச் ''சுத்தப்பட்டிக்காடு'' ''நாட்டான்'' ''தீவான்'' என்ற நகர மக்களின் நாகரீகப் பட்டமளிப்புக்களும் அவனுக்குக் கிடைக்கின்றன. கிராம வாசிகளின் மண் தோய்ந்த மேனி, வியர்வை சொட்டும் நெற்றி உறுதியான உடல் அவர்களுக்கு வெறுப்பைத் தருகின்றது. இத்தனைக்கும் மத்தியில் அவனிடத்திலே தான் மென்மையான உணர்வுகள் தோன்றுகின்றன. அதனால் கிராமங்களில் நலிவும் மெலிவும் அகன்று, பொலிவும் பூரிப்பும் பொங்குகிறது.

இந்தப் புனிதமான நிலை படிப்படியாக இப்போது கிராமங்களிலே சிதைந்து வரத் தலைப்படுகின்றது. நகர மக்களின் நாகரிக மோகமும். படாடோப வாழ்க்கை முறை பட்டணப் பாசாங்குகளும் பட்டிக்காட்டின் கெட்டியான பண்பாட்டோடு முட்டி மோதி அதை உருக்குலைப்பதைப் பார்க்கின்றோம். மூடநம்பிக்கை என்று சொல்லிக் கிராம வாசிகளுடைய புறவாழ்விலே பேத, சமயச் சண்டைகளையும், நீக்கிப் பகுத்தறிவுணர்வைப் பரப்புவதில், பட்டணத்தவரின் உறவு, பட்டிக்காட்டானைப் புத்துணர்வு கொள்ளச் செய்கின்றது என்பதை வரவேற்கின்றோம்.

கிராமங்களில் இன்று புகுந்து அங்கேயுள்ள அகத் தூய்மையை அல்லோல கல்லோலப்படுத்தும் நாகரீக மோகமென்னும் புயற் காற்று, புறவாழ்வின் சீர்திருத்தம் என்னும் போர்வையில் கனகடூரமாகத் தாக்காமல் மெல்லெனப்பட்டுச் சல்லாபிக்க வேண்டும்.

கிராமங்களிலுள்ள வனிதையரும் வாலிபரும் வெகு சாமர்த்திய முடையவராய் இருத்தல் வேண்டும். இதில் இவர்கள் தோல்வி கண்டால், கிராம முன்னேற்றமும் அதனால் நாட்டின் சுபீட்சமும், கலாசாரமும் நாசமாய் போய்விடும். வாலிபப் பருவத்தினரிடையே ஏற்பட்டிருக்கும் புத்துணர்வின் உத்வேகம், சான்றோரின் அறிவுரைகளுக்கு அடங்கித் தொழிற்பட வேண்டும். ஆகவே தள்ளாவிளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்ந்து வாழும் ஒரு ஒப்பற்ற மக்கள் கூட்டமாக நாமும் நம் நாடும் வாழவேண்டுமானால் முதலில், கிராமங்களில் வாழும் வாலிபர்களே! யுவதிகளே! எழுங்கள், விழிப்புறுங்கள். சோம்பல், பொறுப்பின்மை, வீண் முயற்சி, பொய், ஆசை, என்ற சீர்கெட்ட பாதைகளை விட்டுத் திரும்புங்கள். ''இரும்பை ஒத்த தசை நார்களையும், உருக்கைப் போன்ற நரம்புகளையும் கொண்டு உறுதியான உடலுடையவராய், அதனுள் மென்மையான உள்ளத்தை அமைத்துக் கொள்ளுங்கள்.''

உங்களுக்குரிய சரியான இடத்தைச் சமுதாயத்திலே பெறுங்கள். பிறர் புழுதி வாரித் தூற்றாமல் நீவிர் ஆற்றும் செயல்களில் அன்பும் அறமும் பெருகட்டும். உங்கள் மனமாகிய கொடி, சூழ் நிலைகளோடு போராடிச் சின்னா பின்னமாக ஒடிந்து கனிதர வகையற்றுக் கிடந்த போதும் அஞ்சாதீர். சமுதாயத்தில் இன்னும் திறக்கப்படவில்லை என்று நீவிர் எண்ணுகின்ற கதவுகள் எல்லாம் தாளிடப்பட்டவை. அடிக்கடி தட்டிப் பார்த்தும் அவை திறக்கப்படாமலிருக்கலாம். அப்போதும் அஞ்சாதீர். நண்பர்களே! பூ மலர்ந்து மணம் பரப்பும்போது தான் வண்டுகள் ரீங்காரம் செய்து அதனை நாடி வருகின்றன. அதேபோல் உங்கள் எண்ணங்கள் செயலாகும் போதுதான் புகழ் உங்களைத் தேடிவரும். உங்கள் எண்ணங்களெல்லாம் நல்ல எண்ணங்களாகக் கருக்கொள்ளும் வரை கட்டுண்டு காலம் வரும்வரை காத்திருங்கள் அந்தக் காலம் ஒரு நாள் வரும். அப்போது உங்கள் கவலைகள் எல்லாம் தீரும். அப்போது ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் சான்றாண்மையுடைய செயல்களை நீங்கள் செய்யத் தலைப்படுவீர்கள். அந் நிலையில் ஞானவான்களாக நீங்கள் மாறுவீர்கள். மெய்யுணர்வுடன் உலக நீதிக்குக் கட்டுப்பட்டு வாழுவீர்கள். அப்போது தான் உண்மை, அன்பு, நேயமாகிய பெருமையான இலட்சியத்தை நோக்கி எம்மையெல்லாம் எதிர்காலத்தில் அழைத்துக் கொண்டு செல்லுவீர்கள்.

நினைத்ததெல்லாம் நடந்து விடும் என்ற நினைப்பும், சிறுமை கண்டு திடீர் எனப் பொங்குகின்ற சீற்றமும், மனவளர்ச்சியை மிஞ்சிய உடல் வளர்ச்சியும், பயமறியா இன நலமும், பக்குவமடையாக் குண நலமும் உங்கள் இளமையின் வளமையான தன்மைகளாகும். அதுவும், நாட்டிலும் சமுகத்திலும் இன்று ஏற்பட்டிருக்கும் வேலையின்மை, மதவேற்றுமை, இனவேற்றுமை, மொழிவேற்றுமை, பொருளாதாரப் பிரச்சினை, என்பன மேற் கூறிய உங்கள் தன்மைகளுக்குச் சவாலாக ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலை அரசியலாருக்கும் நாட்டிலுள்ள நல்லறிஞருக்கும் தெரியாமலில்லை இதற்காக அவர்கள் ஒன்றுகூடி ஆவன செய்ய முயற்சிக்கின்றனர். உங்கள் மனப்போக்கிற்கு அமைய எல்லாமே மறுகணம் மாறிவிட

வேண்டும் என்று நினைப்பது அறிவீனம். மாற்றங்கள் படிப்படியாகத்தான் ஏற்படும் எதிர்கால சமுதாயமாகிய உங்களை வலுக் கட்டாயமாக கொடிய தொரு அதள பாதாளத்திற் தள்ளி விடவேண்டுமென்ற நோக்கம் முதியவர்களாக, சமூகத்திலும், அரசியலிலும், வீற்றிருக்கும் அறிவறிந்த சான்றோருக்கு இருப்பதில்லை, இருக்கவும் முடியாது. ஆகவே விட்டுக் கொடுத்து வாழுங்கள், வீண் வம்புதும்புகளுக்கு ஆளா கிக் கசப்பு மனப்பான்மையை வளர்க் காதீர் அன்புத் தென்றல் அங்கே வீசட்டும். இன்பத்தடாகத்திலே எல்லோரும் திளைத் துக் குதூகலித்துப் பண்புச் சந்தனம் பூசிப், பாரெல்லாம் மணம் பரப்புங்கள்.

சர்வமத சந்நிதியாக விளங்கும் இந்த மணித்தீவிலே வாழும் என்னருமை இளைஞர் களே! யுவதிகளே! இத்தீவு பண்டைய பெருமைவாய்ந்தது. பாரகம் முழுவதும் பசிப்பிணி பரவிய காலத்தில் மணிமேகலை என்னும் மங்கை நல்லாள் ''கோமுகி'' என்ற பொய்கையிலே பெற்ற அமுத சுரபியைக் கொண்டு அற்றாரையும், அலர்ந் தாரையும் ஆதரித்து, வருந்திவந்தவர் பெரும் பசி தீர்த்து அவர் திருந்திய முகம் கண்டு திளைத்தாள். இந்த வரலாற்றுப் பின் னணியை உடைய நீவிர் எல்லாவகையிலும் நல்ல தொரு எதிர்காலத்தைச் சிருஷ்டிப் பதற்கான தீபத்தை ஏற்றி, அதைத் தாங் கிச் செல்வதற்கு முற்றிலும் தகுதியானவர் கள். எம் பிராட்டியாம் நாகம்மை திருவடி யிலிருந்து இதற்கான ஆற்றலும், அருளும் உங்களுக்குக் கிடைக்கட்டும். இந்தத் தீவின் எழிலும், பொலிவும், ஏற்றமும், ஆக்க முயற்சியும், உடைய ''மணிபல்லவ கலா மன்ற'' வாலிபர் எடுக்கும் பத்தாண்டு நிறைவு விழாவில் வெளியீடாகும் இந்த அழகான ''கோமுகி'' மலருடாக இந்தச் செய்தி உங்கள் உள்ளமெல்லாம் சுமழ்ந்து உணர்வைத் தூண்டி உள்ளொளியைப் பெருக்கட்டும்.

எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க!



ஆங்கொருகல்லை வாயினிற்படி யென்
றமைத்தனன் சிற்பி மற்றொன்றை
ஓங்கியபெருமைக் கடவுளின் வடிவமென்
றுயர்த்தினுள் உலகினோர் தாய் நீ.

# நிலவளமும் நீர்வளமும்

க. நாகேஸ்பரன் B. A.

நயினாதீவு (மணிபல்லவம்) யாழ்ப்பாணக்குடா நாட்டின் மேற்கே காணப்படும் தீவுத்தொகுதியில் ஒன்றாக விளங்குகின்றது. இது யாழ்ப்பாணப்பட்டினத்திலிருந்து சுமார் 25 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. வடக்கே அனலைதீவையும் தெற்கே நெடுந்தீவையும் கிழக்கே புங்குடுதீவையும் மேற்கே விரிந்து பரந்து செல்லும் இந்து சமுத்திரப் பகுதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ள நயினாதீவு ஏறத்தாழ இரண்டரைச் சதுர மைல் விஸ்தீரணமுடையது.

கொண்டவானாலாந்தின் ஒரு பகுதியாக லெமூரியாக்கண்டம் இருந்தபோது இந்தியாவும் இலங்கையும் அதன் பகுதிகளாக அமைந்திருந்தன. ஏறக்குறைய முப்பது கோடி வருடங்களுக்கு முன் லெமூரியாக் கண்டம் பிளவுற்றுப்பெயர்ந்த காலத்தில் இந்தியாவினின்றும் இலங்கை பிரிக்கப்பட்டிருக்க வேண்டும் எனப் புவிச்சரிதவியலறிஞர்கள் கூறுவர். மூன்று கோடி வருடங்கட்கு முன் மயோசீன காலத்தில் இந்தியக் குடா நாட்டின் தென்மேற்கு எல்லைக்கரைக்கும் இலங்கையின் வடமேற்கு எல்லைக்கரைக்கும் இடையில் காணப்பட்ட மயோசீன் கடலில் சுண்ணாம்புக்கல் அடையல்கள் படர்ந்திருந்தன. கடல் பின் வாங்கியதனால் இச்சுண்ணாம்புப்படிவுகள் கடல் மட்டத்திற்கு மேல் உலர்ந்த நிலமாக யாழ்ப்பாணக்குடாநாடும் அதனோடு சேர்ந்துள்ள தீவுகளும் சுண்ணாம்புக்கல் அடையல்களால் உருவானவை எனக்கொள்வர்.

இவ்வழியில் உருவான தீவுப்பற்றுள் ஒன்றான நயினாதீவு ஒரு சமதரையாகக் காட்சியளிக்கின்றது. கிழக்குக் கரையோரமாக வடக்குத் தெற்காகப் பிரதான வீதியும் ஒன்றுக்கொன்று இணையாகக்கிழக்கு மேற்காக மூன்று குறுக்குத்தெருக்களும் செல்கின்றன. இவை பகிரங்க வேலைப்பகுதியினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஊர்காவற்றுறை துறைமுகத்திலிருந்தும் புங்குடுதீவுத் துறைமுகங்களிலிருந்தும் இத்தீவுக்குப் போக்குவரத்து வசதிகள் அமைந்திருக்கின்றன. இதன் வடகிழக்கு எல்லையிலும் தென்கிழக்கு எல்லையிலும் துறைமுகங்கள் அமைந்துள்ளன. மோட்டார் இயந்திரப் படகுகளும் மரக்கலங்களும் இத்துறைமுகங்களை அலங்கரிக்கும் காட்சியைக்காணக் கூடியதாக இருக்கும். இன்னும் இரண்டு வருடகாலமளவில் இத்தீவகத்துக்கு லக்சப்பான நீர் வீழ்ச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் மின் சக்தி, புங்குடுதீவுக் கூடாகக் கிடைக்கவிருக்கின்றது. இதன் பின் இத்தீவகம் மேலும் கவின் பெறும் என்பதில் ஐயமில்லை.

சுண்ணாம்புக்கல் இரசாயன வானிலையழிவிற்கு உட்படும் இயல்புடையது. இவ்விரசாயனவானிலையழிவிற்கு மழைநீரும் காற்றிலுள்ள காபனீரொட்சைடும் (Carbondioxide) காரணங்களாகின்றன. இம்முறையால் சுண்ணாம்புக் கல்லிலிருந்து பல மண் வகைகள் தோன்றியுள்ளன. செம்மண், நரைமண், உவர்மண், மணல் அவற்றுட் சிலவாம். நயினாதீவிலுள்ள மண் யாழ்ப்பாணக்குடா நாட்டிலுள்ள நரைமண் இனத்தைச் சார்ந்தது. இம்மண்வகைகளே இயற்கையில் வளம் குறைந்தவை. இங்கு காணப்படும் மண் பொதுவில் நரைமண்ணாயினும் இடத்துக்கிடம் தன்மையில் வேறுபட்டுள்ளது. சில இடங்களில் செங்கல், மங்கலானதாகவும் சிலவிடங்களில் வெண்

மையானதாகவும் சிலவிடங்களில் மஞ்சள் நிறமுடையதாகவும் உள்ளது. கரையோரமாக மணற்பாங்கான மண்வளங் காணப்படுகிறது.

கடற்கரையிலிருந்து சுமார் இருநூறு யார் தூரத்தில் கிழக்குக்கடலிலும் மேற்குக் கடலிலும் வடக்குத் தெற்காகப் பாறைக்குகைகள் செறிந்துள்ளன. இதை 'அடவி' என அழைப்பர். இவற்றிலே பேரலைகள் வந்து மோதியுடைகின்றன. இவை கடல் அரிமானத்தை ஓரளவு தடைசெய்கின்றன. கரைக்கும் அடவிக்கும் இடைப்பட்ட கடற்பரப்புகளமாகவுள்ளது. அதாவது ஆழமற்றதாக விருக்கின்றது. இப்பரப்பில் நண்டு, இறால், மீன், சங்கு அதிகம் விருத்தியாகின்றன' இவற்றைப் பிடித்துச் சீவிக்கும் மீனவர்கள் வடக்குக் கிழக்குக் கரையோரங்களில் அடர்ந்து வாழ்கின்றனர். கடலரிமானம் தீவிரமாக நாலாபக்கக் கரைகளையும் சதா தாக்கிக் கொண்டேயிருக்கின்றது. வாடைக்காற்றுக் காலத்தில் வடகரை விரிவாகவும் சோளக் காற்றுக்காலத்தில் தென்கரை விரிவாகவும் அரிக்கப்படுகின்றன. ஒருசில கரையோர ஒதுக்குப் பகுதிகளில் உதாரணமாக வங்களா வடியில், அலைகளால் புதிய மணல் மேடுகளும் உருவாகின்றன. கடல் மட்டத்திலிருந்து பத்துப்பன்னிரண்டு அடிக்கே நிலம் உயர்ந்திருப்பதால் சில புயற்காலங்களில் இராட்சத அலைகள் எழுமாயின் தீவின் சில பகுதிகளுக்கூடாக கடல்நீர் உட்புக முடியும். முன்னொருகால் இதுபோன்ற நிகழ்ச்சி நடைபெற்றமையால் ' இத்தீவின் தென்மேற்பாகக் கரையோரத்தில் நீண்ட அணையொன்று கட்டப்பட்டுள்ளது. இது கடல் நீர் உட்புகமுடியாதவாறு தடுக்கக் கூடியது. கடற்கரையிலிருந்து சிறிதுதூரம் உட்பகுதிகளில் கிராய்க்குளம், மானிகரைக் குளம், தாமரைக்குளம், எனப்பல பெயர்களையுடைய குளங்கள் இத் தீவகத்திற் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றுட் பல இங்கு வாழ்ந்த விவசாயப் பெருங்குடி மக்களால் உருவாக்கப்பட்டன. சில இயற்கையாக அமைந்துள்ள பள்ளங்களாகும். நீரை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது இங்கு உயிர் வாழ்க்கை அடித்தளப் பாறையின் தன்மையிலேயே தங்கியிருப்பதை உணரக் கூடியதாகவுள்ளது. இங்குள்ள சுண்ணும்புக்கல் பாறைகள் நுண்துளைகளையுடையனவல்ல. ஆனல் ஏராளமான மூட்டுக்களையும் வெடிப்புகளையும் பிளவுகளையும் கொண்டு நீரை உட்செல்ல விடும் இயல்புடையன. அதனல் இச் சுண்ணும்புக்கல்லிற்கு நீரைச் சேகரித்து வைத்திருக்கும் இயல்பு சிறப்பாக அமைந்துள்ளது. இத்தரைக்கீழ் நீர்வளம் இருப்பதனலேயே இங்கு மக்கள் அடர்த்தியாக வாழ ஏதுவாகின்றது.

இப் பகுதியில் வருட மழைவீழ்ச்சி குறைவாகவும் மூன்றோ நான்கோ மாதங்கட்கு மாத்திரம் பெய்வதாகவும் உள்ளது. இவ்வாறு பெய்யும் மழையின் ஒரு பகுதி விரைவாக நீராவியாகிவிடுகிறது. கடல்மிக அண்மையில் இருப்பதால் மழைகழுவு நீராக ஒரு பகுதி நீர் கடலோடு விரைவாகச் சங்கமமாகிவிடுகிறது. எஞ்சிய நீரே கசிந்து சென்று கீழ்ப்படையில் தங்குகிறது. நிலத்தின் கீழிருந்து கிணறுகள் மூலம் தரைக்கீழ் நீரைப் பெற முடியாதிருப்பின் இப்பகுதி ஒரு மலட்டு நிலமாகவே இருந்திருக்கும். விலங்குகளுக்கும் கிணற்று நீர் ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்துள்ளது.

சில சமயங்களில் தங்களது கிணற்று நீர் உப்புநீராக மாறிவிட்டதாக மக்கள் சொல்லிக் கவலையடைவதைக் கண்டிருக்கிறேம். மழைக்காலத்தில் மழைநீர் தரையின் கீழ் பொசிந்து சென்று தன்னீர்ப்படை

யாகத் தேங்குகின்றது. நிலத்தின் கீழ் கடிப்பானதோர் படையாக நன்னீர் இல்லாதுபோனல் அதாவது நன்னீர்ப்பீடம் உயர்ந்ததாக இல்லாதுபோனல் கடல் நீர் பாறைக்குள் நுழைந்துவிடும். நன்னீர்ப்பீடம் இறங்கிக்கொண்டு போவதனுற்றுன் கிணற்று நீர் உப்பாகின்றது. நன்னீர்ப் பீடத்தை உயர்ந்தளவில் வைத்திருந்தால் உவர் நீர் மேலெழ முடியாது. அதாவது நன்னீர் படை கீழ்ப்படையிலுள்ள உவர் நீரை அமுக்கி, அந்நீரைமேலே வரமுடியாது செய்வதோடு கடலையடையவும் செய்து விடுகின்றது. அதிக நீர் கவனமில்லாமல் இறைக்கப் படுவதனுல் நன்னீர்ப்படை மெலிவுற மேலுள்ள நன்னீர்ப்படைக்கும் கீழுள்ள உவர் நீர்படைக்கும் இடையேயுள்ள சம நிலைத்தன்மை கலைக்கப்படுகின்றது. குளங்கள் கிணறுகள் என்பவற்றிலுள்ள மண்டி, களிமுதலியவற்றை வரட்சிக் காலத்தில் நீக்குதல் மழை நீர் தங்குதடையின்றி நிலத்துட்கசிய ஏதுவாகும். மழை காலத்தில் கால்வாய்கள் மூலம் மழை நீர் கடலை அடையவொட்டாது தடைசெய்தலால் அதிக மழைநீர் நிலத்துட் புகுந்து நன்னீர் நிரம்பலை மேம்படுத்துகிறது. முற்காலத்தைவிட இக்காலத்தில் நீர்த்தேவை அதிகரித்து விட்டது. இதனுல் அதிக கிணறுகள் வெட்டப்படுகின்றன. அப்பொழுது கிணறுகளிலிருந்து நீராவியாகுதலும் விஸ்தரிக்கப்படுகின்றது. இவற்றை மனதிற் கொண்டு செயலாற்றினுல் நன்னீர் பேணக் கூடியதாயமையும்.

இங்கு பரவலாகப் பனையும் தென்னையும் நீர்ப்பாய்ச்சலின்றிப் பயன் அளிக்கும் தருக்களாகும். நீர்மட்டம் உயர்வாக விருப்பதால் நீர்ப்பாசனம் வேண்டப்படுவதில்லை. வேர்களை மிக ஆழத்திற்குச் செலுத்தி ஈரத்தைப் பெறுகின்றன. ஆனுல் நீர்ப்பாய்ச்சல் வசதிகளோடு புகையிலை, மிளகாய் காய்கறி பயிர்களைப் பருவத்தே பயிரிட்டால் நல்ல பயன் எடுக்க முடியும். நெல்



வயல்கள் தொடர்பின்றி காணப்படுகின்றன. குளங்களைச் சூழ்ந்த பிரதேசங்கள் வயல்களாகக் காட்சி தருகின்றன. வடகீழ் முறைமைக்காற்றினுல் கொண்டுவரப்படும் மழையின் நம்பிக்கையின்மையால், அதாவது குறித்தவிடம், குறித்தளவு மழை பெறும் என்ற நம்பிக்கையின்மையால் விவசாயிகள் ஏமாற்றமடைகின்றனர். வயல்கள் வறிதாய் விடப்படுகின்றன. மழை பருவந்தப்பாது பெய்யுமானுல் பள்ள நிலங்களில் நெல் நன்கு விளைவுதரும். மேட்டு நிலங்களில் பயறு, உழுந்து, வரகு முதலிய பயிர்கள் பயன் தரக்கூடியன. மேய்ச்சல் நிலம் குறைவாக இருந்தும் ஆடு மாடுகள் வளர்கின்றன. இவை பெரும்பாலும் கட்டி வைத்து உணவு கொடுத்தே பராமரிக்கப் படுகின்றன.

கடல் தடுப்புக்களும் அணைகளும் கட்டப் படவேண்டியுள்ளன. மழைநீர் கழுவலாகக் கடலையடைவதைத் தடுப்பதற்குப் போதிய வழிவகைகள் கையாளப்பட வேண்டும். எல்லாக் குளங்களிலிருந்தும் மண்டி, களி என்பன அகற்றப்பட்டு, வயல்களுக்கு வளமாக்கிகளாகப் போடுவதால் நன்னீர் வளம் அதிகம் பேணப்படும். அதனுல் விவசாயம் செழிப்படையும் வாழ்க்கையும் வளம் பெறும்.

# ?.....!

## தோற்றுவாய்

கடந்த சில காலமாக எம்முள் பரபரப்பினை ஏற்படுத்தி வரும் புதிர்களுள் ஒன்று புற்றுநோய். அதைப் பற்றி நம் மக்களுடைய பயனுக்கு ஏதாவது எழுதல் வேண்டும் என்பது என் ஆசை. இச்சந்தர்ப்பத்தினை நான் பயன்படுத்த விழைவு கொண்டமைக்கு என் நண்பர்களின் தூண்டுதலே காரணம்.

ஆங்கிலத்திலிருந்து தமிழிலே சிலவற்றை மொழி பெயர்க்க தமிழிலுள்ள கலைச் சொற்கள் கைகொடுத்து உதவவில்லை. அச் சொற்கள் ஆங்கிலத்தைப் பார்க்கிலும் கடினமானவை என்பது என் அனுபவம். இங்கு, நம்மிடையேயுள்ள தமிழ்ச் சொற்களை என்னாலானவரை எளிமையாக்கி எழுத முற்படுகிறேன்.

இங்கு கூறப்படுபவை நான் அறியவந்துள்ள உண்மைகள் மட்டுமே. எனக்குத் தெரியாதனவாகவும், கண்டு பிடிக்கப் படாதனவாகவும் பல உள.

இதை வாசிப்பவர்களுக்கு ஈற்றிலே புற்றுநோய் பற்றி ஏதோ தெரிந்து கொண்டோம் என்ற உணர்வு ஏற்படுமாயின் எனக்கு நிறைவு. ஏனெனில், இதன் நோக்கம் அதுவே.

### புற்று நோய் என்றால் என்ன?

புற்று நோயைப் பற்றி அதிகம் அறிந்திருந்தாலும் இப்புத்திரின் அடிப்படைக் காரணங்கள் இன்னும் அறியப்படாமலே கிடக்கின்றன.



மிகவிரைவில் புற்று நோய்க்கான மூலக் காரணமும் இதற்கு சிகிச்சையும் கண்டு பிடிக்கப்பட்டுவிடும் என்பதில் ஐயமில்லை.

சாதாரணமாக பெண்ணின் சூலும் ஆணின் விந்தும் சேரும் போது உண்டாகும் கரு இரண்டு நான்கு என்ற முறையில் பெருக்கிக் கொண்டே செல்லும். இவைகளையே கலங்கள் என்போம். இவைகளிலே குறிப்பிட்ட தொழிலைச் செய்வதற்கென விசேடமாக வளர்ந்து இருதயம், சிறுநீரகம், மூளை போன்ற உறுப்புகளாகி சிசுவாக உருவெடுக்கிறது. சிசு பிறந்து குழந்தையாகியும் இந்தப் பெருக்கம் நடந்து கொண்டேயிருக்கும். அதேவேளையில் ஒவ்

ப. க. நவரத்தினராஜா



போதனை காட்டிய காவியம்தன்னை

சாதனை நாட்டிய அமுதசுரபி.

வொரு உறுப்பும் தனது தொழிலைச் செய்து கொண்டிருக்கும். குழந்தை வளர்ந்து 25 - 30 வயதடைய இவ்வுறுப்புகளில் கலங்களின் பெருக்கம் குறைகிறது. அவை தமக்கெனக் கொடுத்த வேலைகளைச் செய்து கொண்டிருக்கும். இறக்கும் கலங்களைப் புதுப்பிப்பதற்காக அப்பப்போது கலப் பெருக்கம் நடைபெற்று உறுப்பு ஒரே நிலையில் பேணப்படும். முதிர்ச்சிக் காலத்தில் இக் கலங்களின் பெருக்கத்தன்மை குன்றி இறந்து விடுகின்றன. இதனால் உறுப்புகள் சிறியனவாகவும் சக்தியற்றனவாகவும் மாறுகின்றன. புற்று நோயில், திடீரென இக்கலங்கள் சுறுசுறுப்பாகி விரைவாகப் பெருக்கமடைகின்றன. இதனால் ஏற்படும் கலத்திரட்சி சாதாரணமாக இதன் தாயுறுப்பின் தொழிலைச் செய்யாது உடலிலிருந்து சத்துக்களைப் பெற்று தேவையற்ற ஓர் வளர்ச்சியாய் வளர்ந்து கொண்டிருக்கிறது. இப்படியான அசாதாரண வளர்ச்சி உடலின் எந்த உறுப்பிலும் கால் — பெருவிரல் தோலிலிருந்து மண்டை ஓடுவரை— எப்பகுதிலும் நடைபெறலாம். புற்றுநோயின் அளவு பல அங்குலங்கள் விட்டமுடையதாய் இருக்கலாம் அல்லது ஒரு குண்டூசித் தலையின் பருமனில் இருக்கலாம். அவை அமைந்திருக்கும் இடங்களைப் பொறுத்து ஆபத்தைத் தரலாம்.

### விளையும் தீமைகள்

அவை தாமிருக்கும் உறுப்புகளில் வளர்வதுடன் நிறுத்திக் கொள்வதில்லை. லத்தின் மொழியில் ''கன்சர்'' என்ற சொல்லுக்கு நண்டு என்று பொருள். இவ்வளர்ச்சி தன் கால்லலை மெல்ல மெல்ல அருகிலுள்ள உறுப்புகளிலும் ஊன்றும். இதனால் அவ்வுறுப்பு சேதமடைகிறது.

இப்புற்று நோய் ஒரு தேவையற்ற மிகவும் விரைவான வளர்ச்சி. இதன் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களை இது நமது உடம்பிலிருந்தே எடுக்கிறது. இதனால் உறுப்புகளுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்காமற் போகவே அவை வளர்ச்சிகுன்றும்; தேகம் மெலிவுறும். ஆகவே, இது ஓர் ஒட்டுண்ணியாகி நோயாளியைச் சுரண்டி வாழுகிறது. இது வளரும் உறுப்பிலிருந்து அயலிலுள்ள உறுப்புக்குத் தாவுவது மல்லாமல், இரத்தக் குழாய்கள் வழியாகவும், நிணநீர் வழியாகவும் சென்று வேறு உறுப்புகளிலும் வளர்கிறது. இது மிகவும் ஆபத்தானது. பொதுவாக ஈரல், சுவாசப்பை, மூளை, எலும்பு ஆகிய உறுப்புக்கள் இவ்வாறு தாக்கப்படுகின்றன.

### காரணங்கள்

புற்று நோயினுடைய காரணம் இன்னும் அறியப்படாததாயினும் எதிர்மாறாக புற்று நோயைக் கொண்டுவரும் பல காரணிகளை நாம் அறிவோம். இங்கு அவைகளில் முக்கிய மானவற்றை ஆராய்வோம்.

(1) இரசாயனப் பொருள்கள்

இரு ஜப்பானிய விஞ்ஞானிகள் சில இரசாயனப் பொருள்களை மிருகங்களின் தோலில் சில காலங்களுக்கு பூசிவர அவ்விடத்தில் புற்று நோய் ஏற்படும் என நிரூபித்தனர்.

இரசாயனப் பொருள்களைக் கொண்ட தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பலருக்கு சுவாசப்பையில் புற்று நோய் ஏற்படுவதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சுவாசப்பைப் புற்று நோய்க்கும் புகைப் பிடித்தலுக்கும் உள்ள தொடர்பு பலர் அறிந்ததே. இந்தப் புற்று நோய்க்குக் காரணம் "சிகரட்" புகையிலுள்ள ஓர் இரசயனப் பொருள் எனக் கூறப்படுகிறது

(2) பௌதிக காரணங்கள்

எக்ஸ்—கதிர்
புறஊதா—கதிர்
கதிர் வீச்சு

ஒரு நோயைக் கண்டு பிடிப்பதற்காக அடிக்கடி எக்ஸ்-கதிர் படம் எடுப்பதும் கூடாது.

(3) புற ஊதாக் கதிர்

துளைத்துச் செல்லும் சக்தி குறைந்த இச்கதிர்கள் தோலுடனேயே நின்று விடுகிறது. ஆனால் பாதுகாப்பான கறுத்த தோலையுடைய நாம் சந்தர்ப்ப வசமாக இதிலிருந்து தப்பிக் கொள்கிறோம்.

(4) தொடர்ச்சியான அழற்சி

வெற்றிலை போடும் வழக்கத்தையும் இதனுடன் சேர்த்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன். ஆனால், நீண்ட நாட்பட்ட வயிற்றுப் புண், பித்தப்பைக் கல், சிறு நீரகக் கல் ஆகியவை காலப்போக்கில் புற்று நோயை உண்டாக்கலாம்.

(5) வைரசுக்கள்

இவை மிக மிக நுண்ணிய கிருமிகள். இவைகள் மிருகங்களில் புற்று நோயை ஏற்படுத்தும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இலங்கையில் மனிதரில் இது வரை இதற்கான ஆதாரம் எதுவும் இல்லை.

(6) பரம்பரை

அதிகமான புற்று நோய்களுக்கு பரம்பரைத் தொடர்பு உண்டு என்று நிரூபிப்

பதற்குப் போதிய ஆதாரம் இல்லாத போதிலும், சில புற்று நோய்களுக்கு அவ்வாறான தொடர்பு இருக்கலாம் எனச் சந்தேகிப்படுகிறது. ஆனால், பொதுவாக நம்மிடையே காணப்படாத சில புற்று நோய்கள் பரம்பரையாக தொடரும் எனக் காட்டப்பட்டுள்ளது.

சாகியம், வயது, பால், இயக்குநீர் முதலியவை சிறுகாரணிகளாக அமையலாம் அதிகமாக 40 வயதிற்கு மேற்பட்டோர்தான் புற்று நோய்க்கு இலக்காகிறார்கள்.

**புற்று நோய்க்கு முன் தோன்றும் குணங்கள் அல்லது மாற்றங்கள்**

இதன் பொருள் புற்று நோய் தோன்றுவதற்கு முன் சில சைகைகள். இதன் மூலம் நாம் அதை அறிந்து உடனே வைத்திய உதவியை நாடலாம். உதாரணமாக வெள்ளை படல். அதிகமாக வாயிலோ, ஆணுறுப்பிலோ, பெண்ணுறுப்பிலோ. வரவிருக்கும் புற்று நோயை இதன் மூலம் கண்டு பிடிக்கலாம்.

★ இவை மினுக்க முடைய, வெள்ளையான சிறு சிறுபடைகளாக இருக்கும். வாயிலோ ஆணுறுப்பிலோ, பெண்ணுறுப்பிலோ காணப்பட்டால் உடனே வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

★ சிலரில் உள்ள மச்சங்கங்கள் திடீரென வளர்ச்சியடையத் தொடங்கும். உடனே வைத்தியரிடம் ஆலோசனை பெற வேண்டும்.

★ ஒரு கிழமையாகியும் உட்கன்னத்திலோ, நாக்கிலோ ஆறாத புண்.

★ சில குடும்பங்களில் பரம்பரையாகவுள்ள சில குடல் நோய்கள்.

★ அதிக காலமாகக் காணப்படும் அசாதாரணமான வளர்ச்சிகள்.

★ வலியற்ற வீக்கமடைந்துள்ள நெறிகள்.

உடலில் காணப்படும் அசாதாரண வளர்ச்சிகள் யாவும் புற்று நோயல்ல. அவற்றில் 5 – 10 சத வீதமானவையே புற்று நோயாகும். எனினும் முக்கியமாக 40 வயதிற்கு மேற்பட்டோரில் வளர்ச்சிகள் தோன்றினால் உடனே ஆலோசனை பெற வேண்டும். நமது கண்ணுக்குத் தென்படாமல் உடலின் உள்ளே வளரும் புற்று நோய்களே அதிகம் எனலாம். ஆனால் அவைகூட சில சில குணங்களால் தம்மை நமக்குக் காட்டிக் கொள்ளும். அவ்வேளைகளில் உடனே வைத்திய ஆலோசனை பெறுதல் அவசியம்.

**அவைகளுள் சில**

(1) வயிறு குடல் வழியில் உள்ளவை. மலம் கழிப்பதில் மாற்றங்கள் ஏற்படல். மலச்சிக்கல், வயிற்றோட்டம், மலவாயிலால் இரத்தம் செல்லல், மலத்தில் இரத்தமும், சீதமும் செல்லல், விழுங்குவதில் கஷ்டம் ஏற்படல்.

(2) நல்லிரத்தமின்மை, உடல் மெலிதல், பலஹீனம்.

(3) வேறுகாரணமின்றி காய்ச்சல் தொடரல்.

(4) சிறு நீரில், இரத்தம் செல்லல்.

(5) பெண் உறுப்பு வழியாக காரணமின்றி இரத்தம் வருதல்.

(6) தாங்க முடியாத தலைவலி.

(7) தொடர்ச்சியான இருமல், சுவாசப்பையிலிருந்து இரத்தம் வருதல்.

(8) சுவாசிப்பதில் கஷ்டம் ஏற்படல்

(9) வயிற்றுவலி, வாந்தி, பசியின்மை இரத்த வாந்தி எடுத்தல்.

(10) எலும்புகளில் வலி ஏற்படல்,

[ஒரு விதமான குணங்களுமின்றி ஒரு வரை மரணம் வரையும் கொண்டு செல்லும் தன்மையும் சில புற்று நோய்களுக்குண்டு]

### சிகிச்சை முறைகள்

இது பற்றி விபரிப்பது அதிக பயன் தராது. எனினும், அவைபற்றி சிறிது அறிவோம்

### சத்திர சிகிச்சை

புற்று நோயின் ஸ்தானத்தைக் கண்டு பிடித்த பின் அவ் வளர்ச்சியை இச்சிகிச்சை மூலம் பிரித்தெடுத்தல். அவ் வளர்ச்சியைச் சுற்றியுள்ள நோயற்ற பகுதியில் சிறிதையும் வெட்டி எடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்வது சிறிதளவாவது புற்று நோய்க் கலங்கள் விடப்படவில்லை என்பதை உறுதிப் படுத்துவதற்காக.

சில வேளைகளில் நோயாளியை அப்போதுள்ள கஸ்டங்களிலிருந்து விடுவிப்பதற்காக மட்டும் சத்திர சிகிச்சை செய்யப்படும். ஆனால், நாளடைவில் அந்நோயினால் அவர் இறந்து விடுவார்.

### கதிர் வீச்சு முறைச் சிகிச்சை

இங்கு கதிர்களை வீச்சு தன்மையுடைய சில இரசாயனப் பொருள்கள் புற்று நோய் உள்ள இடத்தில் வைக்கப்படுகின்றன. சில ஊசிமூலம் கொடுக்கப்படுகிறது. இப்போது அமுக்கத்திலுள்ள பிராணவாயுவும் இவைகளுடன் கொடுக்கப்படுகின்றன. இக் கதிர்கள் புற்று நோய்க் கலங்களைச் சுற்றியுள்ள இரத்தக் குழாய்களைப் பொசுக்குகின்றன இதனால் இக்கலங்கள் இரத்தமின்றி இறக்கின்றன.

சில சிறிது காலத்திற்கு குணமாக இருந்து மீண்டும் வளர ஆரம்பிக்கும். இம் முறையால் நோயாளிக்குச் வேறு சில ஆபத்துகளும் நேரிடலாம்.

### கலங்களைக் கொல்லும் மருந்துகள்:-

இவை துரிதமாகப் பிரிந்து பெருகும் கலங்களைத் தாக்கி அவைகளைக் கொல்லுகின்றன. ஆகவே அவை புற்று நோய்க் கலங்களைத் தாக்குகின்றன வெனலாம். ஆனால், நோயாளிக்கு இந்த மருந்து வகைகளால் வேறு ஆபத்துகள் நிகழலாம். அதிகமான புற்று நோய்கள் இம் மருந்துக்குக் கட்டுப் படாமல் பெருகிக் கொண்டே இருக்கும்.

நமக்குள்ளே உள்ள சில பழக்கங்களைச் சற்றே மாற்றிக் கொண்டால் சில புற்று நோய்களை மட்டுமல்ல, வேறு பல நோய்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

### உணவு

நாம் யாபேரும் மூன்று வேளைகளிலும் வயிறுரச் சாப்பிடுகிறோம், உண்மை. இது மட்டும் போதுமா? இவ்வுணவில் நமது உடலுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் தேவை. நல்ல இரத்தம் ஊறுவதற்கு புரதம், இரும்புச் சத்து, விட்டமின்கள் இன்னும் பல அவசியம். நல்ல இரத்தம் இல்லாத தன்மை. இதுவும் தொண்டையில் ஏற்படும் ஒருவித புற்று நோய்க்குக் காரணமா என்று விஞ்ஞானிகள் சந்தேகிக்கிறார்கள். ஈரலில் புரதம் குறைவதால் புற்று நோய் ஏற்படலாம் எனச் சந்தேகிக்கிறார்கள்.

நல்ல சத்துக்களையுடைய உணவுகள் (மீன், பால், முட்டை, இறைச்சி, மரக்கறி வகைகள் இன்னும் பல) மட்டும் இருந்தால் போதாது. இவை நமது உடலில் சேருவதற்குத் தேவையான சமிபாடு நடைபெறுகின்றதா? குழந்தைகளுக்கும் ஏன் பெரியவர்களுக்கும் கூட குடலில் பூச்சிகள், வட்டப்புழு, கொழுக்கிப் புழு, கீரைப்பூச்சி போன்றவை இருப்பதால் உணவு நன்கு சமிபாடடைய முடியாமலும், சாப்பிடமுடியாமலும் இருக்கும். ஆகவே அவற்றைத் தவிர்க்கவேண்டும்.

## ஆரோக்கியம்

யாவரும் சிறிதளவாவது வேலை செய்ய வேண்டும். குழந்தைகள் விளையாட வேண்டும். இன்று நம்முள் பலர் சோம்பலாக வீட்டில் இருந்து ஊர்ப் புதினங்கள் பேசுவதையும், அரட்டை அடிப்பதையுமே பொழுது போக்காய் கொள்கின்றனர். இவற்றை விடுத்து திறந்த வெளிகளில் உலாவலாம், விளையாடலாம் தேகாப்பியாசங்கள் செய்யலாம்.

## சுகாதாரக் கல்வி

ஒவ்வொருவரும் நம்முள் காணப்படும் நோய்கள் பற்றி அறிய முற்படுதல் வேண்டும். பத்திரிகைகள், புத்தகங்களை வாசித்து அவைபற்றி அறிந்து கொள்ளுதல் வேண்டும். பாடசாலைகளில் ஆசிரியர்கள் இது பற்றிக் கவன மெடுக்கலாம்

## மருத்துவ ஆலோசனை

பல நோய்கள் அவை முற்றிய பின்பே வைத்தியரிடம் காட்டப்படுகின்றன. பின்பு வைத்தியர்கள் குறை கூறப்படுகிறார்கள். இந்நிலை முற்றாக மாறவேண்டும். ஏற்புவலியால், பூச்சி நோய்களால் இறப்போரைப் பார்க்கவில்லையா? இவர்கள் முதலே சிகிச்சை பெற்றிருந்தால் இது நடக்குமா? குறிப்பாக பெண்கள் மார்பில், பெண் உறுப்புகளில் ஏற்படும் நோய்களை மறைத்து வைத்திருந்து பயனென்ன? சிறு சந்தேகத்திற்கிடமாக ஏதாவது தோன்றியவுடன் உடனே வைத்திய ஆலோசனை பெற்று ஆவன செய்தல் வேண்டும். நமக்கென்றே இருக்கும் உதவிகளை உதாசீனம் செய்யாது வைத்தியசாலைகளிற் சென்று ஆவன செய்யப் பழக வேண்டும். கர்ப்பவதிகள், குழந்தைகள் ஒரு கிழமைக் கொருமுறையாவது வைத்தியசாலைக்குச் சென்று தங்களைப் பரிசோதனைக்குட்படுத்தல் வேண்டும். குழந்தைகள் தடுப்பூசிகள் போட்டுக் கொள்ள வேண்டும். இவைகளால் எம்முள் ஏற்படும் மரணங்களில் அரைவாசிக்கு மேல் தடுக்க முடியும். மருந்து போட்டு விட்டார்கள், சூனியம் எடுக்க வேண்டும் என்ற மூட நம்பிக்கைகளைத் தவிர்த்து, எல்லாவற்றிற்கும் முன் நல்ல வைத்திய ஆலோசனை பெற வேண்டும்.

இவைகள் உதாசீனம் செய்யப்பட்டால் எம்முடனேயே இருக்கும் வரட்சி, வறுமை முதலியவற்றுடன் நோய் பிணிகளும் சேர்ந்து வாழ்க்கைப் போராட்டத்தில் மற்றையோருடன் போட்டி போட முடியாதவர்களாகிவிடுவோம். இயற்கை தகுதியானவற்றைத் தான் தேர்ந்தெடுக்கும் என்பது கூர்ப்புத்தத்துவத் தந்தை டார்வினின் கூற்றாகும். எனவே எமது மூதாதையரைப் போல் அறிவுடனும் ஆற்றலுடனும் தகுதியுடனும் மிளிர நோயற்ற வாழ்வை நோக்கி பல அடிகள் முன் வைப்போம்.

''பகைவனையும் நோயையும் தலை தூக்கியவுடன் பூர்ணமாக ஒழித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அவை வளர்ந்து பலம் பெற்று நம்மைக் கொன்று விடுகின்றன.''

—பஞ்சதந்திரம்



மணிபல்லவ கலா மன்றத்தின் சேவைக்கு

எமது பாராட்டுக்கள்.

# மணியம் ஸ்டோர்ஸ்

சிறந்த பழவகை இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்

புறக்கோட்டை

75-77 குமார வீதி,

கொழும்பு-11-

தந்தி:- "கிறேப்ஸ்"

தொலைபேசி: 25493

உரிமையாளர்: இ. சிவசுப்பிரமணியம்—நயினாதீவு.

கோமுகி தான் கொடுத்த அமுதசுரபி போல்
வரையாது வழங்க வாழ்த்துகிறோம்.

# கொழும்பு ட்ரேட்ஸ்

23, சென் ஜோன்ஸ் வீதி, கொழும்பு-11.

உரிமையாளர்:- நா. க. பரராஜசிங்கம்

தொலைபேசி:- 23321

எம் மனம் நிறைந்த
வாழ்த்துக்கள்.

சுத்தமான உணவிற்கும்
சுவையான உணவிற்கும் உகந்த இடம்

# அப்பலோ போசனசாலை

விசேட ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

1074/1, மருதானை வீதி — பொரளை

உரிமையாளர்:- சி. ம. சண்முகம் - புங்குடுதீவு.

வாழ்க கலா மன்றம்!

வளர்க கலைச்சேவை !!

# ஸ்ரீ லங்கா ட்ரேட்ஸ்

இறக்குமதியாளரும், பொது வர்த்தகமும்.

*16, சென். ஜோன்ஸ் வீதி,*

*கொழும்பு-11*

தொலைபேசி: 3 2 4 1 5

*உரிமையாளர் :* மு. கதிர்காமநாதன்,

நயினாதீவு.

WITH BEST COMPLIMENTS

From

# JAFFNA STORES

**(Whole and Retail in Textile)**

137. Station - Road
NUGEGODA

*T'Phone:* **2117**

# நயினை நிரோட்டயமக அந்தாதி

அலரி யனந்தங் கயனு மிரங்கண ஞரலழிந்
தலரி யனந்தங் கயனையந் தாடனை யங்கத்தினென்
னலரி யனந்தங்கயஞ்சேர் நயினையி லன்னையென்றேற்
றலரி யனந்தங் கயிலையிட்டேத்திடி னஞ்சலின்றே

அஞ்சக் கரந்தி கழையிடத் தாயட லானையிடர்க்
கஞ்சக் கரந்திரித் தாரிளை யானென தந்தியநே
ரஞ்சக் கரந்தைய தாநின்ற காலையி லந்தகனு
ரஞ்சக் கரந்திட லின்று னயினையி லாரணியே.

— வரகவி நாகமணிப்புலவர்

# தேவி பஞ்சகம்

விண்ணிருந்து குண்டெறியும் வெறியர் கூட்டம்
வேரோடிப் புவியைவிட்டு மறையவேண்டும்
அண்ணலார் காந்தி சொன்ன அஹிம்சா தர்மம்
அவனியை ஆள்பவருளத்தை ஆளவேண்டும்.
மண்ணுலகில் சகோதரத்வம் மலியவேண்டும்
மக்களெல்லாம் வறுமையின்றி வாழவேண்டும்.
நண்ணுவார் தமைக்காக்க நயினைமேவும்
நாகபூஷணி அருள் நீ பாலிப்பாயே!

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை,
என் இனத்தார் வாழ்வென்றே கருதவில்லை.
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையையான் ஒருபோதும் மறந்ததில்லை;
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுறவேண்டுமென்றே வேண்டுகின்றேன்.
தனக் கொருவரொப்பில்லாத் தாயே! இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே!

— க. இராமச்சந்திரா

# நாகரீக உலகுக்கு வேண்டுவன

பசிக்குதவாத் தொழில்களின் வேர்ப் பற்றறுத்தல்
வேண்டும்
பஞ்சத்தாற் பஞ்செனவே பறக்கு முயிர்க் "கமிர்து
ருசிக்கும் வகை உவந்தளித்து முகம்மலர அளிப்போர்
உளம்மலரும் வாழ்க்கையுல கொளி விடுதல் வேண்டும்
பசைப் பொருளிலாதவுடல் பர மாகி எங்கும்
பாவ மெனும் வித்துதிர்க்கும் பயிர் களைதல் வேண்டும்
திசைக்களிரே வென வயிர்க்கும் செயலோரே வம்மின்
திக்கெல்லாம் பவனி சென்று சேவைசெய்வோம் வம்மின்
பெண்கொளலாம் பின்பு பொருள் முன்புதரல்
வேண்டும்
பேடியரைப் பிரித் தொதுக்கும் பேராண்மை வேண்டும்
கண் கொண்டின் பம்நுகரும் காமுகர்தம் முகத்தே
காறியுமிழ் கன்னியர் முன்னணி வகுத்தல் வேண்டும்
திண் கொண்ட மனத்தினராய் ஆண்மையும்
பெண்மையுமெச்
செயல்களிலும் புகுந்து ழைக்கும் திறனுறுதல் வேண்டும்
விண் கொண்ட மின்பமும் மேதினியிற் பெறலாம்
விறுடைய மீசையுள விறற் செயலோர் வம்மின்

-'பாரதியடியான்''

# வாழ்க மா நயினாதீவு

போற்றத் தகுந்தபல பேருறைய மாநயினை
புண்ணியப் புவிமீதிலே
புகழ் கொண்ட மூர்த்தி. தலதீர்த்தமும் சூழவே
பொங்கு கடலலையோசையும்
ஏற்றத்துடன் செல்வமானோர்கள் மனைகளும்
இடையறாதருவி நீரும்
இயல்பாய செல்வங்களானபனை தெங்கினொடு
ஏந்து குலைக்கதலிவகையும்
சிற்றத்துடன் அரவமாலையணி பங்கினட்
குற்றவொரு பெரு கோயிலும்
செகமீதிலெவரோடு மொப்பிடாத்தன்மைச்
செருக்குடைப்புலவர் பலரும்
சேற்றுக் குளத்திடைக் கமலமுங் காவினிற்
சேர்ந்த மணமுங் கொள்பவர்
செப்புமளகா புரியெனக் கொண்டு களிகூரும்
சிறந்த தாளென் னென்பனே!

வை. விசுவலிங்கம்

# வாழ்த்துப் பெற வாழ்க!

தனியொருசீர் மணற்பரப்பாய்ச் சமுத்திரத்தின் நடுஅமைந்து தன்னேரில்லா
நனிபெருகு திருத்தலங்கள் நான்மதமும் சம்மதமாய் நலங் கொண்டோங்க
கனிவொடுபே ருவகையுடன் கலைவளர்த்து மணித்தீவிற் கலைகளோங்க
பணிபுரியும் கலைக்கோயில் எம்மன்றம் பல்லவத்திற் பரந்து வாழ்க!

இளமையெழில் நலங்காட்டி எத்திசையும் புகழ்பரப்பி எம்மூர்மக்கள்
வளமையெனத் தண்டமிழை வளர்க்கவென எமக்களித்த வற்றுஊக்க
நிலைமையதும் எம்மறிஞர் நீடுபெறு கலைத்திறனும் நினைக்கில்இங்கே
தலைமைபெறும் அலைஅலையாய்த் தமிழ்க் கடலே குரலெழுப்பிச் சாற்றிவாழ்க!

வி. வேதநாதன்

# மணிபல்லவ கலா மன்றம்

மணிபல்லவத்திலோர் மன்றம்! — மக்கள்
மாண்புடன் போற்றிடும் மாபெரும் மன்றம்!
அணிதமிழன்பர்கள் மன்றம்! — இது
ஆணிளஞ்சிங்கங்கள் கூட்டிய மன்றம்! — தமிழ்ப்
பணிதனதாக்கிய மன்றம்! — பாரில்
பல்கலையூக்கிடத் தேக்கிய மன்றம்!

முத்தமிழ் விழவெடுக்குங் காலை — அந்த
மூவேந்தர் திறங்கொண்டையம்மா!
நற்றமிழ் வல்லோர்கள் கூடி — கலை
நயினையில் வளர்த்திட்ட நல்லோய்! — நின்
பற்பல புதுமைகள் காணப் — பாரோர்
பாங்குடன் விரைகிற மாண்பினைப் பாராய்!

நயினை. செம்மணத்தம்புலம். எம். நவம்.

## அமுத சுரபி

இணையிலாக்கற்பு மங்கை எனப்போற்றும்
கண்ணகிக்குத்
துணையெனநாடி வந்து — மாதவி
கணையிலே சிக்கிவிட்ட
வணிகர்தங்குல விளக்காம் மன்னவன் கோவலர்க்கு
கணிகையின் வயிற்றில் வந்த கன்னியைத்திசைகள்
போற்றும்!

சிறப்புடைநந் தீவகத்தின் பெயர்விளங்க வந்தாள்
சீரிய மாது மணிமேகலையாள் அன்று!
அருட்தன்மை பொருந்தியதோர் அமுத சுரபியெனும்
அழியாது வற்றாது அமுதளிக்கும் அரிய
பாத்திரத்தால் ஏழைகட்கு உணவளித்தாள் மங்கை!
பாத்திரத்தைத் தந்து நின்று பேறடைந்தாள் நயினை!

நயினை. நாக பஞ்சாட்சரம்.

## மணித்தீவு

1. அலையெறியு மாழ்கடலைத் தாண்டி யிந்த
அருட்கடலை நீந்தவரு மடியார்க் கென்றும்
இலையென்று தின்னருளை யீந்துவக்கும்
ஐஸ்வரியா ளுவந் துறையு நயினாதீவு

2. அன்பு நெறி போதித்து அகிம்சை மார்க்கம்
அவனியதை அவலத்தி லிருந்து காக்க
முன்புதித்த புத்தமுனி பாதங்காண
வைத்த தவமொன்றே யித் தீவைக்காக்கும்.

— ஆரூரே—



நன்றி

நயினாதீவு: வரைபடம் அ. மரு.
புகைப்படங்கள் ப. க. நவா.

With Best

Compliments

From

V

YOTHY STORES

361/4, NAGALAGAM STREET,
COLOMBO-14.

மணிபல்லவ கலா மன்றத்துக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்

## நவலங்கா ட்ரேடர்ஸ்

பொது வர்த்தகரும் கமிஷன் ஏஜெண்டுகளும்
இலங்கைத் தயாரிப்புக்கள் விநியோகஸ்தர்கள்

*10, சென்- ஜோன்ஸ் வீதி, கொழும்பு - 11*
*உரிமையாளர்: மு. மதியாபரணம்.*

With Best Compliments

from

# VILASINI & COMPNY

(Specialists in Decca Saree and Cotton Pyjama.

*Manufactured By:* PUSHPA INDUSTRIES
Colombo-15

Sole Distributors:

**VILASINI & COMPANY**
148, Keyzer Srreet,
**Colombo-11.**

***Telephone. 24719, 27196.***

கோமுகிக்கு

எமது இதயபூர்வமான

நல் வாழ்த்துக்கள்

# செல்வம் ஸ்டோர்ஸ்

பொது வர்த்தகமும் கமிஷன் ஏஜெண்டுகளும்
135, மலிபன் வீதி,
கொழும்பு-11.

உரிமையாளர்: திருமதி செல்லம்மா செல்லையா - நயினாதீவு.

**With Best Compliments**

**From**

V. Kanagalingam Pillai & Sons

17, St. John's Road,

COLOMBO-11.

வளரும் மன்றத்திற்கு

மனமார்ந்த வாழ்த்துக்கள்

**பத்மா ஜுவல்லர்ஸ்**

உத்தரவாதமான நகைகள் கிடைக்குமிடம்.

*151, செட்டித் தெரு,*
*கொழும்பு-11.*

உரிமையாளர்: பத்மஜோதி

வாலிபரின் சேவைக்கு
மனமார்ந்த வாழ்த்துக்கள்

# லெட்சுமி பவான்

97, ஒல்கொட் மாவத்தை.

உரிமையாளர்:- மூ இ அம்பலவாணர்

கோமுகிக்கு மனமார்ந்த
வாழ்த்துக்கள்

"புகையிலை"

# வே. ப. நல்லதம்பி

பொது வர்த்தகமும் கமிஷன்
ஏஜெண்டுகளும்
புகையிலை வியாபாரமும்.

51, 5ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

உரிமையாளர்:-
வே. ப. நல்லதம்பி - நயினாதீவு.

With Best Compliments

from

# Mar's Palmera Products

By

**MAR'S CONFECTIONERS**

**CEYLON**

வாழ்க கோமுகி!

மு.க. பொன்னம்பலம்

117, 5ம் குறுக்குத்தெரு

கொழும்பு - 11

உரிமையாளர்:-

மு. க. பொன்னம்பலம்

நயினாதீவு

வாழ்க கலா மன்றம்

அம்பிகை ஸ்டோர்ஸ்

பாடா, டீ. எஸ். ஐ,

டீ. ஐ. விநியோகஸ்தர்களும்
சாய்ப்புச் சாமான் வர்த்தகரும்

51, 5ம் குறுக்குத்தெரு
கொழும்பு.

வளர்க கலை

இ. கனகசுந்தரம்

நயினாதீவு-5.

வாழ்க தமிழ்

சிவரஞ்சனி ஸ்டோர்ஸ்

75, 5ம் குறுக்குத் தெரு,

கொழும்பு

உரிமையாளர்:

க. இராமசாமிப்பிள்ளை

நயினாதீவு.

MAY "KOMUKHI" PRESERVE

Its Name as Creation

# ISLAND CIGAR MANUFACTORY

**(Government Approved Industry)**

**Factory:**
SUNDARA BAWANAM
K. K. S. ROAD,
Kokuvil.

T'phone: 7123

Office:
**230, Wolfendhal Street,**
**Colombo-13.**

T'phone: **32260**
T'Grams: **VIVEPRESS**

**கலா மன்றத்தின் சேவை வளர**

**எமது ஆசிகள்**

நா. காராளபிள்ளை

**விக்கினேஸ்வர ஸ்டோர்ஸ்**

வங்களாவடி

நயினாதீவு.

---

**கோமுகிக்கு**

எமது வாழ்த்துக்கள்

# வே. க. கு. கோபாலபிள்ளை

*ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலடி*

*நயினாதீவு.*

எம்மிடம் சுத்தமான நெல், அரிசி, சாய்ப்புசாமான், அர்ச்சனைச்சாமான் வகைகள் குறைந்த விலையில் பெறலாம்.

---

**With Best Compliments**

**From**

# A. S. PALANIVEL

30, 31, Grand Bazaar, Jaffna Market,

Branch: **Nainativu**

சகல வித பாக்கு வகையும், சாய்ப்புச்சாமான் வகையும், அபிஷேக திரவியம், கிரியைச் சாமான் மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாயமாக எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எமது மணிபல்லவ கலா மன்றத்தினரின்

# கோமுகி

ஓர் கலைக் கொத்து. உள்ளேயிருக்கும்
ஒவ்வொரு அமுதசுரபிகளும் வரையாது
வழங்கிக் கொண்டே இருக்கும்.

எம் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

## கோபாலன் டிரேடிங் கொம்பனி

*149, டாம் வீதி*
*கொழும்பு-12.*

தொலைபேசி .- 31168

இ. கோபாலபிள்ளை

*நயினாதீவு*

# P. B. UMBICHY

**SHIP BROKERS, OPERATORS CHARTERERS,**
**IMPORTERS And EXPORTERS,**
**FERTILISERS And PRODUCE MERCHANTS.**

**COLOMBO**

**P. O. BOX 846.**

**Grams: UMBICHY.** COLOMBO
**Codes: BENTLEYS AND PRIVATE.**

**T' Phone. 32347**
**21972**

175, Bankshall Street
COLOMBO.


Printed at Rainbow Printers, 231, Wolfendhal Street, Colombo-13.